# பாவேந்தர் பாரதிதாசன்

பெருஞ்சித்திரனார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பாவேந்தர்
பாரதிதாசன்

முதற்பதிப்பு : மேழம் கக, உ௰கரு, (1-5-1984)

விலை : உரு உரு. 25.00

(இந்நூலையோ நூற்பகுதியையோ எவ்வகையானும் பயன்படுத்திக் கொள்ள ஆசிரியர் ஒப்புதல் பெறுக.)

வெளியீடு : அச்சு :
தென்மொழி நூல் வெளியீட்டு-விற்பனையகம்,
தென்மொழி அச்சகம்,
சென்னை — 600005.

# பதிப்புரை

தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் நிலைகுலைந்து படிப்படியே தளர்வெய்தி வந்த இறங்கு நிலைப் போக்கைத் திருவள்ளுவப் பேராசான் தம் குறள் மறையில் இலை மறைகாயாக இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தமிழவர்க்குச் சுட்டிக்காட்டி,—வருமுன்னர்க் காத்துக் கொள்ளக் குறையிரந்து வேண்டிக்கொண்டும், வாகும் திறனியும் அற்ற நம்மோர் புறவஞ்சரும் உட்பகைவரும் விளைத்த கொடுங்கேட்டையே வளைய வளைய வந்து ஏற்று, எரி முன்னர்த் தீயென்னுமாறுன வினைவையே தொடர்ந்து தாம் பெற்றுக் கொத்தடிமையராகிக் குலைந்துலைந்தனர்! ...

அத் தகா நலிவுநிலைமையை அடியசைக்கும் உர முயற்சியை முறையுற எவரும் மேற்கொள்ளாப் போதில், பதினெட்டு பத்தொன்பது நூற்றுண்டுக்கால நெட்ட நெடிய இடைவெளிக்குப் பின்னர், தந்தை பெரியாரின் தொடர்ந்த தமிழின மான மீட்புக் கடுந்தொண்டு, அரிய சில ஆற்றல் உள்ளங்களை ஊற்றங்கொள்ளச் செய் வித்தது. அத்தகைய திசைத் திருப்பம், புதுச்சேரியில் பிறந்த மதுகையராம் பாவேந்தர் உள்ளத்திலும் ஊடாடி ஊற்றெழுந்தது!

1926-இல் "சிரி மயிலம் சுப்ரமணியர் துதியமுது" எழுதிய அச் சுப்புரத்தினத்தின் கைகள்; 1928-இல் தந்தை பெரியார் அணியில் சேர்ந்த பின்னர், "குடியரசு", "பகுத்தறிவு" ஏடுகளில் படையற்பணி செய்துவந்தன! தமிழையும் இனத்தையும் நாட்டையும் மீள்விக்கும் தகுதிசான்ற சாறவலிணர்வுகள் வாகெடுத்துப் பாத்திரளாய்ப் புறம்போந்தன! தமிழ மாணிகள் பலரின் தெளிவுக்கான வலிவுகளை அவை உரு

வாக்கின! இழந்தவற்றை மீட்கும் வல்லுணர்வு தமிழகத்தில் பரவி வடிவெழுந்தது!

அவர் பாடிப்பாடிப் பாவேந்தரானார்! உள்ளொடுங்கி உட்கியிருந்த தமிழர் அவரின் பாக்களை ஓதியோதி உணர்வேந்தி உரம்உட்கொண்டனர்! தமிழ் நிலம் எங்கணும் தமிழ்மானம் கனலேந்திக் கட்டுரங் காழ்த்தது!

அத்தகு பெரும்பாவலரின் அரிய பேராற்றலையும் உள்ளுணர்வுச் செழுமையையும் உள்ளீடாகவுணர்ந்தோர் ஒரு சிலரேயாயினர்! அவருள்ளும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரே தலைநின்றார்! "புலமிக்கவரை புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்றபடி, பாவேந்தரின் பாத்திறமும் உள்ளுரமும்,- அவ்வகையில் உரத்தெழுந்து ஓங்கிய பாவலரேறு அவர்களுக்கே பலபடி மிக்கெழுந்து விளங்கித் தெரிந்தன! எனவே, எங்கும் எவரிடத்தும் எந்நிலையிலும் பாவேந்தரின் தூவல் பாய்ச்சிய ஓவத்து ஒளிகளைப் பிறங்கிடுமாறு வெளிக் காட்டும் பணியையும் தொடர்ந்து இவர் செய்து வந்தார்!

பாவேந்தரைப் பற்றிப் பாவலரேறு அவர்கள் இது வரை எழுதியுள்ள குறிப்புகளைவிடப் பன்மடங்கு கருத்து விளக்கத் தெரிப்புகள்,அவர் ஏறிய தமிழ்மேடைகளிலும், கண்டுபேசவந்த தக்க உணர்வினர் பன்னூற்றுவர் முன்னும், அகத்திலும் புறத்திலும் அகலிதாகத் தெறித்தன! ஆனால், அவையும் வரிவடிவெடுத்து வாகை பெற்றிருப்பின், இந்நூல்,- ஒரு பேரளவான மடலமாய்த் தமிழ்க்கனம் தழைத்துக் கொழித்திருக்கும்! ஒரு வகையில், தமிழ்க்கும், பாவேந்தரைப் பற்றி விளக்கமுற உணர விழைவார்க்கும் ஒரு பெரும்பகுதி (அவை வெளிவர வாய்ப்பின்மை காரணமாக) இழப்பேயாகி விட்டது

பாவலரேறு அவர்கள், பாவேந்தரைப் பற்றித் தம் கைப்படத் தீட்டிய அத்துணை வரைவுகளை மட்டும் ஈங்கண் ஒரு திறப்படுத்தி வகுத்து, நூலாக்கி உங்கள் கைகளில் தந்துள்ளோம்!

பாவேந்தரின் உள்ளுருவைத் துலங்கக் காட்டும் ஒள்ளிய செப்பநூலாடியாக இத் தொகுப்பு இலங்குகின்றது! பாவேந்தரை இவ்வளவு செப்பமாக உருக்காட்டி உவப்பூட்டும் பிறிதொரு நூல் இதுகாறும் தோன்றவில்லை என்பதை இதனின் அடக்கநிலை வரைகாட்டி நிற்கின்றது!

பாரதிதாசன், உரைமாலை, பாமாலை, பாட்டரங்க மாலை, நிகழ்ச்சிமாலை என ஐம்பாலாக வகைப்படுத்தப் பெற்று, ஆரெழில் மாலையாக இந்நூல் உருப்பெற்றொளிர்கின்றது! அரிய தமிழ்க் கருவூலமாகத் திகழ்ந்தொளிரும் பாவலரேறு அவர்களின், பாவேந்தர் பற்றி எழுந்துள்ள இச்சிறப்புத் தொகுப்புநூல், பாவேந்தரின் பெருமையையும் புகழையும் சிறப்பையும் அவரின் வாழ்க்கைக் கொள்கையையும் வெளிப்படுத்திச் சிறப்பதோடு, இதனைப் படித்துவக்கும் தமிழரின் உள்ளுணர்வுகளிலும் தமிழிய வலிவலைகளைப் பரப்பி ஒளிச்செறிவை உருவாக்கி மிளிரும்!

இத்தகு செந்நூலைப் பதிப்பித்துப் புறந்தருவதில் நாங்கள் பெருமையும் உவப்பும் பேரளவில் பெறுகின்றோம்!

பெற்றுவந்து பொற்புறுங்கள்!

அன்பும் பணிவும் நிறைந்த,
"பதிப்புக் குழுவோர்"

# முன்னுரை

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற பாவலர் பாரதிதாசன். பாரதியாரை அடியொற்றியதாக இவர் பெயரிருந்தாலும், இவர் பாடல் துறையில் தனியிடம் பெற்றவர்; தலைசிறந்தவர். இவருடைய பாடல்கள் தமிழுக்கே ஒரு மறுமலர்ச்சியை ஊட்டியவை என்றால் அது மிகையாகாது.

ஒரு நல்ல விதை என்பதற்கு அடையாளமே, அதனால் பல நல்ல விதைகள் உருவாகின என்பதுதான்• அந்த வகையில் இவருடைய பாடல்கள் ஒரு பாவலர் படையையே உருவாக்கின. கற்றவர்களையும் கல்லாதவர்களையும் கவர்ந்து இழுத்துக் கருத்தில் ஆழ்த்தின இவர் பாடல்கள். சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்குமாக பலநூறு பாடல்களை எழுதியுள்ளார் இவர். இவர் பாடல்கள் எளியன; இனியன; சொல்லழகு நிறைந்தன; கருத்தின்பம் வழங்குவன; புதுமையுணர்வைப் பாய்ச்சுவன; மனப் புரட்சிக்கு வித்திடுவன; ஓர் இனப் போராட்டத்தைத் தூண்டும் வல்லமை சான்றன.

இவரின் இலக்கியச் சிறப்பையும், வாழ்க்கை வறுமையையும் உற்றுநோக்குவார்க்கு ஓர் உண்மை புலப்படும்.

தமிழ் இனியது; ஆனால் தமிழர்கள் கொடியவர்கள்' இவர்கள் என்றைக்குமே தமிழ்மொழிக்காக உழைக்கும் அறிஞர்களை வாழவிட்டதில்லை. அதனால் தமிழ்ப் புலவர்கள் என்றைக்குமே வளத்துடன் வாழ்ந்ததாக வரலாறு காட்டவில்லை. இதற்கொரு நொண்டிக் காரணமும் சொல்லப் பெறுகிறது. 'புலவர்கள் வறுமையில் வாழ்ந்தால்தான், அவர்களின் இலக்கிய வெளிப்பாட்டில் மெருகு இருக்கும்; சிறப்பு இருக்கும்; அவர்கள் வளமுள்ளவர்களாக வாழ்ந்தால், அவர்கள் ஆக்கிப் படைக்கும் இலக்கிய விளைவுகளில் செழிப்பு இராது' என்பது அது. இதில் ஓரளவு உண்மை இருக்கலாம். ஆனால் இதுவே முழுமையான உண்மையில்லை. கம்பனின் வளமையான இராமாயண ஆக்கத்திற்கு ஒருவகையில் சடையப்ப வள்ளலின் ஆதரிப்பே காரணம் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. உண்மையான, இயற்கையான புலமைத்திறம் நல்ல பேணுதலும் புரத்தலும் இல்லையானால் செழித்து வளர்ந்து ஓங்கி நிற்பதில்லை.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும்
நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்

— என்னும் குறட்பாவிலும் இக்கருத்தின் ஒரு பகுதியைக் காணலாம்.

தமிழர்களுக்கு மட்டும் இஃதொரு கீழ்மைக் குணமாக இருந்து வருவதை நம் புலவர்கள் வரலாற்றிலும், அறிஞர்கள் வாழ்க்கையிலும் உய்த்துணரலாம். ஒரு வகையில் தமிழர்கள் முன்னேறாமைக்குக் காரணம் பெரும்பகுதித் தமிழர்களிடம் உள்ள இந்த மாறுபட்ட உணர்வே! தமிழறிஞர்களை அவர்கள் வாழ்கின்ற பொழுதிலேயே தமிழர்கள் போற்றிக் கொள்வதில்லை; புரிந்து கொள்வதுமில்லை. மாறாக, அவர்கள் வாழும் பொழுது அவர்கள் மேல் பொறாமைப்படுவதும், அவர்களைக் கீழறுப்பதுமே தமிழர்களின் தனித் தன்மையாக இருக்கிறது.

ஆரியர்களிடம் இதற்கு நேர்மாறான குணமே உண்டு. அவர்கள் இனத்தில் உள்ள ஒருவரிடம் ஒரு சிறு அளவில், ஒரு சிறிய அறிவெழுச்சி கண்டாலும், அதைப் பெரிதாக மதித்து, உவந்து போற்றிக் கொள்ளும் மனப்பாங்கு நன்கு வளர்ந்திருக்கிறது. அதனாலேயே அவ் வினம் அறிவில் மேம்பட்டு விளங்குகிறது. இதற்கு வெளிப் படையான ஓர் எடுத்துக் காட்டு, பாரதியாரை அவ் வினம் போற்றி கொண்டது போல், பாரதிதாசனைத் தமிழினம் போற்றிக் கொள்ளவில்லையே!

ஒருவர் மறைந்துவிட்ட பின்னால், போற்றுவதென்பதைப் போலக் கீழறுப்புத்தனம் வேறொன்றுமில்லை. 'மாந்தன் நல்லவன்; மாந்தர்கள் கெட்டவர்கள்' (Man is good; but Men are bad.) என்னும் பாவலர் இரவீந்தரநாத தாகூரின் பொன்மொழி, பெரும்பாலும் தமிழர்களுக்கே பொருந்துவதாகும்.


பாவேந்தர் பாரதிதாசனிடம் முற்றாக ஐந்தாண்டுகள் (1954 முதல் 1959 வரை) குடும்பத்தோடு குடும்பமாக நெருங்கிப் பழகியிருக்கின்றேன். அவரின் தனிப் பட்ட ஏற்றத்தாழ்வுகளும், அவர் குடும்பத்தின் மூலை முடுக்குகளும் எனக்கு நன்கு தெரியும். பாவேந்தரின் எழுத்திலக்கியத்தைப் போலவே, அவரும் ஒரு சுவையான இலக்கிய வெளிப்பாடே! மிகச் சிறந்த ஓர்

இலக்கியப் புலவன், தானே ஓர் இலக்கியமாகவும் இருக்கிறான் என்பதற்குப் பாவேந்தரே ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

நெருடல் இல்லாத மனம்; கரடு முரடில்லாத அவரின் பழகுந் தன்மை; எடுப்பார் கைப் பிள்ளையாகி விடுகின்ற அவரின் குழந்தைமை; கள்ளங் கவடற்ற அவரின் நிலாச் சிரிப்பு; தென்றலாகவும் புயலாகவும் மாறி மாறி வீசும் அவரின் சொல்வீச்சுகள்; அடிக்கடி சிணுங்கிக் கொள்ளும், வஞ்சகமற்ற அவரின் பழகு முறைகள்; நெருப்பை அள்ளிக் கொட்டும் அவரின் மேடைப் பேச்சு; அனைவரிடமும் குழைந்து பழகும் அவரின் தூய்மையான, தண்ணென்னும், அன்புணர்வு - இவை அனைத்தும் தனித்தனி இலக்கியங்கள்! அவரிடம் பழகிய அவ்வைந்தாண்டுகள், என் வாழ்க்கை வரலாற்றின் இளவேனிற்காலம்! இனிய இளங்காலைப் பொழுது! ஆ! அதன் இன்பச் சிலிர்சிலிப்புதான் என்னே! என் மூத்த மகள் பொற்கொடி தன் இரண்டாம் அகவைப் பொழுது, அவர் மடியில் குந்தி விளையாடிய அந்த அரைமணிப் பொழுது, அவள் பிற்காலத்துத்தன் கணவனோடாடிய இன்பத்தினும் மேம்பட்டது! காணற்கரிய அக் காட்சியை இன்றும் என் மனக் கண்ணால் கண்டு குளிர்ச்சியடைகின்றேன்.

பாவேந்தரைப் பற்றி இதுவரை நான் எழுதி வெளிவந்த எழுத்தோவியங்களின் தொகுப்பு இது. இன்னும் அவரைப் பற்றி, அவரின் பாடல் திறங்களைப் பற்றி நிறைய எழுதவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றேன். நேரந்தான் கிடைக்க வேண்டும். ஒய்வு கிடைப்பின் எழுதுவேன்.

இதனை முறைப்படுத்தி அச்சிட்டு வெளிப்படுத்தியதில், என் இரண்டாம் மருகர், சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி அவர்களுக்கும், என் இரண்டாம் மகன் திரு. மா. பொழிலன் அவர்களுக்கும் நிறைய பங்குண்டு; அவர்கள் இருவர்க்கும் என் அன்பு வாழ்த்துகள்!



20-4-'84

# பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள்

*1891*—ஏப்ரல் 29, அறிவன் (புதன்) இரவு பத்தேகால் மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார்; தந்தை கனகசபை: தாய் -- இலக்குமி; உடன்பிறந்தோர்: தமையன் சுப்பராயன், தமக்கை சிவகாமசுந்தரி, தங்கை— இராசாம் பாள்.

*1895*—ஆசிரியர் திருப்புளிச்சாமி அய்யாவிடம் தொடக் கக்கல்வி. இளம்அகவையிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றார்: பாட்டிசைப்பதிலும், நடிப்பதிலும் ஊரில் நற்பெயர் பெற்றார். பத்தாம் அகவையிலேயே சுப்புரத் தினத்தைப் பெற்றதால் புகழ் பெற்றது புதுவை.

*1908*—புதுவை அருகில் உள்ள சாரம் முதுபெரும் புலவர் (மகாவித்துவான்) பு. அ. பெரியசாமியிடமும், பின்னர் பெரும் புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கண — இலக்கி யங்களையும் சித்தாந்த—வேதாந்த பாடங்களையும் கசடறக் கற்றார். மாநிலத்திலேயே முதல்மாணவராகச் சிறப்புற்றார். புலவர் சுப்புரத்தினத்தை வேணு'வல்லூறு'வீட்டுத்திருமணத் தில் பாரதியார் காணும் பேறு பெற்றார். பாரதியாரின் தேர்வு எடையில் நின்றார்; வென்றார். நட்பு முற்றியது. பாரதியாரின் எளிய தமிழ், புலமை மிடுக்கேறிய சுப்புரத் தினத்தைப் பற்றியது.

*1909*—கல்வி அதிகாரிகையார் உதவியால் காரைக் கால் சார்ந்த நிரவியில் ஆசிரியப்பணி ஏற்றல்.

*1910*— வ.உ.சி.யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர்—பாரதியார் .வ.வே.சு., பர்.வரதராசலு அரவிந்தர் போன்றோர்க்குப் புகலிடம் அளித்தல். தம் பெற் றோர்க்குத் தெரியாமல் மேல்துண்டில் வடித்த சோறு

கொடுத்தல். ஒரோர் அமையங்களில் செலவுக்குப் பணம் தருதல்: காவலர்களின் வேட்டையிலிருந்து தப்ப உதவல்: பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தருதல். ஆசு ஆட்சித்தலைவரைச் (கலெக்டரைச்) சுட்ட துமுக்கி (துப்பாக்கி) பாவேந்தர் அனுப்பியதே.

*1916* — தந்தையார் *(23-1-1916)* இயற்கை எய்தல்

*1918* — பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கத்தால் சாதி, மதம், கருதாத தெளிந்த உறுதியான கருத்துகளால் ஈர்ப்புற்றுப் புலமைச் செருக்கும் மிடுக்கும் மிதந்த நடையில் எழுதும் தேசிய தெய்வப்பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல், புதுவை, தமிழக ஏடுகளில் புதுவை கே.எசு.ஆர். (K.S.R.) கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல் காரன், கே.எசு. பாரதிதாசன் என்ற பெயர்களில் பாடல், கட்டுரை, கதை மடல்கள் எழுதுதல். 10 ஆண்டுக்காலம் பாரதியாருக்கு உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

*1919* — திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில், பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி ஒன்றேகால் ஆண்டு சிறைபிடித்த அரசு தவறுணர்ந்து விடுதலை செய்தது, வேலை நீக்க வழக்கில் புலவர் வென்று மீண்டும் பணியில் சேர்தல்.

*1920* — இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல், புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனிஅம்மையை மணத்தல். தம் தோளில் கதர்த் துணியைச் சுமந்து தெருத்தெருவாய் விற்றல்.

*1921* — செப்டம்பர் 19 — தலைமகள் சரசுவதி பிறப்பு. *(12-11-1921)* பாரதியார் மறைவு

*1922* — கே.எசு பாரதிதாசன் என்ற புனைபெயரைத் தொடர்ந்து பயன் படுத்தி, தேச சேவகன்; 'துய்ப்ளேச்சு

'புதுவை கலைமகள்', 'தேசோபகாரி' 'தேசபக்தன்', 'ஆனந்த போதினி' 'சுதேசமித்திரன்' இதழ்களில் தொடர்ந்து பாடல், கட்டுரை, கதைகள் எழுதுதல்.

*1924*—சோவியத்து நாட்டு மாவீரர் இலெனின் இழப்பிற்குப் பாடல்.

*1926*—சிரி மயிலம் சுப்ரமணியர் துதியமுது—நூலில் சிந்துக்குத் தந்தையாதல்.

*1928*—நவம்பர் 3, கோபதி (மன்னர் மன்னன்) பிறப்பு. தன்மான (சுயமரியாதை) இயக்கத்தில் பெரியார் ஈ.வெ. இரா.வுடன் இணைதல். தாமும் தம் குடும்பமும் பகுத்தறிவுக் கொள்கையை மேற்கொள்ளல். குடும்பத் திருமணங்களில் தாலியைத்தவிர்த்தல்.

*1929*- 'குடி அரசு' 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல், கட்டுரை, கதை, கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே முதன் முதல் பாட்டெழுதிய முதல் பாவலர் என்ற சிறப்புப் பெறல்.

*1930*-பாரதி புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் பாடிய சிறுவர், சிறுமியர் தேசியப் பாடல், தொண்டர் நடைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு நூல் வடிவில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு நூல்களை ம.நோயேல் வெளியிடல். திசம்பர் 10-இல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

*1931*—'புதுவை முரசு' (5-1-31) ஏட்டில் செவ்வாய் உலக யாத்திரை—கட்டுரை வரைதல். சுயமரியாதைச் சுடர் என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலைக் 'கிண்டற்காரன்' என்ற பெயரில் வெளியிடல் (குத்தூசி குருசாமிக்கு இந்நூல் படைப்பு). 18-8-31 இரண்டாம் மகள் வசந்தா (வேனில்) பிறப்பு. பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தாமணி'' என்ற முத்தமிழ் நாடகம் எழுதி இயக்குதல்.

1932 'வாரிவயலார் வரலாறு' அல்லது 'கெடுவான் கேடு நினைப்பான்' புதினம் வெளியிடல்; வெளியார் நாடகங் கட்கும், தன்மான, பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தருதல்.

1933—ம. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்சு நினைவுக்கட்டடத்தில் (31-2-33) நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு வருகைப்பதிவேட்டில் நான் ஒரு நிலையான நாத்திகன் என்று எழுதிக் கையெழுத்திடல்.

1933—மூன்றும் மகள் இரமணி பிறப்பு

1934—மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப.சீவானந்தாம், குருசாமி, குஞ்சிதம், நயினு சுப்பிரமணியம், மயிலை சீனி. வேங்கடசாமி, மாயூரம்நடராசன், சாமி சிதம் பரனுர், எசு.வி.லிங்கம், நாரண துரைக்கண்ணனுடன் படகில் செல்லல். மாவலிபுரச் செலவு—பாடல் பிறந்தது. 9-9-34இல் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் பெரியார் தலைமையில் நடைபெறல்.

(குருசாமி— இரணியன்; திருவாசகமணி கே. எம். பால சுப்பிரமணியன்— பிரகலாதன்)

1935—இந்தியாவின் முதல் பாட்டேடான, 'சிரி' சுப்பிர மணிய பாரதி கவிதா மண்டலம் தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர் எசு.ஆர்.சுப்பரமணியம். (சர்வோதயத் தலைவர்)

1936—பெங்களூரில் பதினைன்கு நாள் தங்கி (1-4-36) 'தேசிங்கு ராசன்' வரலாற்றை 'அட்கின்சு' குழுமத்தார்க்கு 'இசு மாசுடர் வாய்சு' இசைத்தட்டுகளில் பதித்தல்.

1937—இல் புரட்சிக்கவி—குறுப்பாவியம் வெளியிடல். 'பாலாமணி அல்லது பாக்காத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை,உரையாடல், பாடல் எழுதுதல்; இதில் நடித்தவர்கள் டி.கே. சண்முகம்—உடன் பிறந்தோர் அனைவரும்.

1938—'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்டனர். பொருளுதவி செய்தவர் கடலூர் தி:கி: நாராயணசாமி. தமிழிலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், பெரியார், 'தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்' என்று பாராட்டினார். மருத்துவர் மாசிலாமணியார் நடத்திய 'தமிழரசு' இதழில் தொடர்ந்து எழுதுதல். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்ற பாடலை அச்சுக் கோத்தவர் பின்னாளில் சிறப்புற்ற எழுத்தாளர் 'விந்தன்'.

1939 —'கவி காளமேகம்' திரைப்படத்திற்குக் கதை— உரையாடல், பாடல் எழுதுதல்; 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' —நூல் வடிவில் வருதல்.

1941-'எதிர்பாராத முத்தம்'-பாவியம் காஞ்சிபொன்னப்பவால் வானம்பாடி நூற்பதிப்புக் கழகத்தில் வெளியிடல். இதற்கு மேலட்டை ஓவியம் இராய்சவுத்ரி.

1942—குடும்பவிளக்கு -1 வெளியிடல். இந்தியப் போராட்ட எழுச்சியை மறை முகமாக ஊக்குவித்தல்; இரண்டாம் உலகப்போரை- இட்லரை - எதிர்த்தல். பல ஏடுகட்கும் எழுதுதல்.

1943-பாண்டியன் பரிசு—பாவியம் வெளியிடல்

1944-பெரியார் முன்னிலையில் தலைமகள் சரசுவதி திருமணம். மணமகன் புலவர் கண்ணப்பர். 'இன்ப இரவு' (புரட்சிக் கவி) முத்தமிழ் நிகழ்ச்சி அரங்கேற்றம். 'இருண்ட வீடு', 'காதல் நினைவுகள்', 'நல்ல தீர்ப்பு' (நாடகம்) 'அழகின் சிரிப்பு' ஆகிய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளியிடல். 'சதிசுலோசனா' என்ற திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதுதல், குடும்ப விளக்கு -2 வெளியிடல். செட்டிநாடு முழுதும் இலக்கியச் சொற்பொழி நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல். கலைவாணர்

என்.எசு.கே வுக்காக ‘எதிர்பாராத முத்தம்’— நாடகமாகத் தீட்டித் தருதல், ‘கற்கண்டு’ பொறுமை கடலினும் பெரிது இணைத்து எள்ளல் நூல் வெளியிடல்.

1945-புதுவை 95, பெருமாள்கோயில் தெரு வீட்டை வாங்குதல். ‘தமிழியக்கம்’ (ஒரே இரவில் எழுதியது) ‘எது இசை’ நூல்கள் வெளியிடல்.

1946—‘முல்லை’ இதழ் தொடங்கப்பட்டது. ‘அமைதி’ ஊமை நாடகம் வெளியிடல். (29-7-46) பாவேந்தர் ‘புரட்சிக் கவி’ என்று போற்றப்பட்டு ரூ 25 ஆயிரம் கொண்ட பொற்கிழியை, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னுடை போர்த்தி அறிஞர் அண்ணா திரட்டித் தந்தார். தமிழகப் பேரறிஞர்கள் அனைவரும் வாழ்த்திப் பேசினர். 8-11-46-இல் முப்பத்தேழாண்டுத் தமிழாசிரியர் பணிக்குப் பின் பள்ளியிலிருந்து ஓய்வு பெறுதல்.

1947—புதுக்கோட்டையிலிருந்து ‘குயில்’ 12 மாத வெளியீடு; ‘சவுமியன்’ நாடக நூல் ‘பாரதிதாசன் ஆத்திசூடி’ வெளியிடுதல்: சென்னையில் ‘குயில்’ இதழ் ‘ஆயிரம்தலை வாங்கி அபூர்வசிந்தாமணி’ திரைப்படக்கதை, உரையாடல் ,பாட்டு தீட்டல், ‘இசையமுது’வெளியிடல். புதுவையிலிருந்து ‘குயில்’ ஆசிரியர்-வெளியிடுபவர்.-‘கவிஞர் பேசுகிறார்’சொற்பொழிவு நூல்:

1948—‘காதலா? கடமையா?’ பாவியம், ‘முல்லைக்காடு’ இந்தி எதிர்ப்புப் பாடல்கள், ‘படித்த பெண்கள்’ (உரை நாடகம்) கடற்மேற்குமிழிகள் பாவியம், குடும்ப விளக்குIII, திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி-நூல் வெளியிடல், ‘குயில்’ மாத ஏட்டிற்குத்தடை. நாளேடாக்குதல் கருஞ்சிறுத்தை உருவாதல்.

1949 — பாரதிதாசன் கவிதைகள், 2-ஆம் தொகுதி சேர தாண்டவம், முத்தமிழ், நாடகம், தமிழச்சியின் கத்தி-பாவியம், ஏற்றப்பாட்டு வெளியிடல்.

1950—குடும்ப விளக்குIV குடும்பவிளக்கு-Vவெளியிடல்.

1951—செப்டம்பர் 15-இல் வேனில் (வசந்தா தண்டபாணி) திருமணம், அ. பொன்னம்பலனார் தலைமையில் நடந்தது. 'அமிழ்து எது', 'கழைக் கூத்தியின் காதல்' வெளியிடல்.

அறுபதாண்டு மணிவிழா — திருச்சியில் நிகழ்வுறல்.

1952-'வளையாபதி' திரைப்படம் கதை, உரையாடல் பாட்டு.' இசையமுது' இரண்டாம் தொகுதி வெளியிடல்.

1954—பொங்கல் வாழ்த்துக் குவியல்; கவிஞர்பேசுகிறார்-சொற்பொழிவு நூல் வெளிவரல்; குளித்தலையில் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

1954—(1954)-மூன்றும் மகள் ரமணி சிவசுப்பிரமணியம் திருமணம். இராசாக் கண்ணனார் தலைமையில் நடந்தது.

1955-புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். சூன் 26-இல் மன்னர் மன்னன்-மைசூர் வீ. சாவித்திரி திருமணம், கோவை அ. அய்யாமுத்து தலைமை. பாரதிதாசன் கவிதைகள்—மூன்றும் தொகுதி வெளியிடல்.

1956—தேனருவி—இசைப்பாடல்கள் வெளியிடல்.

1958—தாயின் மேல் ஆணை, இளைஞர் இலக்கியம்- வெளியிடல்; தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல், 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

1959—பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித்திட்டு பாவியம் வெளியிடல்; பிசிராந்தையார்—முத்தமிழ் நாடகம் தொடர்தல்; 1-11-59—முதல் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கம் எழுதுதல்.

*1961*—சென்னைக்குக் குடி பெயர்தல், 'பாண்டியன் பரிசு' -திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக்நாட்டு அறிஞர் பேராசிரியர் கமில்சுவலபில் 'செக்' மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல். நடுவர் எசு. மகராசன் நட்புறவு.

*1962*—சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு *(15-4-62)*. அனைத்துலகக் கவிஞர் மன்றத் தோற்றம் கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா –வெளியிடல். தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் இராசாசி பொன்னுடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

*1963*—தோழர் ப. சீவானந்தம் மறைவு குறித்துப் 'புகழ் உடம்பிற்குப் புகழ் மாலை' பாடல் எழுதுதல். சீனப்படையெடுப்பை எதிர்த்து அனைத்திந்திய மக்களை வீறுகொண்டெழுப்பாடல்கள் எழுதுதல். பன்மணித்திரள் நூல்வெளியீடு. 72-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா வழக்கறிஞர் வி. பி. இராமன் தலைமையில் நடைபெற்றது.

'பாரதியார் வரலாறு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு எழுதி முடித்தல். இராசிபுரத்தில் புலவர் அரங்கசாமி கூட்டிய கவிஞர்கள் மாநாட்டில் தலைமை ஏற்றல்.

*1964*—பாரதியார் வரலாற்றுத் திரைப்படத்திற்குத் தீவிர முயற்சி. சென்னை, பொது மருத்துவமனையில் ஏப்ரல் 21-இல் இயற்கை எய்தல். மறுநாள் புதுவைக் கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு, 11 மாதம், 28 நாள்.

*1965*—ஏப்ரல் 21. புதுவைக் கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம் புதுவை நகராட்சியினரால் எழுப்பப்பட்டது.

*1968* — உலகத்தமிழாராய்ச்சி, மாநாட்டின் போது சென்னைக்கடற்கரையில் பாவேந்தர் உருவம் நாட்டப்பெறல்.

*1970*—சனவரி—இரமணி மறைவு.

*1971*—ஏப்பிரல் 29—பாவேந்தரின் பிறந்தநாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப்பெற்றது; ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள்கோயில் தெரு, 95-ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிப்பாவலர் நினைவு நூலகம்—காட்சிக் கூடம் நடந்துவருகிறது.

*1972*—ஏப்பிரல் 29 பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

*1979*—'கடல் மேற் குமிழிகள்' பாவியத்தின் பிரஞ்சு மொழியாக்கம் வெளியிடப்பெறல்.

நன்றி: [புரட்சிப் பாவலரின் 'சிரிக்கும் சிந்தனைகள்' நூலிலிருந்து]



# பிழை திருத்தப் பட்டி

| பக்க எண்: | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 14-15 | மக்கள் தனை | மக்கள் தமை |
| 9 | 17 | பாரதியாரிடம | பாரதியாரிடம் |
| 11 | 10 | நரபெல்லாம் | நரம்பெல்லாம் |
| | 23 | சுணைரயற்ற | சுரணையற்ற |
| 15 | 5 | தமிழர்க்ககாக் | தமிழர்க்காகக் |
| | 8 | செந்தமிழிர் | செந்தமிழர் |
| 19 | 5 | முத்திரைப்பாளையம் | முத்தரையர் பாளையம் |
| | 19 | முப்பந்தைந்திலேயே | முப்பத்தைந் திலேயே |
| 23 | 10 | எழுதியப் | எழுதிய |
| | ,, | கீறின | கிளறின |
| 24 | 3 | உலக | உலகம் |
| 25 | 10 | இருக்கின்ற | இருக்கின்றது |
| 26 | 32 | பிளிறின | பிளிறினர் |
| 42 | 3 | நெந்தமிழ் | செந்தமிழ் |
| | ,, | செஞ்சங்கள | நெஞ்சங்கள் |
| 47 | 28 | தனைவனுக்கு | தலைவனுக்கு |
| 53 | 4 | புலவர் களிலிருந் தாலும் | புலவர் களிருந் தாலும் |
| | 10 | மாட்டகர்கள் | மாட்டார்கள் |
| 56 | 13 | மெய்யுணர்ச்யும் | மெய்யுணர்ச்சியும் |
| 57 | 3 | வேண்டும்.ஓர் | வேண்டும், ஓர் |
| 60-உ | 12 | சுளைந்துவிட்டு | களைந்துவிட்டு |
| 60-ஊ | 24 | இனை | இதை |
| 84 | 24 | வணக்குகின்றேன் | வணங்குகின்றேன் |
| 90 | 6 | தனையீன்ற | தமையீன்ற |
| | 23 | தமிழனுக்குண்டு | தமிழினுக்குண்டு |
| 99 | 1 | புரசிட்யைத் | புரட்சியைத் |
| 105 | 24 | ஊறிவகும் | ஊறிவரும் |
| 113 | 20 | இட்டலி | இட்டளி |
| 123 | 4 | அடைத்த | அடைந்த |
| 132 | 9 | காய்ச்சுப் | காய்ச்சும் |
| | 23 | தனையீன்ற | தமையீன்ற |
| 134 | 1 | சேள்வியே | கேள்வியே |
| 134 | 4 | ஆக்கி | ஆக்கிப் |
| 148 | 2 | கிழிந்தெறித்தான் | கிழித்தெறிந்தான் |

| | | | |
|---|---|---|---|
| 148 | 2 | ஓச்சி | ஓச்சி |
| 149 | 7 | நாவேந்தும | நாவேந்தும் |
| 151. | 7 | இருக்கும் | இருப்பர் |
| 152. | 15 | ஈவேந்திக் | காவேந்திக் |
| 155. | 27 | ஓடுபிளந்த | ஓடுபிளந்த |
| 164. | 4 | செய்வாட் | செய்வான் |
| | 10 | பார்த்துக் | பார்த்துத் |
| 165. | 2 | நாளுமே | நாளும் |
| | 6 | தமிழறியும் | தமிழழியும் |
| 166. | 23 | களைவிளைச்ச | களைவிளைச்சல் |
| 167. | 4 | கேட்கின்றுள் | கேட்கின்றுன் |
| 168. | 9 | சேய்வீர் | செய்வீர் |
| | 28 | தோனை | தோளை |
| 173. | 27 | தென்னைல | தென்னை |
| 181. | 13 | எவினூர் | ஏவினூர் |
| 183. | 10 | சிவர் | சிலர் |
| 184. | 14 | வாயலில் | வாயிலில் |
| 189. | 10 | எடுக்துக் | எடுத்துக் |
| 195. | 1 | மருந்துவரும் | மருத்துவரும் |
| 200. | 6 | துணிவானரே | துணிவானவரே |
| 206. | 3 | மனைவு | மனைவி |
| | 19 | பாவேந்தார் | பாவேந்தர் |
| 211 | 1 | பாவேந்தார் | பாவேந்தர் |
| 212 | 13 | கெண்டிருந்த | கொண்டிருந்த |
| ,, | 17 | பாவேந்தார் | பாவேந்தர். |

2\. உரைமாலை (பக் 36)

பக் 42 இன் தலைப்புக்கு எண் 3 என்றும்,
பக் 51 இன் ,, எண் 4 ,,
பக் 54 இன் ,, எண் 5 ,,
பக் 56 இன் ,, எண் 6 ,,
— இட்டுக் கொள்க.

3\. பாமாலை

வரிசையில் 4, 5, 6, 7, 8, 9, 10, 11 ஆக அச்சாகி இருப்பதை, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 எனத் திருத்திக் கொள்க.

4\. நிகழ்ச்சி மாலை

22-ஆம் எண்ணுள்ள மலரின் தலைப்பு, 204-ஆம் பக்கத்தில் மாறி அச்சாகியுள்ளது. பொருளடக்கத்தின் படி திருத்திக் கொள்க.

# பொருளடக்கம்

## புறவிதழ்


பதிப்புரை ௫
முன்னுரை ௬
வாழ்க்கைக் குறிப்பு ௧௦
பிழை திருத்தம் ௧௮


## பூவிதழ்


பாரதிதாசன் 1
(வரலாற்றுச் சுருக்கம்)
1. உரைமாலை 35
2. பாமாலை 61
3. பாட்டரங்க மாலை 85
4. நிகழ்ச்சி மாலை 179

பாரதிதாசன்......!

நன்கு பழகிய பெயர். தமிழர் உள்ளங்களிலும், நாவி விலும் என்றென்றும் நிலவிவரும் தமிழ் உரு ஒன்றின் சொல்லுருவம் அது! அச் சொல்லைக் கூறினமட்டிலேயே புதுச்சேரி நினைவுக்கு வரும். அங்கு மணக்கும் தமிழ் நம் நெஞ்சில் இனிக்கும்; அந்தத் தமிழ் வாழ்ந்த தெருக்களின் நடுவில்-தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில்-தமிழ்த் தழும் பேறிய நாவும், தமிழ் உரம் ஏறிய நெஞ்சும் தமிழ் விளை யாடிய பாவும்கொண்டு தமிழே உருவமாய் பெருமிதத் தோற்றத்தோடு பாரதிதாசன் என்னும் பெயர்க்குரிய ஓர் உருவம் நம்மிடையே வாழ்ந்து வந்தது. இன்று அத்தமிழுருவம் நம்மிடையில் இல்லை. ஏறத்தாழ எழுபத்து நான்காண்டுகள் வாழ்ந்து, செந்தமிழ்க்கும், தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் நல்லரிய தொண்டு செய்து, எண்ணற்ற பாமணிகளை வாரி வழங்கி, தமிழே தன் மூச்சாய் வாழ்வாய், இன்பமாய் இருந்தவர் பாரதிதாசன் என்னும் புனைபெயர் கொண்ட திரு. கனக. சுப்புரத்தினம்.

> 'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்,
> நான் நான் நான்'

என்று தம் தோற்றத்தை விளக்கும் அவ்வரிய தமிழ்ப் பாவேந் தர், வெறும் பாரதிதாசனுயிராமல் தமிழ்ப் புரட்சி செய்த முதல் புரட்சிப் பாவலராய் இத் தமிழகத்திடை வாழ்ந்து வந்தார். அவர் வரலாறு தமிழின் மறுமலர்ச்சி வரலாறுகும்;

தமிழ் நாட்டின் உணர்வெழுச்சிக் கதையாகும்; தமிழர்தம் மான உணர்வுக்குக் கலங்கரை விளக்காகும். தமிழ் உள்ள வரை நிலைத்து நிற்கும் ஆற்றல்வாய்ந்த அவரின் இனிய, எளிய, செந்தமிழ்ப்பாடல்கள் அவர்தம் நினைவுப் படிமமாக என்றென்றும் தமிழ் மக்கள் தம் நெஞ்சங்களில் ஒலிக்கும்! அவர் வாழ்க்கைக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும்! அவர்தம் நாடி நரம்புகளை முறுக்கேற்றிக் கொண்டிருக்கும்! அவர் வாழ்வு ஒரு பாட்டு இலக்கியம்.

புதுவையில் பெரிய சரக்கு மண்டியொன்று வைத்துப் பெருநிலை மளிகை வாணிகராக இருந்த திரு. கனகசபை என்பார்க்கும் மகாலட்சுமி அம்மைக்கும் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள், திருமகனாகப் பிறந்தார் நம் பாரதிதாசன். இவரின் இயற் பெயர் சுப்புரத்தினம் என்பது. இளமையிலேயே சுறுசுறுப்பும், இயற்கைமேல் நாட்டமும், இசை விருப்பமும் கொண்டவராக இவர் இருந்தார். அக் காலத்தில் புதுச்சேரி பிரெஞ்சுக்காரரின் ஆட்சிக்குரியதாக இருந்தமையால், பள்ளியில் பிரெஞ்சு மொழியே சிறப்பாகச் சொல்லித் தரப்பெற்றது. சுப்புரத்தினமும் பிரஞ்சு மொழிப் பள்ளியில் சேர்க்கப்பெற்றார். எனினும் இவர்க்கு இயற்கை யிலேயே இருந்த தணியாத தமிழார்வத்தாலும், இயல், இசை, நாடகப்பற்றாலும் தமிழ்க் கல்வி கற்கவே இவர் பெரிதும் விரும்பினார். எனவே இவர் தந்தையார் இவரைத் தமிழ்க் கல்வி கற்கச் செய்தார். பள்ளிப்பயிற்சியுடன் இவர், பேராசிரியர் பு.ஆ. பெரியசாமி என்னும் தமிழ்ப் பேரறிஞ ரிடம் தமிழ்க்கல்வி பயின்றார். இவரே இவரின் முதலாசிரியர் எனலாம்.

சுப்புரத்தினம் நாளுக்குநாள் தமிழில் மிக ஈடுபாடு காட்டி வந்தார். இவரின் தமிழ்த் தேர்ச்சிக்கு உறுதுணை யாக இருந்தவருள் புலவர் சி. பங்காரு என்பவரும் ஒருவர். அவர்பால் இவர் தமிழ் கற்கப் புகுந்த முதல்நாள், இவரு டன் வேறு மாணவர் சிலரும்வந்திருந்தனராம்; அவர்களிடம்

"நப்போல்வளே" என்ற ஔவையாரின் ஆத்திசூடி அடிக்கு விளக்கம் சொல்லும்படி கேட்கப்பட்டது. அத்தனை மாணவர்களிலும், நம் சுப்புரத்தினமே அவ்வடிக்குச் சரியான பொருள் கூறினராம். அப்பொழுது இவர்க்கு அகவை ஏழு! இதனால் புலவர் பங்காரு இவர்பால் பேரன்பு கொண்டு இவர்க்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் நிகண்டு வரிசைகளையும் ஒழுங்காகப் பாடம் சொல்லிவந்தார். இதன் காரணமாக, சுப்புரத்தினம் 1908–இல் கல்வே கல்லூரியில் நடந்த புலவர் வகுப்பில் கல்லூரியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அவரின் தமிழறிவும், கல்விமேல் தணியா நாட்டமும் கண்ட அரசினர் மறு ஆண்டிலேயே அவருக்குத் தமிழாசிரியர் வேலைகொடுத்துக் காரைக்காலைச் சேர்ந்த நிரவியில் பணியாற்றச் செய்தனர். அக்கால் அவர்க்கு மாத ஊதியமாகக் கிடைத்துவந்த தொகை முப்பது உருபாக்களே!

அரசினர் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தாலும், சுப்புரத்தினத்திற்குத் தமிழ்க்கல்விமேல் தணியா வேட்கையிருந்தது. சிறுசிறு அழகிய தமிழ்ப் பாடல்களை எழுதிவந்தார். அவர் உள்ளமும் அறிவும் கிளர்ச்சி பெற்று எழுந்தன; பேருடனும் புகழுடனும் உரிமையுடனும் வாழ்ந்த கழகக் காலத் தமிழ் மக்களை நினைந்து மனம் உருகினர். இற்றைக் காலத்தில் தமிழ் மக்கள் அடிமையாகவும், மொழியுணர்வும், உரிமையுணர்வும் அற்ற பேதைகளாகவும் வாழ்வதைக் கண்டு உள்ளம் கசிந்தார். பிரஞ்சுப் பகுதியில் இருந்த தமிழ் மாநிலம் பிரஞ்சுக்காரரிடமும் பிற பகுதிகள் ஆங்கிலேயரிடமும் இருந்தமை கண்டு நெஞ்சு நைந்தார். அத்தகைய அடிமை வாழ்வில் தமிழ் மக்கள் உரிமையற்றுத் துயருறுவதைக் கண்டார். அவர்களின் உள்ளம் விடுதலையைப் பற்றிய நினைவே இன்றி ஆராத்துயிலில் அமிழ்ந்து கிடந்தது

'பழய நைந்த தமிழரொடு நானிருந்தேனே'

என்று பாவலர் மனம் கசிந்தார். அக்கால் ஆங்கிலேயரின், அடக்குமுறை தாளாது, பாவலர் சுப்பிரமணிய பாரதியார்

புதுச்சேரியில் வாழ்ந்துவந்தார். பாரதியார் ஓர் உணர்வுப் பாவலர். இந்திய நாட்டு உரிமைக்காகப் பாடுபட்டுவந்த பேராயக்கட்சியின் கொள்கைப்பாவலராக இருந்த பாரதியார், இந்திய நாட்டு விடுதலைக்கென மக்களைத் தம் பாட்டுத் திறங்கொண்டு விழித்தெழச் செய்தார். புதுவையில் அவர் தங்கியிருந்த நாட்களில், சுப்புரத்தினத்திற்கு அவர் வல்லுணர்வுப் பாடல்களில் ஈடுபாடிருந்தது. புலவர். திரு. பங்காரு, குயில் சிவா முதலியோர் பாரதியாருக்கு நெருங்கியவர்களாக இருந்தமையால் சுப்புரத்தினத்திற்குப் பாரதியாரைக் காணவும், கண்டு தொடர்பு கொள்ளவும் வாய்ப்பேற்பட்டது.

ஒருகால் ஒரு திருமண விருந்தில் பாரதியாரின் நாட்டுப் பாடல் ஒன்றினைச் சுப்புரத்தினம் பாடிக்கொண்டிருந்தார். அதை இவர் அறியாதவாறு நின்று கேட்ட பாரதியார், தாமெழுதிய பாடலைச், சொல்லும் வண்ணமும் சிதைவுறுது பாடிய இவர்தம் பாட்டுணர்வைக் கண்டு வியந்தார், அப்பொழுதிலிருந்து இவர்பால் பாரதியாருக்குப் பற்றும் தொடர்பும் ஏற்பட்டது. பாரதியாரின் நாட்டுணர்வும், விடுதலை வேட்கையும், பாட்டுத்திறனும் சுப்புரத்தினத்தை வெகுவாக ஆட்கொண்டிருக்க வேண்டும்: பிறிதொருகால் பாரதியாரின் விருப்பத்திற்கிணங்கவும், பிற நண்பர்களின் இடையிலும் சுப்புரத்தினம் ‘எங்கெங்குக் காணினும் சக்தியடா’-எனத் தொடங்கும் பாடலைப் பாடிக்காட்டினர். இவர்பால் இயற்கையான பாவன்மையும்,நாவன்மையும் இருப்பதை அறிந்து கொண்ட பாரதியார், இவரைத் தம் அன்பர்களுடன் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார். இவரெழுதிய ‘எங்கெங்குக் காணினும் சக்தியடா’ என்ற பாட்டு, பாரதியாராலேயே சுதேசமித்திரன் செய்தித்தாளுக்கு விடுக்கப்பெற்று வெளிவந்தது. பாரதியார்மேல் வைத்த அன்பாலும் அவர்தம் பாடல்களின்மேல் கொண்ட நாட்டத்தாலும் சுப்புரத்தினம் தம்மைப் பாரதிதாசன் என்றே கூறிக்கொள்ள விரும்பினர். பாரதியாரின் உள்ளம் இந்திய நாட்டு விடுதலையை எதிர்

நோக்கிப் பாடியபொழுது, பாரதிதாசன் தமிழ் நாட்டு விடுதலைக்கென குரல் கொடுத்தார். தமிழ் மக்களின் ஆறுத் துயரும் அவல நிலையும் பாரதிதாசனின் உள்ளத்தில் ஒரு புத் தெழுச்சியை உண்டாக்கின;

'என் தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்,
என் தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்கிடுதல் காண்பேன்; தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மீதிலே'

என்று தம் ஆராவிருப்பத்தை வெளிப்படுத்துகின்றார் பாரதி தாசன். பொதுநலத் தொண்டுக்காக அவர் உள்ளம் துடி துடித்தது. தமிழ்க்காகவும் தமிழ் மக்கட்காகவும் உழைப் பதே தம் வாழ்வாகும் என்று வரையறுத்துக் கொண்டார்.

'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்'

என்பது அவர் கூற்று. இத் தமிழ் உணர்வுக் கனல் பாரதி யாரின் பாட்டுணர்வுபோல் பெருக்கெடுத்தாலும், அவர்தம் பாடல்களில் காணப்பெற்ற நாட்டுணர்வினின்று வேறுபட்ட தாகும். பகுத்தறிவு சான்ற தமிழ் மக்கள் அமைப்பைப் பாரதிதாசன் மிகுதியாக விரும்பினார். பாரதியாரின் அடிச் சுவட்டிலேயே தாம்போக விரும்பவில்லை. இவரின் தனியாண் மைக்கு என ஒரு தனிவழி வகுத்துக் கொண்டார். பாரதி யார்க்குத் தமிழ்ப் பற்று இருந்ததே அன்றித் தமிழ்மொழிக் காப்புணர்வு இருந்ததாகத் தெரியவில்லை. அவர் தமிழையும் வடமொழி போலவே கருதி வந்தார். தமிழ் அறநூல்களை யும் ஆரிய மறைநூல்களுக்கொப்பாகவே கொண்டார். பாரதிதாசன், ஆரியத் தொடர்பாலேயே தமிழ் மரபு கெட்ட தென்றும், தமிழும் தன் நிலையில் தாழ்ந்ததென்றும், தமிழ் மக்கள் விடுதலையில்லா அடிமைகளாகப் போயினர் என்றும்

தெளிவாகக் கூறியுள்ளார். அதனுல் பாரதியாரின் உள்ளத்தில் பொங்கி எழுந்த பாவுணர்வு தமிழர் விடுதலே நோக்கிப் புதுவழியில் நடமிடல் ஆயிற்று; அது புரட்சி மனப்பாங்கு வாய்ந்தது! எனவேதான் பாரதிக்கு வாய்க்காத புரட்சிப் பாவலர் என்ற பட்டம் பாரதிதாசனுக்கு மக்களால் கொடுக்கப்பெற்றது! 'புரட்சிக் கவி' என்ற பாட்டொன்றை எழுதியமையால் பாரதிதாசனுக்கு அப்பெயர் கிடைத்தது என்று கூறுவார் கூற்று பொருளற்றது. புரட்சி என்ற சொல் பாரதிதாசனேப் பாரதியாரின் இந்திய நாட்டுணர்வினின்று வேறு பிரித்துக் காட்ட மக்களால் தரப்பெற்ற ஓர் உணர்வு விளக்கச் சொல். இவரின் சொல்லில், செயலில், பாட்டில், வாழ்வில் எல்லாவற்றினும் புரட்சிக் கருத்துகள் நிரம்பித் தமிழர் குமுகாயத்தையே விடுதலே நாட்டம் உடையதாகச் செய்தன. தம்முடைய அரிய தமிழ் நாட்டுத் தொண்டுக்குத் தமிழ் மொழியையே கருவியாக்கிக் கொண்டார் பாரதிதாசன்.

'செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை'

என்ற வரிகள் பாரதிதாசன் தமிழ்நாட்டுப் பணிக்குத் தம்மையும் தமிழையும் ஈடுபடுத்திக் கொண்டதைக் காட்டுவனவாம்.

பாரதிதாசன் தம் பேரன்பாலும், நன்றியுணர்வாலும் பாரதியைப் பாராட்டும் இடங்களிலெல்லாம் தம்முடைய உள்ளுணர்வையும், தமிழ்க்குத்தாம் எந்த வகையில் தொடர்பு கொண்டுள்ளார் என்பதையுமே உணர்த்துகின்ருர்.

தமிழகம், தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலேவனே எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினுன்.

என்று பாரதிதாசன் குறிப்பிடும் வரிகள், தாம் கொண்ட தமிழக விடுதலே வேட்கையைக் கருத்திற் கொண்டே பாடப் பெற்றதாக நமக்குப் புலப்படுகின்றது. மேலும் அவர் பாரதியாரைக் குறிப்பிடும் பொழுது

பைந்தமிழ்த் தேர்ப் பாகன்; அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாகும் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படை மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்

என்று கூறும் வரிகளில் தம்மையே பாரதிதாசன் வெளிப் படுத்திக் காட்டுகின்றார் என்று கொள்ளலாம். அவரின் உள்ளமே இவ்வடிகளில் நன்கு படம் பிடிக்கப்பட்டிருக் கின்றது. பாரதிதாசன் தமிழ்த் தொடர்பும், விடுதலை வேட் கையும், புரட்சி வேட்கையும் நாளுக்கு நாள் பெருகத் தொடங்கின. அவரின் இளமைக் கால நிகழ்ச்சிகள் முற்றும் இவற்றை நினைவு படுத்துவனவாகும். நிரவியிலிருந்த அவர் புதுவைக்கு விரைந்து மாற்றப்பட்டார்.

இந்நிலையில்தான் பாவலர் பாரதிதாசனுக்குத் திருமணம் நிகழ்வதாயிற்று. 1920-ல் இவர் பெருமாத்தூரில் உள்ள பரதேசி-சாமாட்சி என்பார்தம் திருமகள் பழநியம்மாளை மணந்து கொண்டார். திருமணம் தந்தையாரின் விருப்பப் படியே நடந்தது. இவர்தம் துணைவியார் திருவாட்டி பழநி யம்மாள் குடும்ப ஈடுபாடும் பண்பும் அன்பும் வாய்ந்து சிறந்து விளங்கினார். பாவலர்தம் குழந்தை உள்ளத்துக் கேற்றபடி அவர் மனம் கோணாதவாறு இனிதே இல்லறம் நடத்தி வந்தார். இவரும் தம் மனைவிமேல் அன்பும் பரிவும் கொண்டு விளங்கினார். சிற்சிலகால் இவர்தம் விடாப்பிடி காரணமாகக் குடும்பத்தாரின் விருப்பங்களும் செயல்களும்

தோல்வியடைவதுண்டு. இவற்றிற்கெல்லாம் அம்மையார் மனம் நோகாது, கணவற்குற்ற தொண்டுகளிலேயே தாம் இன்பம் கண்டுவந்தார். 1921-இல் இவர்களின் இல்லறப் பயனாக ஒரு பெண்மகவு பிறந்தது. அதற்கு 'சரசுவதி' என்று பெயர் சூட்டினர்.

பாரதிதாசன் தமிழ்ப்பற்று நிரப்பியவராகவும் தமிழ் மொழி வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண்டவராகவும் விளங்கினாலும் தனித் தமிழ் இயக்கம் அக்கால் மிகுதியாகப் பரவாத காரணத்தால் தம் பிள்ளைகள் நால்வருக்கும் வட மொழிப் பெயராகவே வைத்திருப்பது குறிக்கத் தக்கது. பின்னர்த் தாம் எழுதிய பாவியங்களிலும், நாடகங்களிலும் வரும் தலைவர் தலைவியர்கட்கெல்லாம், மாவரசு, நாவரசு, வேடப்பர், அழகர், புலித்திறல், வையத்திறல், நல்லமுத்து, நகைமுத்து, மலர்க்குழல், கரும்பு, மின்னொளி, முத்துநகை, பொன்னி, முள்ளி, அழகம்மை, பச்சைக்கிளி முதலிய அழகிய, தூய தனித்தமிழ்ப் பெயர்களாகச் சூட்டி மகிழ்ந்த பாவலர் தம் பிள்ளைகளுக்கு மட்டும் சரசுவதி, கோபதி (இக்கால் மன்னர் மன்னன் என்றும் கூறப்பெறுவர்) வசந்தா, ரமணி என்னும் வடமொழிப் பெயர்களையே சூட்டியமையாலும், இளமைக் காலத்தே தாம் எழுதிய பாடல்களில் வரைதுறை யின்றி ஏராளமான வடசொற்களைப் புணர்ந்து எழுதியுள்ள மையாலும், பாவலர் பாரதிதாசன் அவர்கள் தொடக்கக் காலத்தே தனித்தமிழ்ப் பற்று நிரம்பியவராக இருந்திலர் என்று கருத வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் முப்பது நாற்பதாண்டுகட்கு முன் தமிழர்க்கிருந்த வடமொழி மயக்கும், மொழியுணர்வுக் குறைவுமே ஆகும்.

அற்றை நாளில் பெரியார் திரு. ஈ. வே. இராமசாமியால் தோற்றுவிக்கப் பெற்ற தன்மதிப்பு (சுயமரியாதை)க் கழகம் பாரதிதாசனை மிகுதியும் மாற்றியது எனின் மிகையில்லை. தொடக்கத்தில் இவர்க்கிருந்த சமயப்பற்றையும், கடவுட்

பற்றையும் அக் கழகக் கொள்கைகள் மாற்றியமைத்து, இவர் பாக்களுக்கு ஒரு தனி உணர்வும் உருவமும் கொடுத்தன. இவ்வுணர்வு இவர்பால் தலையெடுத்திராமற் போயிருப்பின் பாரதிதாசனும், பாரதியாரைப் போலவே இறைப் பாடல்களையும் பாட நேர்ந்திருக்கும். அவ்வாறு சிறு தெய்வ வணக்கப் பாடல்களையும் இந்திய தேசியப் பாடல்களையும் இவர் பாடியிருப்பாராஞல், அவை பாரதியாரின் தெய்வப் பாடல்களினும் தேசியப் பாடல்களினும் சிறந்து விளங்கும் என்பதை மறுக்கமுடியாது. அதற்குப் பாரதிதாசன் தொடக்கக் காலத் தெழுதிய சுப்பிரமணியர் துதியமுது போன்ற வணக்கப் பாடல்களும், கதர்ப்பாட்டு, சமத்துவப் பாட்டுப் போன்ற தேசிய, குமுகாயப்பாடல்களுமே தக்க சான்றுகளாகும். ஆஞல் பாரதிதாசன் அவ்வாறு ஈடுபடாமைக்கு அவர் சார்ந்த பகுத்தறிவியக்கமும், அவர் கொண்ட தன் மானக் கொள்கையும், புரட்சியுள்ளமுமே காரணங்களாக விருந்தன. பாரதியாரிடம இருந்த பாத்திறத்தையும் அரிய ஆற்றலையுங்கூடப் பாரதிதாசன் போன்றவர்களே தமிழுலகுக்கு எடுத்துக் காட்டிஞர்கள். 'கல்கி' அக்கால் 'பாரதியார் உலகக் கவி, அல்லர்' என்று எழுதிய கட்டுரைக்குப் 'பாரதியார் உலகக் கவி' என்று பாரதிதாசன் எழுதிய மறுப்புப் பாடலே இக் கூற்றுக்குச் சான்ருகும்.

செந்தமிழ்ப்பற்றும் வெந்திறலாண்மையும் பாரதிசாசனுக்கு மிக்கிருந்தமையால், இவர் கொண்ட கொள்கைகளை எவர்க்கும் அஞ்சாது வெளியிடுவாராயினர். இவர்க்கிருந்த தமிழ்ப் பற்று அளவில் அடங்குவதன்று.

"கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சும்
பாகிடை ஏறிய ருசியும்,
நனிபசு பொழியும் பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்'' —என்றும்

''செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகுமென்வாழ்வு''
—என்றும்

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத்தாலும் விடேன்'' — என்றும்

தமக்குள்ள ஆராத் தமிழ்க் காதலை வெளியிடும் இடங்கள் பலவாகும். அவ் வரிகளெல்லாம் நெஞ்சில் இனிக்கின்றன. தமிழையும் தமிழ் நாட்டையும் மீட்க இவர் வெளியிடும் புரட்சிக் கருத்துகள் இளைஞர் நெஞ்சங்களில் எரிமலையின் கொந்தளிப்பையே வருவிப்பனவாம்! பாரதிதாசனின் உண்மை வரலாறு அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையில் இல்லை. அவரின் புரட்சியுள்ளத்தில்தான் ஒளிர்ந்து கிடக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் மக்களுக்கே தமிழ்ப் புரட்சி என்ற சொல்லுக்கு விடை தெரியும். முற்காலப் புலவர்கள் இத்தகைய புரட்சியை இவ்வளவு வெளிப்படையாக எங்கும் கூறிவிடவில்லை,

— இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்!'

என்று தமிழர்க்கு எச்சரிக்கை செய்கின்றார் பாவலர். அவர் தம் புரட்சித் துடிப்புக்குக் காரணமாக இருப்பதும் தமிழே!

'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்—இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

என்று கூறித் தமிழைக்காக்கத் தமிழையே படையாக ஏந்தி இப் புரட்சிப்பாவலர் போரிடும் மறக்காட்சி, தமிழர் தம் உள்ளங்களில் என்றும் நிலைக்கும் அரிய ஆற்றலைப் பெற்றிருக்

கின்றது. இப் புரட்சி மனப்பான்மையால் இவர் பெற்ற துயரங்கள் பலப்பல, இவர் பெறுத நன்மைகள் கோடி. இருப்பினும் 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்று தம்மைத் தாமே தேற்றிக் கொள்கின்ருர். தமிழன் உய்வுக்கும் வாழ்வுக்கும் அடிப்படையாக நிற்பது தமிழே என்று கூறித் தமிழ் இளைஞர் தமக்கு இவர் ஊக்கம் கொடுத்ததைப்போல் வேறு எந்தப் புலவரும் இதுவரை செய்ததில்லை.

> "உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு நேர்ந்ததென
> உரைக்கக் கேட்டால்,
> நரபெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாகி
> நண்ணி டாரே"

என்ற வரிகள் தமிழர்தம் மானமற்ற நெஞ்சை மறநெஞ்சமாக்கிக் கூன்பெற்ற உடலை இரும்பாக்குகின்றன. இவ்வுணர்வால் அவர் பெற்ற துயர்களையும் தொல்லைகளையும் அவரின் அஞ்சாநெஞ்சம் பொருட்படுத்தியதில்லை.

> "ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
> அல்லல்கள் வரின் ஏற்பேன்!
> ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
> குவப்புடன் நான் சேர்ப்பேன்!"

என்று தம் ஈக நெஞ்சத்தை இளைஞர் தம் முனைப்பிற்கு எடுத்துக் காட்டாக முன் வைக்கின்ருர் பாவேந்தர். 'பெறுவதற்கோர் ஏணி பெற்றும், ஏருத தமிழர் உயிர் வாழ்வதினும் இறத்தல் நன்றே'என்று சூடு சுரணையற்ற மரக்கட்டைத் தமிழர் தம்மைத் தட்டி எழுப்புந் திறம் இவர் பாடல்களில் உயிர் நாடியாகத் திகழ்கின்றது. இவருடைய வாழ்வே தமிழ் மறுமலர்ச்சி நிறைந்ததாகக் காட்சியளிக்கின்றது. 'வண்டமிழ் நைந்திடில் எது நம்மைக் காக்கும்?' என்று இவர் கேட்கும் கேள்விக்கு இக்காலத் தமிழிளைஞர் தாம் என்ன விடை பகரப் போகின்ருர் ?

தமிழர்தம் மொழிப் புரட்சிக்கும் விடுதலைப் புரட்சிக்கும் நாட்டு வாழ்த்துப் பாடிய முதல் விடுதலைப் புலவன் பாரதிதாசன். கழகக் காலத்திற்குப்பின் தமிழ்ப் புலவர் உரிமையுமின்றி எழுச்சியுமின்றி மன்னர்தம் மதுமயக்கங்களிலும், மங்கையர்தம் கொங்கை குறிகளிலும், பட்டாடை முத்து மாலை முதலிய மணியாரவாரங்களிலும் ஈடுபட்டு, நாட்டையும் நாகரிகத்தையும் பிறர் ஏச்சுக்கும், பேச்சுக்கும், கைவாள் வீச்சுக்கும் ஆளாக்கி வந்தனர். அதனால் ஈடும் எடுப்புமற்று, உயர்ந்த நாகரிகம் படைத்து முழுவளர்ச்சியுற்ற ஒருமொழியாகத் தமிழ் இருந்தும், போலிப் புலவர்தம் கையடைவால் நலிவும் மெலிவும் பெற்றுத் தன் உயர்ந்த நிலையினின்றும் இழியலானது. பாரதியார் ஊட்டிய உணர்வுப் பாலைப் பருகி, அவரினும் மேலாக மொழி காக்க வீறு கொண்டெழுந்தார் பாவலர் பாரதிதாசன்.

‘தமிழ்என்னும் பேருணர்ச்சி, இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை;
தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!’

என்ற வரிகளில் அவர் நெஞ்சில் நெருப்புப் பொறி போலக் கிளம்பிய உணர்வு, கீழ்வரும் பாட்டில் கொழுந்துவிட்டு எரியும் தணலாகி, இவ் வையத்தையே நடுங்க வைப்பதைப் பாருங்கள்.

“செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!

பாவலரின் புரட்சிக் கனல் பற்றி எரிகின்றது. அதன்மேல் ஆணையிடுகிறார் பாவலர்.

"எரிகின்ற எங்களின் நெஞ்சமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சிஇந் நாட்டிலே!"

இதைவிடத் துணிவாக எழுதிய பாவலர் இதுவரையில் தமிழ் நாட்டில் தோன்றவில்லை. இத்தகைய புரட்சிக் குரலுக்கும் செவிமடுக்காத தமிழரும் இனி உய்யப் போவதில்லை. ஏனெனில் இதற்குக் காரணமாக இருக்கின்ற இற்றை எழுத்தாளர்கள் எல்லாரும் கோழைகள். வெறும் இலக்கியக் காதலில் தம் நெஞ்சங்களைக் கரையவிடும் மானமற்றவர்கள். வரிக்கு வரி நயங்களை வாரியிறைத்துக் காசு பறிக்கின்ற தன்மானமற்றவர்கள். அவர்கள் தம் கைகளில் பிடித்திருக்கும் எழுதுகோல்கள் குள்ளநரிகளின் தொடை எலும்புகளால் ஆனவை. அவற்றில் ஊற்றப்பட்ட மை பெண்ணடிமைகளின் குருதி நாளங்களினின்று வடித்தவை. அவர் எழுதும் எழுத்துகள் முனை முறிந்த வாள்கள்! அவர்தம் கருத்துகள் காதறுந்த ஊசிகள்! அவை ஒருவர் உள்ளத்தையும் தீண்டுவதில்லை. போலி மழுப்பலும், கூலிக் காசின் களிம்பும் ஏறப்பெற்ற அவர்தம் நூல்கள் எந்த மக்களமைப்பையும் முன்னேற்றி விடப் போவதில்லை. பாவேந்தர் கூறுவது இது:

"இருக்கும்நிலை மாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்"

"………அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை!
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?"

அவர் கேள்வி இது!

புரட்சிப் பாவலரின் எழுச்சிக் கருத்துகள் தன்மதிப்புக் கழகத்தின் கண்ணாடிகள். தன்மதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்த பெரியார் திரு. ஈ. வெ.இரா. கூடத் தமிழ்மொழி பற்றியும் தமிழ்நாடு பற்றியும் கூறமுடியாமல் திணறிய கருத்து

களைப் பாவலர் எவர்க்கும் அஞ்சாது வெளிப்படுத்துகின்றார். பெரியாரின் தமிழ்க் கொள்கை தமிழ் மொழிக்கு நலந்தராத தன்மையில் இருப்பதால்தான், அவர் கூறும் உயர்ந்த சீர் திருத்தங்கள் தமிழ்நாட்டில் ஆழப்பதியவில்லை. அவரின் தமிழ்ப் பற்றில்லாக் கொள்கையால்தான் தமிழர் எழுச்சிக்கு அவர் புரட்சிக்கருத்துகள் அடிகோலவில்லை. அப்படியின்றிப் பாவலரின் பாவுள்ளம் தமிழரை இன்றில்லாவிடினும் என்றா வது ஒருநாள் தட்டி எழுப்பக்கூடியது. அவர்தம் பாவடிகள் பட்டு உருவாகாத தமிழர் இனி இரார். அவர் முழக்கம் கேட்டு விழிக்காத தமிழன் இனி இரான். அவர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து நடத்தக் கூடிய மறவர்களை அவர் ஏராளமாக உருவாக்கிச் சென்றுள்ளார். அவரின் வலிந்த ஆழமான இடியேறு போன்ற நெடிய முழக்கம் தமிழகக் குன்றங்களிலும் காவிலும் என்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

“வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர்கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!”

“……..சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல் செயப் புறப்படு வெளியில்!
சிங்க இளைஞனே! திருப்பு முகம்' திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித்து வந்த கயவர், நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பார் எனில்

வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!''

பாவேந்தரின் பதை பதைக்கும் உயிர்த்துடிப்பு! அவர் இனி மேல் தமிழர்களுக்குச் சொல்ல வேண்டுவது ஒன்றுமில்லை. அவர் தம்மையே தமிழர்க்ககாக் கொன்றுகொண்டுள்ளார் எனின் மிகையில்லை.

''தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழிர் நிலை நினைத்தால் துடிக்கும் நெஞ்சம்''

எத்தகைய தற்கொலை! தமிழனின் உயிர் எழுச்சிக்கு இத் தகைய வரிகளும் பயன்படவில்லையானால் அவன் உடலில் உள்ள எல்லா உயிரணுக்களும் பிறனுக்குச் சொந்தமான அணுக்களாக ஆகியிருத்தல் வேண்டும்! அவனை மீளாத் தூக்கத்தினின்றும் விழிப்படையச் செய்யப் பாவேந்தரின் வரிகள் கட்டாயம் போர்முரசமாக எதிர்காலத்தில் பயன் படும். அவர்தம் அழியாத பாவாற்றல் செத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் உள்ளங்களைச் சாகாமல் காக்கும். அவர்தம் வாழ்வு இப் பாடல் வரிகளிலேயே உயிர் பெறுகின்றது. அவர்க்கென்று தனி வரலாறு இல்லை. அவர்க்கென்று தனி அமைப்பு இல்லை. தம்மையும் தமிழையும் தமிழ் நாட்டையும் ஒன்றாகவே ஆக்கிவிட்டிருந்தார். ''சான்றாண்மை இவ் வுலகில் தோன்றத் துளிர்த்த தமிழை'' அவர் காதலித்தது போல் கம்பனும் காதலிக்கவில்லை. தமிழே அவர் உயிர்! மூச்சு! அவர் தமிழின் உருவம்!

''என் செய்வேன்! நாட்டைக் காக்க
எவருளார்? தமிழ்ச்சான் றோரும்
மன்னவன் கொடுமைக் கஞ்சி
வடக்கிருந் துயிர்நீத் தாரோ?
புன்செயல் தீர்ந்த தில்லை.
புலவர்கள் விழிக்க வில்லை.
நன்செயில் நடவு மில்லை

நாய்வாலும் நிமிர்வ தில்லை.
என்கடன் என்ன நெஞ்சே?
பணி செய்து கிடப்ப தொன்றே!

மேலைநாட்டு விடுதலைப் புலவர்களுக்கு இவ்வளவு வேலையில்லை. அவ்வந் நாட்டு மக்கள் இத் தமிழ் நாட்டு மக்களைப் போல் அறிவுக்கான அத்தனை வழிகளிலும் குருடர்களாக இல்லை. அரசியல் தெரியாராய், குமுகாய அமைப்பு விளங்ராய், பொருளியல் நினையாராய், அறிவியல் முனையாராய், மூடநம்பிக்கை நிரம்பிய பேதைப் புழுக்களாக இத் தமிழர்கள் நெளிவதைப்போல், பழைய உரோம, கிரேக்க, ஆப்பிக்க, மக்கள்கூட நெளியவில்லை. இத்தகைய தெளிவு நலஞ்சாராக் கழிசடைகளுக்கு மொழிப்பற்றையும், நாட்டுப் பற்றையும், குமுகாய அரசியலறிவுகளையும் சாற்றி விழிப்புறச் செய்வதற்கு நூறு பிளேட்டோக்களும், ஆயிரம் உருசோக்களும், பத்தாயிரம் மார்க்சுகளும், நூறாயிரம் வால்டேர்களும் கூடப் பயன் படார். இந் நாட்டிற்குத் தேவையானதெல்லாம் ஓர் அணுக் குண்டே! அல்லது ஓர் எரிமலையே! 'இடித்திடித்துக் கட்டுரை கூறின் செவி கொளார், கண்விழியார்; நெட்டுயிர்ப் போடுற்ற பிணங்களாக' உள்ள தமிழ்நாட்டு மக்களைப் பாரதிதாசனின் இத்தகைய பாடல்கள் விழிப்படையச் செய்ய இன்னும் நூறுண்டுகள் போகவேண்டும். அதன் பின்னர்தான் இவர் ஊன்றிய புரட்சி வித்தின் உருவம் தெரியும்.

"தமிழர் நாம் என்றால் நம்பால்
தமிழ் உண்டா? தமிழ் ஒழுக்கம்
அமைவுறச் சிறிது முண்டா?
அற்றைய மறத்தனந்தான்
கமழ்ந்திடல் உண்டா? நெல்லின்
கலைநலம் உண்டா? கல்வி
உமிழுமை அளவி லேனும்
ஒற்றுமை உண்டா?"

என்று பாவேந்தர் வினவிய வினக்களுக்கு விடை எழுதப் பல்லாண்டுகள் செல்லும். அதுவரை இப் பாடல்கள் தமிழர் உள்ளங்களை கொக்கிப் புழுக்கள் போலக் குடைந்து கொண்டிருக்கும்.

"நம்நாடு தமிழ்நாடு; நாமெல்லாம் தமிழ்மக்கள்;
இன்பம் கோரி
இந்நிலத்தில் வாழ்வதெனில் மூச்சாலே! அம்மூச்சுந்
தமிழே! அந்தப்
பொன்னை தமிழாலே தமிழ்ச்சான்றோர் புகன்றதமிழ்ச்
சட்டம் ஒன்றே!
இந்நாட்டை ஆண்டிடுதல் வேண்டுமதை இகழ்வாரை
ஒடுக்க வேண்டும்"

இத்தகைய மொழிக்காப்பு, மொழியுணர்வு தமிழக மண்ணில் பாரதிதாசனால் ஊன்றப்பெற்றன. இதுபோன்ற நூற்றுக் கணக்கான தமிழுணர்வுப் பாடல்களையும் ஆயிரக் கணக்கான சிறு சிறு குறிப்புகளையும் ஆங்காங்கே தம் பாடல் நூல்களில் பரவவிட்டிருந்தும், தாமே தமிழாக மாறியிருந்தும், தாம் எழுதிய ஏறத்தாழ முந்நூறு தலைப்பிட்ட பாடல்களில் ஆறே ஆறு பாடல்களைத் தமிழ்க்காக எழுதிய பாவலர் சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசனினும் மேலாகத் தமிழர்களாலேயே கொண்டாடப்படுகின்றமைக்கும், புகழ் பெற்றமைக்கும், பல மொழிகளிலும் அவர்தம் பாடல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றமைக்கும் காரணம் என்ன? அவரின் பாடல்கள் இவரின் பாடல்கள் போல் ஒரு மொழி பேசும் நாட்டிற்கே உரியவாக இராமல், எல்லா இனத்தினர்க்கும், மொழியினர்க்கும் தேவையானவாக இருப்பதாலா? இல்லை இல்லை. பாரதிதாசன் பாடல்களிலும் அத்தகைய பொதுமைப் பாடல்கள், வாழ்வு இலக்கியங்கள் பல உண்டு. ஆகையால் அது காரணமாகாது. பின்னை எதுவெனின், பாரதியார் பார்ப்பனர் என்பதால், பார்ப்பனர்கள் அவற்றை வெளிக்கொணர்வதினும், பரப்புவதினும் தமிழரினும் பர

பரப்பும் நாட்டமும் உடையவராக இருந்தனர் என்பதும், அவ்வாறு வினைபுரிவார்க்குத் தமிழடிமைகள் துணை நின்றமையும், பாரதியார் பாடல்களில் பாரதநாடு மிகவுயர்த்தப்பட்டுப் பேசப் பெறுகின்றமையும், பாரதிதாசன் பாடல்களில் அடிமையுற்றுக்கிடக்கும் தமிழர்க்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் பேரளவில் ஊட்டப்பெற்று, நாட்டு விடுதலைக்கும் மொழிவிடுதலைக்கும் போராடுமாறு அவர்க்கு அழைப்பு விடப் பெற்றிருப்பதுமே, அவ்வாறு பாரதிதாசன் பாரதியார்போல் போற்றப் பெருமைக்குக் காரணங்கள் ஆகும் என்று அறிந்து கொள்க. இத்தகைய காரணங்களை ஒருவாறு நம் பாரதிதாசனும் பிறழ உய்த்துணர்ந்தே தம் இறுதி நாட்களில் தமிழ் உணர்வோடும், தமிழ்நாட்டு உணர்வோடும், பாரத நாட்டுப் பற்றையும் ஏற்றி ஒரு சில பாடல்களை யாக்க நேர்ந்தது. ஆனல் அத்தகைய பாடல்களில் உயிர் இல்லை. காரணம் ஏற்கனவே அவர் உள்ளத்தில் தமிழ் மணம் சூழ்ந்திருந்ததுதான்.

இவ்வாறு செந்தமிழ் உணர்வால் தம்மை முழுமையும் உருவாக்கிக் கொண்டிருந்த நம் புரட்சிப் பாவலரின் முதல் பாட்டுத் தொகுதி 1938-இல் திருவாளர் குத்தூசி குருசாமி• திருவாட்டி குஞ்சிதம் குருசாமி அவர்கள் தம் பேருழைப்பால் வெளியிடப் பெற்றது. அத் தொகுதியில் வந்த பாடல்கள் தமிழ்க்கும் தமிழர்க்கும் புதிய உணர்வேற்றின. நெடுநாட்களாக அவர் தூங்கிக் கொண்டிருப்பது அவர்கட்கே தெரியலாயிற்று. அதன் பின்னர் அவர் தம் மூத்த மகளின் திருமணம் 1944-இல் நடைபெற்றது. அந்த ஆண்டில்தான் பாரதிதாசன் தம் உயர்ந்த இலக்கிய வாழ்வு நூலான 'குடும்ப விளக்கை' வெளியிட்டார். அக் குடும்ப விளக்கு வெளிவருவதற்கு அவரின் மூத்த மகள் சரசுவதிதான் காரணம் என்று அவரே வெளிப்படையாகப் பலரிடமும் கூறியுள்ளார். திருவாட்டி சரசுவதி உயர்ந்த ஒழுக்கமும், சிறந்த பண்பாடும் வாய்ந்த குடும்ப விளக்கு! அதன் பின்னர் 1945-ல் 'தமிழியக்கம்' என்ற அவரின் மற்ருெரு சிறந்த நூல் வெளிவரலாயிற்று.

ஓயாத எழுத்து வேலைகளாலும், தமிழ்ப் புரட்சியாலும் பாவலர் தாம் ஆற்றிக்கொண்டிருந்த பணியை 1946-இல் விடவேண்டுவதாயிற்று. அதன் காரணமாக அவருடைய குடும்பம் புதுவையில் உள்ள சுற்றுப்புற ஊர்களான நெட்டப் பாக்கம், கூனிச்சம்பட்டு, ஆலங்குப்பம், முத்திரைப்பாளையம் முதலிய ஊர்களுக்கும், திருமலைராயன்பட்டினம், திருநள் ளாறு முதலிய வெளியூர்களுக்கும் அடிக்கடி இடம் பெயர்ந்து செல்ல வேண்டியிருந்தது. பாவலர் ஆசிரியப் பணியிலிருந்து விலகியதும் 1948-இல் குயில் என்ற பாட்டு இதழைத் தொடங்கிஅவ்வப்பொழுது தமிழர்க்கு உணர்வேற்றிவந்தார். குயில் மாதம் ஒருமுறை வெளிவந்து கொண்டிருந்தது. பாட் டாலேயே தொடங்கப் பெற்ற முதல் இதழ் பாரதிதாசனின் 'குயில்'தான். இப் புதுவைக் குயில் செய்த புரட்சி கொஞ்ச நஞ்சமன்று. அரசியலிலும் ஈடுபட்டுக் குரல் கொடுக்கத் தொடங்கியது. ஆளுநர்களைக் கண்டித்தது. அரசினர் தமிழர்க் கிழைத்த கொடுமைகளை அஞ்சா நெஞ்சுடன் சுடச் சுட அவ்வப் பொழுது எடுத்துக் கூறித் தமிழர்க்குத் தோன்றாத் துணையாக நின்றது. பாவலர் அக்கால் ஓய்வுக்கால ஊதிய மாகப் பெற்றுவந்த உருபா முப்பந்தைந்திலேயே குடும்பம் நடந்து வரலாயிற்று. அவர் தந்தையின் சொத்துகளும் வாணிகத்தில் கரைந்தன. பாவலர் குடும்பம் வறுமைத் தொல்லைக் காட்பட்டுப் புயலிற் சிக்கிய கலம் போலத் திகைத்தது.

தம் வாழ்வுப் போராட்டத்திற் கிடையேயும் பாரதி தாசன் தமிழ் உணர்வால் தொழிலாளர்களிடையேயும் புரட்சிக் கனல் எழுப்பினார். தொழிலாளர்கள் எல்லா வகை யானும் மிடிமைப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. உரிமையற்றுக் கிடந்த அந்த நெஞ்சங்களைத் தட்டி யெழுப்பி உரிமை கேட்கத் தூண்டினார். அவரின் எளிய தமிழ் நடை தொழிலாளர்களின் உள்ளங்களை மிகுவாகத் தீண்டியது.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்; ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி

நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின்மூச்சு?"

என்று அவர் கேட்ட கேள்விக் கணைகள் தொழிலாள மக்களின் உள்ளங்களை ஊடுருவின. அவர் தாம் மாந்த இனத்தை உருவாக்கும் பெருந்தொழிலைப் புரிந்து வந்தாலும், வாழ்வின் அடிப்படியில் உரிமையற்ற அடிமைகளாய் உழல்வதைப் பாவலர் வாயிலாக உணர்ந்து கொதிப்படையலானார்.

"எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே".

என்ற பொதுவுடைமைக் கொள்கையில் அவர் விடுத்த உரிமைப் பட்டயம் தொழிலாளர் கைகளுக்கு வலுவேற்றியது.

"இல்லாமை எனும் பிணி
இல்லாமல், கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே!" —என்று அவர்

கொட்டிய முரசொலி ஏழை எளியவர்தம் முதுகுகளை நிமிர்த்தியது. குலவேறுபாட்டானும் சமயப் பூசல்களானும் அடிமைப்படுத்தி வைத்திருந்த அத் தொழிலாளர் கூட்டத்திற்குத் தன்மதிப்பும் தன்னுணர்வும் ஊட்டினார். நாள் முழுதும் வெயிலிலும் மழையிலும் உழைத்தும் முன்னேறாமல் கிடக்கும் அவ்வேழைகள் முன்னேறாமைக்குக் காரணமாகக் கூறப்படும் "விதி" "கடவுள்" என்ற போலி அமைப்புகளைக் கருத்து வெடிகளால் தகர்த்துச் சுக்குநூறாக்கினார். உழைப்பது, உழவு செய்வது, உடை வெளுப்பது முதலியவை

"கடவுளாணை யாயின், அந்த
உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ?- தன்
கழுதைதான் முன்னேற்றுமோ? —என்று

சமயத் தலைவர்களைப் பார்த்துச் சுடச் சுடச் கேட்டார்.

"மதத்தின் தலைவீர்!—இந்த
மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தை மாரே!
... ... ... ... ... ...
இப் பொழுதே நீர்—பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே!—எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே!"

—என்று கைகளை முறுக்கிக் கொண்டு கேட்டார். நாட்டுப் பொதுமை ஊர்ப்பொதுமை கூறிய அவர் புத்துணர்வுப் பாடல்கள் உலகில் தொழிலாளர் கூட்டம் என்று ஒன்றுள்ள வரை நிலைத்து நிற்கத் தகுதி பெற்றவையாகும். தேசிய முழக்கமிட்ட பாரதியும் பாட்டாளி மக்களின் உரிமைக்குரலை இவ்வாறு எதிரொலித்ததில்லை.

"குடிக்கவும் நீரற் றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே—தம்பி
வசங்கெட்டுப் போனது நமது நன்னாடு"

"மனிதரில் நீயும் ஓர் மனிதன்; மண்ணன்று;
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இது உன் வீடு..........?

—என்று உறங்கும் தொழிலாளர் உலகுக்கென அவர் வாயினின்று தெறிக்கும் புரட்சிக் கனல்போல் எந்தத் தமிழ்ப் பாவலன் வாயினின்றும் இவ்வளவு தெளிவாக வரவில்லை. உண்மையும் உரிமையும் பெற்ற பாட்டுநெஞ்சினின்று பிறக்கும் கூரிய சொற்களின் வலிவு எத்தகையது என்பதற்குப் பாரதிதாசனாரின் இத்தகைய வரிகள் சான்று! தொழிலாளர் முன்னேறுமைக்கு அவர்பால் ஒற்றுமை உணர்வின்மையே காரணம் என்றும் அவர்க்குப் புலப்படுத்தினார். ஒற்றுமையில்லாமையால், தொழிலிலும் முன்னேற்றமில்லை. தொழிலாளரும் முன்னேறுவதில்லை என்று தெளிவாக அவர்க்கு எடுத்துரைத்தார்.

"கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி".

என்று அவர்க்கும் அரசினர்க்கும் நினைப்பூட்டினார். அவர்களுக்குள் இருக்கும் குலப்பிரிவுகளே அவர்களின் ஒற்றுமையின்மைக்குக் காரணம் என்று தெளிவு படுத்தினார். அந்த இடைச் சுவர்களை இடித்துத் தள்ளி அவர்களை முன்னேற்ற வழிக்கு வாருங்கள் என்று முழங்கினார்.

"இடையில் வைத்த சுவரை இடித்து,
விழிகள் இடையில் திரையினை விலக்கி,
நாட்டோடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு! விடாமல் ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
பாரடா உனது மனிதப் பட்டாளம்!"

என்று நம் நாட்டுத் தொழிலாளர்களை மட்டுமன்று, உலகத் தொழிலாளர் அவ்வளவு பெயர்களையும் ஒன்றுபட இவர் விடுக்கும் அழைப்பு எதிர்காலத்தில் உலகின் பல்வேறு முனைகளிலும் எதிரொலிக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இவ்வுலகம், முதலாளிகளுடையதன்று;உழைப்பவருடையதே!

ஆகையால் அவர்கள் தயங்குதல் வேண்டா என்று அச்சம் தீர்த்தார்.

"உடலைக் கசக்கி உதிர்த்த வெயர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க் குரிய தென்பதையே!"

என்று இவ்வுலகத்தையே அவர்க்கு உரிமையாக்கும் இப் புது வைப் பாவலரைப் போல் தொழிலாளர் உலகத்தைத் தட்டி எழுப்பிய வேறு புரட்சியாளர் தமிழ் நாட்டில் உண்டோ? திரும்பிய பக்கமெல்லாம் தொழிலாளர் முழக்கம் எழுமாறு அவர் எழுதியப் பாடல்கள் மக்கள் உரிமையுணர்வைக் கீறின.

"சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்தஇப் பாரினிலே! —முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ?உங்கள் வேரினிலே!
... ... ... ...
ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? நீங்கள்
ஊர்த்தொழி லாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

—எனப் பாவலர் தொடுக்கும் வினாக்களில் எத்தகைய உரிமைக் குரல்கள் குமுகாயத்தின் கட்டுக்கோப்புகளைத் தகர்த்துக் கொண்டு வெளிப்படுகின்றன! உழைப்பாளர் களின் உரிமைகளை நசுக்கிக்கொண்டு ஊர்ப்பணத்தைக் கொள்ளையடிக்கும் முதலாளிமார்கள் புரட்சிப் பாவலரின் அரிமா முழக்கத்திற்கு அஞ்சி நடுநடுங்கினர். சமயத் தலைவர்கள் தங்கள் கோயில்களின் கருவறைகளில் போய்க் கற்படிமத்தோடு கற்படிமாகக் கட்டிக்கொண்டு கிடந்தனர்.

"கூடித் தவிக்கும் குழந்தை, மனைவியர்
கூழை நினைத்திடும் போதிலே —கோயில்

வேடிக்கை யாம்தெரு மீதிலே—செல்வர்
வாடிக்கை ஏற்பீரோ காதிலே!''

—என்ற வரிகளில் தெறிக்கும் உண்மையை மக்கள் உலக உணருமாறில்லே. அவர் தாம் வந்த வழி அத்தகைய மீளா அடிமைத்தளேயை அவர்கள் பாங்கில் விரித்துவிட்டிருக்கின்றது. அவர்களின் உடல்களில் மட்டுமின்றி உயிரினும் உணர்வினும் அடிமை அணு ஊடுருவிக்கொண்டுள்ளது. இத்தனேக் குறைபாடுகளேயும் வைத்துக்கொண்டு பாரத நாடென்றும், உரிமை என்றும் தேசியத் திருவிளேயாடல்கள் நிகழ்த்திவரும் அரசியலார் தமக்கு மண்டையில் ஆணியை அறைகின்ருர் நம் புரட்சிப் பாவலர்.

''பஞ்சமர் பார்ப்பார் என்பதெல்லாம்
பாரத நாட்டுப் பழிச்சின்னத்தின் பெயர்''

என்று பாரத நாட்டுப் பெயர்ப் போற்றிகளின் வாய்களில் கழிசடைப் புனலே ஊற்றி 'நாற்றமடிக்கின்றது பார்' என்று தம்மின் உரிய நெஞ்சத்தோடு கூறுகின்ருர். தொழிலாளர்தம் இத்துணே அறியாமைக்கும், முன்னேற்றத் தடைக்கும் அரசினரே துணே நிற்கின்ருர் என வெளிப்படையாக உணர்த்துகின்ருர்.

''கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளேயடிப் பதும் நீதியோ?—புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ ?
... ... ... ...
சோரும் துரைத்தனத்தாரும் பெரும் பொருள்
கொண்டவர்க்கே நலம் கூட்டுவார்—உழைப்
போரிடமே கத்தி தீட்டுவார்?''

''கட்டத் துணியளித்தார்; கல்லுழுது நெல்லளித்தார்;
வெட்டிக்காடெல்லாமே வீடாக்கித் தந்தார்!

எருக்கு முளைக்கும் இடர்ப்பாம்பின் பல்போல்
பருக்கைக்கல் வாய்த்தும் படுபள்ளம் வாய்த்தும்முன்
முட்டுநிலம் நேராக்கி, முல்லை பரப்பியதோர்
பட்டுமெத்தை போன்ற நிழற் பாதை யளித்தார்!
தரைமீது பட்டணங்கள் தந்தார்; கடலின்
திரைமீது பட்டணங்கள் செல்லும் படியமைத்தார்!
... ... ... ... ... ... ... அவர்களை நீ
மாந்தர் எனவும் மதிக்கவில்லை; உன்னையவர்
வேந்தர் எனவும் மதிப்பாரோ ?"

எண்ணற்ற கொடுமைகளுக்கும் வேராக இருக்கின்ற அரசு. வடநாட்டார் கையில் சிக்கித் தொல்லைப் படுவதைப் பாவலர் துணிவுடன் முழங்குகின்றார். தமிழ் மக்களுக்கு உண்மையையும் உணர்த்துகின்றார்.

"வடநாடு தென்னாட்டை வீழ்த்தச்—செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி!"

இவ்வாறு அவர் தமிழ்க்கும் தமிழர்க்கும் போராடிய போராட்டம் மிகப்பெரிது. நாட்டின் உரிமையைப் பாட்டாலே காத்த பாவலர் அவர். செத்தழியும் தீந்தமிழ்க்கு, எத்திசையும் காப்பளிக்கவேண்டி அவர் முழங்கிய முழக்கங்களால் தமிழர் கூட்டம் கனன்றெழுந்தது. பாவலர்தம் பாத்திறத்தைப் பாராட்டி ஏராளமான பரிசுகளைத் தமிழர் அவர்க்களித்தனர். 1946-இல் சென்னையில் நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில், திருவாளர். அண்ணாத்துரை தம் பெருமுயற்சியால், திரட்டிய உரூபா இருபத்தைந்தாயிரம் கொண்ட பண முடிப்பு ஒன்றினைப் பாவேந்தர்க்கு அளித்தார்; அவர் கடமையுணர்வைத் தமிழர் என்றும் மறவார்.

பாவலர் குடும்பம் பெருகிற்று. திருவாட்டி சரசுவதிக்குப் பிறகு மன்னர்மன்னனும் இரண்டு பெண்களும் பிறந்தனர். புதுவை அரசினர் தொல்லையால், அவர் நடத்திய குயிலும்

இடை நின்றுபோய் அண்மைக் காலத்தேதான் மீண்டும் வெளிவந்தது. குடும்பத்தில் பலகோளாறுகள். பாவலர், 'பழநியம்மா அச்சகம்' என்ற பெயரால் நிறுவிய அச்சுக்கூடமும் ஒரு வீடும் மட்டுமே அவர்க்குடைமைகளாக இருந்தன. பிள்ளைகள் நால்வருக்கும் திருமணங்கள் நடத்தப்பெற்றன. இதற்குள் அவர் ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டார். குடும்ப விளக்கு, அழகின்சிரிப்பு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், இருண்டவீடு, இசையமுது· ஏற்றப்பாட்டு, காதல் நினைவுகள், காதலா கடமையா, தமிழச்சியின் கத்தி முதலிய பாட்டு நூல்களும், இரணியன், படித்த பெண்கள், சேரதாண்டவம், நல்ல தீர்ப்பு, கழைக் கூத்தியின் காதல், கற்கண்டு, சௌமியன், அமைதி என்ற நாடக நூற்களும் வெளிவந்திருந்தன. இறுதியாக இளைஞர் இலக்கியம், தேனருவி, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் என்ற நூல்களையும் வெளியிட்டார்.

இந்திய நாடும், புதுச்சேரியும் விடுதலையடைந்தபின் நாட்டு நிலை மாறியது. வெள்ளையர்களின் கைகளில் இருந்த அரசாட்சி வடநாட்டு இந்திபேசும் மக்களின் கைகளுக்குப் போயிற்று. அதனால் இந்தியை ஆட்சி மொழியாகக்கொண்டு வர ஆட்சி திட்டமிட்டது. பாரதிதாசனும் அரசியலில் வெகுவாக ஈடுபடலானார். தேர்தலில் கூட்டுக் கட்சிகளின் சார்பில் நின்று 1955-இல் புதுவையில் சட்டமன்ற உறுப்பினரானார். அதன் பின்னர் 1960-இல் நடந்த தேர்தலிலும் போட்டியிட்டுத் தோற்றார். அரசியல் ஈடுபாடு இவர்க்கிருந்த மக்கள் ஈடுபாட்டைக் கெடுத்தது. கட்சிகள் விளைத்த பூசல்களால் இவர் பெரிதும் துன்புற்றார். தம் உடல் நலம் குன்றிய நிலையிலும் நடுவணரசால் தமிழ் நாட்டில் வலிந்து திணிக்கப்பெறும் இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார். தாம் ஓய்வுக்கால ஊதியமாகப் பிற்கால் பெற்றுவந்த நூறு உருபாக்களையும் பொருட்படுத்தாது அரசினரைத் துணிவுடன் கடிந்தார். தமிழ் மொழிக்கு ஒருபொழுதும் தீங்குவர விடமாட்டேன் என்று களிறெனப் பிளிறினார்.

"தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்
பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!
ஏங்க வைக்கும் வடமொழியை இந்தியினை
எதிர்த்திடுவீர்! அஞ்ச வேண்டாம்!
தீங்குடைய பார்ப்பனரின் ஆயுதங்கள்
இந்தி, வடசொல் இரண்டும்"

என்று முழக்க மிட்டார்.

"பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?"
—என்றும்,

"இந்த அரசினர் செந்தமிழ் ஒழித்துத்
தீய இந்தியைத், திணிக்கின் றார்கள்.
தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்
நந்தமிழ் காப்பது நம்கடன் அன்றோ?" —என்றும்

"...... ..........தமிழை வடநாட்டார்
மாற்றித் தமிழர் கலையொழுக்கம் பண்பெல்லாம்
மாற்றவே இந்திதனை வைத்தார் கட் டாயமென;
வேற்றுவரின் எண்ணத்தை வேரறுத்தல்
உம்கடனே!" —என்றும்,

"பொறுப்புடைய இந்தி விளைக்கின்றார், இங்கே!
அறப்போர் தொடுத்திடுவோம்! செல்வோம் நாம்;
அன்றி
இறப்போம், உறுதி இதுவாகும் என்பீர்!
உறக்கம் தவிர்த்துணர்வே உற்றெழுதல் உங்கடனே!

என்றும்,

"மட்டக் கருத்துக்கள் மாளா மடமை எலாம்
கொட்டி அளக்குமோர் இந்தியினை நம்தலையில்
கட்டுவார் தம்மை ஒரு கைபார்த்தல் உங்கடனே!

என்றும்,

"வந்தார்க்கோ நாமடிமை? வந்தார் பொருள் விற்கும்
சந்தையா நம்நாடு? தாயாம் தமிழிருக்க
இந்தியோ கட்டாயம்? என்ன பெருங்கூத்தோ?
கொந்துமொரு கொத்தடிமை நீக்கிடுதல்
உங்கடனே!

என்றும், தமிழ் மக்களுக்குக் கடமை சாற்றினர். தமிழர்கள் யாண்டும் விழிப்புணர்வோடிருத்தல் வேண்டும் என்று, அவர் விடுத்த எச்சரிக்கையைத் தமிழர் மறத்தலாகாது. இந்தியைக் கட்டாயமாகத் தமிழர் கற்க வேண்டும் என்பதால் எந்தப் புது நலமும் விளையப்போவது இல்லை என அரசினர்க்குத் திட்ட வட்டமாக அறிவித்தார்.

"செந்தமிழ் தன்னில் இல்லாத பல
சீமைக் கருத்துகள் இந்தியில் உண்டோ ?
எந்த நலம் செய்யும் இந்தி? எமக்
கின்பம் பயப்பது செந்தமிழன்றோ!"

அரசினர் இக்கூற்றுக்குச் செவி கொடாவிடில் தமிழ்மக்கள் வாளாவிரார் என்றும், பெரும் மொழிப் புரட்சி எழும் என்றும் அவர் முழக்கும் முரசார்ப்பு, தமிழர்க்குப் போர்ச் சங்கம்; அரசினர்க்குச் சாச்சங்கம்! அவர் புலிப்பாய்ச்சல் இது.

"இன்னலை ஏற்றிட மாட்டோம்; —கொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றுலோ
கன்னங் கிழித்திட நேரும் —வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்".

"அல்லற் கஞ்சோம்; கடுமொழி
சொல்லற் கஞ்சோம்; ஒருசிறை
செல்லற் கஞ்சோம்; அஞ்சோம் !
தூக்குக் கஞ்சோம்..........

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி ?
எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும் ?

அற்பமென் போம் அந்த இந்திதனை —அதன்
ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்;

பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே —உடல்
பச்சை ரத்தம் பரி மாறிடுவோம்;

சொல்லுக்குச் சொல், நெருப்புப் பொறி! வரிக்கு வரி, கத்தி வீச்சு! எரிமலை குமுறியதுபோல, நான்கு புறமும் சிதர்ந் தோடும் கனப்புக் குழம்பு, பாட்டாக உருவெடுத்துப் பாவேந் ரின் மற நெஞ்சத்தை மாற்றார்க்கு உணர்த்துகின்றது. இம் மற நெஞ்சத்தின் காவலில் தமிழ் இளைஞர்கள் அச்சமற்று நின்றிருந்தனர். அரிமாவின் வேல்விழி நோக்கின பாங்கில் குருளைகள் பகையச்சம் நீங்கி இருப்பதைப் போல் இருந்தது தமிழர் குமுகாயம். தமிழ்ப் புலவர்கள் எனப்படுவோரெல் லாரும் அரசினரின் அச்சுத் தாள்களுக்கு அஞ்சி நடுங்கிய பொழுதெல்லாம், பாவேந்தரின் கடல் முழக்கமே தமிழைக் காத்து வந்தது. பாவேந்தர் எழுச்சியூட்டி வளர்த்த மொழிப் போர் இளைஞர்களின் குருதி நாளங்களில் என்றும் திசை மாறாது ஓடிக்கொண்டிருக்கும்.

“கடல் போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக தமிழ் வாழ் கென்று
கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!
செழிப்போரே! இளைஞர்களே!
தென்னாட்டுச் சிங்கங்காள்! எழுக, நம் தாய்
மொழிப்போரே வேண்டுவது!
தொடக்கஞ் செய்வீர்! வெல்வீர், மொழிப்போர்
வெல்க!”

என்று வெற்றிச் சங்கம் ஊதினார் பாரதிதாசன். அவர்தம் முழக்கம் எல்லாத் தமிழர் நெஞ்சக் கதவுகளையும் திறந்துள் ளது. மான உணர்ச்சியைக் கீறி இனவுணர்வை வெளிப் படுத்தின. அவர்க்கிருந்த அச்சமெல்லாம் எரிமுன் சருகா யிற்று.

"அரசிருந்த தமிழன்னை
ஆட்சியிலே சூழ்ச்சிசெயும் ஆட்கள் யாரும்
எரிசருகு! தமிழரிடை
எழுச்சியுறும் தமிழார்வம் கொழுத்த தீ தீ!!"

-என்று தீ மூட்டினார், புதுவை தந்த புரட்சிப் பாவலர். தமிழும் தமிழுணர்வும் உள்ளவரை அவரின் மாணிக்க மொழிகள் மறையப் போவதில்லை. குதித்துக் கூத்தாடு கின்ற அவரின் பேருள்ளம் தமிழர்க்கு எழுச்சி ஊட்டிக் கொண்டே இருக்கும். நூறு பாவலர்கள் சேர்ந்த புரட்சிக் கழகம் அவர்! எதிர்காலத்தில் உருவாக விருக்கும் பல்லா யிரக்கணக்கான தமிழ்ப் பாவலர்களுக்கு வற்றாத பேருணர்வு வெள்ளமாக அவர் பாடல்கள் நின்று உயிர்ப்பூட்டும். தமிழர்க்கேற்பட்ட இத்தகைய மொழி, இன, நாட்டுக் கொடு மைகளுக்கெல்லாம் தமிழ் நாட்டின் தகுதியற்ற தலைமையே பெருங் காரணமாக உள்ளது என்று துணிவாகக் கூறினார்.

"தமிழ்நாட்டில் தமிழுக் கன்றோ
தலைமைதந் திடுதல் வேண்டும்?
தமிழ்நாட்டில் தமிழ னன்றோ
தலைமைதாங் கிடுதல் வேண்டும்?
தமிழ்நாட்டில் பிறமொ ழிக்கே,
தலைமைதந் துயிர்வாழ் கின்றார்!
தமிழ்நாட்டில் தலைமை யாவும்
தமிழரின் பகைவர் கையில்"—என்றும்,

"தமிழறியார் தமிழ்ச்செயலில் தலையிடுதல் சரியா?
தாம்திருந்தார் பிறர்திருந்தச் சாற்றவரல் தகுமா?"
—என்றும்,

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டில்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!
தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ் நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்!

என்றும், தமிழ் நாட்டின் தலைமையின் தலையில் சம்மட்டி கொண்டு தாக்குகின்றார். மானமுள்ள தமிழராயின் தமிழ்ப் பற்றில்லாத் தலைமையை வரவிடார்; அல்லது மானமுள்ள தலைமையாயின் தமிழ்நாட்டில் எழுப்பப்பெறும் எதிர்ப்புக் குரலுக்குச் சற்றேனும் செவி குவிப்பார்; இத்தகைய இரண்டுங்கெட்டான் நிலையைத் தமிழகப் புலவரும் துணி வுடன் எடுத்தியம்புமாறில்லை என்பதையும் தப்பாமல் குறிக் கின்றார் பாவலர்.

"சோற்றுக்கென் றொருபுலவர் தமிழ்எதிர்ப்பார்
அடிவீழ்வார்! தொகையாம் செல்வப்
பேற்றுக்கென் றொரு புலவர் சாத்திரமும்
தமிழ்என்றே பேசி நிற்பார்!"

"பாட்டினிலே பெரும்பிழையைப் பல்குவிப்
பானுக்கு மணிப் பண்டிதர்கள்
சாட்டை கொடுத் தறிக்கை விடத்
தாள் ஒன்றும் அற்றதுவோ?"

என்று, அவர் கொடுக்கின்ற சாட்டையடி, புலவர்களின் முதுகில் உறைத்தும் காதுகளில் உறைக்குமாறில்லையே!

1960-இல் திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர் களால் அமைக்கப்பெற்ற தமிழகப் புலவர் குழுவில், பாரதி தாசனும் ஒருவர். எனினும் புலவர் குழுவும் அவர்தம் மொழிக் கருத்துகளுக்கு ஆக்கம் தருவதாக இல்லை. பாவல ருக்கு ஆக்கம் தராமற் போனாலும், புலவர் குழுவாவது தமிழாக்கப் பணிகளில் ஈடுபட்டோ, அரசினரைத் தட்டிக் கேட்டோ, பொதுமக்களைக் கிளர்ந்தெழச் செய்தோ, தமிழ்க் கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் இழைக்கப்பெறும் கொடுமைகளைத் தவிர்க்கவில்லை; கடுமையையாவது குறைக்க எண்ணவில்லை. அக் குழுவிலும் பாவேந்தரின் குரலே தனித்து ஒலித்தது. அப் புலவர்கட்கு முதுகு நரம்புகள் அறுந்து போகும் பொழுதெல்லாம் பாவேந்தர் அவர் தமக்கு முட்டுக் கொடுத்து அரசினர்க்குக் குரல் கொடுத்தார்.

"தமிழ், தமிழினம், தமிழிலக்கியம் இவற்றில்
ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும்!
நாட்டின் உரிமை காத்தல் வேண்டும்".

—என்று தமிழர்க்குத் தமிழ்ப் புலவர்க்கும் இருக்க வேண்டிய பகையச்சத்தையும் கடமையையும் எடுத்துக் கூறினார்.

பாவேந்தர் தம் இறுதி நாட்களில் உடல், மனம், செல்வம் முதலிய நலங்கள் குன்றி, மிகவும் சாம்பிப் போனார். தமிழர் உடலில் தமிழ்க் குருதி ஓடாமை கண்டு, உயிர் வெதும்பினார். தமிழர்க்குள் ஏற்பட்ட கட்சி, குல, கருத்துப் பூசல்களை எண்ணி எண்ணிச் சோர்வடைந்தார். இலக்கக் கணக்காகத் தொகுத்தபடி கட்சித் தலைமை தாங்குபவர்களும், பாவேந்தரின் செல்வங்குன்றிய நிலையைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. அரசினரும் இப்பெரும் குமுகாயப் புலவர்க்கு ஒன்றும் உதவுமாறில்லை. தமிழ்க் கழகங்களும், அரசினர் சார்பில் அமைந்த தமிழ், இலக்கிய வளர்ச்சி மன்றங்களும், நடுவணரசுக் கழகங்களும் இவரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இலக்கிய வளர்ச்சிக்கென உதவுகின்ற நூல்களாக வெறும் புனை கதைகளையும், குருட்டுச் சொல்லாடல்களையும், புனைசுருட்டுப் புளுகுகளையும் தேர்ந்தெடுத்து ஆயிரம் இரண்டாயிரம் எனப் பரிசுகளை அள்ளிக் கொடுத்தனரேயல்லால், இவரெழுதிய நூல்களில் சாகா இலக்கியங்களான குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், இசையமுது முதலியவற்றில் ஒன்றுக்கேனும் ஒரு சிறு பரிசும் தரவில்லை. இவரின் குடும்ப விளக்கு உலகப் பொதுமை வாய்ந்த சிறப்பு நூல்! மக்கள் அமைப்புக்கெல்லாம் பொதுவான நடையுடை வினை முறைகளைத் தெளிவாக, இலக்கிய நயஞ்சொட்ட அருமையாக எடுத்துரைக்கின்றது. அவரெழுதிய நூல்களின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதெனின், அஃது ஒரு தனிப் பெரும் கட்டுரையாகவே விரியும்!

எழுதி எழுதிச் சோர்வடைந்தது அவர் கை; நினைத்து நினைத்துத் துயரடைந்தது அவர் உள்ளம். தமிழ்நாட்டின் நலனுக்கே வாழ்நாள் முழுதும் வீறு முழக்கிய அவர் வாய் அமைதி பூண்டது. அவ்வடங்கிய நிலையில் அவரைப் பயன் படுத்திப் பணம் பறிக்க முற்பட்டனர் திரைப்படப் பித்துடையார் ஒரு சிலர். பொன் முட்டை இடும் இத் தமிழ்த்திற முடைய வாத்தின் வயிற்றுள் உள்ள அத்தனை முட்டைகளையும் ஒரேயடியாக எடுத்துவிடத் துணிந்தனர் புல்லியர் சிலர். ஆகையால் புதுச்சேரியினின்று பாவேந்தர் சென்னைக்கு இழிந்தார். அவர் அறிவு குழப்பப் பெற்றது. இழுத்த இழுப்புக்கெல்லாம் அவர் இணங்கினார். வேந்தர்க்கும் விழி தாழா இப் பாவேந்தரின் தலை, வீணரின் சிறு குரலுக்கும் விரலசைவுக்கும் தாழ்ந்து, தமிழ் மறம் குன்றியது. இவர் தம் உடலையும் உள்ளத்தையும் ஒருங்குறத் தாழ்த்திக் கொண்டார். அத்துடன் முன்பெல்லாம் ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து வெண்சுருட்டுகளைப் புகைத்து வந்த இவரின் வாய், ஒரு நாளைக்கு நூறு இருநூறெனப் புகைத்து இவரை நினைவிழக்கச் செய்தது. இவரின் குடும்பம்வேறு கட்டுக் குலைந்தது. உறவினர் எனப்படுவோரெல்லாம் பாவலரின் சொத்துகளுக்குப் பட்டியல் எடுத்தனர். கடன் ஏராளமாகக் குவிந்தது. மன அழற்சியாலும் போதிய கவனிப்பின்மையாலும் சென்னையில் தம் இறுதி நாட்களைத் துன்புடன் கழித்தார். இவரை வைத்துப் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படமெடுப்பதாகப் பறை சாற்றினர் சில பேதைகள். இதுவே அவர் இறுதிக் கொள்கை என்று ஏமாற்றம் பேசினர் சிலர். தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று உடல், உணர்வு, உயிர் முங்குமாறு பேசியும் பாடியும் வந்த இப் புதுவைக் குயிலின்-விடுதலை எழுச்சிப் பாவேந்தரின் - பெருமையுணராது பட முதலாளிகள் இவரின் உடலையும் உணர்வையும் சிறைப்படுத்தினர். தடுத்தாட்கொள்ள ஒருவரும் இல்லாக் காரணத்தால் பாவேந்தர் நெஞ்சு நோயால் மருத்துவமனையில் படுக்கையாகப் பலநாள் கிடந்தார். உயிர் வளியும் ஊட்டச் சாரமும் அவர்க்கு குழல்வழி ஊட்டப்பெற்றன. தமிழக

அமைச்சர் சிலர் வந்துபார்த்தும், அரசினர் பேணிக் காக்க வேண்டிய அப்பெரும் பாவலரின் உடல் மருத்துவ மனையின் சிறப்புப் பகுதியில் பேணப் பெருது, பொதுப் பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடந்தது.

இறுதியாக இந்நாட்டு மக்கட்கும் மொழிக்கும் ஒவ்வொரு நொடியும் அணுவும் தளராது உயிருழைப்புத் தந்த இப் பெரும்பாவலர், கோடி கோடியாய்ப் பொருள் தொகுத்துப் போலி நாகரிகப் புன்மை ஆரவாரங்களில் பாழடிக்கும் ஆயிரக்கணக்கானேர் கண்ணும் சிறக்கணியாது வாளாவிருக்க, **21-4-1964** செவ்வாய்க்கிழமை காலையில் இத் தமிழகத்தையும் தமிழர்களையும் விட்டுப் பிரிந்து இயற்கை எய்தினர். தமிழைப் பேணிய இவர், தம்மைப் பேணிக் கொள்ள மறந்தார். இவர் தம் பாக்கள் தமிழர்க்குக் கேடயம்; தமிழர் எழுச்சித் தீயினுக்கு உணர்வு நெய்! இவராற்றிய தமிழ்த் தொண்டு அளவிடற்கரியது! இவர் தம் வரலாறு இருபதாம் நூற்ருண்டின் புரட்சிப்பணி! தமிழ் நாட்டின் விடுதலைப் பாவியம்! இவர் அமைத்த தமிழியக்கம். தமிழர் தம் உரிமை எழுச்சிக்குப் போர்ப் பாட்டு! நாம் இங்கு இவர் பற்றிக் கூறியவை அவர் குடும்ப விளக்கில் ஒரு சிறு ஒளிக் கற்றை! இவரின் பாண்டியன் பரிசில் ஒரு சிறு மணி! இவர் தம் அழகின் சிரிப்பில் ஒரு குறு நகை! இவரின் தேனருவியில் ஒரு துளி! இவர் தம் இசையமுதில் ஒரு பண்! தமிழக வரலாற்றில் இதுவரை தோன்றிய விடுதலைப் பாவலர் இவர் ஒருவரே !

# உரை மாலை



# தொடுத்த மலர்கள்!

1. தமிழியக்கம் தொடங்குக!
2. பாவேந்தர் குடும்ப நலக் கொடை!
3. நன்றிககடன்!
4. பாவேந்தரின் திருக்குறள் உரை!
5. 'சாகித்ய அகாடமி' பரிசு!
6. பாவேந்தரும் பாரதியாரும்!
7. நாட்டுக்கு நன்மை!
8. புதுவைப் பாவேந்தர் சிலை ஓர் எச்சரிக்கை!
9. பாவேந்தரிடம் முதல் சந்திப்பு.
10. புதுவையில் அவருடன் தொடர்பு.
    (2-ஆம் சந்திப்பு.)
11. கொய்யாக்கனி.

# 1. தமிழியக்கம் தொடங்குக!

(பாவேந்தர் நினைவிதழ்கள் வெளியிடுவதும், நினைவு விழாக்கள் கொண்டாடுவதும் வெற்று ஆரவார நிகழ்ச்சிகளே! தமிழியக்கத்தை உருவாக்குவதற்கென்று அவர் செய்து தந்த சங்கையும், போர்ப்பறையையும் தமிழர் தம் கைகளில் எடுத்துப் போரொலி ஊதுதலும் அறைந்து முழங்குதலும் வேண்டும் என்ற அறிவுரையைச் சூடுபடப் புறப் படுத்தும் அரிய ஆசிரியவுரையிது!)

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த் தமிழ் நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்!

—என்பது பாவேந்தர் பாரதிதாசனின் தமிழியக்க முழக்கம்; இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுப்பிய புரட்சிக்குரல் இது. இன்று அக் குரலுக்குரியவர் நம்மிடை இலரெனினும், அக்குரல் இத் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும், சந்தி சதுக்கங்களிலும் எதிரொலித்துக் கொண்டுள்ளது. ஆனுல் இக் குரலின் கருத்து செயலாக்கப்பட்டதா? தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் இதுபற்றிக் கவலைப் பட்டனரா? இல்லை; அறவே இல்லை. ஏனெனில் இன்று தமிழர்களின் நெஞ்சங்கள் அடிமைப்பட்டுக்கிடக்கின்றன. அவர்தம் மூளைத்திரளையுள் இருள் மண்டிக்கிடக்கின்றது; அவர்தம் முதுகெலும்பு கோணியுள்ளது; அவரின் கைகள் கட்டப்பெற்றும், கால்கள் மண்டியிடப்பெற்றும் கிடக்கின்றன. இல்லையெனில் அவர்களில் சிலராகிலும் இதுபற்றிக் கவலைப் பட்டிருக்க வேண்டும்; சிலராகிலும் எழுச்சியுற்றிருக்க வேண்டும்! ஒரு சிலராவது இப்பாடல் வரிகளுக்குப் பொருள் எழுதியிருக்க வேண்டும். அந்நிலை எழாதவரை, பாரதிதாசனுக்கு நினைவிதழ்கள் வெளியிட்டுப் பயனில்லை; நினைவுவிழாக்

கொண்டாடிப் பயனில்லை; அஞ்சல்தலை வெளியீட்டுப் பயனில்லை; எல்லாம் வெறும் ஆரவாரம்! வயிற்றுச் சோற்றுக்கும் சட்டைப் பைக்கும் வகைதேடும் வழிமுறைகள்!

தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும் என்று ஒருநிலை ஏற்பட்டவுடன், ஆங்காங்குள்ள அரசினர் அலுவலகங்களில் பணியாற்றும் உண்மைத் தமிழன்பர் ஒருசிலர், தங்கள் தங்கள் அறிவுக்கெட்டியவாறும் உணர்வுக்குத் தக்கவாறும் தங்களைப் பொறுத்தமட்டில் ஓரிரண்டு ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழிலேயே அறிக்கைப் பலகைகளை எழுதித் தொங்கவிட்டு அழகு பார்த்தனர். இவற்றிற்கு அரசினர் பாராட்டுக்கூடக் கிடைக்கலாம் என்பது அவர்களின் கனவு. சென்னை மாநில மின்சாரக் களரியில் அலுவல் பார்க்கும் தமிழன்பரும் தென்மொழித் தொண்டரு மான ஒருவர், தாம் அலுவல் தொடர்பாக எழுதும் மடல் களைக் கூடத் தூயதமிழிலேயே எழுதவும் கையெழுத்திடவும், தம் அலுவல்துறை ஆங்கிலச் சொற்களையெல்லாம் தமிழ்ப் படுத்தி எழுதி, மேலதிகாரிகளுக்கு விடுப்பதுமாக இருந்தார்; அதன் விளைவாகக் கண்டிக்கவும் பட்டார். அது போலவே ஊர்காவல் துறையில் இருந்த தமிழன்பர்களும், ஊராட்சி ஒன்றிப்புகளில் இருந்த மெய்த் தமிழன்பர்களும், 'போலீஸ் ஸ்டேஷன்' என்றும் 'கமிஷனர்' என்றும் முதலில் எழுதி யிருந்த இடங்களிலெல்லாம் 'காவல் நிலையம்' என்றும் 'ஆணை யாளர்' என்றும் தூயதமிழில் மொழி பெயர்த்து எழுதி மகிழ்ந்தனர். இந்தத் தமிழ் வளர்ச்சியைக் காணப்பொறுத தமிழக முதலமைச்சர் 'அப் பெயர்களை உடனே மாற்றி அவற்றை முன்போலவே எழுத வேண்டும்', என்று ஆணை பிறப்பித்துள்ளாராம். இவரின் கிறுக்குத்தனத்திற்கு முடி வைத்தாற்போல் உள்ள செய்தி ஒன்றைக் கோவை அனைத் துக் கல்லூரி மாணவர் மன்றச் செயலாளர் நமக்கு அறிவித் துள்ளார்.

வரும் கல்வியாண்டிலிருந்து புகுமுக வகுப்பில் தமிழில் பாடம் கற்றுத் தருவதற்கென்று கோவை அரசினர் கலைக்

கல்லூரியில் கல்லூரி ஆசிரியர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி விழாவில் கலந்து கொண்ட திரு. பக்தவத்சலம் தமிழில்தான் உரையாற்றினாராம். ஆனால் அமிழ்தினுமினிய தமிழ் என்ற சொல்லைச் செருக்குடன் 'டமில் டமில்' என்றே சொன்னாராம். இத்துடன் 'கமிஷனரை' ஆணையாளர் என்று சொல்லுதல் கூடாதென்று கூறியதுடன், அவ்வாறு சொல்வதை நையாண்டியும் செய்தாராம். தமிழ் பற்றி நையாண்டி மேளங் கொட்டும் இந்தத் தருக்கர் அத்தகைய செயலைத் துணிவுடன் செய்யும்படி விட்டது யார்? தமிழர்தானே! இத்தகையவர்களைத்தாமே பாவேந்தர் பாரதிதாசன் முதலமைச்சர்களாய் வாராது தடுக்கச் சொன்னார். அவர் கண்டு சொன்ன இந்த எச்சரிக்கையை நாம் கைக் கொண்டிருந்திருப்போமானல் இன்று 'தமிழ்' 'டமில்' என்று பலுக்கப்பெற்று நம் மானத்தை விலைபோக்கியிருக்குமா ?

எனவே பாரதிதாசன் கூறிய கருத்துகளை வெறும் இசை தழுவிய பாடல்கள் என்றுகருதாமல், அஃது இனித்தோன்றப் போகும் தமிழியக்கத்திற்கு ஊதிய சங்கொலி என்றும், போர்ப்பறையென்றும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அச் சங்கொலி தமிழகத்தின் தெருக்கள்தொறும் ஊர்கள்தொறும் இனி முழங்கட்டும். இளைஞர்கள் உள்ள இடமெல்லாம் தமிழியக்கம் தொடங்கட்டும் ; வினை புரியட்டும். அடுத்து வருமாண்டுகளில் இப்படிப்பட்ட முதலமைச்சர்கள் முக்காடிட்டு மூலைகளில் போய்ப் பதுங்கட்டும். இதற்குத் தமிழர்கள் முன்வருவார்களா ?

[சுவடி 4. ஓலை 4. பக் 1-3 (1966) ஆசிரியவுரை]

# 2. பாவேந்தர் குடும்ப நலக் கொடை

(தமிழன்னைக்கு அளப்பரும் இலக்கியவூட்டத்தையும், தமிழர்களுக்கு அடிப்படையான மொழியின நாட்டுணர்வு ஊட்டத்தையும் ஊட்டிவிட்டுத், தம் குடும்பத்தை வறுமையில் உழலும்படியாகவே விட்டு விட்டுப் போய்விட்ட பாவேந்தரின் குடும்பத்திற்குத் தந்தம்மாலான பொருளுதவியை வழங்க வேண்டுமென்று தமிழ் நெஞ்சங்கட்கு ஆசிரியர் நயந்து உரைத்த வேண்டுகோள் அறிக்கை இதுவாகும்!)

செல்வம் மிகுந்த நாடு தமிழ்நாடு. பாண்டியன் அளந்த முத்து, சேரன் நிறுத்த யானை மருப்பு, சோழன் அமைத்த நெற்களஞ்சியம் என்றெல்லாம் இலக்கியம் பாடிய தமிழ்ப் புலவர் வழிவந்த இத் தண்டமிழ்ப் பாவலர்க்கு நாம் கடமை செய்யத் தவறினோம். பெண்டிர் நலம் பற்றித் தூது, உலா, மடல், வாயில் என்று பலப்பல காமக் கழிநிலை நூல்களைப் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்ட இழி நிலைப் பாவலர்கள் போல் அன்றிக் குமுகாயப் புரட்சிக்கே வித்திட்ட இப் புதுமைப் புலவனுக்கு, தமிழ் அன்னைக்குத் தலைமகனாகி அளப்பரிய தொண்டாற்றிய இப் புலவர்மணிக்கு நாம் இதையும் செய்யாமற் போவோமானால் நமக்கு எதிர் காலத்தே வரும் இழிவைத் தாங்கிக் கொள்ள நெஞ்சு போதாது.

நாம் செய்து முடிக்கின்ற வினையாற்றலில் நாட்டத்தை வைப்போம். ஆங்காங்கே உள்ள தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், கல்வியமைப்புகள், புலவர் குழுக்கள், தமிழன்பர்கள் எல்லாரும் தம்தம் சார்பில் தங்களால் இயன்ற அளவு பொருள் திரட்டிப் புதுவையில் உழன்றுகொண்டிருக்கும் பாவேந்தர்தம் குடும்பத்திற்கு விடுத்தல் வேண்டும் என்று பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். தாங்கள் தொகுக்கின்ற பொருளைத் தமிழ்த்திரு. பழநியம்மாள், மேற்

பார்வை: மன்னர் மன்னன், 95, பெருமாள் கோயில் தெரு, புதுவை-1 என்ற முகவரிக்கு விடுத்துவிட்டு, அத் தொகுப்புப் பட்டியலைத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம். பட்டியல் தென்மொழியில் வரும். அனுப்பப் பெறுகையில் இது பாவேந்தருக்குச் செய்யும் நன்றிக்கடன்; தென்மொழி அன்பர்கள் சார்பில் விடுக்கப் பெற்றது, என்றும் குறிப்பிடும் படி கேட்டுக்கொள்கின்றோம். ஒவ்வொருநாளும் எத்தனையோ துறைகளில் எத்தனையோ உருபாக்களைச் செலவு செய்கின்றோம். இவ்வழி நாம் அளவில் ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் உருபா செலவிடுவதால் நம நிலைக்குக் குறைவும் ஏற்பட்டுவிடாது.

தென்மொழிச் சார்பில் அன்பர்கள் இதுபோன்ற அறக் கொடைகள் வழங்க வேண்டிக் கொள்வதில் இது மூன்றாவது முறை. பொருளியல் தொல்லை மிகுந்த இக் காலத்தும், எந்தமிழ் அன்பர்களை இவ்வாறு தூண்டுவது' தங்களுக்குள்ள கடமையுணர்வுகளில் தாங்கள் ஒரு சிறு அளவிலாகிலும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும் என்ற அறவுணர்வு பற்றியே. இவ்வேண்டுகோளுக்கு உளமும் உழைப்பும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், இக் கடமைச் சுமையை உங்கள் மீது சுமத்தியமைக்கு நம்மைப் பொறுத்தருளுமாறும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

[சுவடி 5. ஓலை 4.(1967-மே) _ பக் 1-7 ஆசிரியவுரை]

# நன்றிக்கடன்

(நம் தலைமுறையில் வாழ்ந்த ஒரு பெரும் பாவேந்தர்க்கு நன்றிக்கடனாக நெந்தமிழ் செஞ்சங் களாகிய நாமும், இந்த அரசும் ஆற்றவேண்டிய கடமைகள் என்னென்ன என்பவற்றை மிகவிளக்க மும் விரிவுமாக ஆசிரியர் நெஞ்ச அவலத்தோடு கனிவுற வெளிப்படுத்தும் அருமையான ஆசிரிய வுரையிது !)

பாரதிதாசன் மறைந்து மூன்றாண்டுகள் ஓடின. தென் மொழி அவர்க்குச் சாத்தும் மூன்றாம் இதழ் மாலை இது. தமிழ் மறந்தறியாத நம் நெஞ்சங்கள் அவரையும் மறப்ப தில்லை. தமிழை நினைக்குந்தோறும் அவரையும் நினைக் கின்றோம். அவர் பாடல்கள், அவர் துணிவு, அவர்தம் வீறார்ந்த போக்கு எல்லாம் நம் கண்முன் நின்று ஒளிவட்ட மிடுகின்றன. அவர் மறந்து போகாத ஓர் உயிர். தமிழ் மறவாத உயிரைத் தமிழரும் மறப்பதில்லை. கள்ளங்கவடற்ற அவர் இலக்கிய நெஞ்சினால் செரிக்க முடியாத-திக்குத் திசை காணமுடியாத அரசியல் சூழல் இன்னும் பல இலக்கியங்கள் அவரிடமிருந்து வெளிவர முடியாமல் தடுத்து விட்டது. இறுதியில் பொருள் முட்டுப்பாட்டால், இருந்த முதலைத் திரைப்படத்துக்குக் கொட்டித் தம் குடும்பத்தைத் தாமே தூக்கி நிறுத்தவும், தம் அகக் கற்பனையைப் புறக்காட்சியாகக் கண்டு களிக்கவும் அவர் செய்த முயற்சி அவரை வாழ்வின் இறுதிப் படிக்கட்டிற்கே கொண்டு நிறுத்தியது.

நன்றி கெட்ட தமிழகம் இது. நன்றி மறந்த தமிழர் நாம். உயிருள்ள பொழுது அவரின் உருவத்தையும் காண மறுத்த நாம், அவர் மறைந்த இஞ்ஞான்றை விழா வெடுக் கின்றோம்; படிமம் செய்யத் திட்டமிடுகின்றோம்; அவருடைய சிறுசிறு அசைவுகளைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பி நிற்கின்றோம். தமிழர்தம் நல்லுணர்வை மண்ணில் புதைந்து போகாமல் தூக்கி நிறுத்திய அப்பாவலனுக்கு நாம் காட்டிய

நன்றி கொஞ்சம்; நின்ற துணை சிறிது. தன்னந் தனியே பாடிக்கொண்டு தமிழ் வளர்த்த அப் புதுவைக் குயிலின் வறுமைப் பாட்டையும்கூட நாம் காண விரும்பவில்லை. முடிவு என்ன? அவர் வறுமையும் இலக்கியமானது; அவர் மனமும் சாம்பிப் போனது. இறுதியில்......! தம்மைத்தாமே தூக்கி நிறுத்திக் கொள்ளத் தெரியாத அத் தமிழ் நெஞ்சம், தம் குடும்பத்தையும் தெருவில் விட்டு விட்டுத் தாம் புரந்த தமிழையும் இடைநிறுத்தித், தம்மையும் உலகுக்காக்கிவிட்டுப் போய்ச் சேர்ந்தது. இனி, அவர் மறைவை எண்ணிக் காத் திருந்தவரெல்லாரும், அவர் புகழ்பாடித் தம் வயிறு வளர்க் கத் தொடங்கி விட்டனர். நாம் அவரை மறக்க முடியாத அழுங்கலால் அலங்கல் சூட்டி வணங்குகின்றோம்.

இனி, பாரதிதாசனுக்கு-தமிழ்ப் பெரும் பாவலனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள. பாரதிதாசனை மதித்துப் பாராட்டிய தமிழர் அரசேற்று நடத்தும் காலம் இது. அவர் பாங்கிலும் நம் பாங்கிலும் நாம் அவர்க்குச் செலுத்த வேண்டிய நன்றிக் கடன்கள் ஏராளம்? அவற்றை யெல்லாம் நாம் செய்தாகல் வேண்டும். உயிருடன் இருக் கையில் பேணத் தவறிய நாம், அவர் இறந்த பின்னாவது அக்கடன்களைச் செய்து நம் நன்றியுணர்வை அத் தலைமகனுக் குக் காட்டுதல் வேண்டும்.

தம் வறுமை நிலையால் குறைக்காசிற்கும், கறைக் கை களுக்கும் விற்ற அவர் நூல்கள் எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கி, அவற்றைப் பொதுவுடைமையாக்குதல் வேண்டும். இதுவரை வெளிவந்துள்ளனவும் வெளி வரா தனவுமான அவர் எழுத்துகளைத் தக்காரைக் கொண்டு பதிப்பித்து, அடக்க விலையில் தருதல் வேண்டும். அவரு டைய சிறந்த பாடல் தொகுப்பை எல்லா இந்திய மொழி களிலும் அச்சிட்டு அடக்க விலைக்குத் தரும்படி தில்லி அரசினர் சார்பில் உள்ள இலக்கிய வெளியீட்டுக் கழகத்தைக் கேட்டுச் செயற்படுத்தல் வேண்டும். இவ்வழி அவர் கருத்துகளை

எல்லா மக்களும் அறியும் வாய்ப்பு ஏற்படும். அவர் நூல் களில் சிறந்தனவாகிய குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் மூன்றில் ஒன்றுக்காகிலும் தில்லி இலக்கிய வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப் பெற்றுத் தருதல் வேண்டும். ஏறத்தாழ ஐம்பதினுயிர உருபா கடனுல் மூழ்கிப் போக விருக்கும் பாவேந்தர் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, அதை அரசுடைமை ஆக்கித் தமிழ் நினைக்கும் நெஞ்சங்க ளெல்லாம் நாள்தோறும் வந்து கண்டு மகிழ்ந்து போகும் நினைவு நிலையமாக அதை மாற்றுதல் வேண்டும். பாவேந் தரின் கைப்படிகள், கையாண்ட பொருள்கள், பயன்படுத்திய இருக்கைகள், மிசைப் பலகைகள், புகைப்படங்கள், மடல்கள் முதலியவற்றை அவர் குடும்பத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கி, அந்த நினைவு நிலையத்தில் வைத்துப் பேணுதல் வேண்டும். மேலும் அங்கு வந்து போவார் அவ்வப்பொழுது வாங்கிச் செல்வதற்கென்று அவர் நூல்கள் முழுமையும் புகைப்படங்களும் அடங்கிய விற்பனை நிலையமொன்றையும் அந் நினைவு நிலையத்தோடு இணைத்தல் வேண்டும். இதனுல் அந் நிலையத்துக்கு வரும் வருமானத்தை அந் நிலைய வளர்ச் சிக்கே பயன்படுத்துதல் வேண்டும். இவ்வகையில் மேனுடு களில் மக்கள் போற்றும் அறிஞர்க்காகவுள்ள தேசிய நிலை யங்களை முன்னேக்காக வைத்துக் கொண்டு செயற்படுதல் வேண்டும்.

— இவற்றையெல்லாம் செய்ய இப்பொழுதுள்ள தமிழக அரசால்தான் முடியும். மேலே கூறிய அனைத்தும் எந்தப் பொது அமைப்பாலும் செய்யவியலாத-அரசு ஒன்ருலேயே செய்ய முடிகின்ற ஆக்கங்கள். தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் தருகின்ற நோக்கமுடைய அரசாக இத் தமிழக அரசு இயங்குகின்ற காரணம் பற்றி, இவற்றை அன்பு வேண்டுகோளாக இவ் வரசினர்முன் வைக்கின்ருேம். புறத்தே தமிழுக்கு நலஞ்செய்வது போல அகத்தே கேடு செய்யும் தமிழ்க் கேடர்களால் இத்தகைய நலன்களைச் செய்தல்

முடியாது. மேலும் நூல்வெளியீட்டுத் துறையிலும், அரசினர் பொதுப் பணித்துறையிலும் இதுநாள்வரை தமிழர்க்கு எவ்வகையான ஆக்கமும் செய்யப் பெறவில்லை. பேராயக் கட்சி ஆட்சியிலிருந்த காலத்தெல்லாம் இத்துறைகள் பார்ப்பனர் நலம் நாடும் துறைகளாகவே இருந்து வந்துள்ளன. அதன் விளைவாகப் பாரதியாரின் தகுதிறம் அளவுக்கு மீறி உயர்த்தப்பட்டுள்ளது. பாரதியார் ஒரு பார்ப்பனர் என்ற காரணத்துக்காக 'உலகப் பாவலர்' என்ற போலிப் பெயர் சூட்டியும் பாராட்டப் பெற்றுள்ளார். ஆனால், உண்மையில் பாரதியார் எந்த அளவுக்குப் பாராட்டப் பெற்றுள்ளாரோ அதைவிடப் பாரதிதாசன் பாராட்டப் பெற்றிருக்க வேண்டும். தமிழரின் அறியாத துயிலுக்கும், பார்ப்பனரின் அறிதுயிலுக்கும் இஃது ஓர் எடுத்துக்காட்டு.

பாரதி ஓர் உணர்வுப் பாவலர் (ஆவேசக்கவி); பாரதிதாசன் ஓர் இயற்கைப் பாவலர். பாரதியார் அன்றிருந்த தேசியச் சூழ்நிலையையும், சமய எழுச்சியையும் தம் உணர்வில் வெளிப்படுத்தினார். பாரதிதாசன் தாம் கண்ட புறநிலைகளைத் தாம் உணர்ந்த அகநிலையொடு பொருத்தி, ஏற்றத்தாழ்வுகளைச் சாடினார். பாரதியார் பாடியது சமயம், அரசியல். பாரதிதாசன் பாடியது இயற்கை, 'குமுகாயம்'. இயற்கை சமயத்திற்கும், குமுகாயம் அரசியலுக்கும் அடிப்படை. இவ்விரு பாவலர்களும் இவ்விரு நிலைகளைப் பற்றிப் பாடினும் பாரதிதாசன் பாரதியினும் விஞ்சிய பாவலன். பாரதியையே அறிமுகப்படுத்தியவர் பாரதிதாசன்தான். 'கல்கி' கூட்டங்கள் பாரதியை ஒரு பாவலர் என்றே ஒப்புக்கொள்ளாமல் புறக்கணிப்பாக இருந்தபொழுது, 'பாரதி ஓர் உலகப் பாவலன்' என்று தமிழால் பாடிய அப் பாவலனுக்கு உண்மையான நன்றி காட்டினார் பாரதிதாசன். அதன்பின் திறத்தால் உணரப்படாமல் இருந்த பாரதியாரைப் பார்ப்பனர் தம் இனத்தால் உணர்ந்து பாராட்டினர்; போற்றினர்; பனிமலை மேல் கொண்டுபோய் வைத்துச் சீனனை அச்சுறுத்தினர். தமிழறியா வடநாட்டாரும் தமிழறியும் பெருமாள்களாக

நடமாடித்திரியும் இங்குள்ள பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுப் பாரதியை விண்ணுக்குத் தூக்கினர். தூக்கினதோ டன்றிப், 'பாரதிக்குப்பின் தமிழகத்தில் எவனும் புலவனில்லை' என்று சாக்கத்து கத்தித் திரிகின்றனர். மண்டைப் புழு நெளியும் இத் தான்தோன்றியர்தம் ஓலம் தமிழ்நாட்டி லிருந்து வெளிவருவதே நமக்கு இழுக்கு. எனவே இச் சூழலில் பாரதிக்கு இனத்தால் கொடுக்கப்பெற்ற அப் பெருமை பாரதிதாசனுக்குத் திறத்தால் கொடுக்கப்பெறுதல் வேண்டும் என்று தமிழக அரசைப் பல்லாற்றானும் வேண்டிக் கூறிக்கொள்கின்றோம்.

இனி, தூங்கிக் கிடந்த தமிழர்தம் வாழ்வுநிலை நோக்கி, ஏங்கிக் கிடந்த பாவலர்தம் பெரிய குடும்பம், இக்கால் வறுமைநிலை தாங்கிக்கிடக்கின்றது. கடன் சுமை தாளாது துடிக்கின்ற அவர் தலைமகன், தன் ஒரே மகனின் துவள்கின்ற உடல் தாளாது பெருமூச்செறியும் அம் மூதியதாய்-பாவேந் தரின் இல்லத்தரசி, அவரின் குன்றிய நிலைக்கு ஏங்கிக் கண்ணீர் வடிக்கின்ற மூன்று பெண்கள்! தமிழ்நாட்டின் குடும்பங்களுக் கெல்லாம் விளக்கேற்றி வைத்த அத் தண்டமிழ்ப் பாவல னின் குடும்பம், இன்று இருண்ட வீட்டில் அடைக்கலன் புகுந்து கிடக்கின்றது. அரிமாவென அவர் உலாவிய அவ்வீடு உண்மையிலேயே ஒளியிழந்து கிடக்கின்றது. தமிழ் பாடிய அப் பாவலனின் பெயரப் பிள்ளைகள் வற்றிய தோலும், வதங்கிய கன்னமும், வாடிய வயிறுமாக இன்று அவலம் பாடித்திரிகின்றனர். ஆருக்கும் பணியாத நெஞ்சுரனும், அவலத்திற்குத் துவளாத தமிழ்ச் செம்மாப்பும் கொண்ட திருமகன்-அரிமாவுக்குப் பிறந்த வேங்கை-மன்னர் மன்னன் இன்று துயரப் புயலால் துவட்டி யெடுக்கப்பெற்ற பழைய ஓலைப் பாயைப் போல் ஒளி மழுங்கிக் கிடக்கின்றார். தமிழ் வளர்த்த குடும்பம் இன்று தமிழர்களால் புரக்கப் பெறாது வறுமைத் தீயால் வாடியிருக்கின்றது. பீடு நிரம்பிய அக் குடும்பம் இன்று பெருமை குன்றிக் கிடக்கின்றது.

இந்நிலையில் தமிழர்களாகிய நாம் செய்யக் கடவது என்ன? பாரதிதாசன் மன்றங்கள் நினைவு விழா கொண்டாடுகின்றன. பாரதிதாசன் எங்கள் புலவன், பாவலர்க்கு வேந்தன் என்று பன்னிப் பன்னிப் பேசுகின்றோம் நாம். தமிழ் நிலம் உலகிலேயே நன்றி காட்டும் நிலம் என்ற நிலைபோய், நன்றி மறந்த நிலம் என்று கீழ்மைப்பட்டு விட்டது. தமிழர் நன்றியுள்ளவர் என்ற நிலை போய், நன்றி கொன்றவர் என்ற நிலையேற்பட்டு விட்டது. நன்றி கொன்றூர்க்கு உய்வுண்டா? இல்லை என்கிறது தமிழ் மறை. இங்கிருக்கும் நான்கு கோடித் தமிழர்களில் ஒரு நாற்பதாயிரம் தமிழர்களாவது அவர் பாடல்களைப் படித்திருக்க மாட்டார்களா? அப் பாடல்களின் உள்ளுணர்வால் தாக்கப் பெற்றிருக்கமாட்டார்களா? அப் பாடல்களால் தங்கள் உள்ளங்களில் மறைந்து கிடந்த தமிழுணர்வு கீண்டப் பெற்றுப் புத்துணர்வு பெற்றிருக்க மாட்டார்களா? அவ்வாறு புத்துணர்வு பெற்றுப் புதுவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க மாட்டார்களா? அவர்களை நோக்கி நாம் கேட்கின்றோம். உங்களுக்குப் புத்துணர்வு ஊட்டிய அப் பாவேந்தனுக்கு—உங்கள் மண்ணுள்ளத்தைப் பொன்னுள்ளம் ஆக்கிய புலவனுக்கு—சாம்பிக் கிடந்த தமிழ்க் குமுகாயத்தை வீறு கொண்டெழச் செய்ய அப் பாப்புலிக்கு—“உரம் பெய்த செந்தமிழ்க்கு ஒன்றிங்கு நேர்ந்ததென உரைக்கக் கேட்டு, நரம்பெல்லாம் இரும்பாக்கி நனவெல்லாம் உணர்வாக்கி” வைத்த, அப் பாட்டு மறவனுக்கு—“சிறுத்தையே வெளியில் வா! எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்! சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திற விழி!...... மொழிப்பற்றெங்கே? விழிப்புற்றெழுக!” என்று தட்டியெழுப்பிய தானைத் தனைவனுக்கு—நீங்கள் செய்யப் போவது என்ன? உங்களில் ஆளுக்கு ஒருவர் ஓர் உருபா தந்து உதவினும் புயலிற்பட்ட கலம் போலாகும் அப் புலவனின் குடும்பம், வயலிற்பட்ட மழையென வளம் பொங்கி எழுமே! தாக்கும் வறுமையால் விடும் அவர்தம் ஏக்கப் பெருமூச்சுக்குத் தமிழினம் ஆற்றும் தலையாய கடமையன்றோ இது?

செல்வம் மிகுந்த நாடு தமிழ்நாடு. பாண்டியன் அளந்த முத்து, சேரன் நிறுத்த யானை மருப்பு, சோழன் அமைத்த நெற்களஞ்சியம் என்றெல்லாம் இலக்கியம் பாடிய தமிழ்ப் புலவர் வழி வந்த இத் தண்டமிழ்ப் பாவலர்க்கு நாம் கடமை செய்யத் தவறினோம். பெண்டிர் நலம் பற்றித் தூது, உலா, மடல், வாயில் என்று பலப்பல காமக் கழி நிலை நூல்களைப் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்ட இழிநிலைப் பாவலர்கள் போல் அன்றி, குமுகாயப் புரட்சிக்கே வித்திட்ட இப் புதுமைப் புலவனுக்கு—தமிழ் அன்னைக்குத் தலைமகனாகி அளப்பறிய தொண்டாற்றிய இப் புலவர் மணிக்கு—நாம் இதையும் செய்யாமற் போவோமானால் நமக்கு எதிர் காலத்தே வரும் இழிவைத் தாங்கிக் கொள்ள நெஞ்சு போதாது.

ஆகவே, அரசினர் பாடாற்றும் வினைகளை அவர் புறத்தே விடுத்து, நாம் செய்து முடிக்கின்ற வினையாற்றலில் நாட்டத்தை வைப்போம். ஆங்காங்கே உள்ள தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், கல்வியமைப்புகள், புலவர் குழுக்கள், தமிழ் அன்பர்கள் எல்லாரும் தம் தம் சார்பில் தங்களால் இயன்ற அளவு பொருள் திரட்டிப் புதுவையில் உழன்று கொண்டிருக்கும் பாவேந்தர் தம் குடும்பத்திற்கு விடுத்தல் வேண்டும் என்று பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். தாங்கள் தொகுக்கின்ற பொருளை தமிழ்த்திரு. பழநியம்மாள், மேற் பார்வை, மன்னர் மன்னன், 95 பெருமாள் கோயில் தெரு, புதுவை-1-என்ற முகவரிக்கு விடுத்து விட்டு, அத் தொகுப்புப் பட்டியலைத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம். பட்டியல் தென்மொழியில் வரும். அனுப்பப் பெறுகையில் "இது பாவேந்தருக்குச் செய்யும் நன்றிக்கடன்; தென்மொழி அன்பர்கள் சார்பில் விடுக்கப் பெற்றது" என்றும் குறிப்பிடும் படி கேட்டுக் கொள்கின்றோம். ஒவ்வொரு நாளும் எத்தனையோ துறைகளில் உருபாக்களைச் செலவு செய்கின்றோம். இவ் வழி நாம் அளவில் ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் உருபா செலவிடுவதால் நம் நிலைக்குக் குறைவும் ஏற்பட்டு விடாது;

இழுக்கும் அன்று. மாறாக நம் தலைமுறையில் வாழ்ந்த தலை சிறந்த பாவலர் ஒருவர்க்கு நாமும் நன்றி காட்டினோம் என்ற மனநிறைவும், பெருமிதமும் ஏற்படும் என்பது உண்மை.

தென்மொழிச் சார்பில் அன்பர்கள் இதுபோன்ற அறக் கொடைகள் வழங்க வேண்டிக்கொள்வது இது மூன்றாவது முறை. பொருளியல் தொல்லை மிகுந்த இக் காலத்தும் எந்தமிழ் அன்பர்களை இவ்வாறு தூண்டுவது. தங்களுக்குள்ள கடமையுணர்வுகளில் தாங்கள் ஒருசிறு அளவிலாகிலும் ஈடு பாடு கொள்ளுதல் வேண்டும் என்ற அறவுணர்வு பற்றியே. இவ் வேண்டுகோளுக்கு உளமும் உழைப்பும் நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இக் கடமைச் சுமையை உங்கள் மீது சுமத்தியமைக்கு நம்மைப் பொறுத்தருளுமாறும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

*[சுவடி 5. ஓலை 5. பக் 47-48. (1967)]*

**பின் குறிப்பு :**

தென்மொழிச் சார்பில், ஆங்காங்குள்ள அன்பர் கள் பாவேந்தர் குடும்பத்திற்கு அறக்கொடை நல்குமாறு வேண்டிய இம் மேற்கண்ட வேண்டு கோள் வெளிவந்த பின்னர், அதற்கிணங்கிய செந்தமிழ் நன்னெஞ்சங்கள் தந்தம்மாலான கொடையை பாவேந்தர் குடும்பத்திற்கு அனுப் பிவைத்துத் தம் நன்றியுணர்வைக் காட்டினர். அக் கொடையாளர்களின் பெயர்ப் பட்டியலும் அவர்கள் தந்த தொகையளவும், தென்மொழி சுவடி-5, ஓலை-10, ஓலை-11 மற்றும் தென்மொழி சுவடி-6, ஓலை-1, ஓலை-4, ஓலை 5,6 ஓலை-9 ஆகிய இதழ்களில் தொடர்ந்து வெளியிடப் பெற்றுள் ளன. அதன் பின்னரும் அவர் குடும்பத்திற்கு நேரடியாகவே ஓராண்டுவரை அந் நன்கொடை

கள் போய்ச் சேர்ந்தன. மொத்தம் அவ் வகையில் பாவேந்தர் குடும்பத்திற்குச் சேர்ந்த தொகை ஏறத்தாழ ஐயாயிரம் அளவில் இருக்கலாம் என்று தெரிய வந்தது.

# பாவேந்தரின் திருக்குறள் உரை!

*(செந்தமிழ் ஞாயிறு பாவாணர் அவர்களின் "திருக்குறள் தமிழ்மரபுரை வெளியீட்டு விழா" பறம்புக்குடியில் உ.த.க மாநாட்டில் நடைபெற்றது. அவ்விழாவில், (28 - 12 - 69). பாவேந்தர் திருக்குறளுக்கு உரை யெழுதியதும், அ'து அச்சாகையில் இடையில் நின்று போனதும் ஆகிய நிகழ்ச்சிகளை முன்வைத்து, சிறப்புறஆசிரியர் விளக்கிய சொற்பொழிவின் ஒரு பகுதியிது!*

பாவேந்தர் பாரதிதாசனார், உங்களுக்குத் தெரிந்திருக்கும்;மிகவும் கண்டிப்பானவர்;அஃதாவது அவருடைய வீட்டில் அன்று; வெளியிலும் அன்று; தமிழ் என்ற நிலையிலே அவரை விடக் கண்டிப்பான புலவர் ஒருவரை—ஓர் உள்ளத்தை நான் பார்த்ததில்லை. அவரிடத்தில் ஆறாண்டுகள் மிகவும் நெருங்கிப் பழகியவன் என்ற காரணத்தினாலே ஒரு சில உண்மையான செய்திகளை இங்கு நடைபெறுகின்ற இந்த விழாவை யொட்டி வெளிப்படுத்த விரும்புகின்றேன். இஃது எனக்கு மட்டுந்தான் தெரிந்த செய்தி. இன்னொருவர் தெரிந்திருப்பார்; அவர் இப்பொழுதுமிருக்கிறார். அவர் (பாவேந்தர்) திருக்குறளுக்கு ஓர் உரை எழுதினார். அந்த உரை பிற்காலத்திலே குயிலில் வெளியிடப்பெற்றது. அந்தத் திருக்குறளுரை அச்சானது; பதினைந்து படிவங்கள் அச்சாயின; ஒரு படிவம் என்பது பதினாறு பக்கம்; இந்தப் பதினைந்து படிவங்கள் அச்சாகிக் கொண்டிருக்கின்ற பொழுது நான் புதுவையில் இருக்கின்றேன். உரை முழுவதும் எழுதி விட்டார்; உரை இருக்கிறது அப்படியே; யாரும் அழித்துவிடவில்லை, வெளிவரும். அவரிடத்திலே நான் மிக நெருங்கிப் பேசியவன், பழகியவன்; கருத்துகளைப் பரிமாறிக் கொண்டவன்; அந்த உரை அச்சாகிக் கொண்டிருந்த தொடக்க நிலையிலே ஒருநாள் மாலையிலே அச்சகத்திற்குப் போனேன். அச்சாகிக் கொண்டிருந்த அந்த ஒரு படிவத்தை எடுத்துப் படித்தேன். ஒரு திருக்குறளின் உரை என் கண்ணிலே பட்டது. உடனே

அச்சகப் பொறுப்பாளராக அப்பொழுது இருந்த சாமி பழநியப்பன் என்கின்ற ஒருவர்—உங்களுக்குத் தெரிந்திருக்க லாம்; குன்றக்குடி அடிகளாரிடத்திலே செயலாளராக இருப் பவர்; இப்பொழுது இருக்கின்றாரோ என்னவோ, தெரிய வில்லை. அன்று அங்கு இருந்தார். அந்த உரையைப் படித்த வுடனே அந்தத் தாளை அப்படியே மேசை மேலே வைத்து விட்டேன்; வைத்துவிட்டு; "ஒன்றும் புதியதாகக் காணோமே; பழைய செய்திகளைத்தானே இவரும் திருப்பிச் சொல்லியிருக் கிறார்" என்று சொன்னேன். இந்தக் கருத்தை வேறு யாரும் சொல்லிவிட்டு அங்கு இருந்துவிட முடியாது. உடனே சாமி பழநியப்பன் 'என்னங்க ஐயா, அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். "இல்லை; பொது வாகவே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைதான் சிறந்த உரை; அதற்கு விலக்கே கிடையாது. அவர் ஆரியச் சார் பான கருத்துகளைச் சிற்சில வாய்ப்பான இடங்களிலே வைத் துப் போய்விட்டார். மற்றபடி சிறந்த உரை அது. அந்தக் கருத்துகளை மட்டும் மறுக்க விரும்புகிறவர் 1330 குறள்களுக் கும் உரையெழுதிக் கொண்டிராமல், எந்தெந்த இடங்களிலே அவர் பரிமேலழகர் உரைக்கோ, அல்லது இதுவரை வந்த உரைகளுக்கோ மறுப்பாக உரை எழுத வேண்டுமோ, அல்லது எந்தெந்த இடங்களில் கருத்து மாறுபடுகின்றதோ அந்தந்த இடங்களை மட்டுமே விளக்கி, நூறு இடங்களானாலும் சரி அவற்றிற்கு மட்டும் உரை யெழுதினால் போதும். இதற்காக முழுநூலுக்கும் உரையெழுதிக் கொண்டிருக்க வேண்டிய தில்லை; அதுவும் பாவேந்தர் பாரதிதாசனார் அந்த உரையை மிகவும் புதுமையாக எழுதிவிடவில்லை; ஓரளவு மெய்யறிவு உணர்வோடு சாங்கிய நூல்களின் எடுத்துக் காட்டோடு சில உரைகளை எழுதியிருக்கிறார். இது தேவையில்லையே!" என்று சொன்னேன். சொல்லிவிட்டுப் போய்விட்டேன்; போய்விட்ட பின்னாலே, சாமிபழநியப்பன் பாவேந்தரிடத் திலே இந்தச் செய்தியைப் போய்ச் சொல்லியிருக்கிறார். "துரை மாணிக்கம் அங்கு வந்தார்; இந்த உரையை எடுத்துப் பார்த்தார். இப்படிச் சொல்லிவிட்டுப் போனார்". என்று

சொல்லியிருக்கிறார். பாவேந்தர் சிறிது நேரம் அப்படியே மலைத்து நின்றாராம். பாவேந்தரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். எவ்வளவு பெரிய கூட்டமானாலும் எத்தனைப் புலவர்களிலிருந்தாலும் தாம் நினைத்ததை, தமக்குச் சரியென்று பட்டதைத் துணிவோடு சொல்லுகின்ற ஒரு பெரிய மறவுணர்வு, துணிவான அந்த ஆற்றல் பாவேந்தர் ஒருவருக்குத்தான் இருந்தது. மற்றபடி பிறரெல்லாரும் வெளியே போய்ச் சொல்லுவார்கள்; வேறு இடத்திலே போய்ச் சொல்லுவார்கள்; எழுதுவார்கள்; அங்கேயே சொல்ல மாட்டகர்கள், நேருக்கு நேர் நின்று. உடனே அமைதியாக இருந்துவிட்டு "இதை எதற்கு அவனிடத்திலே காட்டினாய்?" என்றார். "இல்லை, அவரே, 'மேசை' மேலிருந்தது; எடுத்துப் படித்தார்" என்று அவர் சொல்லியிருக்கிறார். "உம், சரி, வைச்சுக்கோ அதை!"—அவ்வளவுதான் இதைப் பற்றி என்னிடத்திலே அவர் இருந்தவரை கேட்டதில்லை. நூல் அச்சாவதும் நின்று போய்விட்டது. பதினைந்து படிவங்களோடு முடிந்தது என்று நினைவு. எதிர்கால உலகம் தமிழினுடைய எதிர்கால உலகம் நேற்றுப்போல் இருக்காது என்பதற்கு இந்த எடுத்துக் காட்டை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

# சாகித்திய அகாடமி பரிசு

(மிகச் சிறந்த இலக்கிய நுட்பங்களுக்கு, தமிழ் பயன் விளைக்கும் பிற ஆக்கங்களையும் தவிர்த்து விட்டுப், பாவேந்தரின் எளியதொரு நாடக நூலான 'பிசிராந்தையார்' 'சாகித்ய அகாடமி' வழங்கிய பரிசின் உள்நோக்கம் எது வென்பதை இப்பகுதியுள் ஆசிரியர் சுட்டுகின்றார்! 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' என்னும் நூலின் ஒரு சிறிய பகுதி இது!)

'சாகித்ய அகாடமி' என்றும் 'சங்கீத நாடக அகாடமி' என்றும், நேரு பரிசு, கலிங்கா பரிசு, ஞானபீட பரிசு என்றும் பல வகையிலும் தரப்பெறுகின்ற அறிவியல், கல்வி, கலைப் பரிசுகள் யாவும் அவர்கள் (பார்ப்பனர்) இனத்தவர்க்கே தேடிப்பிடித்துத் தரப் பெறுகின்றன. ஓரிரண்டு பரிசுகள் தமிழர்களுக்குத் தரப்பெறுவதானாலும் அவர்களின் அடிமைகளுக்கே தரப்பெறுகின்றன!

இலைகளிடைக் காய்போல் எங்கோ ஒரு பரிசு இவர்களின் கொள்கைக்கு மாறானவர்களுக்குத் தரப்பெற நேர்ந்தால், பிறர் நகைக்குமளவிற்கு நூல்களைத் தேர்வுசெய்து கொடுக்கின்றனர். பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய 'குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம்' போன்ற வாழ்வியல், இயற்கை,சீர்திருத்தம் ஆகிய கூறுபாடுகளைக் கொண்டனவும், நோபல் பரிசுக்கும் தகுதி பெற்றனவும், அவர் புலமைக்கே கொடுமுடி போன்றனவுமான நூல்கள் இருக்க, அவர் நூல்களில் மிக எளியதும், அவர்தம் பாவியல் புலமைக்கு வேறுபட்ட நாடக வடிவில் உள்ளதுமான "பிசிராந்தையார்" என்னும் நூலுக்கு - அதில் அவரின் தலையாய கொள்கையான ஆரிய மறுப்புக் கருத்துகள் ஒன்றுமில்லை என்பதற்காகவே "சாகித்திய அகாடமி பரிசு" கொடுக்கப் பெற்றுள்ளது. இது தமிழர்களையும் இவர்தம் ஆற்றலையும் இருட்டடிப்புச் செய்கின்ற வஞ்சகமான செயலாகும் என்பதை எல்லாரும்

எண்ணிப்பார்க்க வேண்டும். பாரதியாரை விடப் பாரதி தாசன் இலக்கியத்திறனும் பாவன்மையிலும் எவ்வளவோ சிறப்புற்று விளங்கியும், அவர் ஒரு தமிழர் என்பதாலும், பாரதியார் ஒரு பார்ப்பனர் என்பதாலும் காட்டப்பெறும் வேறுபாடுகளும் போற்றப் பெறும்வகையில் மாறுபாடுகளும் கொஞ்ச நஞ்சமல்ல...

*(ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்)*

# பாவேந்தரும் பாரதியாரும்

*(பாவேந்தரைவிட, பாரதியார் பலபடியாகப் பாராட்டிப் போற்றித் தூக்கிக் காட்டப் பெறுகின்றமை, யாரால் எக் காரணங்களினுல் என்பதைச் சுட்டி, அவற்றின் பின்புலத்தையும் காட்டுகின்ருர் ஆசிரியர்! இப்பகுதி,"ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்" என்னும் நூலில் ஓர் உள்ளடக்கம்)*

பாரதியாரிடம் கற்பனையாற்றலும் அதை வெளிப்படுத்தும் உணர்ச்சியும் ஓரளவு இருந்தன என்று சொல்லலாமே தவிர, மொழிப்பயிற்சியும், சொல்லாற்றலும், இலக்கிய பயிற்சியும் அவ்வளவு மிகுந்திருந்தனவாகச் சொல்லமுடியாது. உலகியலறிவும், மெய்யுணர்ச்யும் அவ்வளவு சிறப்புற விளங்கியிருந்தன என்றும் பாராட்டப் பெறுவதன் நோக்கமெல்லாம், அவர் ஒரு பார்ப்பனர் என்பதைத் தவிர வேறு இருக்க முடியாது. பாட்டுத்திறத்தில் பாரதிதாசன் இவரைப் பல வகையிலும் வென்றிருக்கின்ருர். ஆனுல் இவர் ஒரு தமிழர் அதுவும் தன்மான எழுச்சியுள்ள தனித்தமிழர் என்பதற்காகவே ஆரியப்பார்ப்பனராலும், நம் வீடணத் தமிழர்களாலும் அழுத்திவைக்கப் பெற்றுள்ளார்.

# 7. நாட்டுக்கு நன்மை!

*(பாவேந்தரின் கூற்றொன்றைச் சுட்டி, சிறுவர்க் குச் செப்பத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஓர் அரிய பகுதியிது!) (தமிழ்ச்சிட்டில் வெளியானது. குரல்—1. இசை—7.)*

'இளமை அறிவோடு இயைந்தால், நாட்டுக்கு விளைவ தெல்லாம் நன்மையே' என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறு கின்றார். சிறுவர்களாக இருக்கின்ற பொழுது நாம் அடை கின்ற செப்பத்தைப் பொறுத்தே பிற்காலத்து நம் வாழ்க்கை அமைகின்றது. நம்மைப் பொறுத்தே நம் நாடு அமைகின்றது. நாம் செப்பமில்லாதவர்களாக இருந்தால் நாடும் செப்பமாக இராது; வீடும் விளக்கமுற இருக்காது.

# 8. புதுவைப் பாவேந்தர் சிலை-

## ஓர் எச்சரிக்கை !

(புதுவைக் கடற்கரையில் அமைந்திருந்த பாவேந்தரின் சிலையை வேறோரிடத்திற்கு மாற்றி வைக்கவும், அந் நினைவுச் சிலையிருந்தவிடத்தில், நேருவின் சிலையை நாட்டவும், புதுவையரசு முனைகையில், கொதித்தெழுதிய உணர்வு கொப்புளிக்கும் அரிய ஆசிரியவுரை.)

புதுவையில், கடற்கரையில், காந்தி சிலைக்கு நேராக, முன்னர்த் துய்ப்ளேக்சு சிலை இருந்த இருக்கையில் தி.மு.க.ஆளுமையில் உள்ள பொழுது பாவேந்தர் சிலை ஒன்று வைக்கப் பெற்றது. அதனை இப்பொழுது அந்த இடத்திலிருந்து அகற்றி விட்டு, வேறோர் இடத்தில் வைக்கப் போவதாகவும், அந்த இடத்தில் நேரு சிலையை வைக்கப் போவதாகவும், புதுவை நகரமன்றம் திட்டமிட்டுள்ளதாம்.

பொதுவாகவே வடநாட்டவர்கள் சிலைகளும், தெருப் பெயர்களும் தமிழ்நாட்டில் ஏராளம்! ஆனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்திந்தியப் பெருந் தலைவர்களுக்குக்கூட வடநாடுகளில் சிலைகளோ தெருப்பெயர்களோ அறவே இல்லை என்பதை நாம் அனைவரும் அறிதல் வேண்டும். இந்த நிலை ஒன்றே தமிழ் நாட்டவரின் ஏமாளித் தனத்தையும், வட நாட்டவரின் கரவான ஆளுமைத்திறத்தையும் தெளிவாக நாம் அறிந்து கொள்ளப் போதுமான சான்றாகும். இந்த நிலைகளின் தொடர்ச்சியாகவே, இப்பொழுது பாவேந்தர் சிலை யகற்றப் படுவதும், அவ்விடத்தில் நேரு சிலையை வைக்க முயற்சி செய்யப்படுவதும் நடைபெறப் போகின்றதாக நாம் உணர்தல் வேண்டும். இந்த நிலைக்கு இடங் கொடுப்போமானால், இனி இந்நாட்டில் தமிழ்த் தலைவர்களின் சிலைகளை வைப்பதற்கே கூடத் தடை வந்தாலும் வரலாம். எனவே, இந்த நிலையில் நம் உரிமையையும் மதிப்பையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாத தாகும்.

பாவேந்தர் இந்த நாட்டின் ஓர் இலக்கியப் பாவலர் என்பதைவிட, இந்த நாட்டின் அடிமைத்தனத்திற்கே சாவு மணியடித்து, விடுதலைக்கு வித்திட்ட பாவலர் என்பதிலேயே நமக்குப் பெருமையும் பெருமிதமும் உண்டு. அத்தகைய உரிமையுணர்வுப் பாவலர் ஒருவரின் சிலையை ஒரு நாலாந்தரப் பாவலனின் சிலைபோல் கருதி நடந்துகொள்ள நினைப்பது, நமக்குப் பெருத்த இழிவும், நம் அடிமை மனப்பாங்கிற்கு உறுதியும் சேர்ப்பதாகும். இவ்வகையில் புதுவை ஆளுநர் மக்கள் உணர்வையே பெரிதாக மதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். மதிப்பார் என்றும் நம்புகின்றோம். அவர் அவ்வாறு மதித்து அவர் சிலைக்கு எவ்வகையான இட மாற்றமும் அதன் வழி இழிவும் நேரா வண்ணம் தம் ஆட்சித் திறத்தைக் கட்டிக் காத்துக்கொள்வார் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசனை விட நேரு அவ்வளவு பெரியவருமல்லர்; பெருமை உண்டாக்கியவரும் அல்லர். அவர் இந்த நாட்டின் முதலமைச்சராகவோ, விடுதலை முயற்சிகளில் பங்குகொண்டவராகவோ இருக்கலாம். ஆனால் அந்த நிலைகள், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தமிழர்களின் அடிமைத்தனத்தையும் வடநாட்டினர் மேலாளுமையையும் உறுதி செய்வதற்கு உதவிய செயல்களாகவே கருதப்படும். அதேபோல்தான் காந்தியும் தமிழர்களின் அடிமைத்தனத்திற்கும், தமிழகத்தின் உரிமையெதிர்ப்புக்கும் வலிவூட்டுபவரே யாவர். எனவே தமிழ்மொழி, தமிழினம் தமிழ்நாடு என்ற அளவில் பாவேந்தர் பாரதிதாசன் மதிப்பிடற்கரிய, பெருமை மிக்க ஒரு விடுதலைப் பாவலர் ஆவார். அவர் பெயருக்கு இழிவு நேரும் எந்தச் செயலையும் தமிழர்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். எனவே, பாவேந்தர் சிலையை இப்பொழுதுள்ள இடத்திலிருந்து அகற்றவோ, வேறு ஓர் இடத்தில் கொண்டுபோய் வைக்கவோ, இப்பொழுதுள்ள குடியரசுத் தலைவர் வழிநிற்கும் ஆளுநர் ஆட்சி இசைவளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறு

அந்தச் சிலை ஆளுநரின் அதிகாரச் செருக்கால் அவ்விடத்தி னின்று அ க ற் ற ப் ப ட் டு அவமானப் படுத்தப்படுமானால், புதுவை மாநிலத்தில் உள்ள அத்தனைக் காந்தி சிலைகளும், நேரு சிலைகளும் அவ்வவ் விடங்களிலிருந்து அகற்றப்படுவ துடன், அடித்து நொறுக்கித் தூள் தூளாக்கப்படும் என்றும் எச்சரிக்கின்றோம் !



# 9. பாவேந்தரிடம் முதல் சந்திப்பு

(1950—இல் ஆசிரியரின் கல்லூரிப் படிப்புத் தொடக்கத்தில், அவர்தம் பதினான்காவது அகவையிலேயே எழுதியிருந்த 'மல்லிகை' 'கொய்யாக்கனி' என்ற இரண்டு பாவியங்களையும் எடுத்துக் கொண்டு சேலத்திலிருந்து புதுச்சேரிக்குப் பாவேந்தர் பாரதிதாசனை முதன் முறையாகப் பார்க்கச் சென்ற பொழுது பாவேந்தர், 'மல்லிகை'யின் முதல் பாடலாகிய,

வான்சிரித்து வண்ணவொளி வீசிற்றங்கே;
வயல்நோக்கிப் போந்தனர் தென் உழவரெல்லாம்;
கான்யாற்றின் கரையினில் நல் வஞ்சியர்கள்
கமழ்கின்ற சந்தனத்தை யள்ளித் தம்மென்
மேனிகளில் பூசுகின்றார்; பரிதி அந்த
மெல்லனைய ஒண்டொடியர் மீதில் செம்பொன்
போன்றொளியைப் பூசுகின்றான்! தமிழப்பெண்டிர்
புரள்கின்ற நீள்குழலால் வணக்கம் செய்வார்!"

என்னும் பாடலைப் படித்து விட்டுக், "கான்யாறு என்றால் காட்டாறு. அங்குக் குளிப்பவர்களுக்குச் சந்தனம் எங்கிருந்து வந்தது? சேறு தான் கிடைக்கும், அள்ளிப் பூசிக் கொள்ள!" என்று குறைகூறிப் பாவியத்தை மேலும் பார்க்க மறுத்துத் திருப்பிக் கொடுத்துப் "பாட்டு எல்லாருக்கும் எழுத வராது; ஒரு சிலர்க்கே வரும். பாட்டுப் படிக்க வேண்டியவர்களெல்லாம் பாட்டு எழுதக் கூடாது. நீ போய் இன்னும் படி' என்று கூறிப் போகச் சொன்னார். பின் எத்தனை முறை வேண்டியும், அவர் நூல்களைப் பார்க்க மறுத்து விட்டதால், ஆசிரியர் அங்குள்ள கடற்கரைக்குச் சென்று அமர்ந்து மிகவும் வருத்தத்துடன் எழுதிய பாடலிது) —.

## என்னே செய்வேன்?

சீறுகின்ற நாகத்திடை மணியும், சேற்றில்
சிரிக்கின்ற தாமரையும், காட்டி னூடே
நாறுகின்ற அகில் மரமும், மண்ணுக்குள்ளே
நற்பொன்னும், சிப்பியிடை முத்தும், ஆற்றில்
ஊறுகின்ற நல்லூற்றும், தீயைக் கக்கும்
உயர்மலையில் இயற்பொருளும் இருக்க, என்போல்
தேறுகின்ற பாவலர்க்கிங்(கு) இலக்கியத்தில்
"திறமில்லை" என்கின்றார், என்னே செய்வேன்?

மணக்கின்ற தமிழாலே இன்பம் சேர்த்து
மக்களிடை யெழுத்தாலே ஓர்புரட்சி
கணக்கின்ற வகைசெய்ய எண்ணங் கொண்டு
'கவி' வாழும் மலர்க்காட்டின் வாழ்விடத்தில்
"எனக்கொன்று" வேண்டுமென்றேன்; இலக்கியத்தை
எடுத்தியம்பும் பெருமக்கள் என்னெழுத்து
"மணக்கின்ற விதமில்லை" என்று கூறி
மறுத்துவிட்டார் "புலவனென" என்னே செய்வேன்?

மலைகொடுக்கும் அழகையெல்லாம் சேர்த்தும், வானின்
மகிழ்கின்ற செம்பரிதி அழகும், நீல
அலை சூழும் கடல்பாடும் பாட்டும், காலை
அழகோடும் மங்கையர்கள் எழிலும், வாழ்வில்
நிலைகுன்றி வாழ்கின்ற மக்கள் நெஞ்சில்
நினைப்பூட்டும் பாடலெலாம் வரைவேன்" என்று
கலைவல்லார் பாற்சொன்னேன்; என்றன் பாட்டில்
"கருத்தில்லை" என்கின்றார் என்னே செய்வேன்?

# 10. புதுவையில் பாவேந்தருடன் தொடர்பு

(சேலத்திலிருந்து, புதுச்சேரிக்குப் பாவேந்தர் பாரதி தாசனை முதல் முறையாகப் பார்க்கச் சென்ற நிகழ்ச்சியை யடுத்து, நான்காண்டுகள் கழித்து 1954—இல் ஆசிரியர் மீண்டும் அதே புதுவைக்கு அரசுப் பணியின் பொருட்டு வந்த பொழுது, பாவேந்தரிடம் சென்று, அக்கால் சேலங் கல்லூரிப் பேராசிரியராக விருந்த தம் ஆசிரியர், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் எழுதிக் கொடுத்தனுப் பிய கீழ்வரும் பாராட்டுப் பாடலைக் காட்டினார்.

"துரை மாணிக்கம் இன்பத்தூடு
துள்ளும் இன்ப அருவிபோன்றே
வரை மாணிக்கம் ஆகிப் பல்ல
வகையால் உணர்ச்சிப் பாக்களாக
உரைமாணிக்கக் கொத்தின் கற்கள்
உள்ளத் தழகாய்ப் பட்டை தீர்ந்து
திரைமாணிக்கம் என்னத்தேறித்
தென்னுடெங்கும் திகழ்க மன்னே"

— இப்பாடலையும் ஆசிரியரின் பிறபாடல்களையும் கண்டு பெருமகிழ்ச்சியுற்ற பாவேந்தர், தம் மகன் மன்னர் மன்னனை அழைத்து அவரிடம், 'தம்பி, இந்தாப்பா, இவரை எங்கெங் கேயோ தேடினோமே! இங்க வந்து நிற்கிறாரு. இவரை என் றைக்கும் கைவிட்டு விடாதே. கடைசி வரை உன்னோடேயே வைத்துக்கொள்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். அக்கால் ஆசிரியர் பாவேந்தரிடம் தாம் நான்காண்டுகளுக்கு முன்பு ஒருநாள் பாவியங்களுடன் வந்திருந்த செய்தியை நினைவூட்டிக்கூறி, அக்கால் எழுதிய பாடலையும் பாடிக் காட்டினார். பாவேந்தர் அப்பாடலைக் கேட்டு மிகவும்

வருந்தியவராயும், இப்பாடலால் மகிழ்ந்தவராயும், "அப்பொழுது வேறு மாதிரி நிலையில் இருந்திருப்பேன்; அந் நிகழ்ச்சியை மறந்துவிடு" என்று அன்பொழுக ஆசிரியர்க்கு ஆறுதல் கூறினார். அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இவை ... ஆசிரியர் அதைப் பற்றிக் 'கொய்யாக்கனி, முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதாவது....)

1954—ஆம் ஆண்டு, புதுச்சேரியில் அஞ்சல் எழுத்தளைப் பணியேற்றேன். பாவேந்தர் பாரதிதாசனாரின் நெருங்கிய நட்பு கிடைத்தது. அன்றுடம் அலுவல் முடிந்ததும் பாவேந்தர் வீட்டில்தான் என்னைப் பார்க்கலாம். அக்கால் அவருடைய உண்மையான உள்ளத்தன்பையும் நம்பிக்கையும் நிறையப் பெற்றிருந்தேன்.

பாவேந்தர் நட்பு நெருங்கியிருந்தபொழுது, 1955 தொடக்கத்தில் கண்ணதாசனின் 'தென்றல்' இதழில் இலக்கியப் போட்டி ஒன்று அறிவிக்கப்பெற்றிருந்தது. அதில் தேர்ந்தெடுக்கப் பெறும் பாவியத்திற்கு ஆயிரம் உருபா பரிசு என்றும் அறிவித்திருந்தார்கள். அப் போட்டிக்குத் தேர்வாளராகப் பாவேந்தர் அமர்த்தப் பெற்றிருந்தார்.

அந்தப் போட்டி அறிவிப்பு வெளிவந்தவுடன் ஒருநாள் மாலை, பாவேந்தர் என்னிடம் 'போட்டி வந்திருக்கின்றது, தெரியுமா?' என்று கேட்டார். தெரியும் என்றேன். 'நான் தான் தலைவன்; நீ எழுது; உனக்குத்தான் பரிசு; வேறு யாருக்குத் தரப்போகிறேன், நான்' என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு, 'இதுவரை ஏதாவது பாவியம் எழுதி வைத்திருக்கிறாயா?' என்றார். நான் உடனே, 'ஆம்' என்று கூறிவிட்டு, மல்லிகை, பூக்காரி இரண்டையும் பள்ளி மாணவப் பருவத்திலேயே எழுதி வைத்திருப்பதாகவும், அவற்றுள் 'பூக்காரி'யைப் போட்டிக்கு அனுப்பலாம் என்றும் அவரிடம் தயங்கித் தயங்கிக் கூறினேன்.

உடனே, 'அதை எடுத்துக் கொண்டு வா' என்று கட்டளை போட்டார். அதன் பின்னர்ப் 'பூக்காரி'யின் பழந்

தாள் தொகுதி; மீண்டும் சரி செய்யப் பெற்றது;சில திருத் தங்களுடன் அன்பர்களைக் கொண்டு, ஒரு கிழமைக்குள் செவ்விதாகப் படியெடுக்கப் பெற்றது. அதில் தலையாய திருத்தமாகப், 'பூக்காரி' என்று அதற்கிட்டிருந்த பெயரைக் 'கொய்யாக்கனி' என்று மாற்றம் செய்தேன்..........................

'கொய்யாக்கனி'யை நான் போட்டிக்கு அணியப்படுத்த முற்பட்டதற்கு முன்னை ஒருநாள், பாவேந்தரின் தொடக்கக் கால நூல்களில், வரைதுறையின்றி வடசொற்கள் பயின்றி ருந்த நிலையினை அவர்க்குக் கொள்கையுணர்வுடன் சுட்டிக் காட்டி, 'ஐயா, இந்நிலை, இப்பொழுதுள்ள நம் கொள்கைக்கு மாறுனதாகவிருக்கின்றதே; தாங்கள் இசைவளிப்பீர்களா யின், இவ் வடசொற்களைக் களைந்துவிட்டு, அவற்றிற்குப் பகரமாகப் பொருத்தமான தூய தமிழ்ச் சொற்களை, நான் பெய்துவிட முடியுமே, செய்யட்டுமா?' என்று கேட்டேன். அவ் வினைவைச் சற்றும் எதிர்பாராத பாவேந்தர், உடனே, 'இல்லை; வேண்டாம்! நான் எப்படியெப்படி இருந்து வளர்ந்து இப்படிப்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றேன், என்று மற்றவர் கள் விளங்கிக் கொள்ள வேண்டாமா?' என்றார். அவருடைய விடை எனக்கு மிகவும் சரியாக, இயற்கையை யொட்டிய தாகப்பட்டது.

அறிவுணர்வு மிகக் கலந்த பாடல்கள் அறநூலாகி விடும்! கற்பனையுணர்வு மிகக் கலந்த பாடல்களே பாவியங் கள்! எனவே, அன்று வெளிப்படுத்திய உணர்வு முளைகளை, அப்படியே மக்கட்கு வடிவப் படுத்திக் காட்டினேன். கொய் யாக் கனியில் இடம் பெற்றிருந்த பற்பல வடசொற்கள் களையப்பெறவில்லை. உணர்வு மாறாத, இயற்கையழகு கெடாத — வகையில் ஆங்காங்கே. சில வடசொற்கள் — அறியாப் பருவத்து அறிவுணர்வு மழுக்கச் சொல்லாட்சிகள் — முதலியன உண்டு. அவற்றை அப்படியே விட்டு விட்டேன் பாட்டமைப்பில் கூட அதிகம் கை வைக்க வில்லை. ஒலியமைதி கருதி ஓரிரு சீர், தளைகள் செப்பம் செய்யப்பெற்றன.

இனி இவ்வாறு திருத்தப் பெற்ற படி, பாவேந்தரின் முன் பார்வைக்கு வைக்கப் பெற்றது. பாவேந்தருக்கு அன்றிருந்த வினையழுத்தத்தில், இன்று, நாளையென்ருகி, ஒரு நாள் மாலை 6 மணியளவில், கொய்யாக்கனி படிப்பதற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது. பாவேந்தர் முழங்கையை மிசையின் மேல் ஊன்றியவராய், சுருட்டை மாறி மாறிப் புகைத்தவராய், மூன்று மணி நேரம் ஈடுபட்டு அதனைப் படித்து முடித்தார். இறுதியில், இங்கொன்றும் அங் கொன்றுமாக, அதைத் திருத்தி, "இந்தாப்பா, இதை யெடுத்துக் கொண்டு போய்ப் போட்டிக்கென்று விடுத்து விடு" என்று கூறினுர். அத்துடன், மூன்று மணி நேரம் ஆடாமல், அசையாமல், இடை விடாமல் முழங்கையை ஊன்றிப் படித்த வருத்தம் வெளிப்படுமாறு "கையெல்லாம் வலிக்குதப்பா" என்று, கையை உதறிக்கொண்டே கூறினுர். அந்த அருங்காட்சி இன்னமும் என் உள்ளத்தில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கிறது. பிறகு, ஏதோ ஒரு காரணத்தால், போட்டிக்குப் பாவேந்தர் தலைமை தவிர்க்கப் பட்டதாக அவர்க்குத் தெரிய வந்தது. அக்கால் அவர் என்னையழைத்து, "போட்டிக்கு நீ உன் நூலை அனுப்ப வேண்டாம்; திருட்டுப் பயலுக என்னைத் தலைமையினின்று நீக்கி விட்டானுங்க! உன் நூலை வேறு யாரிடமும் தேர்வுக்கு அனுப்ப வேண்டாம். நான் அதை நம் அச்சகத்திலேயே அச்சுப் போட்டு விடச் சொல்கிறேன்' என்று கூறி விட்டுத் தம் மகன் திரு. மன்னர் மன்னனைக் கூப்பிட்டு, 'தம்பி, இதை நம் அச்சகத்திலேயே அச்சுப் போட்டுக் கொடுத்து விடு" என்று கட்டளையிட்டார்.

# 11. கொய்யாக்கனி அச்சீடு!

பாவேந்தரின் கட்டளைப்படி, திரு. மன்னர் மன்னன் கொய்யாக்கனியை அச்சேற்றினார். அஃது அச்சாகி முடியுந் தறுவாயிலிருந்த பொழுது ஒருநாள் மாலை நான் பாவேந்தரின் 'பழநியம்மா அச்சக'த்திற்குச் சென்றேன். அக்கால் மன்னர் மன்னன் என்னிடம், "நீங்கள் தலையிடம் (பாவேந்தரை நாங்கள் 'தலை'யென்று சுருக்கமாக அழைத்துக் கொள்வோம்) ஏதாவது, கொய்யாக்கனிக்கு மதிப்புரை கேட்டீர்களா?' என்றார். நான், 'இல்லையே, நான் ஏன் மதிப்புரை கேட்பேன்?' என்றேன்.

அவர் என்னைக் கேட்டதிலிருந்து, பாவேந்தர் அதற்கு நான் கேளாமலேயே மதிப்புரை ஒன்று எழுதிக் கொடுத்திருப்பார் என்று உயர்த்துணர்ந்து கொண்டு, மன்னர் மன்னனிடம் அவ்வாறு பிலுக்கினேன். அதற்கு அவர், "நீங்கள் கொடுத்து வைத்தவர்தாமையா! (அவர் பயன்படுத்திய சொல் 'அதிர்ஷ்டக்காரர்' என்பது.) அருமையான மதிப்புரை ஒன்று எழுதிக் கொடுத்திருக்கிறார். நான் அறிந்த வரையில் அவர் இப்படி யாருக்குமே எழுதிக் கொடுத்ததில்லை; அவனவன் - மதிப்புரை வேண்டுமென்று கேட்டுத் தவங்கிடப்பான். இறுதியில் வேண்டா வெறுப்பாகக் கிண்டலாகவோ, ஏனோ தானோ வென்றோ எழுதிக் கொடுப்பார். இறுதியில் அதையும் வாங்கிக் கொண்டு போவார்கள். நீங்கள் கேளாமலேயே உங்களுக்கு மிகவும் சிறப்பாக எழுதிக் கொடுத்து விட்டாரே; வியப்புதான்! (அவர் பயன்படுத்திய சொல் 'ஆச்சரியந்தான்' என்பது.) என்று கூறி, மதிப்புரை எழுதியிருந்த தாளை என்னிடம் கொடுத்தார். அதைப்படித்துப் பார்த்தவுடன், பாவேந்தர் என் மேல் கொண்டிருந்த கள்ளமற்ற மெய்யன்பையும், மதிப்பையும் அறிந்து உள்ளம் உருகி நின்றேன். என் கடை விழிகளில் 'நன்றிக் கண்ணீர்' துளிர்த்தது.

பாவேந்தர் கொய்யாக்கனிக்குக் கொடுத்த மதிப்புரையைப் பற்றி இரண்டொரு சொற்கள் சொல்லியாகல் வேண்டும். நூலைப்பற்றிய செய்தி கொஞ்சந்தான் அதில் வருகிறது. மற்ற செய்தியெல்லாம் என்னைப் பற்றியதுதான். என்னை அவர் விளங்கிக்கொண்ட தன்மை அவ்வரிகளில் ஆழப் பதிந்திருந்தது. வெறும் சொற்களாக அவற்றைப் பாவேந்தர் பயன்படுத்திவிடவில்லை. அதில் அவர் பயன்படுத்திய ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு; உணர்வுண்டு! அதிலுள்ள அத்தனைச் சொற்களிலும் அவரின் தூய தமிழுள்ளம் - கனிவு நிரம்பிய குழந்தையுள்ளம் - பொறாமையற்ற சான்றாண்மையின் பெருந்தகை

யுள்ளம் - பதிந்து, மெய்ம்மை சாற்றிநின்றது. அதில் அவரின் சிரிப்பு துள்ளியது; நகைச்சுவை பொதுளிநின்றது; உவகை ஊஞ்சலாடியது, அன்பு குமிழியிட்டது; அறிவு சுடர் வீசியது; என்பால் அவர் வைத்த நம்பிக்கையின் ஈரம் கசிந்து நின்றது; அதில் என் தமிழ் உள்ளத்தையும், அதில் கொப்பளிக்கும் உண்மை உணர்வையும், அதன் சூட்டையும், குளிர்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார். என் அறிவின் வலிந்த கொள்கையைச் சுட்டியிருந்தார். அவரொடு நான் பழகிய பண்பு வழுவாத தொடர்பை உறுதிப்படுத்தியிருந்தார்; எல்லாவற்றுக்கும் மேலாக என் எதிர்காலத்தையே வாழ்த்தி நிலைப்படுத்தியிருந்தார்! மொத்தத்தில், அவர் அம்மதிப்புரையில் பயன்படுத்திய சொற்களில் அவரின் பாடல் உள்ளம் கொழுமை கொண்டது. வண்ணமாலைகளின், சுடர்க் கற்றைகளை வீசி, ஒரு பாவலனின் உள்ளத்தை வேறு ஒரு பாவலன் அறியும் படைப்புக் கமுக்கத்தை உலகுக்குப் புலப்படுத்தியிருந்தார். இவ் வனைத்துச் சிறப்புகளையும் உள்ளடக்கிய அவ் வயிர வரிகள் என் உள்ளத்தில் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சி உணர்வு மூட்டத்தில் மூழ்குவித்தன. இன்று நினைத்தாலும், அன்றைய மாலைப் பொழுதின் தென்றல் வீச்சு என் உயிரைக் குளிர்விக்கின்றது.

அப் பாவேந்தர் பெருமகனார் கொய்யாக்கனிக்குத் தந்த மதிப்புரை இது தான்!

— கள்ளம் எப்படி அப்படிக்
கடுகளவும் இலாத நெஞ்சினர்; முக்
கனிகள் எப்படி அப்படிப்
போன்ற முத்தமிழின்மே லன்பர்;

— குள்ளம் எப்படி; அப்படி
இலாப் பெருங் கொள்கை யுடையார்;
குறைகடல் எப்படி, அப்படிக்
குணநிறை துரைமாணிக் கனார்;

— வெள்ளம் எப்படி அப்படிச்
செந்தமிழ்ச் சொற்பெருக் கேற
மேன்மை எப்படி அப்படிப்
பட்டதோர் நடையிற்றம் நல்ல

— உள்ளம் எப்படி அப்படித்
தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்,
உலகம் எப்படி, அப்படிப்
பட்டதாம் நிலைகொள் கொய் யாக்கனியே!

# 2. பாமாலை



# தொடுத்த மலர்கள் !

1. குயிலே !
2. பாரதிதாசன் காதலி !
3. என்றைக்கு எழுவாயோ ?
4. தமிழ இனமே ! தமிழ இனமே !
5. நரம்புக்கு நரம்பு உணர்வேறும் !— உயிர் நாடிக்கு நாடி தமிழ் ஊறும் !
6. நாளையும் நீ வாழ்வாய் !
7. எவர்கொல் துணையே !
8. பாரதிதாசன் பத்து !
9. பொய்யிலாப் புலவர் புகழ் வாழியவே !
10. பாரதிதாசனுக்குப் பா மடல் !

# 1. குயிலே!

(பெரும்புலவரான பாவேந்தரின் பாவை இசைத்து, யான் தரும் பாலையும் பழத்தையும் பெறுக என, குயிலை நோக்கி இசைத்த பா இது! பாவேந்தரின் "குயில்" மீண்டும் 1958-இல் வெளி வந்த போது, உடன் வந்த பாடல் இது!)

நாவும் இனிக்க, நறுந்தமிழின்
நறவை மாந்தி, நெஞ்சினிக்கக்
கூவுங் குயிலே! தேமாவின்
கோதுண் டிருந்து மலர்மலர்வாய்த்
தாவுங் குயிலே! தண்டமிழின்
தனித்த சீர்த்திப் பெரும்புலவன்
பாவும் இசைத்தே யாங் கொடுக்கும்
பாலும் பழமும் பெறுவாயே!

ஏடும் மணக்க இளந்தமிழில்
இசையும் மணக்கத் தீம்பாடற்
பாடுங் குயிலே! பழந்தமிழர்
பகையும் மறந்தே பணியாற்றித்
தேடும் பெருமை திகழ்தற்கே
தீம்பண் ணிசைத்துத் தனித்தமிழர்
நாடுங் கேட்டே, யாங்கொடுக்கும்
நறவுந் தளிரும் பெறுவாயே!

நாளும் பயில நற்றமிழ்ப்பா
நாட்டுங் குயிலே! ஒன்றுரைப்பேன்,
கேளாய்! சீர்த்தித் தனிநாட்டைக்
கேட்டும் மறுப்பார்க் கிந்நாட்டுத்
தூளும் மிஞ்சா தென்பதையும்
தோள்கள் கோடி தாயின்மேல்
சூளுற் றதையும் நீகூறிச்
செந்தேன் தினைமாப் பெறுவாயே!

# 2. பாரதிதாசன் காதலி

(தமிழை மணந்த பாவேந்தர் பாரதிதாசனிடம் ஒரு பெண் காதல் கொண்டாள். அத் தமிழ் என்னும் பெண்ணைத் தவிர வேறொருத்தியைத் திரும்பிப் பாரேன் என்று மறுத்தான் அப் புலவன். 'வாழ்க' எனக் கூறி வழி நடந்தாள் அவள். பாவேந்தர் பாரதிதாசனின் முன்னிலையில் 'பாரதிதாசன் எண் சுவை' என்னும் தலைப்பில் நடந்த பாட்டரங்கத்தில் 'இளிவரல்' பற்றி எழுதிப் பாடியது இது.)

கொழித்த செந்தமிழ்க் கோமகளின்
குறள்மணக் கும்வாய்ப் பேச்சினுக்கும்
செழித்த சிலம்புசிந் தாமணிக்கும்,
செறிவளை, குண்டல, மேகலைக்கும்
கழித்தான் பொழுதை அவனிடத்திற்
காதலைச் சொன்னேன்; கன்னியெனைப்
பழித்தான், இழித்தான்; தோழியவன்
பாரதி தாசனெ னும்பெயரோன்!

ஊற்றுப் பெருக்கெனப் பாவியற்றி
உலகோர்க் கீந்தான்; துன்புறுவார்க்
காற்றுப் பெருக்கென உதவியவன் ;
அவன்தோள் விரும்பி 'மணந்தென்னை
ஏற்றுக் கொள்வீ' ரென்றேனு,
இளையாள் என்றன் உளம் நோகத்
தூற்றிப் பழித்தான் ; தோழியவன்
தோன்றல் பாரதி தாசனென்பான்!

செந்தமிழ்க் கன்னியெ னுமொருத்தி
சேல்விழிக் கும்அவள் பால்மொழிக்கும்
தந்தவன் உளத்தை என்பார்சொல்
தவிர்த்தே தோழி அவனிடத்தில்
சிந்தும் புன்னகை மொழிகூறிச்
'சேயிழை யென்னைக் கொள்கெ'ன்றேன்;
நொந்தழி வுறுமா றெனை யிழித்தான் ;
நோய்செய் தானென் உயிர் கொய்தான்!

(வேறு)

அலைகுதிக்கும் கடற்கரையில் அமைந்த திருநகரம்!
அகல்விசும்பின் மேற்புரண்டு விரிந்திருக்குந் தென்னங்
குலைகுதிக்கும் சோலைமலி தென்புதுவை நகரில்
குளங்குதிக்கும் மீன்போலும் வாய்குதித்த தமிழில்
கலைகுதிக்கும் பாவரசன் பாரதிதா சன்மேல்
காதலெனக் கூறியவன் இசைவுதரக் கேட்டேன்;
மலைகொதித்து வெடித்ததுபோல் மன்னுதமிழ்க் கன்னி
மணந்தவன்யான்; பிறர்விரும்பேன்; 'போபோபோ'
வென்றான்!

என்றவனின் கால்விழுந்து கண்ணீரால் கழுவி
'எத்திறத்தாள் தமிழ்க்கன்னி? என்னைவிட மேலோ?
நின்றெனக்குக் கூறுங்கள்' என்றேனு தோழி,
நீடுயர்ந்த தோளுயர்த்தி, விழியுருட்டி நோக்கிக்
'குன்றனைத்த புகழுடையாள், கோடிச்சிறப் புடையாள்
கூறுபத்துப் பாட்டுப்பதி னென்கணக்கு நூற்கள்
பொன்றாத எண்தொகையின் இன்பமவள்; அறத்தாள்;
போதுமோடி அன்னவளின் 'புக'ழென்றான் தோழி!

புகழ்ந்தவனின் உளம்பொங்கப்
புதுப்பாடல் மழையாய்ப்
பொழிந்தவனைக் கேட்டறிந்தேன்;
பூரித்துப் போனேன் ;
திகழ்ந்தஅழ கொளியும்'அவன் கூர்த்தறிவுத் திறனும்
திரள்தோளும் மறநெஞ்சும் தமிழர்களை அற்றை
இகழ்ந்தவட வரசர்களை இழுத்துவந்த சேரன்
ஏந்தலைப்போல் இருந்ததடி! என்னென்று சொல்வேன்!
புகழ்ந்தவனை வணங்கியென்றன் துயர்நெஞ்சை மீட்டுப்
பொன்றாத தமிழோடுன் புகழ்வாழ்'கென் றேனே!

**(1952)**

# 4. என்றைக்கு எழுவாயோ ?

*(அறிஞர் பெருமக்களும், குமுகாயத் தொண்டர்களும், அரசியல் தலைவர்களும், தமிழும் தமிழரும் மீட்சியடைவதற்காக அவரவர் துறையில், ஆழ முயன்றனர்! முயல்கின்றனர்! இன்றைக்குக் காலம் நன்கு கனிந்துள்ளது! அப்படிக் கனிந்துள்ள இன்றைக்கே எழாமல் என்றைக்குத் தமிழனே நீ எழப் போகின்றாய் என்று, அவலத்தோடு ஆசிரியர் கேட்கிறார் இப் பாடலில்! பாவேந்தரை முன்மைப் படுத்தியவாறு பாடல் எழுதப்பெற்றது மிகவும் குறிப்பிடத்தக்கது.)*

*இன்றைக்கே எழாமல்,நீ என்றைக்குத்*
*தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!*
*என்றைக்குக் காலமினி ஏற்றபடி*
*கனிந்துவரும், இந்நாள் போல ?*
*குன்றைத்தூள் செய்கின்ற வல்லுணர்வை*
*உன்நெஞ்சில் குவிக்கும் வண்ணம்*
*என்றைக்குப் பாவேந்தன் இனியொருகால்*
*எழுந்துவந்தே எழுதித் தீர்ப்பான் ?*

# 5. தமிழ இனமே! தமிழ இனமே!

*(திருச்சியில் நடைபெற்ற தமிழக விடுதலை மாநாட்டுக்கு வரவேண்டி தமிழர்களை அழைத்த ஆசிரியரின் வேண்டுகோள் பாவில் ஒருபகுதியிது! வாழ்ந்து கிடந்த வரலாற்றைப் புதுக்க வருக எனும் வேண்டுகோளுக்கிடையில் பாவேந்தரை நினைவு கூறும் அரிய பகுதி இது!)*

*உனைவிழிப் பிக்கவும் உனைவாழ் விக்கவும்*
*உனையிவ் வுலகத்துள் உரிமை இனமெனப்*
*பட்டயங் கட்டிப் பழம்புகழ் மீட்கவும்*
*கொட்டிய முரசம் எத்தனை தெரியுமா?*
*கூக்குர லிட்டவர் எவர்எவர் அறிவையா?*
*ஏக்கமுற் றுன்னை எழுக எழுகென*
*எழுதிக் குவித்த கைகள் எத்தனை?*
*தொழுது வேண்டிய வாய்கள் எத்தனை?*

*தோளை உலுக்கித் தூக்கி நிறுத்தி*
*'வாளைச் சுழற்றடா'. என்றுனை வாழ்த்திய*
*பாட்டின் வேந்தன் பாரதி தாசற்கு*
*நீட்டி முழக்கி விழாநிகழ்த் தினையே!*
*என்ன பொருளில் இவ்விழா வெடுத்தாய்?*
*சொன்னவன் பாட்டின் சொற்பொருள் என்ன?*
*என்ன சொன்னான்? எவர்க்கவன் சொன்னான்?*
*இன்ன விளக்கங்கள் எல்லாம் அறிவையா?*

*[சுவடி: 10ஓலை: 1.]*

# 6. நரம்புக்கு நரம்பு உணர்வேறும்!-உயிர் நாடிக்கு நாடி தமிழ் ஊறும்!

(பாவேந்தர் என்னென்ன விளைவுகளைச் செய் செய்தார், அவர் யார் என்பனவற்றை, இனிய எளிய தமிழ்ப்பாவில்; சின்னஞ்சிறுர்கள் பயின்று பயன் பெற்றுத் துய்க்குமாறு, வடித்து ஊட்டுகிறுர் ஆசிரியர்! அது, இஃது!)

பாட்டுக்கு வேந்தர் பாவேந்தர்—அவர்
பாரதிதாசன் எனும் வேந்தர்!—தம்பி
ஏட்டுக்கு ஏடு எழில்கொழிக்கும்—அவர்
எழுத்துக்கு எழுத்து தமிழ் மணக்கும்!
(பாட்டுக்கு)

கூட்டுக்குள் ஆவி தமிழ் என்றுர்—அவர்
குரலுக்குக் குரலால் நமை வென்றுர்!—நம்
வீட்டுக்கு வீடு அவர் பாடல்—பெரும்
வீதிக்கு வீதி அவர் புகழாம்! (பாட்டுக்கு)

நரம்புக்கு நரம்பு உணர்வேறும்—உயிர்
நாடிக்கு நாடி தமிழ் ஊறும்!
கரம்புக்கு உழவாய் மனம் உழுதார்—நல்ல
கழனிக்கு மழையாய்த் தமிழ் பொழிந்தார்!
(பாட்டுக்கு)

இருளுக்கு ஒளியாய் அவர் திகழ்ந்தார்—நல்ல
இயற்கைக்கு உயிராய் எழில் கொடுத்தார்!
மருளுக்கு மருந்தாய்த் தமிழ் விளைத்தார்—தம்பி!
மடமைக்கு எதிராய்ப் போர் தொடுத்தார்!
(பாட்டுக்கு)

(குரல் 4. இசை. 5-6)

# 7. நாளையும் நீ வாழ்வாய்!

(தமிழ் விருந்தளித்துத் தணிப்பறியா வேட்கை யினைத் தணித்துக் குமிழ் சிரிப்பால் கவர்ந்து, கொள் கையுரம் ஊட்டி இடையிற் பிரிந்த ஏந்தல் பாவேந்த ரின் நினைவுகள் தந்த துயரமூட்டத்தின் புலம்பலாகப் பாடல் ஓட்டங் கொள்கின்றது! நம்மையும் அவல நினைவுக்குள் மூழ்க்கி, அப் பெருமகனை யெண்ணி உள்ளங் கசிய வைக்கின்றது! பாவேந்தர் நினைவு மாலையின் ஒரு மலராக வெளிப்போந்த அரிய பாடலிது!)

செந்தமிழ்சேர் நல்லுருவே! முத்தமிழ்வாழ் நெஞ்சே!
செத்திருந்த தமிழினத்தை நல்லுணர்வால் கூட்டி
எந்தமிழால் உயிரூட்டி எழுந்துலவ விட்ட
இணையற்ற பாவரசே! ஏற்றமிகு குன்றே!
தந்தபெரும் பாக்களினுல் தமிழினத்தார் கொண்ட
தணிப்பறியா வேட்கையினைத் தணித்துயர்ந்த வேந்தே!
எந்தநினை வேற்பதனுல் உன்நினைவு சாகும்?
எத்தனைநாட் சென்றிடினும் நினைக்கில்உளம் வேகும்!

தமிழ்க்கின்பம் சேர்த்தாயே அதையெண்ணு வோமா?
தமிழ்ப்பகைமுன் ஒருதனியாய் நின்றுமொழிப்போரைச்
சிமிழ்க்காமல் நடத்தினையே அதைநினைந்தே உள்ளம்
சிலிர்ப்போமா? செழுந்தண்வாய் தமிழ் மணக்கப்பேசிக்
குமிழ்ச்சிரிப்பால் கவர்ந்தனையே, அதனைநினைப் போமா?
குலைவதிலா வல்லுரத்தோ டுலவியவெம் புலியே!
தமிழ்ப்பொழிலே! உணர்வூற்றே! சொற்சுவையே! பெய்த
தண்டமிழ்த்தேன் பாமழையே! எங்ஙன்மறப்போமே?

பெருந்துன்பம் வாய்த்திடினும் வாய்மையறம் தாழாப்
பீடுறநீ வாழ்ந்தனையே அதனைநினைப் போமா?
விருந்தென்று பெருந்தமிழை நெஞ்சஇலை இட்டு
வேண்டுமட்டும் வழங்கிய, நீ பசிதீரத் தீர

இருந்தின்னும் வழங்காமற் போயினையே அஃதை
  எண்ணி எண்ணி உடலுயிரும் ஏங்கிடநிற் போமா?
அருந்துன்பம் தமிழ்மொழிக்கே வாய்த்ததடா இக்கால்!
  ஆர்த்தெழுந்த இடிக்குரலோ டணையிடுவார் யாரே?

போற்றுகிலாத் தமிழரிடை தமிழ்போற்றி வாழ்ந்தாய்!
  பொய்மாந்தர் கூட்டத்திடை மெய்ப்பணியில்
(ஆழ்ந்தாய்!
ஆற்றுகிலாத் தமிழர்துயர் துடைத்திடத்தொண் டாற்றி,
  ஆழ்ந்தகன்ற இருளுளத்தில் தமிழ்விளக்கம் ஏற்றி,
வேற்றினத்தார் தமிழழிக்க, வெகுண்டெழுந்து நின்றாய்!
  விறல்பெறவே பகைவர்தமின் உடலுயிரைத் தின்றாய்!
நேற்றிருந்தாய்; இன்றிருப்பாய்; நாளையும் நீ வாழ்வாய்!
  நெஞ்சிருக்குந் தமிழினத்தின் நினைவினில் நீ ஆழ்வாய்!

[சுவடி 3. ஓலை 4.]

# 8. எவர்கொல் துணையே!

*(தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்திய பாட்டின் வேந்தனே! உன்னின் பெரும்பிரிவு தமிழரின் உயிரைக் கடைந்தெடுக்கிறது என்று ஆற்றாமையால் உளம் விதிர்வுறப் பாடிய கையறுநிலைப் பாடலிது! உரை விளக்கமும் உடனுள்ளது! பாவேந்தர் பிரிவின் போது, புதுவை திரு. முதுகண்ணன் என்பார் தொகுத்து வெளியிட்ட பாவேந்தர் நினைவு மாலையில் இதுவும் ஒரு மலராகக் கட்டப் பெற்று நூலில் அணிபெற்றது! ஆசிரியரின் பேரிலக்கியப் படைப்புகளில் ஒன்றான 'நூறாசிரிய'த்தின் 12-ஆம் பாடலாகவும் இஃது இடம் பெற்றுள்ளது!)*

*எவர்கொல் துணையே! கவர்புற் றனையே!*
*குவடுபட நடந்த சுவடும் மாறாது;*
*வான்பட் டதிருங் குரலுந் தேயாது;*
*வல்லுயிர் செகுக்க மாற்றலர் வெரூஉம்*
*கொல்லயில் விழியின் இமையுங் குவியாது;*
*முன்னைப் பெருமையின் முங்குபே ருணர்வால்*
*அன்னைத் தமிழ்க்கே அலங்கல் சார்த்தித்*
*தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்தி,*
*ஓச்சிய தடங்கை வீச்சும் ஓயாது;*
*உயிருணர் வூரப் பொழிந்துயர் வாழ்க்கைப்*
*பயிர்செழிப் பூரப் பாடினை கொல்லோ!*
*இனியே*
*துவரிதழ்த் தாமரை கவர்துளி மாந்தி*
*உவப்புற முரலும் கருவண் டொப்ப*
*இயற்கை தூங்கும் புலவரும் இல்லர்!*
*மயற்கை அகற்றும் மறவரும் இல்லர்!*
*மருட்சி அகற்றிடு புரட்சியும் இல்லை!*
*இருள்துயில் கொண்ட தமிழகம் எழவே*
*அருள்மொழி நெஞ்சத் தறமும் மடிந்தது!*

தயிர்கடை மத்தம் ஆகித் தமிழர்
உயிர்கடைந் தெடுக்கும் நின்பெரும் பிரிவால்
உள்ளமும் அறிவும் ஒய்ந்த
கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கே!

பொழிப்பு :

குன்றம் பொடிந்து படும்படி பெருமிதத்தோடு நீ நடந்து சென்ற காலடிகளும் இன்னும் மறையவில்லை; வானில் தெறித்து அதிரும்படி முழங்கிய நின் குரலொலியும் இன்னும் தேய்ந்து போகவில்லை; வலிந்த உயிர் அழிந்து போகும்படி பகைவர் அஞ்சுகின்றதும் உடலைக் கொல்லுகின்றதும் வேல் போல் கூரியதுமான நின் விழியின் இமைகள் இன்னும் குவிந்து போகவில்லை; முன் நாளைய பெருமையுள் முழுகி எழுந்த பேருணர்வினால் தமிழன்னைக்குப் புகழ்மாலை சூட்டியும், தீயின் ஒளி நாக்குகள் போலும் எழுத்துகளினால் பாட்டில் சுடர் கொளுத்தியும், அரசோச்சி நின்ற நின் பெரிய கைகளின் வீச்சும் இன்னும் ஒய்ந்தபாடில்லை. உயிர்களின் உணர்வு மிகும்படி பாடல்களை மழையெனப் பொழிந்து உயரிய வாழ்க்கை என்னும் பயிர் செழித்துப் புடைநிரம்பும்படி நீ பாடியிருந்தனையே!

இனியே, சிவந்த இதழ்கள் நிறைந்த தாமரையின் தேன்துளிகளைக் கவர்ந்து அருந்திய உவப்பின் மேலீட்டால் முரலுதல் செய்யும் கரிய வண்டைப்போல், இயற்கையூடு ஒன்றிப்பாடியும் புலவர் எனப்படுவோரும் இனி இலராக; இருள்மண்டி உறக்கம் கொண்டிருந்த தமிழ்நிலம் விழித்து எழும்படி, அருள்மழை பொழியும் அறம் பூண்ட நெஞ்சும் மடிந்துற்றதாக. தயிரை அலம்பிக் கடைகின்ற மத்துப் போலும், தமிழரின் உயிரைக் கடைந்தெடுக்கின்ற நின்னுடைய பெரும் பிரிவினால் உள்ளமும் அறிவும் ஒய்தல் நின்ற கள்ளமற்ற உணர்வினர் கனிந்து நிற்போர் தமக்கு.

எவர் இனித் துணையாவரோ? இறப்பெனும் கள்வனால் கவர்ந்து கொள்ளப் பெற்றனையே!

**விரிப்பு :**

இப் பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் என்னும் கனகசுப்புரத்தினம் மறைந்த ஞான்றை உள்ளக் கவற்சி மீதூரப்பாடிய கையறு நிலைப் பாடல் இது.

பாவேந்தரின் பெருமிதமான போக்கும், தமிழுக்கென ஓங்கி நின்ற குரலும் தமிழ்ப் பகைவர் அஞ்சிப் புறம்நடுங்கும் நோக்கும், பேரரசன் எனப் பெருமிதம் கொண்டு ஓச்சிய கைவீச்சும் அவர் வாழ்ந்த வாழ்க்கையின் பெரும் பயனும் இன்னும் தமிழர்களின் நெஞ்சங்களில் காட்சியாகி நிற்கும் நிலையினைக் காட்டி, அவர் பெரும் பிரிவால் தமிழர் இழந்த, இழப்பையும், அவலத்தையும் தொகுத்துக் கூறியதாகும் இப் பாடல்.

எவர்கொல் துணையே......என்னும் முதலடியினை இறுதி அடிக்கு முடிவாகக் கொள்க.

எவர் துணை: என்றமையால் இனித்துணை எவருமிலர் என்றபடி.

கவர்பு உற்றனை—கவர்ந்து கொள்ளப்பெற்றனை. பிறர் விரும்பும் ஒருவரை அவர் விருப்பத்திற்கு மாறாகப் பிரித்ததால் கவர்தல் எனக் கூறவேண்டுவதாயிற்று. குவடுபட நடந்த சுவடு - குன்றம் பொடிந்து போமாறு நடந்த நடையான் அமைந்த சுவடு. நடைக்கும் பெருமிதங் காட்ட வேண்டிக் குன்றம் பொடியும் நடை எனலாயிற்று. ஒருவரின் வாழ்க்கைப் போக்கின் பெருமிதப் போக்கினை உணர்த்துவது ஒருவரின் நடையே ஆகலின் நடை முதற்கண் கூறப்பெற்றது. நடையெனினும் போக்கு எனினும் ஒன்றேயாகி, அவர் வாழ்ந்த பெருமித மான வாழ்க்கைப் போக்கினைக் கூறிற்று இவ்வடி.

இனி நடைக்கடுத்து, ஒருவரின் பெருமிதம் அவர் குரலான் வெளிப்படலால் அவர் குரலின் செம்மாப்புக்கூற வேண்டுவதாயிற்று.

வான்பட்டு அதிருங்குரல்—வானின்கண் பட்டுத் தெறிக்கும் குரல். அதிர்தல்—ஒலிதெறிக்குதல். ஒருபுடை நின்று எழுப்பிய அவர்குரல் எண்டிசையும் பரந்துபட்டுச் சென்றது, கூறப்பட்டது.

மெல்லுயிரைச் சிதைத்தல் எளிதாகலின் வல்லுயிரைச் செகுத்த விழி எனப் பெருமிதந்தோன்றக் கூறப்பெற்றது. உயிரைச் செகுத்தலும், மனத்தை வெருவித்தலும், உடலைக் கொல்லுதலும் செய்யும் அயில்விழி என்று கூறப்பெற்றது.

அயில்—வேல், உயிரை அயிலுதலால் வேல் அயில் எனப் பட்டது. அயிலுதல்—உண்ணுதல்.

அவர் நடந்த மிடுக்கான நடையின் சுவடு தோயாமையும், அதிர்ந்த குரலின் செம்மாப்பு இன்னும் அடங்காமையும், பகைவர் அஞ்சும்படி செய்து அவர் உயிர் செகுக்கும்படி நோக்கிய பெருமிதம் சான்ற விழி இன்னும் மூடாமையும், அவர் ஓச்சிய தடக்கைகளின் வீச்சு இன்னும் ஓயாமையும் இன்றும் நம்மிடையே இருப்பார் போன்றதோர் உணர்வை எழுப்புகின்றன என்க.

இமை குவிதல்—விழி மூடுதல்

அவரின் திறந்த விழிகளையே கண்டு அவரின் மூடிய விழிகளைக் கண்டிலோம் ஆகையால் அவர் பார்வையே இன்னும் நெஞ்சில் உளதாகின்றது.

முங்குதல்—முழுகுதல்

அன்னைத்தமிழ்—பிறமொழிகளுக்கு அன்னையாகி நின்ற தமிழ்.

தீச்சுடர் எழுத்து—தீயின்ஒளி நாக்குகள் போன்று சூடு கொளுத்தும் எழுத்து.

பாச்சுடர் கொளுத்தி—பாவின் சுடரை மக்கள் நெஞ்சில் ஏற்றி.

ஓச்சுதல்—உயர அலைத்தல்

உயிருணர்வு ஊரப் பொழிந்து-மாந்தரின் உள்ளுணர்வு மிகும்படி மழைபோற் பொழிந்து;

உயர்வாழ்க்கை....பாடினை - உயர்வு சான்ற மாந்த வாழ்க்கை என்னும் பயிர் செழிப்புற்று நிரம்பும்படி பாடினாய் கொல்.

கொல் - அசை, ஓ! இரக்கவுணர்வு தோற்ற வந்தது.

இனியே - நின் மறைவுக்குப் பின்னதாக இனி.

துவர் இதழ்—சிவந்த இதழ்.

தாமரை — தாமரை மலர், தாமம்—கதிரவன்.

அரை — தண்டு; மலர் — பூ, கதிரவன் கண்டு மலரும் தண்டுப்பூ என்னுப் பொருளுடைய தூய தமிழ்ச்சொல் தாமரைப்பூ வென்ற முழுச்சொல்

பின் தாமரை என்ற அளவிலேயே பூவைக் குறித்தது.

முரலுதல்—வண்டின் இமிழும் ஓசை.

இயற்கை தூங்கும் புலவர்—இயற்கையோடு பொருந்தி நிற்கும் புலவர்.

புலவர்—அறிவுடைவர். புலம்—அறிவு.

பாவலர்—பா எழுத வல்லவர்.

பாவலரினும் புலவர் சிறப்புடையர். பா எழுதல் ஒரு கலைப்பயிற்சி. ஓவியம், கற்றளி (சிற்பம்) போலும் பா எழுது தலும் ஒரு கலையே. புலமை அப்படிப்பட்டதன்று. இயற்கை அறிவு மிகுந்தது; பொறிகளாலும், புலன்களாலும் உணரப் பெற்ற உணர்வும், அவை வழி மெய்யுணர்வும் மிகப்பெறுதல் புலமை. இனி, பா எழுதுவோனுக்குப் புலமை நிரம்பியிருத் தல் வேண்டும் என்பதும், அஞ்ஞான்றே அவன் எழுதும் பா செப்பமும், நுட்பமும், திட்பமும் பொருந்தி விளங்கும் என்ப தும் பண்டைத் தமிழ் மரபு. இனி, புலமை பெற்றவர் எல்லாரும் பா வழியினனே தங்கள் அறிவுக் கருத்தினைப் புலப்படுத்தினர் ஆகலின் புலவர் பாவலரும் ஆனர் என்க.

மயற்கை— அறிவுமயக்கம், அறியாமை

மறவர்— துணிவு, ஆண்மை மிக்கவர்.

மருட்சி யகற்றிடு புரட்சி; மக்கள் மதி திகைந்த நிலையினை அகற்றிக் கீழ்மேலாகச் செய்யும்நிலை. தமிழும், தமிழரும் கீழ்மையுற்றிருந்த காலை அதனையும் அவரையும் மேன்மை, யுறுமாறு செய்த நிலை.

இருள் துயில் - இருள்போலும் மண்டிய துயில்.

அருள்பொழி நெஞ்சத்து அறம்- அருள் நோக்கான் பொழிவுற்ற நெஞ்சத்தின் அறக்கொள்கை

தயிர்கடை ..பிரிவு- தயிர் மத்தால் அலப்புறல் போல் தமிழர் பாவேந்தர் பிரிவால் அலப்புற்றனர் என்க. தயிர் அலப்புற வெண்ணெய் திரளுதல் போல், பாவேந்தர் பிரி வால் அலப்புறும் தமிழர் நெஞ்சத்து விடுதலை திரளுதல் என்பதைக் குறிப்பால் உணர்த்தியபடி.

உள்ளமும் அறிவும் ஓய்ந்த கள்ளமில் உணர்வு: உள்ளத் தாலும் அறிவாலும் நிலைநின்று இயங்கும் கள்ளமற்ற நடு நிலையான உணர்வுடையோர்.

கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கு எவர்கொள் துணையே என்று கூட்டுக.

பாவேந்தர் தமிழரிடைப் பிறந்து மொழியாலும், இனத் தாலும் அவர் மலர்ச்சியுறும்படி ஓர் உணர்வுப் புரட்சியைத் தோற்றுவித்து மறைந்த நிலையில், இனி அவலமுற்ற தமிழி னத்திற்கு உற்றதுணை எவரோ எனக்கவன்று பாடியது. புரட்சி தோன்றிய நிலையில் மறைவுறின் அது முடிவுறுதல் யாங் ஙனே? எவர் துணைக்கொண்டோ? என அரற்றியதுமாகும்

இது, பொதுவியல் என் திணையும் கையறுநிலை என் துறையுமாகும். (சுவடி 6. ஓலை 3.)

# 9. பாரதிதாசன் பத்து!

(தும்பி, தாமரை, குயில், மயில், தென்றல், கிளி, நிலவு, ஞாயிறு ஆகியவற்றை நோக்கிப்பாடிய அரிய பத்துப்பாடல் மலர்களின் தொகுப்பு மாலையிது! ஒவ்வொன்றையும் நோக்கிப்பாடும் ஒவ்வொருபாடலிலும், பாவேந்தரின் ஒப்புயர்வற்ற தன்மை மிக நேர்த்தியாகச் சுட்டப்பட்டுள்ளது !)

பூக்கும் பொழிலுட்
புகுந்திதழ் நீக்கிப் புதுநறவம்
தேக்கும் பொறியுடல்
தும்பீ! எமக்குத் தெரிந்துரைப்பாய்!
தூக்கும் தமிழ்ப்பொழில்
பாரதி தாசன் தருசுவை தீம்
பா'க்கும் உயர்ந்த
பனிமலர்த் தேறல் பயின்றதுவே! 1

பயில்வண் டயின்ற
பசுந்தேன் இலைபடு பாசடை சூழ்ந்
தயில்மண் டொளிர்தா
மரையே ! உயர்வே தறிந்துரைப்பாய்;
மயல்கொண் டிலங்குயர்
பாரதிதாசன் மணித்தமிழோ?
வெயில்கண் டுவக்கும்
வெறிமலர்த் தேனோ? விளங்கிடவே! 2

வெறித்த குரலெடுத்
தின்னிசை வல்லவர் வெள்கிடயான்
குறித்த தமிழ்ப்பா
கொழிக்கும் குயிலே ! குரைகடலும்
தெறித்த அலைக்கை
ஒலித்துவந் தேற்கும் தமிழ்த்திறமை
பொறித்த புலவனெம்
பாரதி தாசன்சீர் பாடுவையே ! 3

பாடுங் குயிலின்
பழகின் னிசைக்கொரு பண்தவரு
தாடுங் கடிமயி
லே,அயர் வற்றோர் அகங்குளிரத்
தேடுங் கவின்பா
முழக்கிடும் பாரதி தாசனவன்
நீடும் இசைமழைக்
காடுவை யோநெடுங் காலெடுத்தே? 4

எடுத்த நெடுமா
மலையில் எழுந்தே எழில்மலர்மேல்
படுத்த மணம் புணர்ந்
தின்சுனைத் தண்ணீர் பயின்றுடலங்
கடுத்த நிலைதவிர்
தென்றலே! பாரதி தாசனிசை
மடுத்த செவிக்குள்
அவன்புகழ் பாடி மலர்த்துவையே! 5

மன்னும் பெரும்பெயர்ப்
பாரதி தாசன் மணித்தமிழைத்
தின்னுங் கிளியே !
தனித்தேன் திணைமா தினக்கொடுப்பேன்;
மின்னும் படியுயிர்
மீளும் படியவன் மேம்பெயரை
இன்னும் ஒருமுறை
சொல்லா யோசெவி இன்புறவே ! 6

இழைத்த கொடுமையோன்
றில்லா திருக்க எனைச்சுடுவாய்,
மழைத்த முகில்வந்
தெழில்மறைக் காத மணிநிலவே!

தழைத்த பெரும்புகழ்ப்
        பாரதி தாசன் தனிப்புலமை
குழைத்த தமிழ்போல்
        குளிர்மொழி வாயோ குலமகட்கே? 7

ஆர்த்த கழகத்
        தருந்தமிழ் மீதே அழிபகைவர்
போர்த்த பழியிருள்
        நீக்க வெழுந்த பரிதியெனும்
கூர்த்த மதிதிகழ்
        பாரதிதாசன் கொழுந்தமிழ் போல்
சீர்த்தி நினைக்கிலே
        யே,கடல் சீர்த்தெழு செங்கதிரே! 8

கதிர்முன் பனியாய்க்
        கனல்முன் பொறியாய்க் கனித்தமிழின்
முதிர்தீஞ் சுவைதரு
        பாரதி தாசன் முழுப்புலமை
எதிர்முன் னிழிபடப்
        பாடல் எழுதி இடர்ப்பட்டோர்
அதிர்வுற லுண்டுளம்
        அஞ்சலு முண்டே அலமரவே! 9

அலங்கலை ஆழ்கடல்
        சூழ்ந்த வியன்பொழில் ஆர்புதுவை
இலங்குயர் சீர்மிகு
        பாரதி தாசன் எழில் மனத்தே
குலுங்கினள் செந்தமிழ்க்
        கன்னி; குயிலெனக் கூவியுயிர்
துலங்கினள்; எந்தமிழ்
        எங்கணும் பூக்கத் துணைசெயவே! 10

[சுவடி 4. ஓலை 4.]

# 10. பொய்யிலாப் புலவன் புகழ் வாழியவே!

(மும்மைப் பொழுதும் முத்தமிழ் மொழிக்கெனத் தம்மைத் தந்த தகுபெரும் புலவனாகிய பாவேந்தனின், உடல் அழிந்ததாயினும் என்றும் உயிர் வாழ்கின்றது! வையப் பெரும் புகழை வழி வழிக் கொண்டவனாகி மிளிர்கின்றான் என்றவாறு அவரின் பிரிவுக்காற்றாமையார்ந்தவராய்க் கண்ணீர் வரிகளில், ஆசிரியர் இப்பாவை யாத்துள்ளார்!)

தம்மனை நினையான்; தமிழ்நினைத் திருந்தான்;
தம்மக்கள் பேணான்; தமிழைப் பேணினான்!
தம்பொருள் காவான்; தமிழ்காத் திருந்தான்!
தம்நலம் விழையான்; தமிழ்நலம் விழைந்தான்!
தம்துயர் போக்கான்; தமிழ்த்துயர்க் கெழுந்தான்!
மும்மைப் பொழுதும் முத்தமிழ் மொழிக்கெனத்
தம்மைத் தந்தான்; தம்வாழ் விழந்தான்!
தன்னேர் ஆவி தமிழுக் களித்த
மன்னன்! பாவலன்! மாத்தமிழ் மறவன்!
பாடலுக் கொருவன்! பைந்தமிழ் வென்றி!
கேடுறுந் தமிழ்க்குக் கேடயம்! நெடுவாள்!
கூனற் பகைமுன் குமுறும் எரிமலை!
வேனில் வெங்கதிர்! வீசும் கொடுப் புயல்!
புதுவையி னின்று பாடிய பூங்குயில்!
எதுபைந் தமிழுக் கேற்றம் விளைக்கும்
என்றே கருதி இசைத்த பேரியாழ்!
குன்றா நாவும் கொதித்த நெஞ்சுமா
வானமும் அதிர முழங்கிய வல்லிடி!
கான வேங்கை! கனல்தெறி களிறு!
இமைநடுங் காமல் இரவும் பகலும்
தமையும் நாட்டையும் காத்த காவலன்!
அன்னோன் நல்லுடல் அழிந்த தாயினும்
என்றும் வாழ்ந்தது வாழ்ந்தது இவன் உயிர்!
வையப் பெரும்பெயர் வழிவழிக் கொண்ட
பொய்யிலாப் புலவன் புகழ்வா ழியவே!

(சுவடி 5. ஓலை 4.)

# 11. பாரதிதாசனுக்குப் பா மடல்!

*(மூன்று ஆண்டுகளுக்கு முன்(1964) பாவேந்தர் நம்மை—அவர் பாவுணர்வால் கட்டியாண்ட இத் தமிழகத்தை-விட்டுப்பிரிந்து சென்றார். அவர் சென்ற பின் உள்ள தமிழகத்தைப் பற்றி யறிவித்து, எதிர் காலத் தமிழகத்தைப் யற்றி உறுதிகூறி எழுதியது இப் பாட்டு மடல்! அவர் எங்கிருந்தாலும் இம் மடல் அவருக்குப் போய்ச் சேரட்டும். இல்லை; அவர் காற்றோடு, கதிரோடு, விண்ணொடு, உடுக்களொடு, ஊற்றொடு, மலர்களோடு—இன்னும் இயற்கையில் உள்ள பல்கோடிக் கணக்கான அணுக்களொடு போய்க் கலந்திருப்பினும் அல்லது இவ்வுலகத் தமிழர்தம் உள்ளங்களில் ஊடாடிக் கொண்டிருக் கும் உணர்வொடு உணர்வாகக் கலந்திருப்பினும் அங்கெல்லாம் இப் பாடலின் உணர்வலைகள் பட்டுத் தெறிக்கட்டும்! ஓலமிடட்டும்!)*

அன்புள்ள பாவேந்தே! வணக்கம். இங்கே
அனைவருமே நலமெனினும், ஐயா, நீங்கள்
தென்புதுவைத் திருமண்ணை—தமிழ கத்தை
தீந்தமிழர் தமைப்பிரிந்த நாளி னின்று
தென்பில்லை உளத்தினிலே! ஊக்க மில்லை;
திருவளர்ந்த தமிழகத்தில் செழிப்பு மில்லை;
அன்பில்லை தமிழர்க்குள்; ஆர்வ மில்லை;
அனைத்துலக வாழ்க்கையிலும் அமைதி இல்லை.

முன்பிருந்த நிலையறிவீர்; தமிழர் அன்றே
மூளிகளாய் நின்றதுவும் தெரிந்தி ருப்பீர்;
என்பிருந்த தோல்உருவாய்ச் சதை, நார் இன்றி
எள்ளளவும் மானமின்றிச் சுரணை இன்றித்
தன் பிறந்த நாடு, மொழி, மக்கள் என்ற
தன்னுணர்வு சிறிதுமின்றித் தமிழர் வாழும்
துன்பிருந்த சூழ்நிலையை அறிந்தி ருப்பீர்!
துளியேதும் மாற்றமில்லை; நிலைஅவ் வாறே!

சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம்!
சுரண்டுகின்ற வாணிகர்கள்! அடிக்கும் மென்மைக்
காற்றுக்கும் தாங்காத குடில்வாழ் மக்கள்!
கண்ணீர்க்குப் பஞ்சமில்லை; பழம் விளக்கு
மாற்றுக்குக் குஞ்சமெனப் பதவி, பட்டம்!
பகற்கொள்ளை ! கலைக்கொலைகள் ! பெருகும் (மக்கட்
பேற்றுக்குக் குறைவில்லை; சவலை நோஞ்சற்
பிள்ளைகளோ கணக்கில்லை ! உணவுப் பஞ்சம்!

உண்மைக்கு மதிப்பில்லை; பொய்யு ரைக்கும்
உலுத்தஅர சியல்வாழ்க்கை; நீங்கள் மெச்சும்
பெண்மைக்குச் சிறப்பில்லை; பிறழ்ந்த தாண்மை!
பேயாக அலைந்துபணந் திரட்டும் கீழ்மை!
திண்மையில்லை உள்ளத்தில்! தொண்டிங் கில்லை;
திறமுமில்லை; கல்வியிலும் ஆழ மில்லை.
அண்மையிலே அமைச்சரவை மாறிற் றிங்கே!
அதன் விளைவை அடிக்கடி நான் அறிவிக்கின்றேன்.

வரிமேன்மேல் பெருகிற்று; நலத்தைக் காணோம்.
வாய்நிறையப் பேசுகின்றார்; செயலைக் காணோம்.
செரிமானக் குறைவுமுண்டு செல்வர் பாங்கில் !
சிக்கனஞ்செய் வார்பெண்கள் ஆடை தன்னில்!
அரிமாப்போல் முழங்கினிரே 'இந்திக்' காக!
அந்நிலைதான் இன்றுவரை. ஆனால் ஐயா,
வரிமாப்போர்; களிற்றுப்போர்! இரண்டாண் (டின்முன்
வாய்த்ததொரு மாணவப்போர்! தமிழ்மொ (ழிப்போர் !

'தமிழியக்கம்' தந்தவரே ! தமிழைக் காக்கத்
தமிழகத்து மாணவர்கள் எழுந்த காட்சி
சிமிழ்க்காத பெருமுனைப்பு ! அடடா! அற்றைச்
சேரர்சோ ழப்படையோ பாண்டி நாட்டின்

குமிழ்த்தெழுந்த போர்முழக்கோ என்னு மாறு
கூடியதும் அலைத்ததுவும் தமிழைக் காக்க
அமிழ்தான உயிரிழந்த மாட்சி தானும்
அழியாத வரலாறு! சலியாக் காதை!

வெடிக்கின்ற துயராகத் தமிழ கத்தின்
வீழ்ச்சி பல இருந்தாலும், இக்கா லத்துப்
படிக்கின்ற மாணவர்க்குத் தமிழ்மேல் நாட்டம்
படிப்படியாய் மிகுந்துவரக் காண்கின்
றேன், நான்!
துடிக்கின்ற இளமையிலே அறிவு மேய்ச்சல்
தொடங்கிவிட்டால், செந்தமிழ்ப்பால் அருந்தி
(விட்டால்
அடிக்கின்ற புயல்காற்றும் ஒடுங்கிப் போகும்!
அடுத்துவரும் தலைமுறையும் நிமிர்ந்து நிற்கும்!

மெய்யாக உரைக்கின்றேன்; ஐயா, உங்கள்
மேனுளின் பேருழைப்பு—தமிழ்வே ளாண்மை
பொய்யாகப் போகாது; முளைத்துக் காய்த்துப்
புடைதிரண்டு கனிந்துபயன் தருதல் உண்மை!
உய்யாமல் நின்றிருந்த தமிழர் கூட்டம்
உணர்ந்தெழுந்து சிறப்பதுவும், இதுநாள் மட்டும்
எய்யாமல் இருந்தபெரும் புகழ் அனைத்தும்
எய்திடவாழ்ந் திருப்பதுவும் பெருத்த உண்மை!

இக்காலத் தமிழகத்தில் இருக்கும் தீமை
எதிர்காலத் தமிழகத்தில் இருக்கா தென்பேன்!
திக்காலுக் கோரிருவர் என்றில் லாமல்
திரண்டிருப்பார் தமிழ்த்தலைவர்! தமிழர் கூட்டம்
தக்காரின் மொழி கேட்கும்; தகவே செய்யும்!
தம்கடமை அறமுடிக்கும்; தமிழைக் காக்கும்!
அக்காலிற் குலப்பிரிவு, சமயக் கூச்சல்,
அடிதடிகள், அருவருப்பு அறவே நீங்கும்!

தமிழ்ப் பண்பு தலையெடுக்கும்; ஒடுங்கும் கீழ்மை!
தண்டமிழில் பெருங்கலைகள் ஊற்றெ டுக்கும்!
உமிழ்தக்க தீயவரும் பிழை உணர்ந்தே
உயர்ந்தோரும் பாராட்டத் திருந்து வார்கள்!
கமழ்பெருக்கும் தமிழ்மணமிவ் வுலக மெல்லாம்!
கன்னியர்க்கும் இளையோர்க்கும் மெய்ம்மைக்
(காதல்
அமிழ்தூற்றுப் போல்பெருகும்; பெருகும் வாய்மை!
அனைத்துலகும் ஒன்றென்னும் நினைவுண் டாகும்.

பொருள் மேய்ச்சல் விலகிப்போம்; பொய்செத்
(துப்போம்;
புத்துலகத் தொடர்புவரும்; அறிவு வீறும்!
இருள் விலகும்; ஒளிபிறக்கும் தமிழர் வாழ்வில்!
ஏமாற்று வெறும்பேச்சு தொலைந்து போகும்.
அருள் மலரும்; அன்பூறும் செயலில் பேச்சில்!
அனைவருமிங் கொருநிறையென் றறம்பி றக்கும்.
மருள் வாழ்க்கை போயொடுங்கும் வறுமை மாயும்.
மாளாத இலக்கியங்கள் சுரப்பெ டுக்கும்!

முடிவாக ஒருசெய்தி! தமிழர் வாழ
முழுவாழ்வும் உழைத்தீர்கள்; மனைவி மக்கள்
விடிவாக ஒருநலமும் தேட வில்லை;
விளைவின்றி அவரின்று வாடு கின்றார்.
அடிவாழைக் கன்றுக்கிங் காக்க மில்லை!
அவர்க்காகக் கண்ணீர்விட் டழுகின் றேன்,நான்.
மடியாத தமிழுணர்வே! மலையா நெஞ்சே!
மாளாத புகழ்க்குன்றே! வணக்கு கின்றேன்!

[சுவடி 5. ஓலை 4. (1967)]

# 3. பாட்டரங்க மாலை



# தொடுத்த மலர்கள்!

1. பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் பாப்பொழிவு.
   (நீலமலை, பெகும்பகல்லா, திருவள்ளுவர் மன்றம்)
   (14-6-69)
2. பாவேந்தர் பாரதிதாசன்.
   (காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி)
   (9-2-73)
3. பாவேந்தர்...... பாட்டரங்கம்.
   (உரத்தநாடு, அரசுயர் பள்ளி.) (31-5-75)
4. பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்.
   (பகுத்தறிவாளர்கள் சார்பில் நடத்தப்பெற்றது.
   வேலூர். நகரமன்றம்.) (15-5-77)

# 1. திருவள்ளுவர் மன்றம்

## பெரும்பகல்லா, நீலமலை

*(நீலமலை, பெரும்பகல்லா திருவள்ளுவர் மன்றச் சார்பில், விடை கஉ (14-6-69) இல் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் தலைமை தாங்கி, விழாமன்றத்தினர் விரும்பிக் கேட்டுக் கொண்டதற் கிணங்க ஆற்றிய பாப் பொழிவு இது.)*

பேரன்பு மிக்க பெரியோரே! தாய்மாரே!
ஈரத் தமிழால் எனைவர வேற்ற
பெரும்ப கல்லா வள்ளுவர் மன்றத்துத்
தகுதமிழ் அன்பரீர்! தமிழ்நலம் சான்ற
பேரா சிரியரீர்! புலவரீர்! வணக்கம்.

பாரதி தாசன் நினைவு விழாவிது!
இவ்விழா விற்கெனைத் தலைமை ஏற்றிட
ஒவ்வி அழைத்த உழுவலன் புடையோர்
அனைவர்க் கும்என் அகம்நிறை நன்றி!
இனைய நல்விழா எந்தமிழ் நாட்டில்
ஊர்தொறும் நடைபெறும் காலம் எதுவோ?—
பார்தொழும் பாரதி தாசனார் பாநலம்
சிறுவர் வாயிலும் பயிலும்நாள் எதுவோ?—
அதுவே தமிழர் விழிப்புற்ற காலமாம்.
அதுவே தமிழ்த்தாய் அரசுசெய் நாளாம்.

பாரதி தாசனைப் பலரறிந் திருக்கலாம்.
பாரதி தாசனார் பாடலின் திறத்தைச்
சிலரறிந் திருக்கலாம்; சிலர்க்கவர் யாரெனத்
தெரியா திருக்கலாம்! உண்மை என்னெனில்,
பாரதி தாசனார் பைந்தமிழ்ப் பாக்களை
ஊரறி யும்படி விட்டுவிட் டோமெனில்,
மூவா யிரமாண்டு முக்காடு போட்டுச்
சாவா மலும், இரு கண்விழி யாமலும்

தூங்கிக் கிடக்கும் தமிழனின் தொடையில்
கயிறு திரிப்ப தெப்படி? அதன்பின்
வயிறு கழுவுவ தெப்படி நாமெலாம்?
—என்றே ஆரியப் பார்ப்பன முதலைகள்
பாரதி தாசனார் பாடிக் குவித்த
இலக்கக் கணக்கான பாடலை எல்லாம்
திட்ட மிட்டுப் பரவாமல் தடுத்தன.
தில்லிக் கவைதாம் தெரியா திருக்கக்
கொல்லைக் கதவை இறுக்கிப் பூட்டின!

இருபதாம் நூற்றாண் டெல்லை வரைக்கும்
பாரதி யாரே 'மகாகவி' என்று
காவடி எடுத்துக் 'காழ்காழ்' என்றன.
பாரதி யாரைநாம் பழித்திட வில்லை;
பாரதி யாரை,நாம் பகைக்கவும் இல்லை!
பாரதி யார்ஒரு பார்ப்பனன் என்பதால்
பாரறி யும்படி செய்தனர் பார்ப்பனர்,
அப்படிச் செய்திட ஆரியப் பார்ப்பானுக்
கெப்படி முடிந்தது என்கின் றீர்களா?
செப்படி யாட்டம் குறளி மாயங்கள்
அவன்அறி வானா? என்கின் றீர்களா?

அப்படி ஒன்றும் அறிவிலான் அலன்அவன்!
இப்படிப் பட்ட அறியாமை யெல்லாம்
தமிழனுக் கிருக்கும் தாழிட்ட சொத்துகள்!
பார்ப்பான் திறமையோ தனிப்பட்ட திறமை!
ஆர்ப்பரிப் பென்பதோ அணுவிருக் காது!
கொப்படிக் குரங்காய்க் குந்தி யிருப்பான்!
இப்படிப் பட்டதோர் நிலையெதிர்ப் பட்டால்
தப்படி யாக அடித்துத் தள்ளுவான்.
கடுகைக் குன்றெனக் கதைத்துத் தள்ளுவான்.
குன்றைக் கடுகெனக் குறைத்துக் காட்டுவான்.
தரையில் கிடப்பதைத் தலைமேல் வைப்பான்.
தலைமேல் வைத்ததைத் தரையில் கிடத்துவான்.

பொய்யும் புரட்டும் போட்டுக் கலந்து
செய்வதை எல்லாம் செய்துவிட் டிதுதான்
தெய்வத் திருவுளம் எனச்சொல்லி நம்மை
நம்பவும் செய்வான்; தான்நம்ப மாட்டான்;
வெம்பச் செய்வான் இனத்தையும் மொழியையும்!

இப்படிச் செய்திட எவையவன் கருவிகள்
தெரியுமா? உங்கட்குத் தெரியினும் சொல்லுவேன்!
புராண வேதங்கள் புகன்ற பொய்க் கதைகள்!
சடங்குகள்! சாதிச் சழக்குகள்! மதங்கள்!
செய்தித் தாள்கள்! வானொலி நிலையம்!

பொய்த்துத் தள்ளப் போதா வா, இவை?
இத்தனைக் கருவியும் அவனுக்குச் சொந்தம்!
செத்த தமிழன் பிழைப்ப தெப்படி?
அத்தனைத் தமிழனும் அவன் சொல்லும் பொய்களை
ஒத்துக் கொண்டு தான்—ஒன்றிரண் டன்று—
மூவாயிரம் ஆண்டுகள் முடங்கிக் கிடந்தான்!
நாவால் உரைக்கவும் உளமுயிர் நடுங்கும்!

பாரதி தாசனார் பாட்டுகள் ஆரியர்
வேரை அறுப்பன! விளைவைத் தடுப்பன!
வேதப் புரட்டுகள் தமைவெருட் டுவன!
புராணப் புளுகினைப் புதைத்து மூடுவன!
சாதிக் கொள்கையைச் சாகடித் திடுவன!
மதப்புரட் டுகளை மாய்த்துத் தொலைப்பன!
'மூடக் கொள்கைக்குத் தீமூட் டுவன'
தமிழனுக் குணர்வைத் தந்திடும் தணல் அவை!
அமிழாக் கொள்கையை ஆர்க்கும் முரசவை!
வளைந்த கூனைநிமிர்த்தும் வகையின!
குலைந்த அவன்றன் குலத்தை இணைப்பன!
தமிழ்மொழிக் கவை எரு! தாழ்ச்சிக்கு நெருப்பு!
அமிழ்ந்த புகழ்ச்சியை அகழ்ந்த, மண் வெட்டிகள்!

பாரதி தாசன் பகர்ந்த மொழியிது :—
'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'—

பாரதி தாசனார் உரைத்த சூள்இது :—

'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்'

பாரதி தாசனார் நெகிழ்ந்துரைத் ததுஇது :—

'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு'

தமிழனைப் பார்த்துச் சாற்றிய மொழியிது.

'தமிழனே! இதுகேளாய்—உன்பால்
சாற்ற நினைத்தேன் பலநாளாய்!'

கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு!
நம்முரி மைதனைக் கடித்ததப் பாம்பு! (தமிழனே)

வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்;
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்;
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்;
நாமுயர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார்!
(தமிழனே)

தனித்தியங் கும்தன்மை தமிழனுக் குண்டு!
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு;
கனிச்சாறு போற்பல நூலெல்லாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!
(தமிழனே)

பாவேந்தர் சாற்றிய ஆணை மொழியிவை;

தாயின்மேல் ஆணை தந்தைமேல் ஆணை
தமிழகமேல் ஆணை!

தூயஎன் தமிழ்மேல் ஆணையிட்டே நான்
தோழரே உரைக்கின்றேன்.

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்

ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்.

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும் விடேன்.

எமைநத்து வாவென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்.

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.

பாவேந்தர் பாடிய பள்ளி எழுச்சி!

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்

கண்டறிவாய்! எழுந்திருநீ;
இளந்தமிழா, கண்விழிப்பாய்!
இறந்தொ ழிந்த

பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெல்லாம்
உன்றன் வெற்றி!

அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா அறஞ்செய்வாய்!
நாம டைந்த

துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்!

செயல்செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறி வந்தே!

வாழியநீ! தமிழ்த்தாய்க்கு வரும்பெருமை உன்பெருமை
வயிற்றுக் கூற்றக்

கூழின்றி வாடுகின்றார் எழுந்திருநீ இளந்தமிழா
குறைத விர்க்க

ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள்சேர்ப்பாய்!
ஆக்கு விப்பாய்! (இன்பத்தை

ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே!

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை உனக்குவரும்
தீமை அன்றோ?

பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா, வரிப்புலியே,
பிற்றை நாளுக்

கணிசெய்யும் இலக்கியம்செய்! அறத்தைச்செய்!
அழகு நாட்டில்! (விடுதலைகொள்

பணிசெய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறை
பழநாட் டானே! (தோறும்

எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த சிங்கமே!
இன்றே இன்னே

புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய் புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே!

அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும் துறை
அழகு காப்பாய் (தோறும்

இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே!

புரட்சிப் பாவலர் புகட்டிய மறப்பால்
குறட்டை விட்ட தமிழரின் குரலையும்
வறண்ட நெஞ்சையும் நனைத்ததும் தமிழர்
அரண்டு விழித்தனர்; ஆர்த்தெழுந் துருமினர்!
மறந்த தமிழ்நலம் பேணத் தொடங்கினர்!
இறந்த பழம்புகழ் தமிழ்மேல் ஏற்றினர்!
ஆரியப் பகையின் அடிவயிறு கலக்கினர்!
ஏறிய அவர்திறம் இறக்கிக் காட்டினர்!
விழித்த தமிழரின் வீறுற்ற செவிகளில்
மொழித்திறம் மிக்க பாவலர் மொழிந்தார்;

'குறியுற்ற மறவர்களே இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்!'

'பேச்சாலும் எழுத்தாலும் பாட்டாலும் கூத்தாலும்
பிறர் உவக்க
ஓச்சுகவே மணிமுரசு! வீதியெலாம் வரிசையுற
உலவா நிற்பீர்!
ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற இன்னலுக்குள்
இன்ப வெள்ளம்
பாய்ச்சாதோ பொதுத்தொண்டு? பைந்தமிழ்க்குச்
பருக வாரீர்!' (செயுந்தொண்டு

தமிழியக்கம் எனும் ஒரு நூல் தாமியற்றித் தமிழர்களைத்
தணைலச் செய்தார்!
தமில் நாமே ஒருவரையிங் கொருவரெனும் விழுக்காட்டில்
தாழ்த்திச் சென்றால்
தமிழுயர்வு காண்பதென்றோ? நந்தமிழீர் தமிழொன்றால்
நாமிணைந்தால்
உமியன்றோ பெரும் பகையும்? உகக்காதோ பெருவெற்றி?
உணர்வீ ரென்றே

பாவேந்தர் குரல்கொடுத்தார் பல பாக்கள் குயிலேட்டில்
பாடித் தீர்த்தார்!
ஈ.வே. ரா. தொடங்குபகுத் தறிவியக்கக் கொள்கைகளை
எடுத்துக் காட்டிச்
சாவேந்துந் தமிழர்க்கோர் கலங்கரையின் ஒளிவிளக்காய்
நின்றார்; அன்னார்
ஈவேந்தி நிற்பதனால் தமிழர் நிலை இமிஇமியாய்
ஏறிற் றின்றே!

தூங்கிக் கிடந்த தமிழர் தோள்களை
வீங்க வைத்தன பாவலர் பாக்கள்!
வாடிக் கிடந்த தமிழர் நரம்பினில்
ஓடிக் கிளர்ந்தது செந்தமிழ்க் குருதி!
அடைத்துக் கிடந்த தமிழரின் உணர்வுகள்

புடைத்துப் பொருமின பாவலர் பாவால்!
பாரதி தாசன் புரட்சிப் பாவலன்!
ஊரதிர் வுண்டதே அன்னவன் உணர்வால்!
மூலை முடுக்கெலாம் அதிர்ந்த தவன்குரல்!

'வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!

நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு.
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால் தடம்பெருந்
தோளால் தொடங்குக பணியை'

'சிறுத்தையே வெளியில் வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனப் புறப்படு'

'மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று
இமைதிற! எழுந்து நன்ருய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு, நடத்து உலகத்தை!'

சொற்களா இவை? இலை; உணர்வுப் பிழம்புகள்!
எஃகுக் குழம்பில் ஈட்டியைத் தோய்த்துக்
கருங்கற் பாறையில் எழுதிய வரிகள்!
வருங்கா லத்துத் தமிழினத் துக்கும்
தாங்கா வெப்பத் தணல்வரிப் பாக்கள்!
ஈங்கிது நாள்வரை எழுந்திடா உணர்வு!
தமிழர் மடிதுயில் நீக்கிய வெந்தணல்!

இமிழா தவருளத் தேற்றிய மறவரி!
தமிழனின் ஒவ்வொரு குருதித் துளியினும்
அமிழ்ந்து கிடந்த ஆர்ப்பும் உணர்வும்
பாரதி தாசனார் பாக்களால் விம்மின!
வீறு பெற்றன! கோழைமை வீழ்த்தின!
இன்ன எழுச்சியைப் பார்ப்பனர் ஏற்பரா?
என்ன திறமை எனினும், அத் திறமை
ஆரிய நலன்களுக் குதவினால் அன்றோ
'சீரிது; நேரிது; சிறந்த நூலிது;
முன்னோர் எவரும் மொழிந்திடாக் கருத்திது;
பின்னோர் எவர்க்கும் பிழைபடா நூலிது;
இதனை யாத்தவர் மாந்தராய் இருக்கார்,
அதனினும் உயர்ந்த தேவரே ஆவர்!''
— என்னும் பல பொய்யுரை இட்டுக் காட்டி
'இன்னும் பல பேறுகள் எய்துக' என்று
வாழ்த்தி வணங்கிப் பொன்பொருள் கொடுத்து
வீழ்ந்துவர் அன்னவர் காலடி?—ஆனால்
பார்ப்பன மரத்தைப் பலகையாய் அறுக்கும்
யாப்பன் றோ, இப் பாவலர் யாப்பு?
ஆரிய மெழுகை அனலிட் டுருக்கும்
சீரிய தன்றோ அன்னவர் செழும்பா!
புராணப் புளுகைப் படைப்படை அரியும்
கருக்கரி வாளன் றோ,இவர் பாக்கள்!
பன்னூ றுண்டாய்ப் பலபட ஏய்த்தவர்
வல்லூறு கண்ட எலியாய் நடுங்கினர்.
ஆகவே அவர்பா அமுக்கப் பட்டது!
வேகும் நெஞ்சொடு விலக்கப் பட்டது.
என்னினும் தமிழர் இவரால் விழித்தனர்.
பொன்னினும் பொருளினும் மேன்மை என்றனர்!
பாவேந்தர் செய்த ஆரியப் புரட்சி
சாகுந் தமிழரைச் சாகாது காத்தது.
ஆரிய இருளைச் சீய்த்த பாவலர்
நேரிய பிறிதொரு புரட்சியும் செய்தார்.

குமுகாய நிலையினில் தமிழர்கள் குமைந்த ஒரு புடைத் தீமை உணர்த்திய பின்னை அரசியல் வலிவால் வடவர்பால் அடிமை யுற்றுக் கிடந்த தமிழரை நோக்கினர். ஏற்றித் திரிந்திடும் வடவரைச் சாடினர்.

பாவேந்தர் உள்ளம் பாடுதல் கேண்மின்:

“ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்.”

‘செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!”

“எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே.”

பாரதி தாசனர் கண்ட கனவிது:

“என்தமிழ்அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்.
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன்; தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மீதிலே.”

மொழிவிடு தலையும் இனவிடு தலையும்
பழியிலாப் பாவலர் விரும்பிய கொள்கை!
பாவேந்தர் முழக்கம் தில்லி ஆட்சியை
நடுங்க வைத்தது; வடவரின் நரம்புகள்
புடைத்துத் தெறித்தன.

"வீடெலாம் விடுதலை முழக்கம் மேவுக!
ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!
காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!
உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!

சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு"

— என்று பாவலர் முரசு கொட்டினர்.
முடியர சேற்றவர் கலங்க முழங்கினர்.
அடிமை விலங்குகள் தெறித்து விழுந்தன.
விடுதலை உணர்வு எங்கணும் படர்ந்தது.
ஆயினும் விடுதலை அரும்பிட வில்லை.

அடிமையைத் தமிழர் சாய்க்குநாள் எதுவோ,
மிடிமையைத் தமிழர் போக்குநாள் எதுவோ,
தமிழரைத் தமிழரே காட்டிக் கொடுக்கும்
கயமைத் தனங்கள் மாயுநாள் எதுவோ,
தமிழ்முன் னேற்றம் தனக்கெனத் தமிழன்
இணைந்து நிற்கும் இன்பநாள் எதுவோ,
சாதிப் பேய்கள் தலைவிரித் தாடும்
மடமைத் தமிழகம் தன்னிருள் நீக்கிப்
பகுத்தறி வென்னும் பகலவன் நல்லொளி
முகிழ்த்துப் படரும் மொய்ம்புநாள் எதுவோ,
மாந்தர் மனத்தின் ஏற்றத் தாழ்வுகள்
தீண்டத் தகாத குமுகாயக் கொடுமைகள்
எத்துப் புரட்டுகள் எந்தமி ழகத்தை
விட்டு விலகின என்னுநாள் எதுவோ—
அதுவே தமிழக விடுதலை நாளாம்!
அதுவே ஆரியம் கெடுதலை நாளாம்!

அந்தநாள் நோக்கிய அரசியற் புரசிட்யைச்
செந்தமிழ்ப் பாட்டால் பாவேந்தர் செய்தார்.
முன்அவர் செய்த செந்தமிழ்ப் புரட்சியும்
பின்அவர் செய்த அரசியல் புரட்சியும்
இடையிற் செய்த குமுகாயப் புரட்சியும்
கடைசியிற் செய்த இலக்கியப் புரட்சியும்
தமிழுள் ளளவும் தமிழர்க்குத் துணையாம்.
தொழிலா ளர்க்கெனப் பாடிய பாக்கள்
எழில்கொழிப் போடே உளம்இயக் குவன!

பாவேந்தர் கேட்பார்:

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்—ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?"

—எப்படிக் கேள்விகள்? செந்தமிழ்க் கணைகள்!
எத்தனைப் பேர்களின் நெஞ்சைத் துளைத்தன?
ஒவ்வொரு சொல்லுமோர் கோடரிப் பிளப்பு!
எத்தனைப் பேர்களின் கல்மனம் பிளந்தது?
பாட்டின் வரிகளில் எத்துணை இரக்கம்?
எத்துணை அக்கறை? எத்துணைத் துடிப்பு?

மேலும் கேளுங்கள்:

"சித்திரச் சோலைகளே!—உமைநன்கு
திருத்தஇப் பாரினிலே—முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம்-சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னுல்மிகு
நெல்விளை நன்னிலமே—உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்த அக் காலத்திலே—எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமைஇப்பெரு
வையமெலாம் வகுத்தார்—அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே; சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ—இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?"

புதியதோர் உலகு செய்யப்
புறப்பட்டார் பாவின் வேந்தர்!
பொதுமையங் கிருந்த தன்புப்
புனிதமங் கிருந்த தாட்சிப்
புதுமையங் கிருந்த தெல்லாம்
புத்துணர் வுற்ற செய்தி!
எதனையிவ் வுலக மெல்லாம்
ஏற்குமோ அதனைச் சொன்னர்!

இதுவரை தமிழில் இல்லா திருந்த
புதிய நினைவுகள்! புதிய கருத்துகள்!
யாப்பிலும் மொழியிலும் எளிமையைக் காட்டிப்
பாப்புனைந் திட்ட பாவலர்க் கரசர்!
சீதையை இராமனைப் பாடிய பாட்டன்று!
கோதையை மாலினைப் புனையும் கதையிலை!

தமிழ்க்குழு காயம் உலகினில் தழைக்கவும்
தமிழர்க் குள்ளொளி ஏற்றவும் பாடிய
புரட்சிக் கருத்துகள் புனைந்த பாக்கள்!
மருட்சிக் கொண்டவர் மயக்கம் தெளியச்
செந்தமிழ் தன்னைக் கருவியாய்க் கொண்டு
எந்தமிழ் நாடு செழிக்கப் பாடினர்.

இத்தகு பாவலர் ஏற்றம் போற்றிட
எத்தகு புலவரும் ஏற்றம் பெற்றிலர்.

புரட்சிப் பாவலர் நினைவு விழாவில்
திரட்சி யான செந்தமிழ்ச் சொல்மழை
பொழிவித் திடற்கே புலவர் இருவர்
வந்திருக் கின்றனர்; அவரையும் வாழ்த்துவேன்!
எந்தமிழ் மொழியின் ஏற்றம் விளக்கிட
அன்னார் தம்மையும் யானழைக் கின்றேன்.
என்றன் முன்னுரை இதனொடு முடித்துப்
பின்னுரை யாக இனும்சில பேசுவேன்.
பாட்டுரை செய்கெனக் கேட்டுக் கொண்டதால்
பாட்டால் பாவேந்தர் திறத்தைப் பாடினேன்
கேட்டுக் கொள்ள அணியமாய் இருந்தே
இறுதி நொடிவரை இருப்பீ ராயி ர
உரையால் பின்னுரை சொல்வேன்; யாவரும்
இரையாதிருந்து விழாச்சிறப் புறும்படி
அமைந்து கேட்க அன்பிழல் வேண்டுவேன்.

(பின்னுரை உரையாக நிகழ்த்தியதால், இந்தத்
தொகுப்பில் இடம்பெறவில்லை.)

# 2. பச்சையப்பன் ஆடவர் கல்லூரி காஞ்சிபுரம்

*(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 9—2—73-இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப் பாட்டரங்கில் பாடியது.)*

பாப்புலவர் தந்திறமை பாடும் அரங்கிற்கு
மாப்புலவ ராய்த்தலைமை சான்ற மதிமிகுந்தீர்!
பேரா சிரியப் பெருமாண்பீர்! கல்வியெனும்
ஆரா வமிழ்தூண்ணும் ஆண்மைமிகு மாணவரீர்!
எல்லார்க்கும் என்றன் இனிய தமிழ்வணக்கம்!

சொல்லார்க்கும் பாட்டில் சுவையார்க்கும் வண்ணம் இங்குத்

தெய்வப் புலவர் திருவள் ளுவர்பற்றி,
கைவருசெஞ் சொற்புலவர் கம்பர் திறம்பற்றி,
ஈட்டுபுகழ் மாயா இளங்கோ எழில்பற்றி,
பாட்டுக் கொருபுலவன் பாரதி சீர்பற்றிப்
பாப்பொழிந்து வைத்தார்கள்; பாராட்டிக் கேட்டீர்கள்!
நாப்பொழிவால் உள்ளம் நனைந்து பதம்பட்டு
வித்துதற்கு நல்ல விளைநிலமாய்த் தோன்றுகின்றீர்?
சத்துதற்குத் தேவையில்லை; கன்னித் தமிழ்விதைகள்—
பாவேந்தன் பாவிதைகள் பன்னூறு வைத்துள்ளேன்.
சாவேந்தர் நல்விதைகள் சாவியாய்ப் போவதில்லை.
அந்த விதையெல்லாம் அள்ளித் தெளிக்கின்றேன்.
எந்த வகையாய் விளையுமென எண்ணுகின்றீர்?
உள்ளத்தே ஊன்றி உயிரில் முளையெடுக்கும்.
வெள்ளத் துணர்வில் விளைந்து பயிராகும்.
காலத்தே முற்றிக் கருத்துக் கதிர்சாய்க்கும்.
ஞாலத்தே நயவிளைவு நல்ல விலைபோகத்
தக்கவொரு நேரமிது! நல்ல தமிழ்விளைச்சல்
மிக்க பரவுமொரு மேலான காலமிதாம்!

அக்காலந் தன்னில் அடியெடுத்து வைக்கின்றோம்!
எக்காலும் ஞாலம் இருண்டிருக்கப் போவதில்லை.

போர்த்த இருளொருநாள் போகத்தான் போகும்;எழில்
ஆர்த்த ஒளிவந்தே ஆளத்தான் ஆளும்;எமை
மாய்த்த இழிநிலைகள் மாளத்தான் மாளும்;இதை
வாய்த்த பெரும்புலவன் வான்முட்டச் சொல்லி
விட்டான்;

பாரதிதா சன்;அவன்பேர்; பாரதிக்கும் நல்லாசான்!
ஈரமிகு நெஞ்சால் இவனவற்குத் தாசனென்றான்!
மற்றபடி தாசனென்றால் மாண்புகுன்றப் போவதில்லை.
கற்றபடி தானே கணக்குவரும்; பாட்டுவரும்!
நல்லபடி பாவேந்தன் தன்னை அளப்பதற்கு
வல்லபடி ஒன்றில்லை; வாய்த்தபடி தள்ளுபடி!
அப்படியாய்ச் செய்தி அளந்தபடி யாயிருக்க
எப்படி யாய்வீர் எழிற்பாவேந் தன்பாட்டை?
பாருங்கள், பாவேந்தன் பாரதிதா சன்திறத்தை!
ஓருங்கள்! நான்சொன்ன துண்மையா பொய்யாவென்
றப்போது சொல்லுங்கள்! ஆன்றமைவாய்க் கேளுங்கள்,
எப்போதும் காணீர் இடர்.

பாரதி தாசன் பகருவான் தன்னை:
'நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'—என்றே!
இதைவிடத் தன்னை எளிதாய் எவன்சொன்னான்?
புதைவிடந் தோண்டி ஆராய்ச்சி பண்ணி
இதோ, இவன் இப்படி; அதோஅவன் அப்படி
எனவோர் அறிஞன் இயம்பிட வேண்டும்!
மனத்தைத் திறந்து மற்றும் உரைப்பான்:
'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத் தால்,இயற்கை புனைந்த ஓர் உயிர்நான்'
எப்படி அவன்திறம்? அவனே உரைத்தது!
அப்படிப் புனைந்த ஆருயிர் அவனுக்குக்
கைவரும் பாட்டுத் திறத்தைக் கணிக்கிறான்.
பொய்வரா வாயால் புகல்வதைக் கேளுங்கள்;

எப்படி அவன்றன் கொள்கை?
எப்படி அவன்றன் வேகம்?
தப்படி அடித்துத் தள்ளித்
தலைகீழாய்ப் பொய்யைப் பேசிச்
செப்படி வேலை செய்யும்
சிறுமதிப் புலவன் அல்லன்.
இப்படி நான், காண்—என்பான்.
இதுவேயென் கொள்கை என்பான்.

'இருளினை வறுமை நோயை
இடறுவேன்' என்பான்; இன்னும்

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்.
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்.

—என்பான் புலமை இறுமாப் போடு!
தன்பாத் திறத்தைத் தனித்தனி யாகச்
சொன்னால் அஃதொரு சுவைதரு விருந்தாம்!
என்னால் முடியுமோ இல்லையோ! எதற்கும்
இயன்ற வரைநான் எடுத்துக் கூறிட
முயன்று பார்க்கின்றேன். முடிவது முடிக!

பாவலர் ஒருவர்க்குப் பதின்திறம் வேண்டும்.
நுண்ணோக்கு, கற்பனை, உவமை, பாத்திறன்,
எண்ணும் இயற்கை ஈடுபாடு, உலகியல்,
மனவியல் அறிவு; மற்றுமொழி யறிவு;
புரட்சி யுள்ளம், பொதுவுணர்வு—இவற்றில்
வரட்சி யில்லா மனநிலை வேண்டும்!
பார்க்கும் பொருளெலாம் பசையொடு நோக்கி
ஆர்க்கும் அழகை அறியும் நற்றிறன்
புலவோர்க் கல்லால் புறத்தார்க்கு வருவதில்!
பலவோர் புலவராய்ப் பயின்று திரியலாம்!

உண்மைப் புலவோர்க்கு உள்ளமும் அறிவும்
நுண்மையாய்ப் படிந்து நோக்குதிறம் வேண்டும்!

எல்லாப் பொருளையும் யாவரும் பார்க்கலாம்.
எல்லார்க்கும் அவற்றின் இயல்புகள் தெரியா!
மாலைப் பொழுதை நாளும் பார்க்கிறோம்?
வேலை யிருந்ததா, நமக்கந்த வேளையில்?
பாவேந்தர் மாலையைப் பார்ப்பதைப் பாருங்கள்;
நாவேந்திச் சொன்னால்தான் நல்லது தெரியும்!

'அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே, நீதான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேயியற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?'

எப்படி அவர்க்கு மாலை இருந்தது?
அப்படி நாமதை அறிந்திட வில்லையே!
காரிருள் நிலவைக் 'கவின்நிலா' வென்றே
யாருந்தான் புகழ்வார்; மகிழ்வார்; யாப்பிலே!
ஆனால், பாரதி தாசற் கந்நிலா
ஈனு நின்ற எழுச்சியைப் பாருங்கள்.

'உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவ தில்லை;
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ?'

முழுமை நிலாவை மேலும் காண்கிறார்:
கொழுமை அழகுக் குலாவலைப் பாருங்கள்!
சிறுவர்க் கிதனைச் செப்பிப் பாருங்கள்!
உருவம் மாறும்; உணர்வும் பெருகும்!

"முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்ததுவிண் மேலே—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!

அழுதமுகம் சிரித்ததுபோல்—
அல்லி விரிந்தாற்போல்—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டு
தொத்திக் கிடந் தாற்போல்!

குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு—நம்
பொருட்டு வந்தது பாடி ஆடிப்
பொழுது போக்கத் துவக்கு!
மரத்தின் அடியில் நிலவு வெளிச்சம்!
மயிலின் தோகை விழிகள்!—பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் விழிகள்!"

எப்படி அவரின் நிலவுக் காட்சி?
இப்படி யாநாம் எழிலைக் காண்கிறோம்?
காட்டைப் பற்றியவர் கழறுதல் கேண்மின்!
காட்டையே கண்முன் நிறுத்துதல் காண்மின்!

"முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்—எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும்—மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில் தடுங்கும்—உள்—நடுங்கும்!

கிட்டிமர வேர்கள் பலகூடும்—அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும்—மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும்-பின்வாடும்.

நீள்கிளைகள் ஆல்விழுதி னேடு-கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு—கூர்
வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவரும்-காடு-பள்ளம் மேடு.

கேளொடும் கிளம்பிவரும் பன்றி—நிலம்
கிண்டுகிழங் கே,எடுத்த தன்றி—மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி, குன்றில்-புகும் ஒன்றி!

வானிடை ஓர் வானடர்ந்தவாறு -பெரு
வண்கிளை மரங்கள் என்ன வீறு-நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு-இன்பச் சாறு.

கானிடைப் பெருப்பறவை நோக்கும்-அது
காலிடையே காலிகளைத் தூக்கும்-மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து தீர்க்கும்-அடை ஆக்கும்!".

பாவேந்தர் நுண்ணேக்குப் பாடல்கள் ஏராளம்!
ஆவலால் ஒன்றிரண் டழகைக் காட்டினேன்!
எத்துணை எளிமை! எத்துணை இனிமை!
கொத்தும் கிளியும் கொய்யாப் பழமும்போல்!
அடுத்து, அவர் கற்பனை எடுத்துக் கூறுவேன்.
மடுத்துளம் மகிழ்வீர்! மயக்கம் தவிர்ப்பீர்!
வானெரு ஆடையாம்! நிலவு பெண்ணும்!
மானுடல் மறைத்து மதிமுகம் காட்டுமாம்!
என்னே புலவரின் கற்பனை எழுச்சி!

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ? அமுதஊற்றோ?
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ?"

புலவர் பாடல் தீட்டுவ தற்கே
எழுதுகோல் எடுத்தார்; ஏடும் எடுத்தார்!
வந்த கற்பனை வடித்துத் தருகிறார்.
எந்தப் புலவன் இப்படி எழுதினான்!

"ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்!
ஓடையுந் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்.
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்பார்!"

சோலைக் குளிர்தரு தென்றல் வரும்; பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்;
மாலையில் மேற்றிசை வானத்திலே விழும்
மாணிக்கப் பரிதி காட்சி தரும்!
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி 'வரைக' எனும்!
கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து
கூவின என்னை இவற்றிடையே,

இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.

அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!
இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக் கும்நிலை எய்திவிட்டால்,
துன்பங்கள் நீங்கும் சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மையுண் டாகிடும், வீரம் வரும்!'

புதுவைப் புலவன் கற்பனை வளத்தில்
எதுவெடுத் துரைப்பேன்? எதனை விடுப்பேன்!
கற்பனைத் தேனறு! கவின்நிலா வானம்!
பொற்புனைந் தெடுத்த புதுமணப் பூக்கள்!

'முல்லையிலே சிரித்தபடி தென்றலிலே சொக்கி
முன்னடியும் பெயர்க்காமல் இன்னும் இருக்கின்ற
பொல்லாத மாலைக்குப் போக்கிடமோ இல்லை'

என்று, அவர் காயும் தலைவியின் ஏசலில்
நின்ற கற்பனை நினைத்து மகிழ்மின்!
மேலும் அத்தலைவி பகலினைக் கடிவாள்!
ஏலுமா நமக்கு? இத்தகு கற்பனை!

"மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து
வெந்து நீருகாமல் இருப்பதொரு வியப்பே!"

பாரதி தாசன், தன்உள்ளக் கொதிப்பைப்
பாரதிர முழக்குதல் பாருங்கள் இங்கே;

'மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்; உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்;இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீதில் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!'

எப்படி? அவர்தாம் இயம்பிய கற்பனை?
இப்படிப் புரட்சியாய் எழுதிய தவர்மனம்!

அடுத்து, ஒரு புலவருக் கிருக்கும் ஆற்றல்
எடுத்தது உவமையால் விளக்குதல்; இல்லையா?
பாவேந்தர் உவமைகள் பழுதிலா உவமைகள்.

'பொரியலோ பூனைக்கண்போல் பொலிந்திடும்' என்பார்.
'குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்
துத்திக்காய் போலச் சுடர்முகத்தை நீசுருக்கி
ஏனழுதாய்'

—என்று கேட்பார்!

'கேள்வியால் அகலும் மடமைபோல்
நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது'

என்றே அறிவோடு உவமையைப் பொருத்துவார்.
பரிதியின் வரவால் இருள்வில கியதை,

'தொட்டியின் நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது'

-என்பார்!

—இங்கோர் ஏழைக் குடிசை!
மிகவும் சிறியது; மிகமிகச் சிறியது!
புகவும் இயலாப் புன்மைக் குடில்அது!
எப்படிச் சொல்வீர் அதனை? எண்ணுங்கள்!
அப்படிச் சொன்னால் அனைவர்க்கும் விளங்குமா?
இப்படிச் சொன்னால் எல்லார்க்கும் தெரியுமா?
என்றே எண்ணி, எண்ணி இயம்புதற்
கொன்றும் இயலாமல் உழல்கையில் சொல்வார்:

'கூனன் புகுந்தாலும் குனிந்து புகும்குடிசை'

எப்படி அவர்தம் உவமை இயல்திறம்?

சிட்டுக் குருவியை எல்லாரும் கண்டோம்!

'கொத்தும் அதன்மூக்கு முல்லை யரும்பு!
மல்லி பிளந்தது போன்றது அதன்கண்!'
என்றுசொன் னேமா? பாவேந்தர் சொன்னார்!

'பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர்கடல் நெளிதல்' கண்டார்!

நாம்கண் டோமா? நறுக்கென
ஊம்எனும் முன்னே, உவமையால் விளக்கிய
புலவன் பாரதி தாசனைப் போல
சிலபேர் இருப்பார்; பலபேர் இருக்கார்!

"காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து
கையில் விரித்தகுடை தூக்கி—நல்ல
கல்விக் கழகமதை நோக்கி—காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவைநீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி!

மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றுடைகட்டி
வீட்டினின்றும் ஆட்டமயில் போலே—கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே—கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லிசெல் வதைக்காண
வேண்டுமே இப் பெற்றவள் கண்ணாலே!

..................................................................

மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே,நீ
மங்கை எனும் பருவம் கொண்டு—காதல்
வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு—காட்டித்
'தேவை இவன்' எனவே செப்பும்மொழி எனக்குத்
தேன்! கனி! தித்திக்குங்கற் கண்டு!"

கோடிக் கணக்கில் உவமைகள் கூறுதல்
வாடிக்கை அவர்க்கு! வரட்சியங் கில்லை!

அடுத்தது பாத்திறன்! அத்திற மைக்கும்
எடுத்த புலவன் பாரதிதாசனுக்
கீடில்லை என்பேன்! எனைமறுப் பீரா?

"கண்ணுக் கொரு வண்ணப்புறு!
காதுக்கவள் கானக்குயில்!
பெண்ணுக்கர சானவளை
வந்தால் வரச்சொல்—எனக்கே
பேச்சுப்படி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!"

சொல்லச் சொல்ல சுவைத்திடும் கட்டி
வெல்லச் சொற்கள்! துள்ளு நடை!

"ஓர்நிலவே அவள்தானோ? கதிர்தானோ?
கொம்புத் தேனோ – நடை
ஓவியமோ புள்ளி மானோ?"

சிந்துத் தேனிசை சிந்திடும் பாக்கள்!

"கைப்பிடியில் கூட்டிவரக் கட்டளையிட் டாளெனவே
செப்புகின்றாய் வாழியவே வாழி! — நான்
ஒப்பவில்லை என்றுரைப்பாய் தோழி!"

"மந்தையின் மாடு திரும்பையிலே—அவள்
மாமன் வரும் அந்தி நேரத்திலே
குந்தியிருந்தவள் வீடு சென்றாள்—அவள்
கூட இருந்தாரையும் மறந்தாள்!

தொந்தி மறைந்திட வேட்டிகட்டி—அவன்
தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி
இந்தா எனக்கொடுத் திட்டான்டி—அவன்
எட்டி ஒரே முத்தம் இட்டான்டி!

'கட்டிவெல்லத்தைக் கசக்கு தென்றாள் — அவன்
கட்டாணி முத்தம் இனிக்கு தென்றாள்!
தொட்டியின் நீரில் குளிக்கச் சொன்னாள்! — அவன்
தோளை அவள்ஓடித் தேய்த்து நின்றாள்!''

'கொட்டிய நீரில் குளிர்ச்சி உண்டோ — இந்தக்
கோடை படுத்திடும் நாளில்' என்றாள்!
'தொட்டியின் தண்ணீர் கொதிக்கு' தென்றான் - 'நீ
தொட்ட இடத்தில் சிலிர்க்கு' தென்றான்.

இசைத்தேனில் காதலைப் பிசைந்த பாக்கள்!
பேச்சுப் போலவே பாநடை யிருக்கும்!
மூச்சுப் பிடித்துப் பாடிட வேண்டா!
இதோ பாருங்கள் பாநடை எழிலை!

''கிழக்கு வெளுக்கக் கிளிமொழியாள் தங்கம்
வழக்கப் படிவீட்டு வாயிற் படிதுலக்கிக்
கோல மிட்ட பின்பு குடித்தனத்துக் கானபல
வேலை தொடங்கி விரைவாய் முடிக்கையிலே
ஏழுமணிக் காலை எழுந்தாள் அவள்மாமி!
'வாழுகின்ற பெண்ணுநீ வாடி' என்றாள் தங்கத்தை!
'இந்நேரம் தூங்கி இருந்தாயா? என்பிள்ளை
எந்நேரம் காத்திருப்பான் இட்டலிக்கும்'காப்பி'க்கும்?'
என்றே அதட்டி இழுத்துத் தலைமயிரை
நின்ற பொற்பாவை நிலத்தில் விழச்செய்தாள்.''

எப்படிப் பாநடை? யாப்பெலாம் இவர்க்கு
ஒப்பஅடி போட்டே உடன்வர வில்லையா?
புலவர்க்குத்தான் தமிழ் என்ற போக்கினை
இலையென் றாக்கிய ஈடிலாப் பாவலர்!
இப்படிப் பாத்திறன்! அடுத்தது இயற்கை,
ஈடு பாட்டினை இயம்பவே வேண்டா!
பாடு பட்டே இயற்கையைப் பாடும்
கேடுகெட்ட கீழ்மைப் புலவர்கள்-
—போல்இல்லை இந்தப் புரட்சிப் புலவன்!

ஓலைச் சுவடிக் காலத்தும் இவன்போல்
இயற்கையைப் பாடுவோர் அரியராய் இருந்தனர்!
எடுத்துக் காட்டாய் இரண்டொரு பாடல்கள்
மடுத்துக் கேட்போம்! மாண்பது விளங்கும்!
காலை, கதிர், கடல்; செம்பொன் வானம்!
கோலக் காட்சியைப் பாவலன் கூறுவான்:

'எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூறல்!
வெளியெலாம் ஒளியின் வீச்சு!'

'அழகின் சிரிப்பு' எனும் நூல்,அவர் சுவைத்த
இயற்கை ஓவியக் கோப்பென் றியம்பலாம்!

'அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை உடல் ஒவ்வொன்றும் சிலிர்க்கச்
செல்வம்ஒன்று வருமதன்பேர் தென்றற் காற்று!'

இருள்போய் ஒளிந்த இடத்தைத் தேடி
அருள்தோய் பாவலர் அடைந்ததைக் காண்மின்!

'அடுக்கிதழ்த் தாம ரைப்பூ
இதழ்தோறும் அடிப்புறத்தில்
படுத்திருப் பாய்; நீ'—என்றே

இருளினைப் பாடுகின்றார்!

'களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணாடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி,
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்றாய் தென்ற லே,நீ!

செருந்தி, ஆச்சா, இலந்தை
தேக்கிந்து, கொன்றை, எல்லாம்
பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரை மேலேநீண்ட
ஒரு மூங்கில்; இரு குரங்கு
கண்டேன் பொன் னூசல் ஆடல்!

ஆனையொன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனையொன் றணுகும்; அங்கே
புலியொன்று தோன்றும்; பாம்பின்
பானைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும்; கன்றே
மானைக் காணுது நிற்கும்!
அதைஒரு நரிபோய் மாய்க்கும்!

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்குதொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென இழுத்ததைப் போல்
கிளைதொறும் தாவித் தாவி
விழுதெல்லாம் தொங்குகின்ற
ஒளிப்பாம்பாய் எண்ணி அஞ்சி
உச்சிபோய் தன்வால் பார்க்கும்!''

காட்டிடை நடந்ததொரு காட்சியைப் பாவலர்
காட்டும் வகையிது! காணுங்கள் மேலும்!

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
குறத்தியர் கவணெ டுத்துக்

குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!
எறியும் கை செங்காந் தட்பூ!
உடுக்கைதான் எழில் இடுப்பே!'

தத்தும் அருவியாய்த் தாவும் கருத்துகள்!
முத்தும் பவழமும் வயிரமும் மிடைந்த
பன்மணி மாலை! பாவியக் கொத்து!
என்வகை யாயிதை இயம்புவேன்? கேளீர்!
வெள்ளப் பெருக்கை விரிப்பதைக் காண்மின்;

"இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங்களின் மேல்
ஒருநாரை, வெண்டா மரைப்பூ!"

எதுகை மோனைக்கு இறவானம் பார்க்கும்
புதிய தலைமுறைப் புழுக்கை யலன்,அவன்!
அகர முதலியைத் தேடி அலையும்
பகற்கனு காணும் பாவலன் அல்லன்!
எண்ணிய பொழுதெலாம் எதிர்வந்து நிற்கும்
வண்ணச் சொற்கள்! வனைகின்ற ஓவியம்!
பாடிக் கொண்டே பறக்கும் வண்டுபோல்
நாடிக் கொண்டே நாட்டிடும் பாவலன்!
இதோ பாருங்கள் இன்னொரு பாடல்!
எதோ, இதன்பொருளை எண்ணுங்கள் பார்க்கலாம்!

"இருநிலா இணைந்து பாடி
இரையுண்ணும் செவ்வி தழ்கள்
விரியாத தாம ரைபோல்
ஓர்இணை! மெல்வி யர்கள்

கருங்கொண்டை! கட்டி ஈயம்!
காயாம்பூக் கொத்து! மேலும்
ஒருபக்கம் இருவா ழைப்பூ!
உயிருள்ள அழகின் மேய்ச்சல்!''

அழகின் மேய்ச்சலை அறிந்துகொண் டீரா?
புலவர் மொழிகின்றார் பொருள்விளங் கிற்றா?
இருநிலா இரையுண்ணும் என்கின்றார் புலவர்!
கருங்கொண்டை இரண்டு: கட்டி ஈயம்!
தாமரை ஓர்இணை இருவா ழைப்பூ!
ஆம்,இவை புறாக்கள்; அறிந்து கொள்க!
பாடலை மீண்டும் படித்து பார்க்க!
ஆடலை-அழகின் ஆடலை-அருந்துக!
அடுத்து,அவர் உலகியல் அறிவைப் பார்ப்போம்.

'வாழ்கின்றார் முப்பது முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்'

என்கிறார் புலவர், என்ன சரிதானே?
தின்கிறோம் இவற்றைத் திரும்ப நினைத்தோமா?

''வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்,
ஆனது செய்யும் அநுமார்கள், சம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்!
விஸ்வரூ பப்பெருமை மேலேறும் வன்மைகள்
உஸ் என்ற சத்தங்கள் அஸ்என்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்!
செவ்வைக் கிருபை, செழுங்கருணை, அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்!
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?

—என்றே உலகியல் இயம்பக் கேண்மின்!
அன்றே எழுதியதால் ஆறேழு வடசொற்கள்
வந்து கலந்ததலால் கருத்தில் வழுவுண்டா?
சொந்த வெறுப்பின்றிச் சொல்லுவதற் காருளரே!

பொதுக்கருத்து போகட்டும்! புலவர் புகன்ற
புதுக்கருத் தொன்றைப் புரட்டிப் பார்ப்போம்!
மருமகட்கு மாமி விருந்தோம்பும் மாண்பை
அருமைத் தமிழில் அறிய உரைக்கின்றார்!

'முன்வைத்த முத்துத் தயிரிருக்கும்; பின்னறையில்
வெண்ணெய் விளாங்காய் அளவிருக்கும்—கண்ணே
மறக்கினும் அம்மாவென் றழைத்து மடிப்பால்
கறக்கப் பசுக்காத் திருக்கும்—சிறக்கவே''

"சேலத்து அங்காடிச் சேயிழையார் நாள்தோறும்
வேலைக் கிடையில் மிகக்கருத்தாய்த்-தோலில்
கலந்த சுளைபிசைந்து காயவைத்து விற்கும்
இலந்தைவடை வீட்டில் இருக்கும்—மலிந்துநீர்
பாய்நாகர் கோயில் பலாச்சுளையின் வற்றலினைப்
போய்நீபார் பானையிலே பொன்போல-தேய்பிறைபோல்
கொத்தவரை வற்றல் முதல் கொட்டிவைத்தேன்,
கிள்ளையே

வைத்தவரை உண்டுபின் வையாமைக்-குத்துன்பம்
உற்றிடச்செய் ஊறுகாய் ஒன்றல்ல கேட்பாய்நீ
இற்றுத்தேன் சொட்டும் எலுமிச்சை—வற்றியவாய்
பேருரைத்தால் நீர்சுரக்கும் பேர்பெற்ற நாரத்தை!
மாரிபோல் நல்லெண்ணெய் மாறாமல்-நேருறவே
வெந்தயம் மணக்கஅதன் மேற்சாயம் போய்மணக்கும்
உந்துசுவை மாங்காயின் ஊறுகாய்-நைந்திருக்கும்
காடி மிளகாய் கறியோடும் ஊறக்கண்
ணுடியிலே இட்டுமேல் மூடிவைத்தேன்-தேடிப்பார்!

................. ................................ ———— ...............

கீரை தயிர் இரண்டும் கேடு செயும் இரவில்!
மோரைப் பெருக்கிவிடு முப்போதும்-நேரிழையே
சோற்றை அள்ளுங்கால் துவள்வாழைத் தண்டில்உறும்
சாற்றைப்போலேவடியத் தக்கவண்ணம்-
ஊற்றுநெய்யை!
வாழை இலையின் அடி உண்பார் வலப்புறத்தில்

வீழ விரித்துக் கறிவகைகள்-சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிக இனிக்கும்-பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத்-தக்கபடி
கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே-
கேட்டுப்போ
எக்கறியில் நாட்டம் இவர்க்கென்று நீயுணர்ந்தே
அக்கறியை! மேன்மேலும் அள்ளிவை – விக்குவதை
நீமுன் நினைந்து நினைப்பூட்டு நீர் அருந்த!
ஈமுன்கால் சோற்றிலையில் இட்டாலும்-தீமையம்மா!"

—என்றே குடும்ப விளக்கில் எழுதுகின்ற
பொன்னேர் வரிகளாற் பாவேந்தர் பூண்விளங்கும்!

அடுத்து, அவர் மனவியல் அறிவை உரைக்கிறேன்.

தந்தை குழந்தையைத் தாவி யணைத்துப்
பள்ளிக் கனுப்பும் பாங்கை உரைக்கிறார்!

"தலைவாரிப் பூச்சூடி உன்னை—பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன்அன்னை!
சிலைபோல ஏனங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்-கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும்!
மலைவாழை யல்லவோ கல்வி-நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!
படியாத பெண்ணா யிருந்தால்-கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு!-என்
கண்ணல்ல? அண்டை வீட்டுப் பெண்களோடு!"
'கடிதாய் இருக்குமிப் போது!-கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!

கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு-பெண்
கல்வி,பெண் கல்வி என்கின்ற தன்போடு!'

பள்ளிப் பிள்ளையின் பச்சை மனத்தைத்
தெள்ளத் தெளிவாய்த் தெரிந்திருந் தாலன்றி
இப்படி எழுதிட இயலுமோ புலவர்க்கே!
அப்படியே கன்னியின் மனத்தை அறிந்தவர்!

'நான்குபக்கமும் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்-இங்
கேன் பிறந்தேன் இவர்கள் வீட்டில்
கரையி விட்டதோர் மீன்போல்!'

'நூறுமுறை அவள்பார்த்தாள், அவனை! ஆளன்
நூறுமுறை நோக்கினான். இனிது பெற்ற
பேறுதனை இழப்பாள்போல் குறட்டினின்று
பெயர்த்தஅடி கீழ்ப்படியில் வைக்குமுன்னர்
ஆறுமுறை அவள்பார்த்தாள், அவனும் பார்த்தான்!
அவன்வண்டிப் படிமிதித்தான் திரும்பிப் பார்த்தான்!

இளைஞனின் இளைஞையின் இனிய மனங்களைக்
களைந்திடா வண்ணம் கையகப் படுத்திடும்
பெருந்திறன் பாவேந்தர் பிறப்பிலே முகிழ்த்தது!
அருந்திறன் பிறர்க்கே! அடுத்தது பாருங்கள்!

"நகைமுத்தை விரும்பு கின்றேன்;
நாளைக்கே மணக்க வேண்டும்!
வகைசெய்க அப்பா' வென்று
வாய்விட்டு நானா சொல்வேன்?
நிகரற்றாய்! உன்பெற் றோர்பால்
நீசொன்னா லென்ன வென்றான்."

'மகளுக்கு நாண மில்லை
என்பார்கள் மாட்டேன்' என்றாள்.

இதைவிட மணக்கப் போகும்
இருவரின் மனத்தும் உள்ளே
புதைந்துள கருத்தை யார்தாம்
புகன்றிட வல்லார்? மற்றுர்
கதைவிடு வார்கள்; நெஞ்சக்
கருத்தினை உணர மாட்டார்!
எதைவிட? எதைநான் சொல்ல?
இன்னொன்று, மணந்தோர் காதல்!

'தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை!
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்.'

எத்துணை நயமாய் எடுத்துச் சொல்கிறார்!
பித்தனைப் போலப் பிதற்றவா வேண்டும்?
சமையல் செய்யும் குடும்பப் பெண்ணின்
அமைவான மனத்தை அளந்து தருகிறார்.

'கொண்டவர்க் கெதுபி டிக்கும்?
குழந்தைகள் எதைவி ரும்பும்?
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன?
உண்பதில் எவரு டம்புக்
கெதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள்; கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்!'

கன்னித் துடிப்பையும், கணவனை மணந்த
பெண்ணின் துடிப்பையும் பிரித்துப் பேசியோர்,
ஊருக்குச் சென்றான் ஊர்வரக் கண்டதும்,
மோருக்குள் சிலிர்க்கும் மத்தென உணர்ச்சிகள்
கொப்ப ளித்தன! ஆயினும் மாமியார்
செப்பும் பகடிக்கு உள்ளம் நாணி
ஒப்பனை செய்வதும் உலாவரத் திரிவதும்
செப்பமாய்ச் செய்யும் மருமகள் செயல்களை
ஊன்றி நோக்கி உரைப்பதைக் கேளுங்கள் :

'தென்றல் அடிக்கையில் பச்சிளங் கீற்றுச்
சிலிர்த்து நிலைகுலைந் தாடுதல் போல்
இன்றைக்கு நீகொண்ட பூரிப்பின் காரணம்
என்னடி மின்னல் இடைச் சிறுக்கி?
நின்றஉன் கால்கள் நிலைக்கவில்லை; கடல்
நீராய் நெளிந்தது பொன்னுடலும்!
அன்றைக்குச் சென்றவன் என் மகன் வீட்டை
அடைந்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ?'

'மாற்றியணிவதும் சேலையினை, மலர்
வாங்கி யணிவதும் கூந்தலிலே, ஒரு
காற்றென ஓடிச் சிரிக்கும் முகத்துக்குக்
கண்ணாடி காட்டிப்பின் மீளுவதும்'
நேற்றில்லையே! இன்று பூரிப்ப தென்னடி
நீள்புருவத்து நிலாப் பிறைச்சி?
வேற்றூர்க்குச் சென்றவன் என்மகன் வீட்டுக்கு
மீண்ட மகிழ்ச்சித் திருக்கூத்தோ?'

வெளிப்படை யாகப் பொருள்தரும் சொற்கள்!
விளக்கிடப் பிறரோ உரைகளோ வேண்டா.
துளி,பிச காத உணர்வின் தொடையல்!
தோகைக் குறும்பினை இன்னும் கேளுங்கள்:

'கறிகள் சமைத்தபின் தெருவினில் விற்றிடும்
காய்களை ஓடி அழைப்பதுவும்
சிறுவிரல் மோதிரம் பார்ப்பதுவும், பார்த்து
மகிழ்வதும்; செவ்விதழ் சேர்ப்பதுவும்
அறையினை நோக்கலும் நேற்றிலையே நீ
அப்படிப் பூரிப்ப தேதுக்கடி?
பிறநகர் சென்றவன்-என்மகன்-ஊர்வரப்
பெற்ற மகிழ்ச்சித் திருக்கூத்தோ?

கச்சையை நோக்கலும்; கண்கள் மலர்வதும்
கைவளை யைச்சரி செய்வதுவும்,
மொச்சை உரிக்கையில் முன்கட்டில் ஓடி, மு
ழங்கும் சிலம்படி மீளுவதும்,

பச்சைப் பசுங்கிளி தானெனக் கொஞ்சலும்
பார்த்தில னேஇன்று பூரிப்பதேன்?
அச்சீமை சென்றவன்-என்மகன்-வீட்டை
அடைத்த மகிழ்ச்சித் திருக்கூத்தோ'

மருமகள் பூரிப்பை மகிழ்வொடும் குறும்பொடும்
அருமையாய் உரைக்கும் பாவேந்தர் அருதிறன்
எத்துணைப் பெரியது! எத்துணைச் சிறந்தது!
இத்துணைச் சிறப்பாய் எவரெடுத் துரைத்தார்?
தற்கா லத்துத் திரைப்படப் பாடலை
முக்கலும் முணகலும் முறுகலும் திருகலும்
கெக்கலி இசையொடு கேட்டுமுகஞ் சுளிக்கும்
அருவருப் புணர்ச்சியிப் பாடலில் உண்டா?
பெருமகிழ் வன்றோ பின்னிப் பிணையும்!
காசடிக் கின்ற கயவரின் கண்கள்
மாசிலா இத்தகு மாண்புடைப் பாடல்கள்
பக்கந் திரும்புமா? பயனும் விளையுமா?
எக்காலத் தந்நிலை எய்துவ திங்கே?

புதிய மனநிலை புகட்டும் பாவலர்
முதியோர் காதலை முழக்குதல் கேளீர்!

'அறம்பெய்த கையும் ஓயும்;
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்;
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறங்கேட்ட காதும் ஓயும்!
செயல்கண்ட கண்ணும் ஓயும்!
மறவனைச் சுமக்கும என்றன்
மனம்மட்டும் ஓய்தல் இல்லை!'

மறவனைச் சுமக்குமாம் மங்கையின் முதியவுள்ளம்!
மனம்மட்டும் ஓயாதாம்; புலவரின் மனவியல்
எத்தகு சிறப்பாய் இருந்தது பாருங்கள்!
மெத்தவும் சிறப்பாய் மேலும் உரைக்கிறார்!

'அருகரு கிருவர்; மிக்க
அன்புண்டு, செயலே இல்லை!'

இரண்டே அடிகளில் முதுமையின் இன்பம்
திரண்டு வெளிப்படல் புலமையின் திறமே!
அடுத்தது பாவலர் மொழித்திறன்; அதனையும்
எடுத்துச் சொல்வேன்; இருந்து கேளுங்கள்:
புலவர் ஒருவர் புகன்ற சொற்களின்
வளத்தை யறிந்தால் மொழித்திறன் உணரலாம்!
பாவேந் தர்க்குப் பழந்தமிழ்ப் பயிற்சியின்
ஈவாய் அமைந்தது சொல்திறன்! இதோ!ஒன்று

'நூலைப்படி—சங்கத்தமிழ் நூலைப்படி—முறைப்படி
காலையில்படி! கடும்பகல்படி!
மாலையிரவு பொருள்படும்படி நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி

கற்பவை கற்கும்படி-வள்ளுவர் சொன்னபடி-
கற்கத்தான் வேண்டுமப்படி!
கல்லாதவர் வாழ்வதெப்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி!-முறைப்படி

அறம்படி-பொருளைப்படி-அப்படியே இன்பம்படி-
இறந்ததமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி

தொடங்கையில் வருந்தும்படி-இருப்பினும்
ஊன்றிப்படி

அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி-நூலைப்படி
சங்கத்தமிழ் நூலைப்படி முறைப்படி

பொய்யிலே முக்காற்படி-புரட்டிலே காற்படி—
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி? நூலைப்படி—
சங்கத்தமிழ் நூலைப்படி—முறைப்படி

அகப்பொருள்படி அதன்படி புறப்பொருள்படி
நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமைவரும் என்சொற்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி"

எப்படி? படிபடி! எத்தனைப் படிகள்?
செப்படி வேலையா, சொற்படி கட்டுதல்?
எழுதிப் பாருங்கள்; இழுப்பு தெரியும்!
பாராதி தாசனோர் புலவனு என்பான்.
பாரதிர முழக்குவேன்! பாரதி தாசன்
உன்னை விட,உன் அப்பனை விடவும்
மன்னாதி மன்னன்! பாட்டிலே மன்னன்!
பொழுதிருந் தால், நான் புரட்டிக் காட்டுவேன்!
அழுமூஞ்சி களுக்கே அடிமுடி தெரியுமா?

எதுகைத் தொடையால் எம்பா வேந்தன்
புதுவகைப் பாநடை புனைந்து காட்டினான்!
சத்தி முத்தப் புலவர் மாக்கதை!
பத்தன்று; ஒன்றைப் பகர்வேன் கேளுங்கள்:

அரசி இரவெலாம் அரசனின் வரவை
எதிர்பார்த் திருந்தாள்! இவனோ விடியலில்
பள்ளி எழுச்சி பாடுவான், வந்து!

'இருள் மடிந்தது!
கூவும் சேவல் கழுத்தோ ஒடிந்தது!
கதிரொளி எங்கும் படிந்தது!
துயில் எழுப்புவோரின்
இசைத்தேன் காதில் வடிந்தது!
பெண்ணே விழி, பொழுது விடிந்தது!

கதவைத் திறந்து அரசி சொல்கிறாள்:

இரவுநான் தூங்கியபின் வந்தீர்கள் போலும்!
வழிபார்த் திருந்தன இருவிழி வேலும்!

உலாவி அலுத்தன என்இரு காலும்!
துவண்டு போயிற்று என்இடை நூலும்!
ஆறிப் போயிற்று பாலும்!
அழகு குன்றின முப்பழத் தோலும்!
வாடின கட்டிலில் மலர்வகை நாலும்!
கண்விழிக்க எவ்வாறு ஏலும்!
மேலும்!
மேலும்!'

எத்துணை இனிய சொற்கள்?
எத்துணை எளிமை பாட்டில்!
எத்துணைக் கருத்துத் தேட்டம்!
எத்துணை நயங்கள்! இன்பம்!
எத்துணை யளவு கல்வி
யற்றந்தவர் எனினும் பாட்டை
எத்துணை எளிதாய்ப் பாடி
இலக்கிய இன்பம் காண்பார்?

புலமக்கள் கண்ட இன்பம்
பொதுமக்கள் காணு மாறு
சிலபல சொற்க ளாலே
செய்தவர் பாவின் வேந்தர்!
இலைஇலை என்பார்க் கின்னும்
எடுத்தெடுத் திவேன்; ஆனால்
நிலையிலை நேரம்; ஆக
மொழித்திறம் நிறுத்து கின்றேன்.

அடுத்தது புரட்சி யுள்ளம்!
பாவலர்க் கதுதான் நற்பேர்
கொடுத்தது; அவர்க்கும் பீடு
கொடுத்தது! தமிழ்ச்செம் மாப்பால்
எடுத்தது; நேற்றும் இன்றும்
இருக்கின்ற புலவர் யார்க்கும்
மடுத்திலாப் பெரிய செல்வம்!
மற்றதன் சிறப்பைப் பார்ப்போம்!

'விடுதலை பெறுவது முதல்வேலை!
அடிமையில் உழல்வது முடியாது!
விழிதுயில் வதுமிகு தவறுகும்—எழுவீரே!'

'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'

என்றே குயிலைக் கூவச் செய்தவர்!

'சாதி ஒழிந்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று!
பாதியை நாடு மறந்தால்—மற்ற
பாதி துலங்குவ தில்லை!'

சாதிமேல் அடித்த சம்மட்டி அடியிது!

'இந்த உலகில் எண்ணிலா மதங்கள்!
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்!
சாதிக்குச் சாவுமணி அடிக்க!'

சாதிக்கு அடித்த சாவு மணியிது!

'அடக்குமுறை செய்திடல் முடியும்—கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும்!—உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்!'

அடக்கு முறைமேல் அடித்த அடியிது!

"தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை.'

தமிழ்த்தொண்டு செய்வோர்க்குத் தந்த துணிவிது!

சிம்புட் பறவையே சிறகை விரி,எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற!விழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?

வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந் திரு.
குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு.
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு.
பொன்மொ ழிக்குந் புதுமை ஏற்றுவாய்!
பக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!'

தொய்ந்த தமிழனைத் தூக்கி நிறுத்தும்
வெய்யுரை! அழல்சேர் வீர வரிகள்!

'உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு
நேர்ந்ததெனு உரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்
உணர்வாகி நண்ணி டாரோ?

'இருக்கும் நிலை மாற்றஒரு புரட்சிபனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்!'

என்று புரட்சிக் கெழுத்தா ளர்களே
நின்றிங் குதவுதல் வேண்டும் என்பார்!
இவைபோல் பாடல்கள் ஏராளம் உண்டு
அவையெலாம் கூறிட ஆகிடும் ஒருநாள்!

இறுதியாய் அவரின் புரட்சியுள்ளத்தை
உறுதியாய் விளக்கும் ஒரேஒரு பாட்டு!
நகைச்சுவைப் பாடல்! நன்ருய்க் கேளுங்கள்!

ஏசு நாதர் ஏன்வர வில்லை
என்னுந் தலைப்பில் எழுது கின்ருர்:

'தலை, காது, மூக்குக், க ழுத்துக், கை, மார்பு, விரல்
தாள் என்ற எட்டுறுப்பும்,
தங்கநகை, வெள்ளிநகை, ரத்தினமி ழைத்த நகை
தையலர்கள் அணியாமலும்,

விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டுமென்றே பாதிரி
விடுத்த ஒரு சேதியால் வ்ஷமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள், புருஷர்!
நிலைகண்ட பாதிரி, பின் எட்டுறுப் பேயன்றி
நீள்இமைகள் உதடு நாக்கு
நிறைநகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணா டியும உண்டென
இலைபோட் டழைத்ததும், நகைபோட்ட பக்தர்கள்
எல்லாரும் வந்து சேர்ந்தார்!
ஏசுநாதர் மட்டும் அங்குவர வில்லையே,
இனிய பாரத தேசமே!'

பக்தர்கள் மண்டையில் படீரென அடிக்கும்
முத்திப் பாடல் இதுவென முழங்கலாம!
நகைச்சுவை யோடு நயமாய்ச் சொல்லி
வகையாய்ப் புரட்சியை மனத்தினில் விளைத்தார்.
புரட்சிப் பாவலர் பொதுமை உணர்வினை
இறுதியாய்க் கூறுவேன் இருந்து கேட்பீர்!

'புதியதோர் உலகுசெய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!'

என்று—

பொதுமை உலகம் புனைய விரும்பினர்!

'மனிதரில் நீயுமோர் மனிதன், மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி, மேலே ஏற்று'
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
உன்வீடு—உனது பக்கத்து வீட்டின்

இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்!
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள்! உன்னைச் சங்கம மாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும்! பேத மில்லை!
உலகம் உண்ணஉண்; உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் உடைமை மக்களுக் குப்பொது;
புவியை நடத்து பொதுவில் நடத்து!'
எத்துணை எழுச்சி; எத்துணை உயர்ச்சி!
எத்துணை விரிந்த எண்ணக் குவியல்!
சடசட சடவெனச் சொற்கள் ஆட்சி!
மடமட மடவெனும் கருத்து மாமழை!
உணர்வு மின்னல்; உருட்டும் இடிகள்!
இதைவிடப் பொதுமை என்ன வேண்டும்?
புதுக்கருத் தெவர்தாம் புகன்றிடப் போவார்?
வெறுப்பிலா திருந்து பொதுமையாய் விளக்கினுல்
மறுப்பிலா தவரை மாப்புல வோனுய்
ஏற்றுக் கொள்ளுவார்; இல்லெனின் தூற்றுவார்!
மாற்றுக் கொள்கையர் மறுத்திட முடியுமா?
'எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!'
என்றே உரிமைப் பட்டையம் எழுதுவார்!

'இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களை ஆடவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்,
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?'

பாவேந்தர் காட்டிய பொதுமை வழியிது!
தீண்டாமை பற்றிப் பாவலர் சாற்றுவார்.

'அற்பத் தீண்டாதார் என்னும் அவரும் பிறரும் ஓர் தாய்
கர்ப்பத்தில் வந்தா ரன்றோ?—சகியே (கர்ப்பத்தில்)

பொற்புடை முல்லைக் கொத்தில் புளியம்பூ
பூத்ததென்றால்
சொற்படி யார் நம்புவார்?—சகியே (சொற்படி)

ஏகபரம் பொருள் என்பதை நோக்க எல்லாரும்
உடன் பிறப்பே—ஒரு
பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி லே. உள்ள
தோ சிறப்பே?'

எப்படி அரசியல் இருக்க வேண்டுமாம்—

'ஒப்பிட எவர்க்கும் ஒருவீடு, ஒருநிலம்
ஒருதொழில் ஓர்ஏர் உழவு மாடுகள்'

என்னும் சமநிலை எய்த வேண்டுமாம்!
பின்னும் பாவலர் கனல்எழப் பேசுவார்:

'ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்.
எல்லார்க்கும் எல்லாம் என்றிருப் பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!'

என்று பொதுமைக்கு முத்தாய்ப்பு இடுவார்!
ஒன்று மட்டில் உண்மையென் றறிவீர்!
உலகப் பாவலர்க் குண்டான சிறப்புக்கும்
கழகப் புலவர்பால் காணும் பெருமைக்கும்
மேலாம் இவர்க்கொரு மேன்மை இருந்தது!

தமிழ்உள்ளம் நாட்டுப்பற்று தகுவுயர் சீர்திருத்தம்
இமியுமே குறையாவாறு இருந்தன அவர்பால்!

தமிழ்உள்ளம் அவர்க்கே உள்ள தனியுள்ளம்!
இதற்குமுன் யார்க்கும் இல்லா தது,அது!

'இன்பத் தமிழ்மொழி எமது!—எமக்
கின்பம் தரும்படி வாய்ந்தநல் லமுது!' —என்றதும்,

'கனியிடை ஏறிய சுளையும்—முற்றற்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாலிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!' —என்றதும்,

'செந்தா மரைக்காடு பூத்தது போல
செழித்த என்தமிழே ஒளியே வாழி!'

—என்றதும்,

'செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு!
நன்மை உனக்கெனில் எனக்குந் தானே?' —என்றதும்,

'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்!
—என்றதும்,

தமிழ்மேல் அவர்க்குள்ள காதலைக் காட்டும்!
தமிழ்க்காக வாழ்ந்தார்; தமிழைப் பாடினார்;
தமிழைத் தொழுதார்; தமிழைப் புதுக்கினார்!

'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை—என்
தாய்தடுத் தாலும் விடேன்—என்று'

தமிழ்க்காகப் போரிட்டார்;

'இன்பத் தமிழ் குன்றுமேல் தமிழ்
நாடெங்கும் இருளாம்'—என்று

கவன்றார்; அறிவுறுத்தினார்; கண்ணிமையாது காத்தார்!

'தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்'

என்று, தமிழும் தாமுமாய்
ஒன்றிக் கிடந்தார்: உயிரொடு பொருத்தினார்.
அந்தத் தமிழே அவரையும் உயர்த்தி
இந்த நாட்டையும் இனிதுயர்த் துவது!

இவர்க்குத் தமிழ்மேல் எத்துணை ஆவலோ
அத்துணை அக்கறை தொழிலா ளர்மேல்!

'குடிக்கவும் நீரற்றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே—தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு!'

என்றவர் கூறுதல் எவ்வகை யில்பிழை?

'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்—ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?'

என்றஅவர் கேள்வி ஏற்றதோர் கேள்வியே!

தமிழ்க்கவர் தந்த தாழாத உழைப்பும்
தொழிலா ளர்க்கவர் தோள்தந்த மாண்பும்
பாரதி தாசனைப் பாவேந்தர் ஆக்கி
பாரறி யும்படி பண்ணி வைத்தன!

இத்தகு புலவர்போல் எந்தமிழ் மொழியிலோர்
ஒத்த புலவரை உணர்ந்திட வில்லை!
வீரமும் தமிழும் வியத்தகு புலமையும்
ஈரமும் ஏழைமேல் இரக்கமும் சேர்ந்தால்
பாரதி தாசனென் பாவலர் தெரிவார்!
ஊரதி ¦ர,அவர் ஒண்புகழ் வாழ்கவே!



# 3. அரசுயர் பள்ளி உரத்தநாடு

திபி. 2006. விடை 17, (31-5-75) அன்று, உரத்தநாடு அரசுயர் பள்ளியில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

முன்னுரை :

பேரன்பு கொண்டவரே! பெரியோரே!
தாய்மாரே! பெருமை மிக்கக்
காரம்பு மழைபொழியும் கழனிமிகு
எழிலுறந்தைக் கவின்மிக் கோரே!
நீரம்பொன் நெல்விளைத்துச் சோறுதரும்
நெடும்புகழ்சேர் தஞ்சை யோரே!
வீரம்பொய் யாத்தடந்தோள் இளைஞர்களே!
விறல்தமிழால் வணங்கு வேனே!

பாவேந்தன் பெருவிழாவாம்! இவ்விழாவில்
பாவலர்யாம் பாட வந்தோம்!
மாவேந்தன் பாட்டிலவன்; மறல்வேந்தன்
புரட்சியிலே! மலர்மி குந்த
காவேந்துங் கருங்குயில்போல் தமிழகத்தின்
கரையணைந்த புதுவை தன்னில்
சாவேந்தும் வரையினிலே செந்தமிழைச்
சலிப்பின்றிப் பாடி னானே!

இக்காலும் தமிழ்ப்பாடும் புலவருளார்:
இரந்துசோ றுண்ண வேண்டித்
திக்காலுக் கோரிருசொல் பழந்தமிழில்
திருடியொரு பாட்டைச் செய்து
முக்காலும் என்பாட்டே நம்புங்கள்
எனப்பொய்யால் முக்கா டிட்டுப்
பொக்காயும் பதராயும் தமிழ்வளர்ப்பார்:
போலிலனே புதுவை வேந்தன்!

(வேறு)

தக்கதமிழ்ச் செழுந்தீம்பா! நற்றமிழ்ப்பா!
 தனிச்சுவைப்பா! தண்டமிழ்ப்பா! தப்பாதப்பா!
எக்காலுந் தமிழிரிடை இருந்தமிழ்ப்பா!
 இணையிற்பா! எழில்சேர்பா! இலக்கணப்பா!

முக்காமல் முண்காமல் முகிழ்த்ததப்பா!
 முறுவல்பா! புரட்சிப்பா! முழுதுந்தேன்பா!
செக்காடும் ஓசைவராச் செந்தமிழ்ப்பா!
 சிறப்புப்பா! சுவையப்பா! சொல்வா யப்பா!

காராடும் குளிரிருக்கும்! கதிராடும்
 கனப்பிருக்கும்! காற்றிருக்கும்! ஊற்றிருக்கும்!
சீராடும் குழந்தைக்குச் சிணுங்காத
 சிரிப்பிருக்கும்! செழிப்பிருக்கும்!
 செழும்பூஞ்சோலை
நீராடும் கன்னிக்கு நினைவிருக்கும்
 படிகாதல் நிகழ்விருக்கும்! அன்பிருக்கும்!
போராடும் வீரர்க்குப் புரட்சியெனும்
 புத்துணர்வால் தோள்களெலாம் புடைக்கும்
 அன்றோ!

(வேறு)

தமிழ்க் குடும்பத் திட்டம்
 தந்திருப்பார் அங்கே!
குமிழ்த் தெழுந்த இன்பம்
 குவித்திருப்பார் பாட்டில்!
சிமிழ்த் துவிழி யாத
 செந்தமிழ வீரர்!
தமிழ்ப் புரட்சித் திட்டம்
 தந்திருப்பார் பாட்டில்!

ஆரியத்துக் கோழைக்
கடிமையுற்ற போதில்
வீரியத்தை நாமும்
விட்டுவிட்ட போதில்,
கூரியசொல் வாளால்
குத்திமறம் கீண்டி
நேரியபு ரட்சி
நிகழ்த்திவைத்த கோமான்!'

(வேறு)

பாவேந்தன் சொல்லெடுத்துத் தன்மானந் தனைக்குழைத்துப்
பாட்டென்று தாரா விட்டால்,
நாவேந்தும்மொழி யெல்லாம் சமற்கிருதம்! கதைகளெலாம்
இராமன்கதை பார தந்தாம்!
பூவேந்தும் கைகளிலே புழுக்கையினை அன்றுநாம்
ஏந்திநிலம் புதைந்தி ருப்போம்!
ஈவேந்தும் கடமையினுல் விழா வெடுப்போம்!
எனினும்வினை இம்மி செய்யோம்!

(வேறு)

செந்தமிழர் தோள்களிலே மறமேற்றி
வைத்தசெம்மல்! செழுந்தீம் பாவால்
எந்தமிழர் நாவினிலே இனித்ததமிழ்க்
கண்டெடுத்தே இழைத்த வேந்தன்!
அந்தமிழப் பெண்டிரெலாம் அணியணியாய்
ஆரியத்தால் அழிந்த போதில்
வந்துதமிழ் மானத்தைத் தூண்டுவித்து
மங்கையரைக் காத்த வீரன்!

கைம்பெண்கள் எழுகென்றுன்! கடிமணங்கள்
செய்கென்றுன்! கன்னிப் பெண்கள்
மொய்ம்புதரும் காதலினுல் தாம்விரும்பும்
ஒருவனையே முடிக்க என்றுன்!

செய்புதுமை ஒன்றன்றே அவன்பாட்டில்!
சீர்திருத்தம் முழங்கச் செய்தான்!
பைம்புதரில் பூத்ததமிழ்ப் பூவானுன்!
பைந்தமிழ்ப்பூந் தும்பி யானுன்!

ஒட்டாரங் கட்டியொரு சொல்லுக்கே
ஊர்முழுதும் அலைந்து தேடிக்
கொட்டாவி விட்டுமுகம் மேல்பார்த்துக்
கீழ்பார்த்துக் குனிந்தெ ழுந்து
கட்டாத பாட்டெல்லாம் மொழிக்கயிற்றில்
கட்டியொரு 'கவி'யென் றூரைத்
தெட்டாமல் தெட்டிவரும் பொய்ப்புலவர்
போல்அல்லன் புதுவை வேந்தன்!

மாணிக்கச் செழும்பரிதி மேற்றிசையின்
வானத்தில் மறையும் போதில்
ஆணிப்பொன் முத்தெனவே கீழ்த்திசையில்
நிலவொளிரும் அழகைப் போல
ஏணிக்குப் படிபோல ஒருசொல்மேல்
ஒன்றுவந்தே இறங்கு கின்ற
பாணிக்கிங் கார்புலவன்; பாவேந்தப்
புலவனல்லால்? பாவல் லோரே!

கண்ணனுக்குத் தாசனென்பான் 'கவி'யெழுத
வல்லனென்பான்; கழுத்த றுப்பான்!
புண்ணுக்குச் சீழ்போலப் புழுவுக்கு
மலம்போலப் புதுமை யென்னும்
மண்ணுக்குச் செந்தமிழால் மாரடிப்பான்!
மாண்பிழப்பான்! மலத்தைத் தின்னும்
பெண்ணுக்குப் பிறக்கின்ற குட்டிகள்போல்
பாப்பலவாய்ப் பெற்ருன் அங்கே!

ஆயிரம்பேர் நடுவினிலே பெண்விளக்கை
நிறுத்தியங்கே அவிழ்த்துப் போட்டு
வாயினிலே நீரூற்றல் போல்மதுவை
வயிரரு மண்டி விட்டுக்
காயாயும் பிஞ்சாயும் சொல்லுதிர்த்துக்
காட்டியவை கனிகள் என்றே
வாயுரமாய் பேசுகின்ற வகையல்லால்
நல்லதமிழ் வழக்கங் குண்டா?

பளபளக்கும் திரைப்படத்துக் கூத்தியர்தாம்
பண்பிழக்கும் பான்மை யெல்லாம்
வளவளக்கும் சொல்லாலே வழித்தெடுத்துப்
பாட்டென்னும் வ்டிவங் காட்டித்
தொளதொளக்கும் ஆடையினைச் சிறுகுழந்தை
போட்டதுபோல் துவளக் காட்டும்,
சளசளக்கும் ஓசையெல்லாம் பாட்டென்றால்
செந்தமிழும் சாதல் நன்றே!

ஆடையினை முற்றாக அவிழ்த்துப்போட்
டாடுவதே ஆடல் என்றால்,
ஓடையிலே நீர்போல ஒன்பதுகோ
டிப்பாடல் உரைக்க வல்லோம்!
கூடையிலே வாருகின்ற சரளைகள்போல்
கோடிப்பா குவித்தும் என்ன?
பாடையிலே போகின்ற பிணம்போலுன்
பாடலெல்லாம்! பயனென் காண்போம்!

பாவேந்தன் மொழியுணர்வுப் பாடலொன்றைக்
குழந்தைக்கும் படித்துக் காட்டில்
நாவேந்தும் செந்தமிழை! நல்லுணர்வை
நெஞ்சேந்தும்! நடையில் வீரம்

தாவேந்திச் சதிராடும்! இனப்பற்றுத்
தழைத்துவரும்! தமிழ்நாட் டுக்குக்
காவேந்தி வல்பகையை ஓட்டிவிடும்
திறம்முகிழ்க்கும்! காண்பாய் இன்றே!

அத்தகைய புதுமைப்பா, புரட்சிப்பா
ஆக்கிவைத்த அண்ணலுக்கே
இத்தகைய விழாவெடுப்பார் எந்தமிழர்
இழிவுக்கா ஏற்றஞ் செய்வார்!
புத்தகத்தைப் புரட்டாமல் புழுத்திருக்கும்
இந்துமதம் புரட்டு கின்ற
எத்தகத்தைக் கண்டுகொள்வார் எந்தமிழர்
இனிவருநாள்! ஏற்றங் காண்பார்!

## முடிவுரை!

அன்புடைப் பெரியீர்! அருமைத் தமிழரீர்!
இன்பம் தந்த இனியபா வரங்கம்
ஒருவா றுக உய்வைத் தந்தது!
கருவாய் இருந்த தமிழ்நலம் கனிந்தது!
எண்ணிப் பாருங்கள்! எந்தமிழ் வாழும்
மண்ணில் பாரதி தாசனார் வந்து
பிறந்திரா திருந்தால்...! உணர்வு பிறக்குமா?
இறந்திரா திருந்தால்...! என்னென்ன விளையும்?
எண்ணிப் பாருங்கள்! எண்ணிப் பாருங்கள்!
கண்ணினா லன்று! கருத்தில் பாருங்கள்!

பாவேந்தர் பிறந்தார்! பாட்டினி லேஒர்
ஆவல் பிறந்தது! தமிழர் அனைவரும்
பாட்டுத் திறத்தினில் பாரையே வெல்லுவார்!
நாட்டுப் பற்றும், நன்மொழிப் பற்றும்
பாட்டால் வளரும் பான்மையை அறிக!

பாட்டுப் புலவன் பாரதி தாசன்
ஊட்டிய உணர்வால் ஊமையும் பாடினுன்!
காட்டிய கருத்தால் கண்ணிலான் கண்டான்!
தென்றலாய்ப் பாடினுன்! தீந்தமிழ் சொன்னுன்!
தென்றலடிக்கும் திறத்தைப் பாருங்கள்!

'தென்றலடிக்கையில் பச்சிளங்கீற்று சிலிர்த்து
நிலைகுலைந் தாடுதல் போல்...'

'அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடங்கும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை, உடல் அணுவொவ்வொன் றுஞ் சிலிர்க்கச்
செல்வம்ஒன்று தவழ்ந்துவரும் அதன்பேர்
தென்றல்!'

(வேறு)

இனி,
பாவேந்தர் உள்ளத்துள்ளே எரிமலை புகைந்ததென்றால்
ஈவாக என்னநிற்கும்? என்பதை அறிய வேண்டும்!
சாவேந்திச் சென்ற தந்த தனிமகன் தனையென்றாலும்
தூவுந்தீக் கனப்பால் இன்றும் துவைக்கின்றார் பகைவர்
(அன்றோ?

(வேறு)

எரிமலைக் குமுறலை இதோ;இவண் காணுக! :
'எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே!"
அடுத்தொரு குமுறலை அதோ கேளுங்கள்!
'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'
'தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!'

அடுத்து; அவர் புரட்சிப் பாவலர் ஆகிக்
கடுத்த நெஞ்சொடும் கனலொடும் பேசுவார்!

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!

பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!"

"இருக்கும் நிலைமாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்."

அடுத்துப்,
பெண்மை போற்றிய பெருமைப் பாவலர்
ஒண்மை பாரதி தாசப் பாவலர்!

'பெண்களால் முன்னேறக் கூடும்—நம்
வண்தமிழ் நாடும்எந் நாடும்' —என்று
—எடுத்த எடுப்பிலே முழக்கம் இடுவார்!
அடுத்த குரலிலே ஆணையே பிறக்கும்!

'பெற்றநல் தந்தைதாய் மாரே—நும்
பெண்களைக் கற்கவைப் பீரே!

அடுத்தொரு பாடல் அடியைக் கேட்பீர்!
துடித்த அவர் உள்ளக் குமுறலைத் தோய்ப்பார்!

'ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம் பெண்கள்—நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!'

தமிழகம் தன்னைக் காத்திடச் சொல்லிக்
கமழ்நறும் பெண்மைக்குக் கடமையைத் தூண்டுவார்!

'தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய்—பெண்ணே
தமிழரின் மேன்மையைக் காப்பாய்!
தமிழகம் நம்மதென் றுரைப்பாய்!
தடையினைக் காலினால் தேய்ப்பாய்!'

'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்' — என்று
மெச்சும் பெண்மையின் மேன்மையைப் பாடியோர்
உச்சக் குடுமிகள் காலத்தில் உண்டா?

'கலியாணம் ஆகாத பெண்ணே!—உன்
கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே!
வல்லமை பேசியுன் வீட்டில்—பெண்
வாங்கவே வந்திடு வார்சில பேர்கள்!

நல்ல விலைபேசு வார்கள்—உன்னை
நாளும் நலிந்து சுமந்துபெற் றோர்கள்;
கல்லென உன்னை மதிப்பார்—கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையும்—காட்டார்;
வல்லி உனக்கொரு நீதி—இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீஅஞ்ச வேண்டாம்!'

—என்று கூறி,

'கற்றவளே ஒன்று சொல்வேன்—உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்'

—என்று முடித்தவர்,

" —அவர்

ஞாயந் தராவிடில் விடுதலை மேற்கொள்'

—என்று துணிவையும் ஏந்திழைக் குரைப்பார்!
பெரிய உலகில் பெண்ணலம் பேசிய
அரிய பாவலன் பாரதி தாசன்!

அடுத்துப்,

பாவேந்தர் ஒரு பகுத்தறி வுணர்வினர்.
ஆவலால் இதனையும் அவர்வா யாலே
கேட்டு மகிழ்வோம்!

'குடிக்கவும் நீரற் றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணுமல் கொடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததிஞலே—தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் ஞடு!'

'கடவுள் கடவுள் என்றெறதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாமதேயம்
சழறிடாத நாளிலும்
உடைமை யாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்!
உடைசுமந்த கழுதைகொண்
டுழைத்ததோர் நிலைமையும்
உடைமை முற்றும் படையைஏவி
அடையும் மன்னர் நிலைமையும்
கடவுளாணை யாயின், அந்த
உடை வெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ? தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

அடுத்துப்,

பாரதி தாசன் பைந்தமிழ் இனத்தையெந்
நேரமும் காலமும் நிமையமும் காத்தான்!
அவனின் காவல் எப்படிப் பட்டது?
அவன்குர லாலே அவனுளங் கேட்போம்!
அவனின் சூளுரை ஆர்ப்பரிப் பிஃதாம்!

'ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்'

'செந்தமிழே உயிரே நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!'

—இப்படிப் பலவா றெடுத்தெடுத் துரைக்கலாம்'
அப்படி உரைக்கினும் அடிமைத் தமிழனுக்
குணர்வு கொளுத்துதல் உலகினில் கடினம்!
உணர்வுத் தீயினை ஊர்ஊ ராகப்
பாரதி தாசனின் பாடலால் பரப்புக!
வேர்அது தமிழர்க்கு! தமிழ்க்கது விளைவே!

# 4. பகுத்தறிவாளர் கழகம்
# வேலூர் வ. ஆ.

(கடந்த விடை 2 (15—5—77) அன்று பகுத்தறிவாளர்கள் சார்பில் வேலூர் நகர மன்ற அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த நாள் விழாப் பாட்டரங்கத்தின் தலைமையுரை)

முன்னுரை

பேரன்பு மிக்கவரே! பெரியோரே! எம்மைப்
பெற்றதமிழ்த் தாய்க்குலமே! இளைஞர்களே! வணக்கம்.
சேரனொடு சோழனும்நற் பாண்டியனும் சேர்த்துச்
செந்தமிழை வளர்த்தகதை பழங்கதையாய்ப் போக,
வீரமிலா தன்புமிலா தார்வமும்இல் லாது
வீண்பகட்டுக் காரர்களாய் நாம்வாழும் போதில்,
'யாரவன்காண் எந்தமிழைப் பழித்தவன்'என் றொருவன்
இடிக்குரலின் விளைவெழுப்பி எழுகளிறாய் வந்தான்!

இராவணனைச் சாய்த்தஇனம்—எந்தமிழ்மா வீரன்
இரணியனை ஒழித்தகுலம்—ஏற்றமிகு நூலால்
பராவியநம் முன்னோர்கள் வளர்த்திமைபோல் காத்த
பசுந்தமிழைத் தாழ்த்தியதோர் பழிவடவக் கூட்டம்-
விராவியநம் பெருமையெலாம் அடிவெட்டி வீழ்த்த
வீணர்குலம் - நம்நாட்டை வளைத்தழித்த பின்னைத்
திராவிடர்நம் திருநாட்டை மீட்பதற்கிங் கொருவன்
தெள்ளுதமிழ்ப் பாப்பாடி உயிர்த்தெழுந்து வந்தான்! 2

இன்னலிலே நாம்துயின்ற இழிவுநிலை கண்டே
'எழுந்திடுக தமிழினமே தமிழினமே' என்று
மின்னலிலே உயிர்கிளர்ந்து மேனியெல்லாம் பாயும்
மெட்டெடுத்தே உளம்புதுக்கும் உயிர்ப்பாட்டைப்பாடிக்

கன்னலிலே தமிழ்பிசைந்து காதினிக்கக் கூவிக்
கருத்தூட்டி உணர்வூட்டித் தமிழ்மறமும் ஊட்டித்
தென்னவரின் சூம்பிவிட்ட தோள்களிலே வீரம்
தெறித்தொளிரச் செய்யவொரு தீம்புலவன் வந்தான்!

பாழெடுத்த சொற்களிலே பைந்தமிழைக் கொல்லும்
பச்சைவெறிப் பாடல்களைப் பாடும்நரிக் கூட்டம்
காழெடுத்த ஓசையிலே காதறுந்து நின்ற
காலத்தில்—நேரத்தில்—ஈங்கொருவன் தோன்றிச்
சீழெடுத்த வரலாற்றைப் புதுப்பிக்க எண்ணிச்
செந்தமிழிற் சொல்லெடுத்துத் தேனினிமை சேர்த்தே
யாழெடுத்துப் பாட்டிசைத்தான் அவன்புகழைப் பாட
யாப்பொன்று போதாது; பாத்தோப்பே வேண்டும்! 4

பூவேந்தி மணியேந்திப் பொலிவேந்தி இளமை
பூரிக்கும் மார்பேந்திக் கிளிமொழியும் தோற்கும்
நாவேந்தி இளஎகின நடையேந்திக் கலையின்
நலனேந்தி நச்சரவம் பெண்களின்பேர் ஏந்தி
மூவேந்தைச் சாய்த்(து)அவர்பால் ஆரியத்தை ஊன்றி
முன்னிருந்த தமிழ்க்குலத்தின் சீர்சாய்த்த பின்னைப்
பாவேந்தாய் அக்குலத்தைக் காத்திடற்கு வந்தான்!
'பாரதிதா சன்' அவன்பேர்! பாவுலக வேந்தன்! 5

ஆரியர்பால் ஆங்கிலர்பால் வேற்றினத்தார் பலர்பால்
அழகுதமிழ் சிக்கியதன் சொல்திரிந்து பொருளும்
பூரியர்தம் வடமொழியால் உட்சிதைந்து பலவாய்ப்
புல்லுருவம் கொண்டுநமின் உள்ளுணர்வும் போக்கி
நேரியலா மறைமுகமாய் இனமழியும் போதில்-
நெட்டுயிர்த்துத் தமிழரெலாம் தத்தளிக்கும் நாளில்
சீரியசெம் பாவிசைத்தே இனம்புதுக்க வந்தான்!
**செந்தமிழ்பா ரதிதாசப் பாவேந்தன் என்பான்!** 6

'தமிழியக்கம்' தொடங்கிவைத்தான்! செயல்முறைகள்
தந்தான்!
தப்பறைகள் கிழிந்தெறித்தான்; தமிழ்முரசம் ஒச்சி!
அமிழ்தூற்றுப் பாப்பெருக்கி 'அழகின்சிரிப்' பீந்தான்!
அழியாநல் இலக்கியமாம் 'குடும்பவிளக்' கென்னும்
கமழ்தரும்இல் லறநூலைக் கற்கண்டில் தோய்த்துக்
கசிகின்ற தீந்தமிழால் நாம்சுவைக்கத் தந்தான்!
உமிழ்கின்ற கொச்சைநடைப் பாவலர்தம் வாய்மேல்
உலக்கையடி தந்துமனம் கலக்குறவே வாழ்ந்தான்! 7

'பாண்டியனின் பரிசீ'ந்தான்! 'கழைக்கூத்தி காதல்'
'பாத்தொகுப்பு', 'நாடகங்கள்', எதிர்பாரா முத்தம்'
மூண்டதமிழ் கொழித்துவரும் 'இசையமுத' நூல்கள்!
மொய்க்கும்'இளை ஞர்விரும்பும் 'இலக்கியங்கள்', 'சேர
தாண்டவமும்' 'நற்காதல் நினைவுகளோ' 'டமைதி'
'நல்லதீர்ப்' பெனும்நூலோ டின்'குறிஞ்சித் திட்டு'
கீண்டெழுந்த 'சௌமியன்''கண் ணகிபுரட்சிக் காப்பியம்'
கெழு 'மணிமே கலைவெண்பா' எனும்பலநூல் தந்தான்!

தாயின்மேல் ஆணையிட்டான்! தந்தையின்மேல் ஆணை-
தமிழகமேல் ஆணையிட்டான் செந்தமிழைக் காக்க!
தூயதமிழ் வளர்த்திடுவீர் தோழரீர்என் றிசைத்தான்!
தொல்தமிழர் நாடியெல்லாம் நரம்பெல்லாம் மீட்டி
ஏயநறுந் தமிழுணர்வை ஓடவிட்டான்! தமிழை
'இகழ்ந்தவனைத் தாய்தடுத்தாலும் விடே'னென்
நாயினுங்கீ ழாய்த்தமிழர் நலிவதுகண் டுள்ளம் [றுர்த்தான்!
நைந்துருகி 'உடல்தருவேன் உயிர்தருவேன்' என்றான்!

வெண்ணிலவும் வானும்போல் வீரனும்வா ளும்போல்
விரிவண்ணப் பூவும்அதன் மணமும்போல் யாழும்
பண்ணிவரும் இசையும்போல், கண்ணும்ஒளி யும்போல்
பைந்தமிழும் தானும்எனப் பண்ணிசைத்துப் பாடி

எண்ணிலவர் உணர்வுளத்தில் செந்தமிழ்த்தீ மூட்டி
எரிகின்ற நெஞ்சின்மேல்-செந்தமிழ்மேல் ஆணை
பண்ணியினப் புரட்சிக்கு நெய்யூற்றி விட்டான்!
பாவேந்தன் பாரதிதா சன்புரட்சி வேந்தன்! 10

மூவேந்தர் மனத்தொட்டில் துயின்றெழுந்தே அன்னார்
முடிமீது காலுதைத்து மடியில்விளை யாடி
நாவேந்தும முக்கழகப் புலவர்கைத் தவழ்ந்து
நம்காலில் நசுக்குண்டு குற்றுயிராய்க் கிடந்தும்
சாவேந்தா நத்தமிழ்த்தாய் தனைப்பாடிப் பாடிச்
சலிப்படையாப் புலவன்பா ரதிதாசன் என்னும்
பாவேந்தன் திருவுளத்தின் கருத்துநலன் யாவும்
பாவலர்க்கோ உணர்வூற்று! கருத்துமழை! செந்தீ! 11

இயற்கையினில் அவன்தொட்ட இடமெல்லாம் சிரிக்கும்!
இனப்பேச்சில் அவன்மூச்சின் துடிதுடிப்பும் கேட்கும்!
மயற்கையிலாச் சீர்திருத்தம் அவன்பாட்டில் மணக்கும்!
மருண்டிருண்ட நாட்டில்அவன் பாவிளக்கை ஏற்றும்!
முயற்கையைத் தீண்டுதற்குள் முகம்வெயர்த்துக் கொட்டும்
மோழையனின் கோழைமனம் அவன்பாட்டைக் கேட்டால்
பெயற்கைமழை மேகமெனும் பெருங்களிற்றின் தலையைப்
பெயர்த்தெடுக்கும் எண்ணம்வரும் வீரம்வரும் என்பேன்!

அவன்பாட்டில் தமிழ்பொழிந்த அமிழ்தமழை போல
அன்றிருந்திந் நாள்வரைக்கும் அணியணியாய் நிற்கும்
எவன்பாட்டில் தமிழ்பொழிய நாம்கண்டோம்? கேட்டோம்'
இதுவரைக்கும் இருந்ததில்லை; இனிமேலும் இல்லை!
சிவன்முதலாய் விற்றிருந்த கழகமெனச் சொன்னார்!
செந்தமிழ்மேல் பாவேந்தன் உயிர்கிடந்து தூங்கி
உவந்துநிறை வுற்றதுபோல் ஒருபுலவர் வாழ்வும்
ஓ! ஓ! ஓ! எனவியந்து போற்றும்படி இல்லை! 13

கரும்புதந்த தீஞ்சாறே, கனிதருவின் சுளையே
கவின்முல்லை வெண்ணகையே' எனும்பாட்டில் தமிழை
விரும்பியவன் 'அன்பே,அன் பே!யன்பே!' என்று
விளித்திடுங்கால், உயிருடலம் அனைத்துந்தமி ழாக
அரும்பிமலர்ந் துலகமெலாம் அளாவியிருப் பதுபோல்
அரியவுணர் வொன்றுநம்மின் உள்ளத்தில் தோன்றும்!
பெரும்புதுமை இதுவன்றோ? எப்புலவன் தமிழை
பேச்சுக்கும் மூச்சுக்கும் 'அன்பே'என் றழைத்தான்? 14

இவ்வாறாய்ப் பாவேந்தன் கருத்துநலன் எல்லாம்
எடுத்தெடுத்து நீங்களெலாம் சுவைக்கும்படி ஈவர்,
இவ்வாறு தமிழ்ப்புலவர்—இன்றமிழ்ப்பா வாணர்;
இருந்துநலங் கேட்டிடவும் யான்வேண்டு கின்றேன்!
ஒவ்வாத பாடல்பல கேட்டிருப்பீர்! உங்கள்
உள்ளமெல்லாம் நாறடிக்கும் அப்புலவர் கூட்டம்!
அவ்வாறாய் இப்புலவோர் பாடஅறி யார்கள்!
அருந்தமிழ்க்கே ஒளிசேர்க்கும் புலவரிவர் காண்பீர்! 15

## பின்னுரை

பாவேந்தர் கருத்துநலன் பாப்புலவர் சொன்னார்!
பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டிருந்தோம் நாமும்!
பூவேந்தும் நறுந்தேனைச் சுவைத்திடுந்தே னீக்கள்
போலன்றோ நாம்சுவைத்தோம்! புலவரெலாம் வாழ்க
சாவேந்திச் சென்றதெனப் பாவேந்தைச் சொன்னார்!
சரியில்லை என்போம்நாம்! செந்தமிழ்த்தீம் புலவர்
நாவேந்தி வாழ்கின்றார் பாவேந்தர்! உண்மை!
நாடெல்லாம் வீடெல்லாம் அவர் வாழ்கின் றாரே! 16

செந்தமிழ்க்கே அவர்பிறந்தார்; செந்தமிழ்க்கே வாழ்ந்தார்;
செந்தமிழ்க்கே மூச்சுயிர்த்தார், செந்தமிழ்க்கே பேசிச்
செந்தமிழ்க்கே அவருழைத்தார்; செந்தமிழாய் நின்றார்;
செந்தமிழ்க்கே ஒளியேற்றிச் செந்தமிழ்க்கே மாய்ந்தார்!

செந்தமிழ்க்கே பாவேந்தால் செழும்பெருமை அன்றோ!
செந்தமிழ்க்கே நாமிருப்போம் என்னில்அவர்
கொடையே!
செந்தமிழ்க்கே வாழ்ந்தவரும் செத்தொழிவ துண்டோ?
செந்தமிழும் வாழும்வரை அவர்தமிழும் வாழும்! 17

## இயற்கை

இருக்கின்ற பாவலர்கள் இருகோடி என்றால்
இயற்கைப்பா வலர்அவருள் இருபதுபேர் இருக்கும்!
கருக்குழியில் ஒளியேறி உணர்வேறித் திருவில்
கற்பனையாம் பொலிவேறிப் பாட்டுணர்வும் ஏறி,
உருக்கொண்டு தாய்மடிமேல் வீழ்ந்தபின்னே அவளின்
ஒளிமார்புக் காம்புவழித் தமிழேறிப் பாய்ந்தால்,
தெருக்கடையில் இறங்குகையில் பாட்டுவரும் தெளிவீர்!
தெம்மாங்கு செந்நாவில் எழுந்துவிளை யாடும்! 18

அன்னவரைத் தாம்இயற்கைப் பாவலர்கள் என்போம்!
அப்படித்தான் 'கனகசுப்பு ரத்தினம்' பா வேந்தன்!
இன்னவரைப் போல் இயற்கை இயற்றிவைத்த பேருள்
இவரவரின் ஆசானுக் காசான்என் றுரைப்போம்!
முன்னவரைப் பாரதியைக் குறைசொல்ல வில்லை!
மூச்சிலிவர் தமிழுயிர்த்தால் பேச்சிலவர் என்போம்!
என்னபடி பார்த்தாலும் பாரதிபாட் டுக்கே
ஏழுபடி மேலிருக்கும் பாவேந்தன் பாட்டு! 19

நடுநிலையில் லாமலிதை நாம்சொல்ல வில்லை!
நாமவரின் வழிவந்த நன்றியுரை இல்லை!
கெடுநிலையில் பார்ப்பனர்கள் பாவேந்தர் பாட்டைக்
கீழ்வைத்துப் பேசுகின்றார்; நாமவர்க்குச் சொல்வோம்!
தொடுநிலையில் பாட்டுணர்வில் தோய்கின்ற நிலையில்
தூய்தமிழை மனங்கொண்டு பாடுகின்ற நிலையில்
நெடுநிலையில் மலைப்புனலாய்ப் பொழிந்திருக்கும் நிலையில்
நிலைத்திருக்கும் நிலையினிலே பாவேந்தன் வெல்வான்!

தன்விளக்கம் பாடுகின்றான் பாவேந்தன் இங்கே!
தமிழ்ப்புலவன் செம்மாப்பைக் கேளுங்களிப் பாட்டில்!

'சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத்தால் இயற்கை புனைந்ததோர் உயிர்நான்!'

இன்விளக்கம்! இதுவாகும் 'இயற்கைதந்த உயிர்நான்'
என்றுரைக்க வில்லையவன்; புனைந்தஉயிர் என்றான்!
என்விளக்கம்! உணர்ந்தீரா? இருக்கும் உயிர் யாவும்
இயற்கைத்தாய் செய்தெடுத்து வீசிவிட்ட உயிராம்!
என்வியப்பு! பாவேந்தன் உயிரைமட்டும் நன்றாய்
எழில்சீர்த்தி அறம்செழுமை வீரத்தொடு புனைந்தாள்!

பாவேந்தன் சொல்லுகின்றான்; யாரிவன்போல் சொன்னார்!
பாருங்கள் மேன்மேலும் அவன்கையின் வண்ணம்!
நாவேந்திப் பிறர்சொன்னால் உணர்வேந்திச் சொல்வான்!
நல்லதமிழ் பிறர்சொன்னால் உயிர்த்தமிழைச்
சொல்வான்!
காவேந்திக் கொண்டிருக்கும் பூவேந்தித் தேனைக்
களிமதர்ப்பக் குடித்திசைக்கும் தேனீப்போல் தமிழின்
ஈவேந்தித் தருகின்றான் செந்தமிழாய்! பாவாய்!
இயற்கையினை இவனைப்போல் படம்பிடித்த தெவரே?!

'கடல்நீரும் நீல்வானும் கைகோக்கும்' என்றே
கற்பனைக்கும் கற்பனையாய் யார்சொன்னார்! கேட்பீர்:

'கடல்நீரும் நீல வானும்
கைகோக்கும்! அதற்கி தற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்!
எழில்வீணை! அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றே வீணை
நரம்பினை அசைத்தின் பத்தை
வடிக்கின்ற புலவன்! தம்பி
வன்கடல் பண்பாடல் கேள்!

உடலிலவன் நறுந்தென்றல் உணர்வுபெற்றுப் பேசும்
ஒருபாட்டைக் காட்டுகிறேன் கேளுங்கள் நன்ருய்!

"களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணுடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்ருய் தென்ற லே,நீ!"

அடல்மிகுந்த கடுங்காட்டை அவன்காட்டு கின்ருன்!
ஆனைஒன்றே இளமரத்தை முறித்திடுமாம்—பாரீர்!

"ஆனைஒன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனைஒன் றணுகும்; அங்கே
புலிஒன்று தோன்றும்; பாம்பின்
பானைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும்! கன்ருே
மானைக்கா ணுது நிற்கும்!
அதைஒரு நரிபோய் மாய்க்கும்!"

தொடவில்லை; தொட்டாலே விடவில்லை என்பார்;
தொடாதெதும் பாவேந்த னிடமில்லை என்பேன்! 23

சூரையின்மேல் குரங்கூசல் காட்டுகின்ருன் காணீர்!
குறத்தியர்கள் ஒளியழகைப் பேசுவதைக் கேளீர்!

"செருந்தி, ஆச்சா, இலந்தை
தேக்கீந்து கொன்றை யெல்லாம்
பெருங்காட்டின் சூரை! அந்தப்
பெருங்சூரை மேலே நீண்ட
ஒருமூங்கில்; இருகு ரங்கு
கண்டேன் பொன்னூசல் ஆடல்!"

'குறத்தியர் கவண்ண டுத்துக்
குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!
எறியும்கை செங்காந் தட்பூ
உடுக்கைதான் எழில் இடுப்பே!

நீரையவன் காட்டுகின்றான்! அந்நீரில் மேயும்
நெளிவை அவன் காட்டு கின்றான்! அருவியதும் பாரீர்!

'பெருஞ்சிங்கம் அறைய வீழும்
யானைபோல் பெருகிப் பாய்ந்து, வரும்
வெள்ளம்!'

"இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங்க ளின்மேல்
ஒருநாரை வெண்டா ழம்பூ!'

"அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர்; மணியின் குப்பை!"

நீரினுள்ளே கதிர்நுழைந்து நெளிவதைச்சொல் கின்றான்!
நீங்களுந்தாம் பார்த்திருப்பீர்! நினைவுவந்த துண்டா?

'பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர்க லந்து
நளிர்கடல் நெளிதல் கண்டேன்!

வேரினுள்ளே தமிழ்பாய்ந்தால், தமிழுருவைப் போட்டால்
விளைவெல்லாம் தமிழ்ப்பாதான்! வேறென்ன
தோன்றும்? 24

தோற்றுகதிர் கடல்மிசையில் எழுந்ததுவும் தங்கத்
தூறல்வந்து விழுந்ததென்பான்! ஒளிவெளியாம்
என்பான்!
'மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து
வெந்துநீ ருகாமல் இருத்தல்வியப்' பென்பான்!
ஏற்றுகின்ற உவகையெல்லாம் இயற்கையினைக் காண்பான்!
எடுத்துக்காட் டங்கொன்றும் இங்கொன்று மாக!
போற்றுங்கள் கேட்டுவிட்டுச் சிறந்திருந்தால்! அன்றேல்
புலவன்எவன், மற்றவனைக் காட்டிவிட்டுப் போங்கள்!

"உரித்தநற் றுழம் பூவின்
நறும்பொடி உதிர்ந்த தைப்போல், பெருமணல்'

"முதலைகள் கிடப்பதைப் போல்
சின்னதும் பெரிதுமான வெடிப்புகள்!"

'கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை'

'காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பு'

'வெண்தா மரையில் விளையாடும் வண்டுபோல்
கண்தான் பெயர,நீ என்ன கருதுகின்றாய்?" —
தாலாட்டு

'புன்னை மலர்க்காம்பு போன்றதோர் சிற்றடிப் புறா!
கிளிக் கழுத்தின் பொன்வரிபோல் அரும்பும் மீசை!'
'பொரியலோ பூனைக் கண் போல் பொலிந்திடும்'

'கறந்தபால் நிறந்திகழ் கவின்உடை பூண்ட
மருத்து விச்சி'.

'காட்டுமுயற் காதிலையும் களியானைத் துதிக்கை
அடிமரமும் வானில்
நீட்டுகிளை கொய்யா?'

'ஒடுபிளந்தசெம் மாதுளைபோல் உதடு'

'காதோரத்து வண்டுவழி'.

'ஓடை மலர் முகம்'

'காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை'

(முழுப்பாட்டு வேண்டுமா ?)

"ஓடு பிளந்தசெம் மாதுளை போல் உதட்டில்
உள்ளம் விளைத்தநகை மின்னவும்—கா
தோரத்து வண்டுவிழி ஓடை மலர்முகத்தில்
ஓடிஎன் உளங்கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும்
ஆடற்கலைக் கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்!"

"எளிய நண்டின் கட்சிறிய .. களாக்கனி"

"குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்
துத்திக்காய் போலச் சுடர்முகச் சுருக்கம்'

"மீன்வலை சேந்தும் கயிற்றை வேய்ந்த வளையம்போல்

"தாழையின் முள்போல் தகுசீரகச்சம்பா!" (தேன்குழல்)

"விழுந்துபடும் செங்கதிரை வேல்துளைத்த தைப்போல்
உளுந்து வடை"

"ஆனை அடிபோல் அதிரசம்"

"கொட்டித் தும்பைப்பூக் குவித்ததுபோல்...பிட்டு"

"எருமைமுது கென்புபோல் பண்ணிய
தங்கமணிக் கோவை"

"முல்லையரும்பாம் குருவியின் மூக்கு!
மல்லி பிளந்தது போன்றதன் கண்!"

"கூனன் புகுந்தாலும் குனிந்து புகுங் குடிசை"

இப்படியாய் உவமைநலம் எடுத்தெடுத்துச் சொல்வான்!
எல்லாமும் இயற்கையிலே விளைந்துவந்த ஆக்கம்!
தப்படியாய் அடித்துவிட்டுத் தம்மடிக்கே ஒப்பத்
தமுக்கடிக்கக் காசுகொடுத் தோரிருவர் வைக்கும்,

செப்படியாட் டப்புலவன் பாவேந்தன் அல்லன்!
சீர்த்தி, அறம், செழுமையொடும் இயற்கைபுனே
மேலோன்!
மப்படிக்கே மயிலாடல் உண்மையதாம் என்ருல்,
மனங்களிக்கப் பாவேந்தன் பாடியதும் உண்மை!' 26

ஒன்றுரைப்பேன் நீங்களதை உணர்ந்துகொளல் வேண்டும்!
உலகமெலாம் அலேந்தாலும் இப்புதுமை காணீர்!
துன்றிருளும் தூங்குகின்ற இடங்காட்டு வீரா?
தோதுபல ஆய்ந்தாலும் தோற்றுத்தான் போவீர்!
இன்றன்ரும்; இனியன்ரும்; எந்நாளும் இதுபோல்
எப்புலவ னும்காட்டான் இயற்கைசெயும் கூத்தை!
ஒன்றன்மேல் ஒன்றடுக்குந் தாமரைப்பூ விதழ்க்குள்
உறங்குகின்ற இருளை எவன் காட்டிவிட்டுப் போனுன்? 27

பாடலினைக் கேளுங்கள்; 'அடுக்கிதழ்த்தா மரைப்பூ
இதழ்தோறும் அடிப்புறத்தில் படுத்திருப்பாய் நீதான்''.
ஓடவிழ்க்க வெளிப்படுமோர் ஒளிமுத்தம் போல
இயற்கையின துண்மையெலாம் கண்டுகண்டே
உரைத்தான்!

தேடரிதாம் சொற்களெலாம் பாவேந்தன் உள்ளம்
தேடிவந்து குடிபுகுந்து தேவைவரும் போதில்
மூடரிதாம் வாயில்வழி தூவல்வழி யாக
மூண்டுவரும் பாட்டாகப் பாரதிதா சற்கே!

## 2. இனம்

இயற்கையினை ஒருவாருய் ஈங்கெடுத்துச் சொன்னேன்!
இனம்பற்றிக் கூறுமவன் கருத்துநலன் கேட்பீர்!
செயற்கையிலாப் புலவனவன்! செந்தமிழ்த்தேன் ஊற்று!
செப்புகின்ருன் கேளுங்கள்! எண்ணுங்கள் இதனை!

"தமிழர்நாம் என்ருல் நம்பால்
தமிழ்உண்டா? ஒழுக்கம் உண்டா?
அமைவுறச் சிறிது முண்டா?
அன்றைய மறத்த னந்தான்

கமழ்ந்திடல் உண்டா? கல்வி
கலைநலம் உண்டா? நெல்லின்
உமிழுனை அளவி லேனும்
ஒற்றுமை உண்டா?"—என்ன?

மயற்கையுள்ள தமிழினத்தின் முன்வந்து நின்று
மற்றொன்றைக் கேட்கின்றான்! சொல்லுங்கள்
பார்ப்போம்.

"வெள்ளையன் ஆட்சி தொலைத்தோம்!—இனி
வேற்றுமை யுற்றுக் கிடந்தால்
எள்ளி நகைபுரி யாரோ?—நமை
இப்பெரு வையத்தில் உள்ளோர்?
கொள்கை திருத்திடு வீரே!"

முயற்கையை யானைக்கை போல்மிகவே நீட்ட
முயல்கின்றோம் முயல்கின்றோம்? தோற்றுப்போ
கின்றோம்! 29

அதைக்கண்டு வருந்துகின்றான் பாவேந்தன் இங்கே!
அப்பாட்டில் அவன்ஏக்கம் கனவெல்லாம் தோன்றும்!

"சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்
அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?
சமயம் சாதி தவிர்வ தெந்நாள்?"

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பார்!
கள்ளத்தால் நெருங்கொ ணாதே—
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?"

இதைக்கண்டு கொண்டோம் நாம்? என்செய்தோம்? இங்கே
ஏற்றத்தாழ் வொழிந்ததுவா? சாதிகள் மாய்ந் தனவா?
கதைக்கின்றோம் பாடுகின்றோம்! பாவேந்தன் சொன்ன
கருத்துக்கும் மதிப்பில்லை! விழாவெடுப்போம்! அதனால்
புதைக்கின்றோம் அவன்பெருமை! புகழ்ச்சிவெறுஞ் சொல்லா?
புரட்சிசொன்னான்! மருட்சியுற்றோம்? இருட்காட்டில் வாழ்வோம்! 30

"இருட்டறையில் உள்ளதடா உலகமெலாம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றான்" என்றான்!
திருட்டுக்கூட் டம்தமிழர் கூட்டமென்று சொல்வேன்.
தில்லுமல்லுக் கூட்டந்தான்; இல்லையென்று சொன்னால்
குருட்டடியாய்ப் பாவேந்தன்பாட்டையெல்லாம்கூட்டங்
கூட்டந்தோ றும்சொல்லிப் பெரும்புலவர் போல
ருட்டுவமா மக்களைநாம்? சொன்னவற்றுள் ஒன்றை
மதிப்பிற்கே னும்செய்து பெருமைபெற் றோமா? 31

இனம்பாடி இனம்பாடி இனம்விழிக்கும் என்றே
எதிர்பார்த்தான் எதிப்பார்த்தான்! இனும்விடிய
மனம்போன படிவாழ்ந்து மக்களினும் கேடாய் [வில்லை!
மண்ணுலகில் தமிழினந்தான் பின்னடைந்த தென்று
பெனம்பெரிய பெருமையினை நாம்வாங்கிக் கொண்டோம்!
பேசுகின்றோம்! வீசுகின்றோம்! பெருத்தநடை போட்டோம்!
இனும்திருந்த வில்லையெனில் என்றுந்திருந் தோம்நாம்!
'இன்னலிலே துயில்கின்றோம்' பாவேந்தன் சொல்வான்! 23

"இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்!
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கி,என்
ஆவியில் வந்து கலந்ததுவே!"

இன்பத்தில் தூங்கிடலாம்! 'இன்னல்களுக் கிடையில்
என்தமிழ மக்கள்துயில் கின்றனரே' என்றான்!
துன்பத்தில் தூங்குபவன் நோயாளி, பேதை!
'துயின்றிருந்தார் என்தமிழ மக்க'ளெனும் கூற்றில்
என்புதுமை காட்டுகின்றான்? தெரிந்தீரா? மற்ற
இனமக்கள் எல்லாரும் விழித்திருக்கின் றாராம்!
'என்மக்கள் மட்டும்துயில் கின்றார்'என் கின்றான்!
இதனாலே கழிவிரக்கம் கொள்கின்றான் நம்மேல்! 33

நம்மினத்தை அன்னவன்போல் விழிக்கவைக்கும் முயற்சி
நாளைவரை எப்புலவன் தமிழகத்தில் செய்தான்!
வெம்மனத்தைக் கொண்டுள்ளோம்! வீண்வாழ்க்கை வாழ்வோம்!
விடியாத மூஞ்சிகளாய்த் தூங்குகின்றோம் இன்னும்!
அம்மணமாய் நம்முன்னர் அலைந்தவர்கள் எல்லாம்
அழகழகாய் உடையுடுத்தே உலகஉலாப் போந்தார்!
கும்மிருளில் குருட்டாட்டம் போடுகின்றோம்! ஐயோ!
'கும்பிக்குச் சோறு"என்றால் தாயினைவிற் கின்றோம்! 34

3. சீர்திருத்தம்

அடுத்தபடி பாவேந்தன் சீர்திருத்தம் சொல்வான்!
அத்தனையும் நாம் கேட்டோம்; கேட்டுநடந் தோமா?
உடுத்தபடி உண்டபடி உறங்கியுறங் கியராய்
உயிர்த்துயிர்த்துச் சாகின்றோம்! உருப்படியாய் வாழோம்!
மடுத்திடுவீர் பெண்கள்நலம் பேசுகின்றான்; நாமும்
மாரடித்துப் படிக்கின்றோம்; நொண்டி நொண்டி நடப்போம்!
கொடுத்தாலும் வாங்குகிலோம்; கொண்டாலும் காக்கோம்!
குலம்பிழைக்கப் பெண்களைநாம் வாழவைப்போம், கேட்பீர்'. 35

'இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களைஆ டவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்,
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?
செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்
செயற்பால தாயினுமே முதன்மைஎனக் கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்
அமைதியுல குண்டாகும்!'—பாவேந்தன் சொல்வான்!

'பெண்டாட்டி என்று பெயரடைந்த நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை!
தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான்செயலாம்!
இன்னல் மனைவிக் கிழைத்தால் கொலைக்குற்றம்'

'ஆணுயர் வென்பதும் பெண்ணுயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை'—

தீண்டாமை பற்றியெல்லாம் மிகத்தெளிவாய்ச் சொன்னான்!
திராவிடர்தம் இனத்தலைவர் நம்பெரியார் சொன்ன
வேண்டாமைப் பட்டியல்கள் அனைத்தையுமே பாட்டாய்
ஆரியர்கள் வெலவெலக்க ஆக்கியவன் தந்தான்!
'தீண்டாதார் எனுமவரும் பிறரும்ஓர் தாயின்
திருவயிற்றில் வந்தவரன் றோ?' என்றே கேட்டான்!
ஈண்டெல்லாம் பெருச்சாளி கோயில்நுழை கையிலே
இவர்க்குமட்டும் கோயில்விலக் கேனென்றூர்ப்
பரித்தான்! 36

''நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி
நேரில்அக் கோயிலிலே—கண்டும்
ஒத்தபிறப்பின ரைமறுத் தீர்உங்கள்
கோயிலின் வாயிலிலே!'

'ஏகபரம் பொருள் என்பதை நோக்க
எல்லாரும் உடன் பிறப்பே!—ஒரு
பாகத்தார் நீண்டப் படாதவர் என்பதி
லே,உள்ள தோ சிறப்பே!'

'இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்
சாதிக்குச் சாவுமணி அடிக்க'

சாதியொழிப் பதும்தமிழை வளர்ப்பதுமே நம்மோர்
செயவேண்டும் சீர்திருத்தம் எனத்தெளிவாய்ச்
சொன்னுன். 37-1

'சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளாத்தல்மற் றொன்று!
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை.'

சாதியொழி யாதஒரு மக்களினந் தன்னில்
சரிநிகர்த்த வாழ்வெங்ஙன் அமைந்துவிடும்-என்ருன்.

'சரிநிகர் மக்கள் என்னும் அரியதோர்
அமைதிக் குரலினை ஆர்தல் எந்நாள்?
சமயம் சாதி தவிர்தல் எந்நாள்?'

'என்றுதான் சுகப்படுவதோ?—நம்மில்
யாவரும் சமானம் என்ற நன்னிலை யில்லை—அந்தோ
ஒன்றுதான் இம் மானிடச் சாதி—இதில்
உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ'

சாதியொழி யாநிலையில் குடியரசால் என்ன
சாய்த்துவிடப் போகின்ருேம்? சட்டங்கள் வேண்டும்!
மீதிவகைத் திருத்தமெனப் பட்டியல்கள் சொல்வான்!
மேம்பட்ட புலவனவன் பாடுவது கேட்பீர்! 37

'நாட்டினிலே குடியரசை நாட்டிவிட்டோம் இந்நாள்
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்!
காட்டோமே சாதிமணம்! கலப்புமணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி! கட்டாயக் கல்வி

ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே!
உழையாளை நோயாளி ஊர்திருடி என்போம்!
கேட்டையினி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே'!

'ஒருகடவுள் உண்டென்போம்; உருவணக்கம் ஒப்போம்;
உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும்மதம் ஒழிந்தால்;
திருக்கோயில் தொழிற்சாலை' என்றவனும் சொல்வான்!
தீமைதரும் தொல்லைகளை உடன்மாற்றக் கேட்டான்.
திருமணத்தும் சீர்திருத்தம் வேண்டுமென்று சொல்லித்
'திராவிடர்க்குப் புரட்சியான திட்ட'மொன்று தந்தான்
ஒருமணத்தை ஆதரித்தான்! மறுமணத்தை ஏற்றான்.
உயர்காதல் போற்றுதற்குக் கருத்தடையை ஏற்றான்.

'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்! இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? அன்று தவிப்பதற்கோ' என்று
சாட்டையடி யாய்க்கேட்டான் பல்லாண்டு முன்பே!
தீதில்லாப் பொதுவுடைமை வேண்டுமெனச் சொல்லும்
தெள்ளுதமிழ்ப் பாடல்களை உலகறிய வேண்டும்! 39-1-3

'புதியதோர் உலகுசெய் வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!'

'எல்லார்க்கும் எல்லாம் என் றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!'

'எல்லார்க்கும் தேசம்! எல்லார்க்கும்
உடைமையெலாம்!
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!'

கோதில்லா நெஞ்சத்தின் உயர்கருத்தாம்! இவற்றைக்
கோணல்உல கம்ஏற்று, நிலைநிமிரல் வேண்டும், 39-4

கட்டாயக் கல்வியொடு பணிவேண்டும்' என்பான்!
'கல்விதராக் கசடர்க்குத் தூக்குமரம்' என்றான்!
திட்டமிட்டுத் தொழிலாளர் ஒன்றுபடல் வேண்டும்,
தீங்குவரும் இல்லையென்றால்' என்றறிக்கை செய்வாட்! 40-2

'வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்!
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி'—என்பான்!

மட்டமெனத் தமிழ்மொழியை மதிக்கின்ற செயலை—
மடமையெனக் கடிந்தொதுக்கித் தமிழர்களைப்
பார்த்துக்
திட்டமிட்ட படைவேண்டும் தமிழ்காக்க என்றான்
தெருவிலுள்ள பலகைகளில் தமிழ்வேண்டும் என்றான்!

'வாணிகர்தம் முகவரியை வரைகின்ற பலகையில்ஆங்
கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச்
சொல்லல் வேண்டும்!'

தனித்தமிழை வலியுறுத்தித் 'தமிழியக்கம்' செய்தான்!
தான்தொடக்கத் தெழுதிவிட்ட கலவைநடை போல
இனித்தாளில் எழுதிடுவ தில்லையெனச் சொன்னான்!
எம்மொழிக்கும் தமிழ்மொழியே தாய்மொழியென்
றார்த்தான்!

தனித்தமிழை வற்புறுத்திப் பாவேந்தன் சொன்ன
தங்கவரிப் பாடல்களை நம்மிளைஞர் பாடி
பணித்தமிழை உலகமெலாம் பரப்பிடுதல் வேண்டும்!
பாவேந்தன் பாடுகின்றான் செவிமடுத்துக் கேட்பீர்!

'தொண்டர்படை ஒன்றமைத்துத் தமிழ்எதிர்ப்போர்
தொடர்ந்தெழுதும் ஏட்டையெல்லாம்
கண்டறிந்த படிஅவற்றை மக்களெல்லாம்
மறுக்கும்வண்ணம் கழற வேண்டும்!'

'ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல்மொழியைக்
கற்கையிலும் எந்த நாளும
தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்
பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்!'

'வட்மொழியும் பிழைத்தமிழும் பெருகிவிட்டால்
வருநாளில் தமிழறியும் வடமொழிமே லோங்கும்'

'பிறமொழிக்குத் துணைநின்றும் தமிழ்மொழியின்
பீடழிக்கும் துணைநின்றும் தமிழ்மொழியின்
சிறுமையுறு வடமொழிக்குக்
கழகங்கள் இங்கமைத்தும் தீங்கு செய்வார்'

'நற்றமிழில், தமிழகத்தில் நல்லெண்ணம்
இல்லாத நரிக்கூட்டத்தைக்
கற்றுவைக்க அமைப்பதினும்
கடிநாயை அமைத்திடலாம்'

மொழிநிலையிற் பாவேந்தர் தமிழர்க்குச் சொன்ன
முழுக்கருத்தும் தமிழர்களின் உளத்திருத்தல் வேண்டும்!
அழிநிலையில் உள்ளதமிழ் அழியஅழி யத்தான்
ஆன்றஇனம் அழிந்துவரும் உண்மையிது காண்பீர்!
விழிநிலையில் வைத்துதமிழ் காத்துவரல் ஒன்றே
வீழ்ந்தஇனம் மீண்டுமெழ வாய்ப்புநல்கும் என்பேன்!
பழிநிலைக்கே ஆளாக வேண்டாமே தமிழர்!
பாழ்விழுந்தால் தமிழினமே படிப்படியாய் மாளும்'-42

4. நாடு

இனியவனும் நாடுபற்றி எடுத்துரைத்த வெல்லாம்
இங்கெடுத்துக் கூறிவிடல் எளிதிலைகாண் பெரியீர்!
'எனையீன்ற தந்தைக்கும் தாயினுக்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்குமென்ற னாலே
தினையளவும் நலமேனும் கிடைத்திடுவ தென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாம்' என்றே
பனிமொழியில் சூளுரைத்துப் பாவேந்தன் சொன்னான்!
பாவலருள் எவரிந்த உரைசொன்னார்? பாரீர்! -43

எரிகின்ற நெஞ்சின்மேல் ஆணையிட்டுச் சொன்னான்!
இனியெங்கள் ஆட்சியிந்த நாட்டிலென்றே
உரைத்தான்
எரிசருகு தமிழர்களை எதிர்த்திடுவோர் என்றான்!
இன்னுமவன் நாடுபற்றிச் சொன்னமொழிகேட்பீர்!

'தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்'.

'செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்த தென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!'

புரிகின்ற தமிழ்ப்போர்க்குப் புதுப்புரட்டுக் காரர்
புலைமனத்தால் தடையிடுவார் நாம்அஞ்சல்
வேண்டாம்.
சரிகின்ற தமிழினத்தைக் காத்திடுதற் கென்றே
சாகாத உணர்வுடைய இளைஞர்க்கிவை
சொல்வான்! -4 t

'தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்ச மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!

'தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழர்களே களைநீக்க வேண்டாமா? உங்கள்
சமையஉளத் தாலன்றித் தமிழ்உளத்தால் சொல்க!'

'தாய்த்திருநா டுயர்வெய்தும் நாளெந் நாளோ?
தமிழ்உயரும் நாளெந்நாள்' என்றவனும் கவன்றான்!
வாய்த்த செல்வம் அத்தனையும் ஏழையர்க்கே உதவும்
வழிசெய்ய வேண்டுமெனத் தமிழரைக்கேட் கின்றான்!
நோய்த்தமிழர் நோயுள்ளம் நோய்நீக்கி—நாட்டின்
நொடிவெல்லாம் நீங்கிநலம் பெறுதலென்றோ என்று
வாய்த்தமிழில் பாடியுளம் ஏங்கித்தவித் திட்டான்!
வருங்காலக் கனவுநலம் கூறுகின்றான் கேட்பீர்! —45

என்னருமைத் தமிழ்நாட்டை எழிற்றமிழால் நுகரேனோ?
செவியில் யாண்டும்
கன்னல்நிகர் தமிழிசையைக் கேளேனோ? கண்ணெதிரில்
காண்ப வெல்லாம்
தன்னேரில் லாததமிழ்த் தனிமொழியாய்க் காணேனோ?
இவ்வை யத்தில்
முன்னேறும் மொழிகளிலே தமிழ்மொழியும்ஒன்றெனவே
முழங்கே னோநான்!'

5. வீரம்

வீரம்அவன் பாக்களிலே செறிந்தோடி நிற்கும்!
விளையாட்டுத் தமிழ்ப்பேச்சும் வெந்தணலாய்க்
காய்ச்சும்!
ஈரம்அவன் தமிழ்ப்பாட்டில் இருந்தாலும் எதிரி
எலும்பினையும் நீறாக்கும் சொற்கள்விளை யாடும்!
பாருங்கள் வகைக்கொன்றாய்ப் பாவேந்தன் உள்ளம்
பகைமுன்னம் கனல்கக்கும் வரிகளைச்சொல் கின்றேன்!
சேருங்கள் ஒருமனமாய்! ஒருடலாய்! உயிராய்!
செந்தமிழின் பெரும்படையில் சேருங்கள் இனியே! 46

'தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்'.

'இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன் றைநான்
ஒருவனே எதிர்ப்பேன்'.

'செழிப்போரே! இளைஞர்களே!
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுகநம் தாய்
'மொழிப்போரே வேண்டுவது!
தொடக்கஞ்சேய் வீர்வெல்வீர்!
மொழிப்போர் வெல்க!

'கடல்போலும் எழுக! கடல் முழக்கம்போல்
கழறிடுக! தமிழ்வாழ் கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!'

'அரசிருந்த தமிழன்னை ஆட்சியிலே
சூழ்ச்சி செய்யும் ஆட்கள் யாரும்
எரிசருகு! தமிழரிடை எழுச்சியுறும்
தமிழார்வம் கொழுத்த தீ! தீ!'

'சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற! விழி!

............................................................

வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!'

'மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!

மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இதுஉன் வீடு'

— "சிறுத்தையே வெளியில்வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செயப் புறப்படு வெளியில்!'

,கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பாரெனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!'

'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனைஎன்
தாய்தடுத் தாலும் விடேன்'

'தமிழ்எங்கள் உயிரென்ப தாலே—வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே'

'உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை'

எப்படித்தீ எழுப்புகின்ற செழுங்கூர்மைச் சொற்கள்!
ஈட்டியென-வேல்களென எதிரிகளின் நெஞ்சில்
அப்படியே போய்ப்பாய்ந்து குலைநடுங்க வைக்கும்!
அலையலையாய்த் தமிழினத்தின் வெற்றிகளைக் குவிக்கும்!
இப்படியார் எழுதியவர்? இழிவயிற்றுப் பசிக்கே
எழுதிநலந் தேடிடவே எல்லாரும் பாடி
முப்படியாய்த் தமிழ்நலத்தை தமிழினத்தைத் தீய்த்தார்!
மூண்டுவந்த எரிமலையாய்ப் பாவேந்தன் எழுந்தான்! 47

கம்பன்முதல் கண்ணனுக்குத் தாசன்வரை எல்லாம்
'கவி'யெழுதிப் பாட்டெழுதி உடல்வளர்த்த நாட்டில்
கொம்புயர்ந்த காளையென அரிமாவே என்ன
கொடுமுடியில் வீழ்ந்தஇடி முழக்கத்தைச் செய்து
நம்பிறழ்ந்த நிலையினையும் நம்மிழிவும் போக்க
நானென்றே எழுந்துவந்தான் பாவேந்தன் போல—
சிம்புள்எது? வேங்கைஎது? அடடா,ஓ! சீ!சீ!
சீரழியும் உடலுக்குள் மானமன்றோ வீரம்! 48

6. தமிழ்

செந்தமிழ்மேல் பாவேந்தன் வைத்தபெரும் அன்பைச்
சிறுமைபெற வெறியென்னும் வெறிநாய்கள் மட்டும்
தந்தம்மொழி மேல்வைக்க விலையாஇந் நாட்டில்!
தாய்மொழிமேல் அன்புவைத்தே இனம்பேணல் தீதா?
இந்திமொழி மேலவர்கள் வெறியின்றித் தானோ
'எல்லாரும் இந்திபடித் திடுக'என மொழிவார்!
சொந்தமொழிக் குயர்வின்றி இனந்தாழும் போது
சொத்தைமொழி-பிறமொழியைப் போற்றுவதே தீது!

பாவேந்தன் தமிழ்க்காதல் இயற்கை; அதில் தாழ்ச்சி
பகருவதே தாய்மொழிமேல் பற்றற்ற செய்கை!
ஈவேந்தும் தாயன்பு கொழித்திடும்தாய் மொழியில்!
எந்தாய்மேல் பற்றுவைக்கும் உணர்வு,வெறி என்றால்
சாவேந்தும் அக்கொள்கை; சழக்கேந்தி வீழும்!
சரிநிகர்க்கும் தாய்மொழியும் பிறமொழியும் என்றே
நாவேந்திக் கூறிடினும் ஒப்பிவிடோம் யாங்கள்!
நந்தமிழர் முன்னேற்றம் செந்தமிழ்முன் னேற்றம்' 50

நேற்றுவந்த இந்திமொழி தேசமொழி என்றால்,
நிலத்துமொழி யாவினுக்கும் தாயாகி நிற்கும்
ஊற்றுமொழி, உணர்வுமொழி, உண்மைமொழி, இந்த
உலகத்து மொழிகளுக்கும் மூத்தமொழி, மேலோர்

ஏற்றமொழி, இயற்கைமொழி, இனியமொழி, பண்டை
இலக்கியமும் இலக்கணமும் செறிந்தமொழி, இன்னும்
வேற்றுமொழி யாவையுமே கருவுயிர்க்காப் போதில்
விளைந்துபெரு மரமாகி நிற்குமொழி தமிழாம்! 51

செந்தமிழைத் தாய்மொழியென் றொருமுறையால் மட்டும்
சிறப்பதன்மேல் சாற்றவில்லை; தாய்மைமை யானால்
சொந்தமென ஒன்றிருக்கும்; உயர்வென்றால் சரியோ?
சொல்லுகின்ற சிறப்பெல்லாம் உலகப்பே ரறிவோர்
தந்தசிறப் பன்றோ?நம் தாயென்றால் மட்டும்
தகுதியிலாப் பெருமையெலாம் உரிமையென்றே ஆமோ?
முந்துசிறப் பெனில்உலகம் ஒப்புதல்வேண் டாமோ?
முத்தமிழின் முழுச்சிறப்பில் எத்தவற்றைச் சொல்வீர்?

பலரறியும் வாய்ப்பொன்றால் ஒருமொழியைப் பிறரும்
படித்தறிய வேண்டுமெனில் அறிவுக்குயர் வெங்கே?
பலரறியும் கீழ்மைக்கும் மேன்மேலும் மேலும்
பல்வகையால் அதிகார வாய்ப்பளிப்ப தென்றால்
சிலரறியும் சிறப்புக்கும் கீழ்மைவா ராதோ?
சிந்தனைக்கும் உயர்வுக்கும் மற்றென்தான் பெருமை?
பலரறிவ தென்றில்லை; உங்கள்கர வெல்லாம்
பைந்தமிழ்க்குச் சிறப்புவரக் கூடாதென் பதுவே!

செந்தமிழ்க்கு வாய்ப்பளித்திங் குலகறியச் செய்தால்,
செத்தமொழி வடமொழிக்கும் இந்திக்கும் என்று
சொந்தநலம் ஒன்றிருக்கக் காணார்கள் யாரும்!
சோற்றுநலம் பெரிதென்பார் இங்கிருப்ப தாலே
எந்தமிழைப் பிறரறிய வாய்ப்பின்றிச் செய்தார்!
எதனிலுமே உயர்வுக்கே வாய்ப்பளிக்கும் ஆள்வோர்
செந்தமிழ்க்கு வேண்டாதார்—ஆரியர்என் பதனால்—
சிறுமைக்கே வாய்ப்பளித்துப் பெருமைதனை யழிப்பார்!

எப்பெருமை சாற்றிடினும் ஆரியர்க்குச் சிறுமை
இம்மிவரக் கூடாதென் பதுவடவர் கொள்கை!
எப்பொழுதும் வடவோரே தலைமைதாங் குவதால்
எப்பொழுதும் தமிழுக்கே வாய்ப்பளிப்ப தில்லை!
இப்பொருளை—இவ்வுணர்வை—எந்தமிழர் எக்கால்
ஏற்றறிந்து கொள்வாரோ அப்பொழுதே தமிழ்க்கும்
முப்படியும் வாய்ப்புவரும்; இனமும்முன் னேறும்!
முன்னிழந்த பெருமையெலாம் பின்னெழுந்து சேரும்!

ஈங்கிதைத்தான் பாவேந்தன் எடுத்துரைக்கக் கேட்டோம்!
ஏற்றமிகு பாக்களினால் மாற்றம்வரக் காணோம்!
ஆங்கதையே பெருமையெனக் கருதிவிட்ட ததனால்
அவன்கருத்தை விட்டுவிட்டே அவன்பெருமை
ஆர்ப்போம்!

தூங்குகின்றோம்; தூங்குகின்றோம்; தூங்குகின்றோம் இன்னும்!
தொடையினிலே கயிறுபிறர் திரிக்கத்தூங் குகின்றோம்!
ஏங்கினவன் பாவேந்தன்! எடுத்தெடுத்துச் சொன்னான்!
எந்தமிழர் கேளார்கள் எனவறிந்தும் சொன்னான்! 56

மன்றிருந்த தமிழ்வாழ இனம்வாழ, இங்கே
மலிந்திருந்த வளமெல்லாம் என்றென்றும் வாழ,
அன்றிருந்த பெருமையெலாம் நினைவூட்டிச் சொன்னான்;
அணுஅணுவாய் எந்தமிழர் சிதைந்தகதை சொன்னான்!
வென்றிருந்த தமிழ்ஒருகால் வீரம்எனும் கொம்பில்
வீறுபெறும் கொடியாகப் பறந்தகதை சொன்னான்!
இன்றிருக்கும் தமிழனுக்கோ சோற்றுருண்டை மீதில்
இருந்துவரும் ஆசையிலே எதையெண்ணிப் பார்ப்பான்?

'செந்தமிழே உள்ளுயிரே நறுந்தேனே என்றன்
செயலெல்லாம் மூச்செல்லாம் உனக்களித்தேன் யானே!
நைந்தாய்,நீ எனில்நைந்து போகுமென்றன் வாழ்வே
நன்னிலைஇங் குனக்கென்னில் எனக்கும்அது தானே!'

செந்தமிழில் இக்கருத்தை அவனெழுத வில்லை!
செங்குருதிச் சேற்றினிலே எலும்பொடித்துத் தோய்த்தே
எந்தமிழர் உணரட்டும் வாழட்டும் என்றே
எழுதிவிட்டுப் போனான்; நாம் புழுதியிலே போட்டோம்!

நல்லுயிரும் வல்லுடலும் செந்தமிழும் மூன்றும்
நான்நானென் றார்த்தெழுந்தான்; வீண்வீணாய்ப் போனான்!
சொல்லிலுயிர் கலந்தெழுதி மூச்சினிலே பாடிச்
சோர்ந்தவினம் ஆர்த்தெழவும் பார்த்திருந்தான் காலம்!
வெல்லுமடா எந்தமிழும்! வெற்றிநிலை வாய்க்கும்;
வீணரல்லர் தமிழர்'என வீறுபெறச் சொன்னான்!
மெல்லமெல்ல நந்தமிழர் அவன்பாடல் கேட்டார்!
வேற்றுமொழிக் காரனுக்கே அதையெடுத்து விற்றார்

தமிழையவன் காதலித்தான் அடடா, ஓ அடடா!
தமிழினத்தைக் காதலித்தான் அடடா, ஓ அடடா!
தமிழையவன் தாயென்றான் அடடா, ஓ அடடா!
தமிழினத்தை உயிரென்றான் அடடா, ஓ அடடா!
தமிழையவன் இறையென்றான் அடடா, ஓ அடடா!
தமிழினத்தை உடலென்றான் அடடா, ஓ அடடா!
தமிழையவன் காதலித்தும் தமிழினத்தைப் பார்த்தும்
தமிழாகிப் போனானே அடடா, ஓ அடடா! 6

'கனியிடையில் ஏறிவரும் சுளையினையும் முற்றற்
கழையிடையில் ஊறிவரும் சாற்றினையும் வண்ணப்
பனிமலரில் ஏறிவரும் தேனினையும் காய்ச்சும்
பாகிடையில் ஏறிவரும் சுவையினையும் ஆங்கே
நனி ஆக்கள் பொழிதருதீம் பாலினையும் தென்னை
நல்கியதோர் குளிர்மையிள நீரினையும் முற்றும்
இனியனஎன் பேன்எனினும் எந்தமிழை என்றன்
இன்னுயிர்என் பேன்கண்டீர்' என்றான்பா வேந்தன்!

மேலுமவன் செந்தமிழ்மேல் கொண்டிருந்த அன்பால்
மிழற்றுகின்ற செழும்பாடல் அவன்தமிழில் கேட்பீர்!

"அரும்பு தந்த வெண்ணகையே!
அணிதந்த செந்தமிழே, அன்பே!"

'மடுத்துமகிழ் நறுந்தேனே,
வரைந்துமகிழ் ஓவியமே அன்பே!'

'கண்டுவந்த திருவிளக்கே,
களிப்பருளும் செந்தமிழே அன்பே!'
'உடலியக்கும் நல்லுயிரே,
உயிரியக்கும் நுண்கலையே
கடலியக்கும் சுவைப்பாட்டே
கண்ணான செந்தமிழே அன்பே!'

'ஐயத்திற் கறிவொளியே
ஆடல்தரும் செந்தமிழே அன்பே'—என்று

ஏழும்வகை நூறுமுறை அன்பன்பே என்றே
இன்னுயிரைப் பிழிந்தூற்றித் தமிழ்வடித்த தாரே?
நாலுவகை நூல்களையும் படித்திருப்போம்! 'தமிழே
நான்தும்பி' பூக்காடுநீ' யென்றா தாரே?
பாலிடையில் துளிநஞ்சா? பாவேந்தன் பதைத்தான்!
பைந்தமிழில் மொழிக்கலப்பைச் சாடுவதைக் கேட்பீர்!

'தாய்ப்பாலில் நஞ்செனவே தமிழில்வட
மொழி சேர்த்தார் தவிர்தல் வேண்டும்!
தமிழ்ப்புலவர் தனித்தமிழில் நாடகங்கள்
படக்கதைகள் எழுதல் வேண்டும்!'

'முதல்நூலை அயலான், நஞ்சால்
மூறித்ததும் காணுகின்றேன்'

'தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு'

'கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு;
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு;
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு;
நம்உரிமை தனைக் கடித்ததப் பாம்பு!'

'தனித்தமிழில் இந்நாட்டுத் தக்கபுதுக்
காப்பியம்நன் னூல் இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர், நிலவாவோ
ஆயிரநூல் தமிழகத்தே!'

'அறிவிப்புப் பலகையெலாம் அருந்தமிழ்ச்சொல்
ஆக்குவதே அன்றி அச்சொல்
குறைவற்ற தொடராகக் குற்றமற்ற
சொல்லாக அமையுமாயின்
மறுவற்றுத் திகழாளோ செந்தமிழ்த்தாய்?
தமிழ்மக்கள் மகிழ்ந்தி டாரோ?'

'தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்!'

தமிழ்வளர்ச்சி பற்றியவன் சாற்றுகின்றான் கேளீர்!
தமிழல்லால் முன்னேற்றம் சிறிதுமில்லை என்பான்!

'நமைவளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனும்
தமிழ்அல்லால் நம்முன்னேற்றம்
அமையாது; சிறிதுமிதில் ஐயமில்லை, ஐயமில்லை
அறிந்து கொண்டோம்'

'இன்பத்தமிழ் குன்றுமேல்—தமிழ்
நாடெங்கும் இருளாம்!'

'மொழியென்றால் உயிரின் நரம்பு—நம்
மூத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு'

'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்!
இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்
தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்'

'தாய்மொழி நூற்றுக்கு நூறுபெயர்—பெறத்
தக்கதோர் கட்டாயம் ஆக்கிவிட்டால்
போய்விடும் கல்லாமை'

'செந்நெலை மாற்றிய சோறும்—பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை—கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மதுரஞ்செய் கிழங்கு—காணில்
நாவில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!'

தமிழ்வளர்ச்சி யாலிந்த வையகமே உயுமாம்!
தண்டமிழ்ப்பா வேந்தனவன் சொல்லுவதைக் கேட்பீர்!

'வையகமே உய்யுமாறு வாய்த்த தமிழ்
என் அரும் பேறு'

தமிழ்வளர்ச்சித் திட்டமொன்றே அவனின் தமிழ் இயக்கம்
'தமிழியக்கம்' நூல்போதும் அவன்பெருமை சாற்ற!

தமிழ்வளர்க்காத் தமிழினமோ தாம்வளர்தல் இல்லை!
தன்மொழி,கா வாதஇனம் வளர்ந்ததுண்டோ உலகில்

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!'

'உன்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி'

'அரசினரின் மொழியாக, அரசியலார் மொழியாக
அரசியல் சார்
வரிசையுறு சட்டமன்றின் மொழியாக, வையம் அறி
மொழியாகத்
திருமலிந்த தமிழ்மொழிதான் ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிகஎன வேண்டுகின்றோம்! பொழிகஎன
பொன் மழை தான்! [வேண்டுகின்றோம்

இறுதியிலே உங்கட்குச் சொல்லுகின்றேன் பெரியீர்!
எந்தமிழத் தாய்மாரே! இளைஞர்களே! தமிழீர்!
உறுதியிலே நமக்குய்தி உண்டென்றால் முதலில்
உய்தியுற வேண்டும்தமிழ்! உலகுணர வேண்டும்!
வெறுமுடலில் ஓடுமுயி ரோடுகலந் தோடி
விரிந்துசெலும் நாடிநரம் பெலும்பிலெலாம் தமிழே
மறுவின்றித் திகழ்ந்துணர்வாய்ப் பாய்ந்தோடல்
வேண்டும்!
மாபெரிய தமிழினமும் மிகச்செழிக்க வேண்டும்! 64

வரம்பொன்றால் தமிழ்வரம்பு! வாழ்வும்நமக் கதுவே!
வல்லுணர்வால் பாவேந்தன் முழங்குகின்றான் கேளீர்!
'உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்குத் தீமை
ஒருநிலையில் நேர்ந்ததென நாமுரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாய்
நண்ணிடவும் வேண்டும்;செயல் முன்னிடவும்
வேண்டும்!!
இரும்பன்றோ நம்தோள்கள்! எழவேண்டும் அன்றோ?
எந்தமிழப் பாவேந்தன் இடிமுழக்கம் கேளீர்! 65

'ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள் சேர்ப்பாய்
ஆக்குவிப்பாய்! [இன்பத்தை
ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே!' [துறைதோறும்

"நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!
பொன்மொ ழிக்கு நீ, புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!

(முற்றும்)

*[துணிவும், செம்மாப்பும், தூய நேரிய உள்ளமும் நிறைந்த பாவேந்தரின் வாழ்வில், மிகச் சுவையான பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன! அவற்றில் பல அவரின் குழந்தையுள்ளத்தின் பான்மையை விளக்குவன! ஒரு சிலவற்றில் அவரின் பொதுமை யுணர்வும் ஒழுங்குணர்வும் பளிச்சிடும்!*

*தமிழத்தின் விடுதலைக்கெனத் தம்மை ஒப்படைத்துக் கொண்டு தொண்டாற்றி, வாழ்ந்து மறைந்த பாவேந்தரின் வாழ்வியல் நடைமுறைகளை ஒருவாறு உணர, மணிச்சுருக்கமாக வரையப் பெற்று வெளியிடப்பெற்ற பின்வரும் ஒருசில நிகழ்ச்சிகள் துணை செய்யும்!*

*கடந்தகாலத் 'தென்மொழி'யிதழ்களில், அவ்வப் பொழுது வெளியிடப்பெற்ற சிறுசிறு நிகழ்ச்சிகளின் தொகுப்பு இங்கு அடங்கியுள்ளது! சுவைத்து மகிழ்க! —]*

# 4. நிகழ்ச்சி மாலை



# தொடுத்த மலர்கள்


1. பாரதிதாசனும் புலால்சோறும்!
2. படியளந்த பாவலர்!
3. பாவேந்தர் மனம்!
4. பாவேந்தர் குறும்பு!
5. சாவிலும் தமிழ் வாழ்வு!
6. பாவேந்தரின் நெஞ்சுரம்!
7. பாவேந்தரின் தமிழ்ப்பண்பு!
8. பாவேந்தரும் பருப்புத் துவையலும்!
9. பாவேந்தரும் விளக்கெண்ணெயும்!
10. பாவேந்தரின் பீடு!
11. உப்புமா ஆராய்ச்சி.
12. நினைவாக வைத்துக் கொள்ளுவேன்!
13. உங்கள் அப்பனையுந்தான்!
14. மருத்துவரும் பாவேந்தரும்
15. ஓ! எடுத்துக்கலாமே!
16. ஒழுங்கில்லாதவனிடம் என்னடா ஒழுங்கு?
17. உடம்பெல்லாம் ஊருது,வந்து,பிடி!
18. பாவேந்தர் துணிவு!
19. இப்பொழுது என் மாணவர்!
20. ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வா!
21. பெண்பேச்சாளர் பாதுகாப்புக் கேட்டது!
22. அப்படிச் செய்ய வக்கில்லை;
    அதைச் சொல்ல வந்துட்டியே!
23. நான் யார் தெரியுமா?
    பாவேந்தருக்கு மகன்!
24. அந்த மீசை ஒருத்தன் தான்!
25. இப்பவேண்டாம் இட்டளி!
26. தாத்தா, படம் போட்டுத் தா!
27. நேரே, இங்கயே வந்துட்டியா?
28. அப்ப, தூக்கிக் கீழே போட்டுடு!
29. ஓடையில் தாமரை பூக்குமா?
30. பாவேந்தர் படத்தில் தீப்பற்றாமல்
    தடுத்த பழனியம்மாள்!

# 1. பாரதிதாசனும் புலால்சோறும்

ஒருகால் பாவேந்தர் மதுரையிலிருந்து திருச்சி வழியாகச் சென்னை செல்ல வேண்டியிருந்தது. அவர்க்குத் துணையாகச் சென்னையைச் சேர்ந்த நண்பரொருவர் உடன் இருந்தார். வண்டி திருச்சியை அடைந்தது: இரவு 10, 11 மணியிருக்கும். பாவேந்தரின் அருகில் ஒரு பெரிய பெட்டி, படுக்கை, கைப்பைகள் இரண்டு, சில புத்தகங்கள், இன்னும் சில பொருள்களும் இருந்தன. நிலைய மேடையில் ஒருவன் 'பிரியாணி', 'பிரியாணி' என புலால் சோற்றுப் பொட்டலங்களை எடுத்துக் கொண்டு விரைவாகக் கத்திக்கொண்டே போனான். புலால் சோற்றுமேல் பாவலருக்குக் கொள்ளை வேட்கை! உடனே 'தம்பி, ஓடிப்போய் ஒரு பொட்டலம் வாங்கி வா. இந்தப் பொருள்களைப் பார்த்துக்கொண்டு நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று உடனிருந்தவரை ஏவினார். அவர் இறங்கிப் போவதற்குள் புலால்சோறு வண்டியின் வேறு மூலைக்குப் போய்விட்டது. இவர் அங்கு ஓடினார். இதற்குள் இவர்கள் ஏறியிருந்த வண்டிக்கு ஊதல் கொடுக்கப்பட்டது. பாவேந்தர் தவியாய்த் தவித்தார். சோற்றுப் பொட்டலம் வேறு! ஆள் வேறு!......... இவர்க்கு இருப்புக் கொள்ளவில்லை; கதவருகில் வந்து நின்று பார்த்தார். ஆளைக் காணவில்லை; வண்டி நகர்ந்தது: பாவலர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை; 'சடக்' கென்று கீழே குதித்தார். அவரின் பெட்டி, படுக்கை, பைகள் முதலிய எல்லாப் பொருள்களும் சென்னையை நோக்கிப் போயின! வண்டி மேடையைத் தாண்டிக் கொண்டிருந்த நேரத்தில் சோற்றுப் பொட்டலத்துடன் ஆள் வெறிக்க வெறிக்க ஓடிவந்தார். ''ஏன் ஐயா இறங்கி விட்டிங்க? நான் ஓடிவந்து ஏறியிருப்பேனே பெட்டி படுக்கையெல்லாம் எங்கே?'' என்றார் வந்தவர். 'நல்ல ஆளப்பா நீ; நான் என்ன பண்ணுவது! உன்னை விட்டுவிட்டு எப்படிப் போவது .....? ஒண்ணும் தெரியலே இறங்கிட்டேன்' என்றார். நல்லவேளை பொருள்கள் ஒழுங்காகச் சென்னை நிலையத்தில் எடுத்துவைக்கப்பெற்றுப் பிறகு இவர்களிடம் தரப்பெற்றன

[சுவடி 2. ஓலை 4-பக் 26]

# 2. படியளந்த பாவலர்!

புதுச்சேரிப் பகுதியில் பொதுவாக அரிசி முதலிய வற்றைப் படி நிறையக் கூம்பாக அளக்காமல் தலை தட்டியே அளந்து கொடுப்பது வழக்கம். புரட்சிப்பாவலர் பாரதி தாசன் ஒருநாள் மாலை, கடைத்தெருவில் உள்ள தம் பதிப் பகத்தின் முன்றிலில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். பக்கத்துக் கடை அரிசிக்கடை. அரிசிக் கடைக்காரர் பாவலரின் நண்பர். விற்பனை நேரத்தில் அரிசிக் கடைக்காரர் சிறிதுநேரம் வெளியே போய்வர வேண்டியிருந்தது. உடனே பாவலரிடம், "இந்தக் கடையைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் ஐயா" என்று கூறிப் போனார். பாவலர் கடையைக் கண்காணிக்கும் பொழுதில் ஓர் ஏழைப்பெண் கடைக்கு வந்து ஒரு படி அரிசி விலைக்குக் கேட்டாள். அரிசிக் கடைக்காரர் அதுவரை வராது போகவே, பாவலரே எழுந்து வந்து காசை வாங்கிக்கொண்டு அரிசியை அளந்தார். அவர் தலை தட்டாமல் அளந்து போடுவதை அப்பெண் குறிப்பிட்டு, 'தலைதட்டிப் போடுங்க ஐயா" என்றாள். உடனே அவர் இரக்கச் சிரிப்போடு, "சரிம்மா, இந்தக் கடைக்காரர் ஏமாற்றுக்கார ஆள்; எத்தனையோ பெயரை ஏமாற்றி யிருப்பார். இதனால் அவர்க்கொன்றும் குறைந்து போகாது. இந்தா, பிடி; விரைவாக வாங்கிக்கொண்டு போய் விடு" என்று கூறிக்கொண்டே கூம்புவைத்து அளந்து போட் டனுப்பினார். ஓர் ஆழாக்கு அரிசியை அதிகமாகப் பெற்றுக் கொண்ட அந்த ஏழைப்பெண், இவரை வாழ்த்திக்கொண்டே போனாள்!

[குயில் 1. ஒலி 1. பக். 56-57-நகைநலம் பகுதி]

# 3. பாவேந்தர் மனம்...!

பாவேந்தரை எவர்வந்து எவரிடம் பரிந்துரை (சிபார்சு) செய்யக் கூப்பிட்டாலும் உடனே வந்துவிடுவார். எத்தனையோ பேருக்கு வேலை வாங்கிக் கொடுத்துள்ளார். இந்த வகையில் வீட்டாருக்கு பெரிய மனக்குறை. "இப்படி ஒரு காசு கூட ஊதியமில்லாமல் காலத்தையும்,நேரத்தையும், மானத்தையும் பாராமல் சிறு பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்குக் கூட ஓடுகிறாரே! ஏழைகள்தாம் போகட்டும், பணம் படைத்தவர்களிடமாவது, தம் போக்கு வரத்துச் செலவுக்காகிலும் பணம் கேட்கக் கூடாதா?" என்று அவர் வீட்டாரில் சிலர் வெளிப்படையாகவே பேசிக்கொண்டனர். இதுபற்றி ஒருநாள் அவரிடம் கேட்கப் பெற்றது. "நம்மிடம் பரிந்துரைக்கென்று வருபவர்கள் எல்லாரும் ஏழைப் பிள்ளைகளே! அவர்கள் காசுக்கு எங்கே போவார்கள்? ஒருவரிடமும் ஒரு காசும் வாங்கவே கூடாது ......— நாம் என்ன செய்து விடுகின்றோம் —......பாவம் நம்ம தமிழ்ப் பிள்ளைகள் நிறைய பணத்தைக் கொட்டிப் படிக்கிறார்கள். பிறகு வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். இந்த உதவி கூட நாம் செய்யக்கூடாதா?" என்று அதற்கு விடை கூறினார். ஆனால் அவர் பாடல்களைப் பாடப் புத்தகங்களில் சேர்த்துக்கொள்ள வெளியீட்டாளர்கள் இசைவு கேட்ட பொழுதெல்லாம் ஓர் அடிக்கு இரண்டு 2 ரூபா மேனி கணக்குப்போட்டு வாங்கிவிடும்படி அவர் வீட்டாருக்குக் கண்டிப்பான கட்டளை போட்டிருந்தார்.

[சுவடி 2. ஓலை 4. பக் 34.]

# 4. பாவேந்தர் குறும்பு!

பாரதிதாசன் சிறியவராக இருக்கையில் குயில், சிவா என்பவரும் இவரும் பல குறும்புத்தனங்களைச் செய்துள்ளனர். அவற்றில் ஒன்று இது. ஒருநாள் ஒரு வீட்டில் வாழைமரம் கட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டில் மறுநாள் காலையில் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறப் போவதாக இவர்கள் அறிந்துகொண்டனர். அன்றைய இரவு இவர்கள் இருவரும் சேர்ந்து அவ்வீட்டில் கட்டியிருந்த வாழை மரங்களை வேறொரு வீட்டில் கொண்டுபோய்க் கட்டிவிட்டனர். அத்துடன் விட வில்லை. அந்த ஊர்ச் சாவடியில் தங்கியிருந்த ஏழை இரவலர்களிடத்தில் போய் அந்த வீட்டில் அதிகாலையில் சிறந்த விருந்து கிடைக்குமென்றும் கூறிவிட்டனர். அவ்வளவுதான்! விடியற்காலையிலேயே ஏராளமான இரவலர்களும் ஏழைகளும், துறவிகளும் புதிதாக வாழைமரம் கட்டப்பட்டிருந்த வீட்டு வாயலில் நிரம்பிக் கிடந்தனர். பிறகு தெருவே பெரிய ஆரவாரப்பட்டுக் கிடந்தது. இறுதிவரை அந்த வேலையைச் செய்தவர்கள் இவர்கள் இருவரே என்று ஒருவரும் கண்டு கொள்ளவில்லை.

[சுவடி 2. ஓலை 4. பக். 36]

# 5. சாவிலும் தமிழ் வாழ்வு!

பாவேந்தர் பாரதிதாசன் சென்னை மருத்துவ மனையில் நினைவற்ற நிலையில் படுத்திருந்தார். இறப்பதற்கு இரு நாட்கள் முன்னை, புலவர். திரு.மு. வரதராசனார் பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தார். மு.வ. வின் வரவு பாவலருக்கு உணர்த்தப் பெற்றது. பாவலர் மு.வ. வைப் பார்த்துப் புன்னகை செய்தார். உடனே கையசைத்து அருகில் வரச் செய்து "அடுத்து நடக்கும் புலவர் குழுவின் கூட்டம் பெங்களூரில் நடக்கப் போவதாக அறிந்தேன்; நம் தமிழ் நாட்டின் இசைப் பாடகியான திருவாட்டி. சுப்புலட்சுமியை அங்குள்ள தமிழ்ப்பகைவர்கள் பாடவிடாமல் தடுத்தனரே! அச்செயலுக்கும் கூட நான் கண்டனக் கூட்டங்கள் போட்டேனே! அவ்வூரில் போய் ஏன் புலவர் குழுக் கூட்டத்தை நடத்தவேண்டும்? அங்கு நடத்த வேண்டா என்று போய்ச் சொல்லுங்கள்" என்று கண்களில் ஒளியேறு மாறு உரைத்தார். செத்துக் கொண்டிருக்கையிலும் சாகாத மான உணர்வு பாவேந்தரின் தனி உடைமை!

[சுவடி 2. ஓலை 4. பக்.45]

# 6. பாவேந்தரின் நெஞ்சுரம்!

புதுவையில், முத்தமிழ் மன்றத்தின் சார்பில், திருக்குறளுக்கு இசையமைத்து இசைப்பாடல்களாகவே பாடிக் கொண்டுவரும் புலவர் ஒருவர்க்குப் பாராட்டு நடைபெற்றது. அவ்விழாவிற்குப் பாவேந்தர் தலைமையேற்றார். கூட்டத்தின் தொடக்கத்தில் தலைவர், திருக்குறள் இசைப் புலவரை வரவேற்று அவர் தொண்டை மிகவும் புகழ்ந்தார். "திருக்குறளைப் படித்தறியாத மக்கட்கெல்லாம் பண்ணோடு பாடப்பெறுகின்ற திருக்குறளடிகள் நல்ல பயனைத் தரும்". என்றெல்லாம் பாராட்டினார். கூட்டம் தொடங்கிப் புலவர் ஒவ்வொரு குறளையும் ஒவ்வொரு பண்ணில் பாடிக் கூட்டத்தாரை மகிழ்வித்தார். கூட்டம் இசையால் மெய்ம்மறந்திருந்தது. முதலதிகாரம் முடியும் தறுவாயில் பாவலர் திடுமென எழுந்து புலவரை நோக்கி 'நிறுத்து; நீ இனிமேல் பாட வேண்டா. குறளில் உள்ள சொற்களை இசைக்காகச் சிதைத்தும் பிரித்தும் திரித்தும் பாடுவாய் என்று எனக்கு முன்பே தெரியாமற் போய்விட்டது. இனி இந்த வேலையை விட்டு விடு". என்று கண்டனக் குரல் எழுப்பத் தொடங்கி விட்டார். கூட்டம் திகைத்தது. இசைப் புலவர் மேடையை விட்டுக் கீழிறங்கினார். தம் இசைக் கருவிகளை எடுத்து அக்குளில் வைத்தார். விடுவிடென்று கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஓடினார். பாவேந்தர் ஒலிபெருக்கியில் "போகட்டும்; போகட்டும்; தமிழைக் கெடுக்கும் இத் தகையார் முயற்சிக்குத் துணை நிற்கவே கூடாது". என்று முழங்கினார்.

[சுவடி 2. ஓலை 4, பக்.50]

# 7. பாவேந்தரின் தமிழ்ப்பண்பு!

ஒரு முறை பாவேந்தர் ஓய்வுப் பணம் (பென்சன்) பெற்றுக்கொண்டு இழுவண்டியில் வந்துகொண்டிருந்தார். அப்பொழுது வண்டிக்காரர் அழுது கொண்டிருப்பதைக் கண்டு "ஏன் அழுகிறாய்" என்று கேட்டார். அதற்கு வண்டிக் காரர், "ஐயா என்மனைவி கருப்பமாக இருக்கிறாள்; அவளுக்கு மருந்து வாங்கவும் ஊசி போடவும் பணமில்லை; பலரிடம் கேட்டுப் பார்த்தும் பயனில்லை; அவள் கை, கால்கள் வீக்கமும் தணிந்தபாடில்லை; அதற்கு என்ன செய்வது என்று எண்ணி, எண்ணி நானே அழுது கொண்டிருந்தேன்" என்று புலம்பியவாறே கூறினார். இதைக் கேட்ட பாவேந்தர் "அதை ஏன் என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது? 'இந்தா' என்று ஓய்வுப்பணம் உருபா ஐம்பதையும் எடுத்துக் கொடுத்தபடி "போய் முதலில் உன் மனைவியைக் காப்பாற்று; ஆனால் இதை என் வீட்டில் சொல்லிவிடாதே; நானே சொல்லிக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்தாராம் என்னே தமிழ்ப் பண்பு?!

(வெங்காலூர் தமிழ்மன்றத்தின் சார்பில் நடைபெற்ற "பாரதிதாசன் நினைவு" விழாவில் பாவலரேறு அவர்கள் நிகழ்த்திய உரையில் ஒரு பகுதி.)

கவடி. 6. ஒலை. 3. பக். 16

# பாவேந்தரும் பருப்புத் துவையலும்

பாவேந்தருக்குப் பாச்சுவை போலவே நாச்சுவையும் மிக்கிருந்தது. சிறிதளவே உண்டாலும் மிகவும் சுவையான பொருள்களையே உண்ணுவார். வீட்டாருக்கு இவர் உணவைப் பற்றி மிகுந்த அக்கறை இருக்க வேண்டும். இல்லையெனின் தொல்லைதான்; பாவலர் விரும்பிய தின் பண்டங்களையெல்லாம் உடனுக்குடன் செய்து கொடுத்து, அவரையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்வதில் அவர் துணைவி யார் தனி இன்பம் கண்டார். அவர் பாவுணர்வைப் போலவே நாவுணர்வையும் நேரம் காலமின்றி வெளியிடுவார்.

ஒரு நாள் நள்ளிரவு இரண்டு மணி, பாவேந்தர் என்னவோ நினைத்துக் கொண்டார். உடனே பக்கத்தறை யில் படுத்திருந்த மனைவியைப் "பழநியம்மா!" என்று கூப்பிட்டார். அம்மையார் ஏதோ என்னமோ என்று நினைத்துக் கொண்டு விரைந்து வந்து, "என்னங்க என்ன வேண்டும்?" என்றார் பரிவுடன். பாவேந்தர் சிரித்துக் கொண்டே, "ஒன்றுமில்லை, நம்ம வீட்டில் கடலைமா இருக்குமா?" என்றார். அம்மையாருக்கு அவர் கருத்து புரிந்து விட்டது. இரவு இரண்டு மணி என்று அறிந்து, "இப்பொழு தில்லை! எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம் படுங்கள்" என்றார்; பாவேந்தர் நினைத்தது இல்லாமற் போகவே, "சரி, துவரம் பருப்பாவது இருக்குமா?" என்று மறித்துக் கேட்டார். "இல்லை" என்று வெடுக்கென்று விடை வந்தது. "என்னடி, இவ்வளவு பெரிய வீட்டில் துவரம் பருப்பு கூட இல்லையா?" என்றார். அம்மையார் தூக்கக் கலக்கத்தில், "இருக்கிறது; உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். "அதை நன்றாக வறுத்துத் துவையல் அரைத்துக் கொண்டு வா; நன்றாக இருக்கும்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அம்மையாருக்கு அவர் குழந்தை போல் கேட்பதைக் கண்டதும் இரக்கம் ஏற்பட்டு விட்டது. சிறிது நேரத்தில் நல்ல மணமுள்ள பருப்புத் துவையல் வந்தது. பாவேந்தர் நாக்குத் தினவு அடங்க அதைத் தின்று விட்டுத்தான் படுத்தார். [குவடி 2. ஓலை 4. பக். 54]

# பாவேந்தரும் விளக்கெண்ணெயும்!

பாவேந்தருக்கு மாதம் ஒருமுறை வயிற்றுத் துப்புரவுக்குக் கழிச்சல் மருந்து தரப்பெறும். அவரின் துணைவியார் இவ்வகையில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். அடிம்பு (பேதி) கொடுக்கும் நாளைக்கு முன்னிரவே வாத நாராயண இலைகளைக் கொண்டுவந்து இரா அடுப்பில் காய்ச்சி, விளக்கெண்ணெயை நிறைய ஊற்றித் தாளித்துச் சாறு வைத்துக் கொடுப்பார். பாவலர்க்கு அந்த நாளைக்கு முன்பே பெரிய கவலை!

ஒருநாள் விடியற்காலையில் எல்லாம் முறைப்படி செய்து எடுத்துக்கொண்டு அவர் துணைவியார் பாவேந்தரின் அறைக்கு வந்தார். பாவேந்தர் வயிற்றைப் பிசைந்து கொண்டிருந்தார் . . . ! அம்மையார் அறையில் நுழைந்தவுடனேயே விளக்கெண்ணெய் நாற்றம் பாவலரின் மூக்கைத் தொளைத்தது! எப்படியாவது தப்பித்துக்கொள்ள எண்ணி, "பழநியம்மா, இன்றைக்கு வயிறு சரியில்லை . . . இன்றைக்கு மட்டும் வேண்டா . . :" என்று அழாக்குறையாகக் கெஞ்சினார். அம்மையார் இவற்றிலெல்லாம் மிகவும் கண்டிப்பு; கட்டாயப்படுத்தி விளக்கெண்ணெயைக் குடிக்க வேண்டினார். பாவலர் கெஞ்சிக் கூத்தாடினார். "பின்னே, காய்ச்சிய சாற்றை என்ன செய்வது?" என்று அம்மையார் கேட்டார். அவ்வளவுதான்! பாவலர் உடனே, "டேய்! பிள்ளைகளா! எல்லாரும் இ'ங்க வா'ங்க" என்று பிள்ளைகளைக் கூப்பிட்டார். அதன் பின் இவர் குடிக்க வேண்டிய விளக்கெண்ணெய் அன்று முழுவதும் பிள்ளைகள் வயிற்றைக் கலக்கியது. . . . !

[சுவடி 2. ஓலை 4. பக் 65]

# 10. பாவேந்தரின் பீடு!

உயர் அலுவல்களில் இருப்பாரிடம் யாதானும் ஒரு நலம் நாடிக் கூனிக் குறுகிக் குழைந்து பல்லிளித்து வாழ்வார் ஒருபுறம் கிடப்ப, ஓரளவுக்குத் தன்மதிப்பும் குமுகாய மதிப்பும் உடைய பெரியவர்களும் கூட, அரசியல் உயர் அலுவலாளரிடம் நலம் நாடிச் சென்றால், பணிவோடும் குழைவோடும் தம் வேண்டுகோளைத் தெரிவித்தல் உண்டு. ஆனால் நம் பாவேந்தரோ, யார்க்கும் எதற்கும், எச்சூழலிலும் பணியாத பெருமிதம் உடையவர். தம்மை நாடிவரும் யாவருக்கும் தம்மால் இயன்ற உதவியைச் செய்யும் இளகிய மனமுடைய அவர், சில வேளைகளில் அவர்பொருட்டு, புதுவையில் தலைமை அமைச்சராகவிருந்த திரு. குபேர் அவர்களிடம் கூடச் சென்றதுண்டாம். அக்கால் குபேர் அவர்களைக் கண்டவுடன், தமக்கே உரிய மிடுக்கான குரலில், "இதோ பார், குபேர், இந்தப் பையனை அழைத்து வந்திருக்கிறேன். அவனுக்கு ஏதாவது வேலை கொடு." என்று நிமிர்ந்த பார்வையுடன் கூறுவாராம். என்னே பாவலர் தம் பீடு!

*(சுவடி. 2; ஓலை. 4)*

# 11. உப்புமா ஆராய்ச்சி

ஒரு நாள் பாவேந்தரின் மகன் எங்கிருந்தோ பாக்குத் தூளில் கலக்கும் மணச்சாறு (essence) கொஞ்சம் ஒரு கண்ணாடிக் குப்பியில் கொண்டுவந்து சுவர்ப்பேழையில் வைத்திருந்தார். அதைப் பாவலர் பார்த்து விட்டார். அடிக்கடி அதை எடுத்தெடுத்து மோந்து பார்ப்பதும் பிறகு இருந்த இடத்திலேயே வைத்து விடுவதுமாக இருந்தார். அவர் மகன் இதை ஒரு நாள் கண்டுவிட்டார். உடனே பாவலர், "என்ன இது?" என்று கேட்டார். அவர் 'பாக்குத் தூளில் கலக்கும் மணச்சாறு' என்றார். பாவலர் தலையை ஆட்டியபடி ஆழ்ந்து எண்ணியவாறே போய்விட்டார்.

பாவேந்தர் மூளை சுறுசுறுப்புடையதும், உள்ளம் புரட்சி உணர்வு பெற்றதும் ஆகையால், அந்த மணச்சாற்றை எந்த எந்த வகையில் பயன்படுத்தலாம் என்று ஆராயத் தொடங்கியது: திடுமென ஒருநாள் காலையில் 'பழநியம்மா' வுக்கு அழைப்பு வந்தது. அம்மையார் வழக்கம் போல அவர் குழந்தை விருப்பத்தைக் கேட்கப் போனார். "நம்ம வீட்டில் குறுநொய்(ரவை) இருக்கா?" என்று கேட்டார் பாவலர். 'இல்லே; என்ன வேணும்?" என்றார் அம்மையார். 'போய் வாங்கி வரச்சொல்' என்று கட்டளையிட்டு விட்டார் பாவலர். அவர் விருப்பப்படி நொய், முந்திரிப்பருப்பு, சருக்கரை, முதலிய எல்லாப் பொருள்களும் அவர் முன்னிலையில் வைக்கப்பெற்றன. "என்ன வேணும்'னு நானே செய்து தருவேனே" என்றார் அம்மையார் ஒன்றும் புரியாதவராய். அதெல்லாம் உனக்குத் தெரியாது. வாணலியை அடுப்பில் வை; குறுநொய்யை வறு, நெய்யில் முந்திரிப்பருப்பை வறுத்தெடு; அப்புறம் அப்புறம் என்ன செய்வையோ?.. தெரியாது...! எனக்கு... அந்த இது... அதாவது உப்புமா போல இனிப்பு, நெய் போட்டுக்கிண்டி வைப்பாயே.. அது வேணும்" என்று குழந்தை போல மெல்லத் தம் ஆவலை வெளியிட்டார். அம்மையார் புரிந்து கொண்டு சிரித்தார்கள். சிறிது நேரத்தில் அவர் விரும்பிய பண்டம் செய்யப்பட்டது.

பாவலர் மிக உன்னிப்பாக அடுப்பருகிலேயே நின்றுகொண் டிருந்தார். வாணலியை அடுப்பிலிருந்து அம்மையார் இறக்கும் பொழுது, 'இரு இரு என்று நிறுத்திவிட்டு "டேய் தம்பி, அந்த இதைக் கொண்டு வா!" என்று கட்டளை யிட்டார். தம்பி (அதாவது மகன்) ஒன்றும் புரியாது விழித் தார். பாவலர்" அ'தான்... அந்த மணச்சாறு... அதை எடுத்துக்கொண்டு வா, என்று விளக்கினுர். மகன் புரிந்து கொண்டு தயங்கியவாறு, "அப்...பா ..! அது பா.....க்...கு" என்று கூறுவதற்குள், "எல்லாம் எனக்குத் தெரியும்; போய்க் கொண்டு வா..." என்றுர். பாவேந்தர். மகன் கொண்டு வந்து கொடுத்துவிட்டு நடப்பதை வேடிக்கை பார்த்தார். பாவேந்தர் குப்பியிலிருந்த மணச்சாறு முழுவதையும் வாணலியில் கொட்டி, அங்காந்து நின்ற அம்மையாரை, ,'உம்... இப்பொழுது கிளறு..." என்று ஊக்கப்படுத்திஞர். எல்லா வேலையும் முடிந்தது. பாவேந்தரைச் சுற்றி வளைத்து எல்லாப் பிள்ளைகளும் உட்கார்ந்தனர். பாவேந்தரே சிறு கரண்டியில் பண்டத்தை எடுத்து எல்லாருடைய இலைகளிலும் சிறிது சிறிது வைத்துத் தாமும் சிறிது வைத்துக்கொண்டார். "உம்... நல்லாயிருக்கும் ... தின்னுங்கோ!" என்று ஆணை யிட்டார். பிள்ளைகள் தயங்கின. பாவலரோ இரண்டு மூன்று வாய் எடுத்துப் போட்டு, "மிக நல்லாயிருக்கே ..." என்று கூறிவிட்டு, மேலும் எடுத்து உண்ணத் தொடங்கினுர். அவர் முகம் மாறிவிட்டது...... தொண்டை கரகரத்தது... தாம் செய்த பிழையை உணர்ந்து, 'நீங்க'ல்லாம் சாப்பிடுங்கோ; நான் ஆறினப்புறம் சாப்பிடுகிறேன்... அப்பத்தான் நல்லா ருக்கும்' என்று கூறி எடுத்துக்கொண்டு அவர் அறைக்குப் போனுர். மகன் பின்னுலேயே போனுர். பாவலர், "நன்றுய்த் தான் இருந்திருக்கும். ஆனு... இது பழசுபோல இருக்கு..." என்று அழாக்குறையாகக் கூறினுர். பிறகு ஒரு வாணலி பண்டமும் வீணில் கீழே கொட்டப்பட்டது.

[சுவடி 2. ஓலை 4. பக் 65 தொடர்ச்சி 68]

# 12. நினைவாக வைத்துக் கொள்ளுவேன்!

1955 என்று நினைக்கின்றேன்: அந்த ஆண்டு வந்த பொங்கல் நாளில் என் பெரிய மகள் பொற்கொடியுடன் நான் பாவேந்தரைப் பார்க்கச் சென்றேன். கையில் சில வகைப் பழங்களும் ஒரு (Swan) தூவலும் அவருக்கு அன்பளிப்பாகக் கொண்டு சென்றிருந்தேன். பழங்களையும் அந்தத் தூவலையும் ஒரு தட்டில் வைத்து என் குழந்தையின் கைகளால் அவற்றை அவரிடம் கொடுத்து, "ஐயா, இந்தத் தூவலை என்றென்றைக்கும் என்னுடைய நினைவாக நீங்களே. வைத்துக் கொள்ள வேண்டும். எவருக்கும் கொடுக்கக் கூடாது" என்று வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் "ஊகும்... நான் யாருக்கும் தரவே மாட்டேன்... உன் நினைவாகவே வைத்துக்கொள்ளுவேன்..." என்று கூறினார், அதன்பின் ஓரிரு கிழமைகள் கழித்து அவரிடம் அந்தத் தூவல் இல்லாததைக் கண்டு, "ஐயா; 'அந்தத்' தூவல் எங்கே?" என்று கேட்டேன். அதற்குப் பாவேந்தர் தமக்கே யுரிய குழைவுடன், "அதை எவனோ வாங்கிக் கொண்டு போனான்' பா; எவன் வாங்கிப் போனான் என்பதே நினைவில் இல்லை... என்ன செய்ய .." என்று குழந்தை போல விடை சொன்னார். பொருள்களில் என்றுமே அவர் நாட்டம் வைத்ததில்லை, என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு!

[சுவடி 4: ஓலை 4: பக் 13]

# 13. உங்கள் அப்பனையுந்தான்!

ஒருமுறை பெங்களூரில் திருக்குறள் கூட்டம் ஒன்றில் பாவேந்தர் பேசிக்கொண்டிருந்தார்: அக்கூட்டத்திற்குத் திருக்குறள் முனிசாமியும் வந்து மேடையில் பேசுவதற்கென அமர்ந்திருந்தார்; பாவேந்தர் தமிழைக் கெடுக்கின்ற 'வையாபுரி' வழிப் பேராசிரியர்கள் ஓரிருவரை மனத்தில் கொண்டு, "தமிழைப்பற்றி அறியாதவன்களெல்லாரும் — வழக்கறிஞருக்கும் அதுக்கும் இதுக்கும் படித்துவிட்டு — எல்லாந்தெரிந்தவன்கள் போல் தமிழ்த்துறைக்கு வந்து அதைக் கெடுத்துக்கொண்டு வருவதுமல்லாமல் திருக் குறளுக்கு வேறு உரை கிரை எழுத வந்து விடறுன்கள்..." என்று மீறிய உணர்வில் உரக்கப் பேசிக்கொண்டிருந்தார்: மேடையில் உட்கார்ந்திருந்த திருக்குறளார் (அவரும் வழக்கறிஞர்க்குப் படித்தவர்) அமைதியாக இருக்க மாட்டாமல், பாவேந்தர் தம் பக்கம் திரும்புகையில், "ஐயா... என்னையுமா சொல்கிறீங்க?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்: உடனே பாவேந்தர் "உங்களை மட்டுமென்ன? உங்கள் அப்பனையுந்தான் சொல்கிறேன்; உங்களுக்கு மட்டும் என்ன தெரியும்? திருக்குறளார் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கின்றீர்களே! எங்கே, எத்தனைத் திருக்குறளுக்குச் சரியான உரை தெரியும்? வாருங்கள் பார்க்கலாம்!" என்று பேச்சோடு பேச்சாகக் கூறினார். கூட்டத்தில் 'கொல்' என்று நகை எழுந்தது: இதைப் பிற்கால் பாவேந்தரே என்னிடம் நேரிடையாகச் சொல்லி "இவர் அப்பொழுது பேசாமல் அல்லவோ இருந்திருக்க வேண்டும்" என்று பெருத்த சிரிப்புக்கிடையில் கூறினார்:

[சுவடி 4. ஓலை 4. பக் 23]

# 14. மருந்துவரும் பாவேந்தரும்

பாவேந்தர் பாரதிதாசன் ஒருமுறை நோயுற்று உடல் நலிவாக இருந்தார்! அவர்பால் அன்பும் பரிவும் கொண்ட மருத்துவர் ஒருவர் அவர் உடலை மிகவும் கவனமாகப் பார்த்து வந்தார். நோய்க்கிடையிலும் பாவேந்தர் அடிக்கடி பாடல்களை எழுதிக் கொண்டும் வந்து போகின்ற அன்பர் களிடம் ஈடுபட்டுக்கொண்டும், இருந்தார். அப்பொழு தெல்லாம் அடிக்கடி வெண்சுருட்டுப் புகைத்துக் கொண் டிருப்பார் பாவேந்தர்! இதைக் கூர்ந்து கவனித்த மருத்துவர் அவரிடம் மிகவும் அன்பாக, " புகை பிடிப்பதை நிறுத்தி விடுங்கள்; உங்கள் உடல் மிகவும் நலிவுற்றிருக்கின்றது" என்றார். அதற்கவர் தமக்கே உள்ள பெருமிதத்துடனும் நகைச்சுவையுடனும் "உம் இதைத் தவிர வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்; அதுதான் எழுதுகிறது..." என்று தம் கையிலுள்ள வெண்சுருட்டைச் சுட்டிக் காட்டிய படியே சொன்னார்: மருத்துவர் வியந்து போனார். இதைத் திருக் குறள் பெருமாள் சொன்னார்.

[சுவடி 4: ஓலை: 4: பக்-12]

# 15. ஓ, எடுத்துக்கலாமே!

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது, நாள்தோறும் பாவேந்தர் வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருப்பார்.

ஒருமுறை, பாவேந்தரிடம் பெருஞ்சித்திரனார் பேசிக் கொண்டிருக்கையில், 'ஐயா, நாம் இரண்டு பேரும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம் என்று விரும்புகிறேன் என்று அவருடைய இசைவைக் கேட்டிருக்கிறார். அதற்கு உடனே, "ஓ! அதுக்கென்ன? எடுத்துக்கலாமே!" என்று பாவேந்தர் இசைந்திருக்கிறார்.

ஆனால், அப்படிப் புகைப்படம் எடுக்க முயன்ற ஓரிரண்டு முறையும் ஏதோ ஒருவகையில் அம்முயற்சி தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது.

இறுதிவரை அந்தப் புகைப்படத்தை இருவரும் எடுத்துக் கொள்ளவே இல்லை. இதுபற்றிப் பெருஞ்சித்திரனார் அவர் மறைவுக்குப் பின் பலமுறை கூறி வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

# 16. ஒழுங்கில்லாதவனிடம் என்னடா ஒழுங்கு?

பாவேந்தரும் அவருடைய மருமகனும் திருச்சிக்குப் புகைவண்டியில் போய்க்கொண்டிருந்தனர்! இவர்கள் ஏறிய பெட்டியில் முதல் வகுப்பில் இரண்டு மெத்தைகளே எதிரெதிராக இருந்தன: ஒன்றில் பாவேந்தர் அமர்ந்து கொண்டார். எதிரில் இருந்ததில் ஒருவர் கால்களை நீட்டியவாறு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். மருகர் அதில் உட்கார இடமின்றி நின்றுகொண்டிருந்தார். படுத்திருந்தவர் சிறிது விழித்துப் பார்த்துவிட்டு மேலும் கண்களை மூடித் தூங்குபவர் போல் இருந்தார்! உடனே மருகர், படுத்திருப்பவரிடம், "ஐயா, எழுந்திருங்கள்; நானும் அமரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்: அவர் பேசாமலேயே கிடந்தார்: மீண்டும் மருகர், "என்னய்யா, நான் நிற்கிறேன்; நீ தூங்குகிறாயே!" என்று ஒருமையில் பேசினார். தூங்குபவருக்குச் சினம் வந்து விட்டது: உடனே படுத்தபடியே கண்களை விழித்து, "ஒழுங்காகப் பேசு ஐயா...." என்று சிறிது உரத்த குரலில் எச்சரித்தார். இவர்களின் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பாவேந்தர் உடனே மிகுந்த சினத்துடன், "ஒழுங்கில்லாதவனிடம் என்னடா ஒழுங்கு வேண்டிக்கிடக்கு... அவன் எவ்வளவு நேரமா நின்னுகிட்டிருக்கான்! நீ படுத்துகிட்டே எழாம கிடக்கிறே; எழுடா" என்று சீறினார்; படுத்திருந்தவரும் எழுந்து கூச்சலிட்டார்: சண்டை வலுத்தது. இதற்குள் வண்டி ஒரு நிலையத்தில் வந்து நின்றது: இவர்கள் சண்டையைப் பார்த்த மாணவர்கள் சிலர் அந்த ஆளிடம் தனியாய், "ஐயா, அவர் பாரதிதாசன்; அவரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர் அப்படித்தான் கண்டிப்பானவர்" என்று அமைதிப் படுத்தினார்கள். பாவேந்தரிடம் சண்டை செய்தவர் விடுமுறையில் வீடு சென்றுகொண்டிருந்த தொடர்வண்டித்துறை அதிகாரி ஒருவர் தாம்.

[சுவடி 4: ஓலை 4. பக். 56]

# 17. உடம்பெல்லாம் ஊருது; வந்து பிடி!

பாவேந்தருக்குப் புலால் உணவு என்றால் மிக விருப்பம். அதிலும் மீன், கோழி, புரு என்றால் மிகவும் விரும்பி உண்பார். மீன் வகையிலும் இறால் மீன் என்றால் அவருக்கு உயிர். நாளும் ஏதோ ஒரு வகையான அசைவ உணவு அவருக்கு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாள் காலையிலும் சிற்றுண்டிக்குப் பின், புதுச்சேரி, பெருமாள் கோவில் தெருவிலுள்ள அவர் வீட்டுத் திண்ணையில் அவரைப் பார்க்கலாம். சில வேளைகளில் முற்றத்தில் போட்டிருக்கும் அகலமான சாய்மனை கொண்ட விசி (Bench)யில் அமர்ந்து கொண்டிருப்பார். அவ்வாறு அமர்ந்து கொண்டிருக்கையில் சும்மா இருக்க மாட்டார். தெருவில் போவோர் வருவோர்களையெல்லாம் கூப்பிட்டுக் கூப்பிட்டு ஏதாவது பேச்சுக் கொடுத்துக் கொண்டிருப்பார். போகிறவர்களில் பெரும்பாலானவர் அவருக்குத் தெரிந்தவர்களாகவே இருப்பர். அண்டை அயலில் உள்ள தெரிந்த வீட்டுப் பெண்கள் காலையில் காய்கறிக் கடைக்குப் போய் வருபவர்களாக இருந்தால், அவர்களைக் கூப்பிட்டு அன்றைக்கு என்ன காய்கறி அல்லது மீன் வகைகள் கடைக்கு வந்திருக்கின்றன அல்லது மலிவாக விற்கின்றன என்பன பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்வார். தமக்கு விருப்பமான கறிவகைகள் மலிந்து கிடக்கின்றன என்று தெரிந்தால், உடனே வீட்டிற்குள்ளே உள்ள தம் துணைவியாருக்குச் செய்தி சொல்லி, அவற்றை வாங்கிவர ஏற்பாடு செய்யச் சொல்வார்.

சில பொழுதுகளில் அவருக்கு மிகவும் விருப்பமான இறால் மீன் கடைகளுக்கு வந்திருப்பதாகச் செய்தி கிடைக்கும். உடனே வீட்டிற்குள் ஓடி, 'பழனியம்மா, இன்னைக்கு நிறைய இறால் வந்திருக்காம்; பெரிசு பெரிசா இருக்காம்.! எதிர் வீட்டு அம்மா வாங்கிகிட்டுப் போறா!

உடனே நீயும் ஆளை அனுப்பு' என்பார். அன்றைக்குப் பகல் உணவில் அல்லது இரவு உணவில் இறால் சிறப்பு உணவாக இருக்கும்; அதனை மிகவும் சுவைத்து உண்பார்.

ஆனால், இறால் மீன் கொஞ்சம் வளிப் பொருள். அஃதாவது காற்று(வாயு)ப் பொருள். எனவே உண்டால் இரவில் உடம்புத் தசைகளில் கொஞ்சம் வலியிருக்கும் இறால் மீன் உண்பவர்களுக்கு அது தெரியும். இருந்தாலும் அதன் சுவை கருதி மீன் உண்ணும் எல்லாருமே அதை விருப்பமாக உண்பர். ஆனால் அளவாக உண்ணுவார்கள். பாவேந்தர்க்கு அது மிகவும் விருப்பமான உணவாகையால், அதனை அளவு கடந்தே உண்டு விடுவார்.

அப்படிப்பட்ட நாள்களில், இரவில் பாவேந்தருக்குத் தூக்கம் வராது. உடம்புத் தசைகளில் கொஞ்சம் வலி ஏற்பட்டுப் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருப்பார். அவ்வாறிருக்கும் சில இரவு வேளைகளில் பழனியம்மாளுக்கு அழைப்பு வரும். அம்மையார் அவர் அறைக்குச் சென்று என்னவென்று கேட்பார். 'பழனியம்மா, இறால் மீன் உடம் பெல்லாம் ஊருது; வந்து பிடி' என்று நகைச் சுவையாக, உடம்பைக் கொஞ்சம் பிடித்து விடும்படி கூறுவார். அப்படிப் பட்ட நேரங்களில் அவரின் ஒவ்வொரு செயலும் ஒரு குழந்தையுடையது போல் இருக்கும்!

# 18. பாவேந்தர் துணிவு!

பாவேந்தருக்கு இயல்பாகவே பழம் புலவர்களுக்கு இருந்த புலமைத்துணிவு சிறிது கூடுதலாகவே இருந்தது. இடம், பொருள், ஆள் என்று எதனையும் பாராமல், தாம் நினைத்ததை எவ்விடத்தும் எவர்முன்னும் கூறும் உள்ளத்தின் மதுகையை வேறு எவரிடத்திலும் பார்ப்பது அரிது. மொழி ஞாயிறு பாவாணரும் இந்த வகையில் துணிவானவரே என்றா லும், சிலர் முன்னும், சில இடங்களிலும் பண்பு கருதியும் அவ்வளவு துணிவுடன் பேச மாட்டார். ஆனால் எழுத்துகளில் அந்தத் துணிவு அளவுக்கு மீறியே இருக்கும். பாவேந்தரோ பேச்சிலும் எழுத்திலும் துணிவு மிக்கவராகவே இருந்தார்.

ஒருமுறை பாவேந்தர் தலைமையில் பாவாணர் ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிக் கொண்டிருந்தார். பாவாணரின் உரை ஆராய்ச்சி மிக்கதாக இருக்குமாகை யால், கூட்டத்தில் பெரும் பாலார்க்கு அது கொஞ்சம் கவர்ச்சி குறைந்ததாகப் படும். அந்த நேரங்களிலெல்லாம் கூட்டத்தில் கொஞ்சம் சலசலப்பு ஏற்படும். ஆனால், பாவாணர் அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் தாம் சொல்ல வந்ததைச் சொல்லிக் கொண்டிருப்பார். அன்றைக் கும் அப்படித்தான் நிகழ்ந்தது. ஆனால் பாவாணர் பேச்சு நீண்டு கொண்டே போனது.

இந்தச் சமையத்தில் வேறு யாராக இருந்தாலும் பாவாணரை இடைமறிக்கும் ஆற்றல் ஏற்படாது. ஆனால் பாவேந்தர் சிறிது நேரம் பொறுத்திருந்து பார்த்து விட்டு, இன்னும் காலந் தாழ்த்தினால் கூட்டத்தின் சலசலப்புக் கூடி விடும் என்று தெரிந்து கொண்டு, பாவாணரிடம், “ஊம், ஊம், எவ்வளவு நேரம் பேசுவது; உட்காருங்கள்” என்று கூறி, அவர் பேச்சை உடனே முடித்துக் கொள்ளும் படி சொன்னார். பாவாணரும் அவர் கூறியவறே உடனே சடக்கென்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு அமர்ந்து கொண்டார். கூட்டத்தினர் பாவேந்தரின் துணிவை அன்று நேரிலேயே காண வேண்டியதாகப் போய் விட்டது.

# 19 இப்பொழுது என் மாணவர்!

பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் திருமகன் மன்னர் மன்னன் —சாவித்திரி திருமணம் புதுச்சேரியில் 1955-ஆம் ஆண்டு நடைபெற்றது. அத்திருமணத்திற்குப் பாவாணர், தமிழ்மறவர் புலவர். வை. பொன்னம்பலனார் ஆகியோர் வந்திருந்தனர் புலவர், பொன்னம்பலனார் அவர்களும். பாவாணர், அவர்களும் எனக்கு முறையே உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் ஆசிரியர்களாக இருந்தவர்கள்,

திருமணம் முடிந்து அனைவரும் ஒன்றாகத் திருமணப் பந்தலின் ஒரு மூலையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம்; அப்பொழுது பாவேந்தரும் வந்து எங்களுடன் வந்து அமர்ந்து பேச்சில் கலந்து கொணடார்.

பேச்சுக்கிடையில், புலவர் பொன்னம்பலனார் பாவேந்தரிடம் என்னைக் காட்டி, 'இவர் (பெருஞ்சித்திரனார்) உயர்நிலைப் பள்ளியில் என்னுடைய மாணவராக இருந்தவர், -என்று பெருமையாகக் கூறினார். அதைக்கேட்ட. பாவாணர், 'அப்படியா, ஆனால், கல்லூரியில் அவர் என்னுடைய மாணவர்' என்றார். இன்னும் சற்று அழுத்தமாக. இவற்றைக் கேட்ட பாவேந்தர் வெடுக்கென்று, 'அ'து அப்பொழுது. இப்பொழுது இவர் என் மாணவர்' என்றார். அதைக்கேட்ட மூவருமே பெருமிதமாகச் சிரித்துக் கொண்டனர், அப்பொழுது அம்மூவரை விடவும் எனக்கு மிகவும் பெருமிதமாக இருந்தது.

# 20. ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வா!

மாலை நேரங்களில் பாவேந்தர் சிலபொழுது அவருக்குச் சொந்தமாயிருந்த பழனியம்மா அச்சகத்துற்கு வந்து, முற்றத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பார்.

ஒருநாள் அப்படி அவர் அமர்ந்திருந்த பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. அக்கால் ஒருவர் மழையில் ஒதுங்கி ஒதுங்கி அச்சகத்திற்குள் வந்து, உள்ளேயிருந்த பாவேந்தரின் மருமகனுர் திரு. தண்டபாணி அவர்களிடம் ஏதோ கேட்டு விட்டு மீண்டும் வெளியே போனுர்.

அவர் போனபின், பாவேந்தர் தம் மருமகனை அழைத்து 'அவர் என்ன கேட்டுவிட்டுப் போகிருர்' என்று வினவினுர். அதற்கு அவர் மருமகனுர், 'அவர் இன்றைய 'விடுதலை' இதழ் கேட்டார்; நான் இங்கில்லை; வீட்டிலிருக்கிறது; பிறகு அங்கு வந்து வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொன்னேன்' என்று கூறினுர். உடனே பாவேந்தர் 'அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது; அவர் எவ்வளவு ஆர்வமாக மழையில் நனைந்து கொண்டுவந்து கேட்கிருர். அவரை உடனே ஓடிப்போய்க் கூப்பிடு' என்று சொன்னுர். அவரும் சிறிது தொலைவு போய் விட்ட அவரை ஓடிப்போய் அழைத்து வந்தார்.

அவர் வந்தபின், 'நீங்கள் கொஞ்சம் இருங்கள். நான் போய் எடுத்துக் கொண்டு வரச் சொல்கிறேன்' என்று கூறி விட்டு, மருமகனிடம், 'நீ வீட்டுக்கு ஓடிப்போய் 'விடுதலை'யை எடுத்துக் கொண்டு வா' என்று கட்டளையிட்டார்.

திரு. தண்டபாணியும் அப்படியே வீட்டுக்குப் போய் சிறிது நேரம் கழித்து வந்து "விடுதலை இதழை யாரோ படிக்க வாங்கிப் போயிருக்கிருர்களாம்" என்றுர். அதைக் கேட்ட பாவேந்தரும் வந்தவரிடம் வருத்தமாக, "என்ன செய்வது? பிறகுதான் வந்து படித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்த அன்பரை வழியனுப்பிவைத்தார். பிறர் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவ்வளவு ஆர்வம் பாவேந்தர்க்கு.

# 21. பெண் பேச்சாளர் பாதுகாப்புக் கேட்டது!

ஒரு நாள் மாலை பாவேந்தரும் நானும் அவர் வீட்டுத் தெரு வாயிற் படியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். பகல் ஒளி மங்கியிருந்ததால் தெருவில் போவோர் முகங்கள் அவ்வளவு தெளிவில்லாமல் இருந்தன.

அம்பொழுது சென்னையிலிருந்து தி. மு. க. பெண் பேச்சாளர் ஒருவர், பாவேந்தரைத் தேடிக் கொண்டு அங்கு வந்து பாவேந்தரிடமே, "பாரதிதாசன் இருக்கிறாரா? என்று கேட்டார். "ஏன்? என்னவேண்டும்? நீ யார்?" என்றார் பாவேந்தர் தமக்கே உரிய மிடுக்கோடு. அந்த அம்மையார் சட்டென்று அவரை உணர்ந்து கொண்டவராய், "ஓ! ஐயா, மன்னிக்க வேண்டும். நான் நாளை ஒரு நிகழ்ச்சிக் காகச் சென்னையிலிருந்து வருகின்றேன். என் பெயர் இது" வென்று கூறிப் பெயரைக் கூறினார். பாவேந்தர் 'ஓ! அது நீதானா? என்ன வேண்டும்" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண், 'இல்லை இங்கு இரவு தங்கு வதற்குப் பாதுகாப்பான இடம் வேண்டும். அதுதான்.... கேட்டேன்" என்றார். உடனே, அவர், "உள்ளே, அம்மா இருப்பார்கள், போய்க் கேள்" என்று அவரை உள்ளே அனுப்பிவைத்தார்.

அவர் உள்ளே போனவுடன், பாவேந்தர் என்னைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்து விட்டுப், "பாதுகாப்பான இடம் வேண்டுமாம் இவளுக்கு; என்னிடமே வந்து கேட் கிறாள்! நம் வீட்டை விடப் பாதுகாப்பான இடம் வேறு எங்குப் போவது? "என்றார், மிக அழுத்தமான குரலில்!

# 22. செய்ய வேண்டியது ...!

ஒருமுறை ஏ.பி. நாகராசன் நடத்திய 'சாட்டை' என்ற இதழில் பாவேந்தரைப் பற்றித் தவருகவும் தரக்குறைவாகவும் ஒரு செய்தி வெளியிடப்பெற்றிருந்தது. பாரதியார் காலத்து அவருடன் இருந்த பாரதிதாசன் அவர் பாடல்களையெல்லாம் திருடி வைத்துக்கொண்டு, அவர் இறந்தபின் அப்பாடல்களை ஒவ்வொன்ருகத் தம்முடைய பெயரில் வெளியிட்டு வருவதாக வந்த செய்தி அது. இச்செய்தியை ஓர் அன்பர் படித்து விட்டுப் பாவேந்தரிடம் வந்து மிகவும் வருத்தத்துடன் கூறினுர். அப்பொழுது பாவேந்தரின் அருகில் வேறு சிலருடன் நானும் நின்றுகொண்டிருந்தேன். பாவேந்தர் செய்தியை அறிந்து சிறிதும் வருந்தாமல் அமைதியாக இருந்தார். நான் உடனே அந்த அன்பரிடம் "அந்த இதழையெல்லாம் ஏன் வாங்கிப் படிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கவர் "வாங்கிப் படிப்பதால்தானே இதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது; எனவே அதில் பிழையில்லை" என்று சொன்னுர். நான் உடனே "சரி; அந்தச் செய்தியைத் தெரிந்துகொண்டீர்களே, அதன்பின் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன். அவர் "அதைத்தான் இப்பொழுது ஐயாவிடம் வந்து சொல்கின்றேன்; இன்னும் என்ன செய்ய வேண்டும்?" என்று என்னை முறைத்தபடி கேட்டார். நான் என்ன சொல்லப் போகின்றேன் என்பதைப் பாவேந்தர் உட்பட எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நான் அவரிடம் "ஐயா, அத்தகைய தாள்களை வாங்கிப் படிக்கக் கூடாது; வாங்கிப் படித்து இத்தகைய செய்திகள் வந்திருப்பதாகத் தெரிந்தால், அதை வாங்கிய கடையில் இன்னும் எத்தனைப் படிகள் இருக்கின்றனவோ அத்தனையையும் விலைகொடுத்து வாங்கி அக்கடை முன்பே ஒரு தீக்குச்சியைக் கிழித்துக் கொளுத்தி விட்டு வர வேண்டும். அதுதான் நாம் அந்தச் செய்திகளை அறிந்து கொண்டதற்குக் கழுவாய்" என்று கூறினேன். பாவேந்தர் முகத்தில் எழுச்சி தோன்றியது. உடனே அந்த அன்பரிடம், "கேட்டியா...?

அதைச் செய்கிறதுக்குத் திறனில்லே... என்கிட்டே வந்து சொல்ல வந்துட்டியே... போ'' என்று சிறிப்பாய்ந்தார், அடுத்த நொடியே அந்த அன்பர் அவ்விடத்தை விட்டு அகன்றார்!

[சுவடி 4: ஓலை 4. பக்: 42[

# 23. நான் யார் தெரியுமா? பாவேந்தருக்கு மகன்!

1956-57 வாக்கில், பாவேந்தர் மகன் மன்னர் மன்னனுக்கும் பாவேந்தருக்கும் சிறு மனவேறுபாடு காரணமாக அவர் வீட்டை விட்டு வெளியேறித் தம் மனைவு சாவித்திரியுடன் புதுச்சேரியிலேயே வேறு ஒரு பகுதியில் ஒரு தனி வீட்டில் இருந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர்களின் மனவேறுபாட்டைக் களைகின்ற முயற்சியில் பாவேந்தர் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பெரியவர்கள் சிலர் ஈடுபட்டனர். அவர்கள் பாவேந்தரை அணுகி அவர் மகன் மேல் அருள்காட்டி அவரை வீட்டிற்கு அழைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சில பல கருத்துகளைப் பாவேந்தரிடம் கூற முற்பட்டார்கள் அப்பொழுதெல்லாம் பாவேந்தர் அவர்களிடம், 'அதையெல்லாம் அவனிடத்தில் போய்ச் சொல்லுங்கள் எனக்கு எவரும் வந்து சொல்லவேண்டாம்' என்று மன இறுக்கத்தோடு வெடுக்கென்று கூறிவந்தார்.

இது தொடர்பாக நானும் இருவரையும் ஒப்புரவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன். தொடக்கத்தில் மன்னர் மன்னன், 'அதெல்லாம் உங்களால் முடியாது. அவர் (பாவேந்தார்) அவருக்கு வேண்டிய பெரியவர்கள் சிலர் பேச்சையே ஒதுக்கித்தள்ளி விடுகிறார். உங்கள் பேச்சை எங்கே கேட்கப் போகிறார். நீங்கள் வீணாக இதில் தலையிட்டு அவர் வெறுப்பைத் தேடிக் கொள்ள வேண்டாம்'' என்று கூறி என்னைத் தடுத்தார். நானோ "இல்லை; அவர்கள் போல் அல்லன் நான். நான் சொல்வதை உங்கள் தந்தை கேட்பார். முயற்சி செய்கின்றேன்'' என்று கூறி, உறுதியுடன், பாவேந்தரிடம் பல நாட்கள் இது தொடர்பாகப் பேசிப் பார்த்தேன்.

ஒருமுறை, இரவு 10 மணி முதல் விடியற் காலை 4 மணி வரை இதுபற்றி மிகஅன்போடும் அக்கறையோடும் பாவேந்தர்

தம் மகனின் பிழைகளை மன்னித்து, மறந்து, அவரை மீண்டும் வீட்டுக்கு அழைத்து வர ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இறுதியில் பாவேந்தர் என் கருத்துகளை ஏற்றுக் கொண்டவராய், "முடிவாக நீ என்னதான் செய்ய வேண்டும்' என்கிறாய் "என்றார், நான் 'மன்னர் மன்னனை வீட்டுக்கு அழைத்துவருகின்றேன், நீங்கள் ஒன்றும் சொல்லாமல் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கேட்டேன் "சரி, உன் விருப்பப்படி செய்" என்று கடைசியில் ஒப்புதல் அளித்தார்."

அதன் பின் மறுநாள் காலை 8 மணி அளவில் மன்னர் மன்னன் இருப்பிடத்திற்குச் சென்று, தந்தையார் அவர் வீட்டுக்கு வர ஒப்புதல் அளித்து விட்டார் என்றும், அவரும் அவர் துணைவியும் உடனே வீட்டுக்கு வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். மன்னர் மன்னன் ஏறத்தாழ என்னை ஒத்த அகவையுடையவர் ஆகையால், அவரிடம் சற்று அதிகாரத்துடனேயே பேசுவேன். அவரும் உரிமையுடன் அப்படியே என்னிடம் பேசுவார்.

நான் வீட்டிற்குப் புறப்பட வேண்டும் என்று சொன்னவுடன், "அதெல்லாம் முடியாது. அவர் இப்படிச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்ய வேண்டும்" என்று சில கட்டுப்பாடுகளை அவர்மேல் சுமத்தினார். நான் 'அ'தெல்லாம் இப்பொழுது கேட்க வேண்டாம்; பேசாமல் நீங்கள் வாருங்கள்; பின்னர் அவற்றைப் பற்றி நானே அவரிடம் பேசி, அவரை இணங்க வைக்கின்றேன்' என்று அக்குடும்பத்தின் மேலுள்ள பற்றினால் இறைஞ்சிக் கூறினேன்.

அதற்கு அவர் ஒரேயடியாக, "அதெல்லாம் முடியாது; அவர் நான் கேட்டுக் கொள்கிறபடி சில முறைப்பாடுகளைச் செய்தால்தான் வருவேன். இல்லையென்றால் வர மாட்டேன், நான் யார் தெரியுமா பாவேந்தருக்கு மகன்! அவரைவிட

என் விடாப்பிடி (அவர் சொன்ன சொல் 'பிடிவாதம் என்பது) இரண்டு பங்கு இருக்கும்'' என்று கூறி ஒரேயடியாக மறுத்து விட்டார். அந்நிலைக்கு நான் மிகவும் வருந்தினேன்.

அதன்பின், சில மாதங்கள் கழித்தே இரு குடும்பங்களும் ஒன்றாக இணைந்தன.



# 24. அந்த மீசை ஒருத்தன்தான்...!

பாவேந்தர் 1960-ஆண்டளவில் திரைப்படம் பிடிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு சென்னைக்கு வந்தார். வந்தவர் . சிலமாதங்களில் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகக் கிடந்தார், அவருடைய இறுதி நாள்களாகவே அவை இருந்தன.

அவர் சென்னை வருதற்கு முன்பாகவே, அஃதாவது 1959-ஆம் ஆண்டின் இறுதியிலேயே நான் புதுச்சேரியை விட்டுக் கடலூருக்கு, அஞ்சலகப் பணித் தொடர்பாக மாறுதலாகிப் போய்விட்டேன், அதற்குப் பின்னர் பாவேந்தரை நான் சந்திக்கவே இல்லை. அவரின் குடும்பத் தொடர்பில் ஏற்பட்ட ஒரு மனக்கசப்பின் காரணமாக நான் அவரைச் சந்திக்காமலே போய்விட்டது.

அவர் உடல் நலமற்றுப் படுக்கையில் கிடந்தபொழுது அவர் மகன் மன்னர் மன்னனிடம் நான் எங்கே உள்ளேன், எவ்வாறிருக்கின்றேன் என்றெல்லாம் சிலமுறை, கேட்டதாகப் பின்னர், மன்னர் மன்னன் என்னிடம் சொன்னார். அக்கால், ஒருமுறை, பாவேந்தர் அவர் மகனிடம், "எங்கே அந்த மீசை? (மீசை என்பது என்னைத்தான், நான் மிகவும் பெரிய நீளமான மீசை வைத்துக் கொண்டிருப்பதால், அந்தப் பெயரில் என்னை அழைத்திருக்கிறார்.) அவன் நன்றாயிருக்கின்றானா? அந்த மீசை ஒருவன்தான் எனக்குப் பின்னால் அதே உணர்வுடன் இருப்பான் என்று நம்பிக்கை இருக்கிறது. நான் அவனைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி அழைத்து வா" என்று கூறினதாக, அவர் மறைவுக்குப் பின்னால் ஒரு முறை மன்னர் மன்னன் என்னிடம் கூறினார். ஆனால், அந்தப் பெருமகனின் விழைவு என்னிடம் காலத்தால் தெரிவிக்கப் படாமற் போனதால், இறுதிவரை அவரைப் பார்க்க இயலாமலே போய்விட்டது.

# 25. இப்ப, வேண்டாம் இட்டளி!

பாவேந்தர் ஒருமுறை அவர் மருமகனார் திரு. தண்டபாணியுடன் தொடர்வண்டியில் போய்க்கொண்டிருந்தாராம். அப்பொழுது இரவு நேரம்.

அவர் எப்பொழுதும் குழந்தை போன்ற உணர்வினர் ஆகையால், வண்டி ஒரு நிலையத்தில் நின்றவுடன் தம் மருகரை அழைத்து, "இங்கு எங்காவது சுடச்சுட இட்டளி கிடைக்கிறதா என்று பார்த்து வாங்கி வா" என்று கூறினாராம். மருகர், வெளியே எட்டிப்பார்த்து, எங்கும் ஒரே இருட்டாக இருப்பதை உணர்ந்து, 'இ'து ஒரு சிறிய நிலையம் போல் இருக்கிறது. இங்கெல்லாம் இட்டளி கிடைக்காது" என்று சொல்லியிருக்கிறார். உடனே பாவேந்தர், 'அட, இறங்கிப் போய்ப் பார்த்து விட்டு வா'ப்பா" என்றாராம். இவரும் இறங்கிப் போய்ப் பார்ப்பவர்போல், இங்கும் அங்கும் இரண்டு மூன்று முறை அலைந்திருக்கிறார். வண்டி அதற்குள் ஊதல் கொடுத்து விட்டுப் புறப்படப் போவதை உணர்ந்து கொண்ட பாவேந்தர், தலையைப் பலகணிக்கு வெளியே நீட்டித் தம் மருகரைக் கூவி அழைத்து, "வா,வா, வண்டி புறப்பட்டு விட்டது; ஓடிவந்து ஏறிக்கொள்" என்று கத்தினாராம். அவரும் ஓடிவந்து ஏறிக் கொண்டாராம்.

அதன்பின் வண்டி ஒரு பெரிய நிலையத்தில் நின்றவுடன் மருகர் பாவேந்தரின் பசியுணர்வையும் இட்டளி ஆசையும் நிறைவு செய்யாத ஏக்கத்துடன், "இங்கே இட்டளி கிடைக்கலாம். போய்ப் பார்த்து வாங்கி வரட்டுமா" என்று கேட்டாராம். அதற்குப் பாவேந்தர் ஒரேயடியாக "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; நீ பேசாமல் படு" என்று சொல்லி விட்டாராம்.

பாவேந்தரின் இந்தக் குழந்தைமை உணர்வைப் பின்னொருகால் அவர் மருகர் என்னிடம் கூறிப் பெருமிதப் பட்டார்.

# 26. தாத்தா, படம் போட்டுத் தா!

பாவேந்தார் வீட்டுக்கு நாள்தோறும் பெரியவர்கள் பலர் வந்து, பேசியிருந்து விட்டுப்போனபடியே இருப்பார்கள். அவர்கள் அவ்வாறு வந்து பேசிக் கொண்டிருக்கையில். பாவேந்தர் தமக்கேயுரிய நகைச்சுவை உணர்வும், சினமும் தோன்ற பல செய்திகளைப் பற்றி அவர்களுடன் பேசிக் கொண்டிருப்பார்.

அக்கால் அவர் பெயர்த்தி (வசந்தாவின் மூத்த மகள்) மழலைபேசும், சிறு குழந்தை. அது சிறிய கரும்பலகை, ஒன்றையும் எழுதுகுச்சியையும் எடுத்துக் கொண்டுவந்து, மிகவும் ஈடுபாடாகவும் சுவையாகவும் பேசிக் கொண்டிருக்கும் தாத்தாவின் மடியிலேறி அமர்ந்து கொண்டு. ''தாத்தா, எனக்கு ஒரு படம் போட்டுத் தா'' என்று மழலைபேசிக் கொஞ்சிக் கேட்கும்.

பாவேந்தர் எவ்வளவு உணர்வொடு பேசிக் கொண்டிருந்தாலும், அந்த உணர்விலிருந்து உடனே மாறிக், குழந்தையை ஒரு முத்தமிட்டுக் கொஞ்சி, கற்பலகையையும் எழுதுகுச்சியையும் வாங்கிக் கொண்டே, ''இங்கே கொண்டா உனக்கு என்ன படம் வேண்டும்'' என்று கேட்டு, அரை நொடியில் ஓர் ஆட்டின் படத்தையோ மாட்டின் படத்தையோ போட்டுக் காட்டி, அதனுடன் விளையாடத் தொடங்கி விடுவார். வந்திருந்தவர்கள் தங்கள் பேச்சையெல்லாம் விட்டுவிட்டு, இந்தப் பெரிய 'குழந்தை'யும் அந்தச் சின்னக் குழந்தையும் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தாங்கள் வந்த வேலையை மறந்து மெய்ம்மகிழ்ந்து போயிருப்பார்கள்.

# 27. நேரே, இங்கயே வந்தூட்டியா?

அடிக்கடி பாவேந்தரிடம் பல வகையான எழுத்தாளர் களும் புலவர்களும் பாவலர்களும் வருவதுண்டு. வருபவர் கள் அவரிடம் தாங்கள் எழுதிய நூல்களைப் பற்றியும், செய்த ஆராய்ச்சிகளைப் பற்றியும் பாடல்கள் பற்றியும், கூறிப் பாவேந்தரின் கருத்துரைகள் மதிப்புரைகள் பாராட்டு ரைகளை வாங்கிச் செல்வார்கள். சிலர் அவரிடம் அவற்றைக் காட்டி நேரமிருந்தால் திருத்தம் பெற்றுச் செல்வார்கள்.

ஒருமுறை திருச்சிப் பகுதியிலிருந்து புலவர் ஒருவர் வந்தார்: பாவேந்தரிடம் அப்பொழுது நான் பேசிக் கொண்டிருந்ததால், 'அவருக்கு என்ன வேண்டும் என்றுகேள்' என்று என்பால் சொல்லியனுப்பினார். அவர், தாம் ஒரு நாடகம் எழுதிக் கொண்டு வந்திருப்பதாகவும், அதைத் திருத்தித் தர வேண்டும் என்று வேண்டிக் கொள்வதாகவும் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பாவேந்தர், தமக்கு அதற்கெல்லாம் இப்பொழுது நேரமில்லை என்று கூறினார். ஆனால் வந்தவர் எப்படியாவது பார்த்துக் கொடுக் கும் படி கேட்டு, நின்று கொண்டேயிருந்தார். உடனே பாவேந்தார் சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து வந்து, நாடகத்தை எழுதிக் கொண்டு அதைத் திருத்திக் கொடுக்க வேண்டும் என்று நேரே இங்கேயே வந்துட்டியே, அங்கெல் லாம் யாராவது ஒரு தமிழ்ப் புலவரிடம் காட்டித் திருத்திக் கொண்டிருக்கக் கூடாதா? நானேதான் திருத்தவேண்டுமா? இதற்கெல்லாம் எனக்கு நேரம் எப்படியிருக்கும்?'' என்று கடிந்து கொண்டார்; வந்தவர் வருத்தம் தெரிவித்துவிட்டுப் போய்ச்சேர்ந்தார்.

# 28. அப்ப, தூக்கிக் கீழே போட்டுடு!

பாவேந்தர் பாடல்களைத் திறனாய்வு செய்து ஒரு நூல் அவரிடம் வந்தது. அதைப் பாவேந்தர் என்னிடம் படிக்கக் கொடுத்து, ''நன்றாக எழுதியிருக்கின்றாரா, பார்'' என்று சொன்னார்.

நான் அதை முழுமையாகப் படித்து விட்டு, ''ஏதோ எழுதியிருக்கிறார். அவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கிறார் என்று சொல்லமுடியாது. உங்கள் பாடல்களின் சிறப்பியல்களை நானே எழுதலாம் என்றிருக்கின்றேன். வேறு யாரும் அதன் சிறப்புகளை அவ்வளவு எளிதில் மதிப்பிட்டு விட முடியும் என்று நான் நினைக்கவில்லை'' என்று கூறினேன்.

பாவேந்தர் உடனே சட்டென்று, ''அப்ப, அதைத் தூக்கிக் கீழே போட்டுடு'' என்று கூறினார். எதையும் விரைந்து முடிவு செய்து விடக்கூடிய மனப்பாங்கு அவருடையது.

# 29: ஓடையில் தாமரை பூக்குமா?

பாவேந்தரின் ‘இசையமுது’ முதல் தொகுதியில் ஒரு பாடல் உண்டு. அதில் கீழுள்ள ஓர் அடி வருகிறது.

“ஓடையில் தாமரை வாடிடும் என்றான்;
உள்ளங்கை விரித்தும் கூப்பியும் நின்றேன்!”

—என்பது அது.

பாவேந்தரிடம் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் மாலை, அவரிடம் இவ்வடிகளை எடுத்துக் கூறி, “இந்த அடியில் வரும் கருத்தைப் பற்றி ஒருவர் என்னிடம் ஓர் ஐயம் தெரிவித்தார்” என்றேன்.

“என்ன, அது?” என்றார்.

“ஓடையில் தாமரை பூக்குமா’ என்று கேட்டார், என்றேன்.

“அதற்கு நீ, என்ன சொன்னாய்?” என்று கேட்டார்.

“பூக்கும் என்று சொன்னேன். ஓடையில் தண்ணீர் ஓடும் பொழுது, எங்காவது ஒரு வளைவில் அது திரும்புகையில், அந்த மூலையில் தண்ணீர்த் தேக்கம் ஏற்படும், அதில் தாமரை பூத்திருக்கும்” என்று சொன்னதாகச் சொன்னேன்.

“அதுதான் சரி; அப்படித்தான் சொல்ல வேண்டும்” என்று தம் ஒப்புதலையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே தெரிவித்தார், பாவேந்தர்.

# 30. பாவேந்தர் படத்தில் தீப்பற்றாமல் தடுத்த பழனியம்மாள்!

பாவேந்தர் மறைவுக்குப்பின் பாவேந்தர் குடும்பம் கடலூரிலிருந்த நம் வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டு இருக்கும்.

பாவேந்தரின் துணைவியார் திருவாட்டி. பழனியம்மாள் அவர்களும் அடிக்கடி வீட்டிற்கு வந்து, இரண்டொரு நாட்கள் தங்கிப் போவார்கள்.

எம் துணைவியாரிடமும் நம் பிள்ளைகளிடமும் அவருக்கு அதிகமான ஈடுபாடு. வரும் பொழுதெல்லாம் அவர்களுக்குத் தின்பண்டங்களும் வீட்டிற்கு வேண்டிய சிறு சிறு பொருள்களையும் அன்பளிப்பாகக் கொணர்ந்து தருவார்கள். எம் துணைவியார்க்கும் பிள்ளைகளுக்கும் அவரின் வருகை நிரம்பப் பிடிக்கும்; வெறுந்தரையில் உருண்டு கொண்டே, அவர்களிடம் அம்மையார் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் நாள்தோறும் பேசி மகிழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஒருமுறை 'தென்மொழி' இதழ் ஒன்றில் பாவேந்தர் படம் அச்சாகியிருந்தது. அச்சகக் கழிவுத் தாள்களை யல்லாம் எம் துணைவியார் அடுப்புப் பற்றவைக்க எடுத்துச் செல்வது வழக்கம்;

அம்மையார் வந்திருந்தபொழுது, அப்படிப்பட்ட தாள்கள் அடுப்படிக்கு வந்திருந்தன. எம் துணைவியாருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே, அம்மையார் அடுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், பக்கத்தில் உள்ள தாள்கள் ஒவ்வொன்றாகச் சுருட்டிச் சுருட்டிச் அடுப்பில் போட்டு எரித்துக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது அவர்கள் பாராமல் அடுப்பில் போட்டு விட்ட தாள் ஒன்றில் தீப்பற்றி எரிந்து கொண்டே

வந்தது. அதில் பாவேந்தர் படம் அச்சாகியிருந்ததை அப்பொழுது பார்த்து விட்டார்கள். அந்தப் படத்தில் தீப் பற்றுவதற்கு முன், அடுப்பிலிருந்து அந்தத் தாளை வெளியே எடுத்துத் தீயைச் சட்டென்று அணைத்து விட்டார்கள். நல்லவேளை, பாவேந்தர் படம் எரிந்து விடவில்லை!

அவரின் படத்திலும் கூட தீப்பற்றக் கூடாது என்று காத்த அவரின் அன்புணர்வை என் துணைவியாரும் பிள்ளைகளும் அடிக்கடி நினைவு கூர்ந்து வியந்து நிற்பார்கள்!